# பெரியார் பல்கலைக்கழகம்

(NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

(State University - NIRF Rank 56 – State Public University Rank 25)

சேலம் - 636 011

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம்

## முதுகலைத்தமிழ்

(முதலாமாண்டு - இரண்டாம் பருவம்)

# நாட்டார் வழக்காற்றியல்

(Candidates admitted from 2025 onwards)

# PERIYAR UNIVERSITY

## CENTRE FOR DISTANCE AND ONLINE EDUCATION (CDOE)

## M.A தமிழ் 2025 admission onwards

## ELECTIVE - III

நாட்டார் வரலாற்றியல்

Prepared by:

முனைவர்.மா.சுந்தரமூர்த்தி
பேராசிரியர்
தமிழ்த் துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-11

Scrutinized & Verified by:

BOS Members,
Centre for Distance and Online Education (CDOE)
Periyar University
Salem - 636011

## பாடத்தலைப்புகள்


| வ.எண் | தலைப்புகளின் விவரம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | **நாட்டுப்புறவியல் - வரையறை வரலாறு களஆய்வு**<br>நாட்டுப்புறவியல் சொல் வரையறை, அடிப்படைக் கருத்துகள், சிறப்பியல்புகள், நாட்டுப்புறவியல் வரலாறு, இலக்கியங்களில் நாட்டுப்புறவியல் கூறுகள், எழுத்திலக்கியம் நாட்டுப்புற இலக்கியம் வேறுபாடுகள், களஆய்வு, வரையறை, அடிப்படையும் சூழலும், வழிமுறைகள், தகவலாளர் தெரிவு, தகவலாளர் தொடர்பு முறை, தரவு சேகரிப்புகள், களப்பணியில் அறவுணர்வு, சிக்கல், எச்சரிக்கை | 1-47 |
| 2 | **நாட்டுப்புறவியல் இலக்கிய வகைமை**<br>அறிஞர்களும் வகைப்பாடும் அடிப்படைகளும் - கி.வா. ஜகநாதன் (1975), அன்னகாமு (1966), ஆறு அழகப்பன் ஆறுவகை, மா. வரதராசன் (1978), சு. சண்முகசுந்தரம், நா. வானமாமலை (1977), ஆறு. இராமநாதன். இலக்கிய வகைமைகள் – பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழி, மரபுத்தொடர்த் தன்மை, விடுகதை, நாட்டுப்புற நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் | 48-106 |
| 3 | **நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோட்பாடுகள்**<br>தொன்மவியல் கொள்கை, புலப்பெயர்வுக் கொள்கை, வரலாற்று நிலவியல் ஆய்வு அணுகுமுறை, அமைப்பியல் கோட்பாடு ஆய்வுமுறை, வரலாற்று மீட்டுருவாக்க அணுகுமுறை, வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு, செயன்முறைக் கோட்பாடு, மானிடவியல் கோட்பாடு | 107-121 |
| 4 | **நாட்டுப்புறவியல் தொழில்நுட்பமும் பயன்பாடும்**<br>நாட்டுப்புற விளையாட்டுகள்: விளையாட்டின் தன்மைகள், விளையாட்டின் வகைகள், விளையாட்டால் அறியப்படும் கருத்துகள். நாட்டுப்புற மருத்துவம்: மருத்துவ விளக்கம் சிறப்புகள், மருத்துவ குறிப்புகள், வகைகள். நாட்டுப்புறவழிபாட்டு முறைகள் கல்வித்திட்டங்களுக்கு நாட்டுப்புறவியலைப் பயன்படுத்துதல். பெயராய்வு: மக்கள் பெயராய்வு, ஊர் பெயராய்வு | 122-196 |
| 5 | **புராணக்கதைகள்**<br>தொன்மம்(Myth) பொருள், வரையறை. தொன்மம், பழமரபுக்கதை, நாட்டுப்புறக்கதை வேறுபாடுகள், புராணம் பொருள் வரையறை, வரலாறு. மாக்ஸ்முல்லர் - மொழியும் மக்கள் எண்ண வளர்ச்சியும், 1. அடிக்கருத்தில் காலம், 2. கிளைமொழிக் காலம், 3. புராணக் காலம், 4. சனரஞ்சக காலம். புராணவியல் கோட்பாடு, புராணச்சடங்கு | 197-214 |

# அலகு 1

# நாட்டுப்புறவியல் வரையறை வரலாறு களஆய்வு

## நோக்கம்

- மனித இன வரலாற்றில் நாட்டுப்புறவியலின் பங்கு பற்றி அறிதல்
- நாட்டுப்புறவியல் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை அறிதல்
- நாட்டுப்புறவியல் கள ஆய்வு பற்றிய தகவல்களை அறிதல்
- எழுத்திலக்கியங்களைப் போன்று வாய்மொழி இலக்கியங்களாக அமைந்து பொது மக்களின் படைப்பிலக்கியக் களமாகவும் பண்பாட்டு ஆவணமாகவும் விளங்கும் நாட்டுப்புறவியலின் அடிப்படை இயல்புகளை விளக்கி வகைகளை அறிமுகம் செய்தல்.

## இயலில் இடம் பெறுபவை

நாட்டுப்புறவியல் சொல் வறையறை - அடிப்படைக்கருத்துக்கள் - சிறப்பியல்புகள் - வாய்மொழி மரபு - வழிவழியாக வருதல் - திரிபுடைமை - படைப்பாளி இன்மை - ஒரு வாய்ப்பாட்டுக்குள் அடங்குதல் - சொல் உருவாக்கம் - நாட்டுப்புறவியல் வரலாறு - தொல்காப்பியம் - சங்க இலக்கியம் - காப்பியம் - பக்தி இலக்கியம் - சிற்றிலக்கியம் - நாட்டுப்புறவியல் கூறுகள் - எழுத்திலக்கியம் , நாட்டுப்பற இலக்கியம் வேறுபாடுகள் - நாட்டுப்புற இலக்கியம் உழைப்புறவு - வட்டாரத்தன்மை - நுகர்வோர் கலைஞர் தள வேறுபாடு - தொழில் கலைஞர் - பகுதிநேரக் கலைஞர் - யதார்த்தத்தோடு நெருக்கமானதாக வாழ்வருகே நிற்றல் - வரலாற்றுத் தொடர் நிலைக்கூறு அதிகம் உடைமை - ஆளும் வர்க்க முரண் - சார்புத்தன்மை - கலைஞரே நுகர்வோர் - புறத்தோர் நுகர்வோர் - நாட்டுப்புற மரபு - இயற்கை சங்க நிகழ்வு மறுவிளக்கம் - புனைவு அடிப்படை விளக்கம் - இயற்கைச் சார்பு - புதியன ஏற்க மறுப்பு - கள ஆய்வு - வரையறை - அடிப்படையம் சூழலும் - வழிமுறைகள் - தகவலாளர்கள் தெரிவு - தகவலாளர் தொடர்பு முறை - தரவு சேகரிப்பு முறைகள் - பேட்டிமுறை - உற்றுநோக்கல் முறை - வினாநிரல்முறை - தகவலாளர் அடிப்படை - நாட்டுப்புற இலக்கிய வகைமை அடிப்படையில் - கருவிப்பயன்பாடு - களப்பணியில் அற உணர்வு - சிக்கல் - எச்சரிக்கை.

## நாட்டுப்புறவியல்:

மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாதது போன்று, மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் உள்ளோம். மொழியின் தோற்றம் உருவான போதே மனித இனமும் தன் சிந்தனைத் திறனை வளர்க்க முற்பட்டபோதே வாய்மொழி இலக்கிய வகை கருக்கொண்டது எனலாம். உலகில மொழியும் அடுத்து வாய்மொழி இலக்கியங்களும் அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் முகிழ்த்தன எனக் கூறலாம். எனவே, மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன எனக் கருதலாம். மண்ணின் மைந்தர்தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையும் குறையையும் நிறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும். நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புறப் பாடல்களிலே காணலாம். இவைகள் ஏட்டில் ஏறாவிடினும் எழுத்திலே வாராவிடினும் பாட்டிலே இடம் பெறாவிடினும் நம் நெஞ்சிலிருந்து மட்டும் நீங்காது நிற்கும்.

நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற இயலை நாட்டுப்புற மக்களின் மரபுப்பட்ட படைப்புக்கள் (Traditional Creations) என்பர். பொதுமக்களைச் சார்ந்த மரபு முறைகள் (Popular antiquities) என்ற பெயரிலும் மக்கள் இலக்கியம் (Popular literature) என்ற பெயரிலும் பொதுப் புராணவியல் (Common mythology) என்ற பெயரிலும் எஞ்சியது (Remains) என்ற பெயரிலும் வழங்கிவந்தது. பின்னர் நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folklore' என்ற சொல் 1846 இல் வில்லியம் ஜான் தாமஸ் (W.J. Thoms) அவர்களால் உருவாக்கப்பெற்றது. இதற்குப் பின்னரே இத்துறையில் முறையான ஆய்வு தொடங்கிற்று. மனிதனின் சடங்கு

முறைகள், கதைப்பாடல்கள், பழமொழி, நாட்டுப்புறப் பாடல் முதலியவற்றைக் குறிப்பதாகக் கூறியுள்ளார். பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (cultural survival) நாட்டுப் புறவியல் என்பது அவர் கருத்தாகும். 1846 இல் எத்தீனியம் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் 'Folklore' என்ற தலைப்பிட்டு எழுதினார். ஐந்து ஆண்டுக்குப்பின் இச்சொல்லைத் தலைப்பாகக் கொண்ட The dialect and Folklore of Northamptanshire, John Stembug முதல் நூல் வெளிவந்தது. பின்னர் இச்சொல் உலகமொழிகளில் நிலைபெறத் தொடங்கிற்று. ரொமன்ஸ் மொழியினர் இச்சொல்லை அப்படியே ஏற்றுக்கொண்ட போதிலும், டூட்டானிக் மொழியினர் 'Volkskunde' என்ற சொல்லையே விரும்பிப் பயன்படுத்துகின்றனர்.

Folklore என்பது Folk, Lore என்ற இரு சொற்கள் இணைந்ததாகும். 19-ஆம் நூற்றாணடில் ஐரோப்பிய நாடுகளில் 'Folk' என்ற சொல் விவசாய மக்களைக் குறித்து, பின்னர் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்களைக் குறித்தது. பொதுவான தொழில், மொழி, சமயம் முதலியவற்றைப் பின் பற்றும் குழுவை Folk என்பர். பொதுவாக கிராமப்புற, படிப்பறிவில்லாத, மக்களைக் குறிக்கும். 'Lore' என்பதற்கு 'மரபுச் செய்தித் தொகுதி' என்றும் 'வழக்காறு' என்றும் பொருள் கொள்ளலாம். Folklore என்பது நாட்டுப்புறமக்களின் அறிவு எனப் பொருள்படும். நாட்டுப்புற வழக்காற்றை Folklore என்றும் நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் ஆய்வை 'Folkloristics' என்றும் கூறலாம். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இச்சொல்லின் ஆதிக்கத்தைக் காணலாம். ஜெர்மன் மொழியில் 'die folklore' என்றும், பிரெஞ்சு மொழியில் 'lefolklore' என்றும், இத்தாலிய மொழியில் 'ilfolklore' என்றும், ஸ்பானிஷ் மொழியில் 'el folklore' என்றும், ரஷ்ய மொழியில் 'Folklor' என்றும் வழங்கி வருவதைக் காணலாம். இம்மொழிகளிலெல்லாம் இச்சொல் வழக்கிற்கு வருமுன் வேறு சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

வில்லியம் பாஸ்கம் (William Bascom) என் மானிடவியல் பேரறிஞர் 'Verbal art' என்ற சொல்லை உருவாக்கினார். Verbal art என்பது வாய்மொழிக்கலை என்றும் Non-Verbal art என்பது வாய்மொழிச் சாரா கலை என்றும் கூறலாம். வாய்மொழி இலக்கியத்தில் அடங்காத இசை, மந்திரங்கள்

முதலியவற்றை எதில் அடக்குவது என்று எண்ணியே Verbal art என்றத் தொடரை உருவாக்கினார். ஆனால், இச்சொல் நீண்ட நாட்கள் வழக்கில் இல்லை.

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம், கலை என்ற பிரிவினுள் அடக்குகின்றனர். ஆனால், நாட்டுப்புறவியல் இவற்றுடன் நின்றுவிடாமல் நாட்டுப்புற நம்பிக்கை, ஆடல், ஓவியம், பொருள்சார் பண்பாடு (Material culture) ஆகியவற்றையும் ஆராய்கிறது. டான் யோடர் (Don Yoder) அவர்கள் 'Fok Life' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். நாட்டுப்புற வாழ்வியல் (Folk life) நாட்டுப்புறப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பெறும் ஆய்வு முறையே நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு ஆகும். தொடக்க காலத்தில் நாட்டுப்புறவியல் பேரறிஞர்கள் பாடல், கதை, கதைப்பாடல், பழமொழி, விடுகதை பற்றியே ஆராய்ந்தனர். ஆனால், இன்று நாட்டுப்புறவியலின் ஆய்வு விரிந்து பரந்துபட்டுள்ளது. உழவுத் தொழிலின் வரலாற்றைப் பற்றியும் நாட்டுப்புறப் பேச்சு வழக்கும் பற்றியும் (Folk speech) நாட்டுப் புறக் கட்டிடக் கலை, உணவு உடை பற்றியும் நாட்டுப்புற மருத்துவம் பற்றியும் ஆராயப்படுகின்றன. நாட்டுப்புறவியல் சம்பந்தமான அனைத்துத் துறைகளையும் ஆராயும் அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. உலகியல் சார்ந்த பண்புகளை எல்லாம் கலந்த இப்பண்பாட்டு ஆய்வை நாட்டுப்புற வாழ்வியல் (Folk life) என டான்யோடர் குறிப்பிடுகின்றார்.

Verbal art, Folk life போன்ற சொற்கள் வழக்கில் நின்று நிலவவில்லை. Folk lore என்ற சொல்லே நிலைத்து வழக்கில் பயின்று வருகின்றது.

நாட்டுப்புற இலக்கியத்திற்கு ஐந்து முக்கியப் பண்புகள் இருப்பதாக ஜான் ஹெரால்டு பிருண்வார்ட் (Jan Harold Brunward) குறிப்பிடுகிறார்.

1. வாய்மொழியாகப் பரவல் (It is oral)
2. மரபு வழிப்பட்டது (It is traditional)
3. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல் (It exists in different Versions)
4. ஆசிரியர் இல்லாமை (It is usually anonymous)

5. ஒருவித வாய்பாட்டுக்குள் அடங்குவது (It tends to become formalized)

இவ்வைந்து பண்புகளுள் முதல் மூன்றும் மிகமிக இன்றியமையாதப் பண்புகள் எனக் குறிப்பிடுகின்றார்.

நாட்டுப்புற வழக்காறுகள் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. நாட்டுப்புறப் பாடல், கதைகள், பழமொழி, விடுகதை போன்றவைகள் பல்லாண்டு காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சார்டு எம். டார்சன் (Richard M.Dorson) அவர்களும் 'நாட்டுப்புற வழக்காற்றியல் மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்ததாக இருக்க வேண்டும்' என்கிறார். வில்லியம் பாஸ்கம் அவர்களும் நாட்டுப்புற வழக்காறுகள் எல்லாம் வாய்வழி வெளிப்படுத்தப்படுபவை என்கிறார். வாய்மொழி இலக்கியத்தின் அடுத்த பண்பு மரபாகும். மரபு என்பது வாய்வழி பரப்பப்படும் இயல்பையே கூறுவதாகக் குறிப்பிடுகின்றார். வீரயுகப் பாடல்கள் கூட மரபாலேயே அழியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறப் பாடல்களும் மரபு என்ற பண்பு இருப்பதால்தான் பல தலைமுறைகளாக எழுத்திலக்கியச் செல்வாக்கிடையே வாழ்ந்து வருகின்றன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களால் வாய்மொழியாகப் பாடப்படுவன. ஒருவரே ஒரு பாட்டை இரண்டுமுறை பாடினால் அப்பாட்டில் வேறு பாட்டைக் காணலாம். நாட்டுப்புற மக்கள் முன்னோர் பாடியதைக் கேட்டு நினைவுபடுத்தி மீண்டும் பாடுகின்றனர். அவ்வாறு நினைவுபடுத்திப் பாடும்போது சிலவற்றை மறக்க நேரிடும். மறந்துவிட்டதற்குப் பதிலாக சில அடிகளைப் புதிதாகச் சேர்த்துப்பாடுவர். இவ்வாறு பாடல்களை மாற்றிப்பாடுவதற்கு மூன்று காரணிகள் அடிப்படையாக அமைகின்றன.

1) நிலவியல் சூழல் (geographical environment)
2) சமுதாயச் சூழல் (Social environment)
3) வட்டார வழக்கு வேறுபாடு (Dialect variation)

இக்காரணிகளால் பாடலில் மாற்றம் காணப்படுகின்றது. பிறர் பாடியதை நினைவில் வைத்துப் பாடுவதால் பல்வேறு வகையான திரிபு வடிவங்கள் கிடைக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லும் இயல்பினதாலும் அவை பல்வேறு வடிவங்களாகத் திரிபடைகின்றன. நாட்டுப்புறப் பண்பாட்டியல் துறை ஒன்றின் ஒவ்வொரு சான்றும் ஒரு மாற்று வடிவம் என்று

கூறுதல் வழக்கம் என்கிறார் ஸ்டித்தாம்சன் (Stith Thompson) அவர்கள். ஆசிரியர் பெயர் அறியவொண்ணாமை வாய்மொழி இலக்கியத்தின் இயல்பாகக் கூறப்படுகின்றது. ஆனால், பௌரா அவர்கள் ஆசிரியரின்மைக்கு ஒரு விளக்கம் தருகின்றார். ஆசிரியரின்மைக்குரிய காரணத்தை எளிதாக விளக்கலாம். ஒவ்வொரு பாடலும் அது பாடப்படும் போது ஒருமுறை நிலைபேறு பெறுகின்றது. அதனைப் பாடிய புலவன் யார் என்று மக்களுக்குத் தெரியும். அதனால் அவன் தன் பெயரைத் தன் பாடலில் சொல்லத் தேவையில்லை என்கிறார் பௌரா (Bowra). ஆனால், இக்கூற்று பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. உதாரணமாக பெரும்பாலான நாட்டுப்பாடல்கள் மக்கள் பாடல்களாகத் திகழ்கின்றன. பழமொழி, விடுகதை போன்ற நாட்டுப்புற இலக்கியங்களுக்கு ஆசிரியர் பெயர் அறிதல் இயலாதொன்றாகும். இவை மனித சமுதாயத்தின் கூட்டு முயற்சியின் விளைவாகப் பரிணமித்தவை ஆகும். எனவே, நாட்டுப்புற இலக்கியங்களுக்கு ஆசிரியரின்மையை ஒரு முக்கிய கூறாகக் கருதப்பட வேண்டும். அடுத்த பண்பு ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கக் கூடியது. இது அமைப்பியல் தொடர்புடையது. எந்தவொன்றையும் ஆய்வுடன் வகைப்படுத்த வேண்டுமெனின், அதன் உள்ளமைப்பை ஆராய வேண்டும். வரையறை செய்வதற்குப் பாடம் (Text) அமைப்பு (Structure) சூழல் (context) ஆகிய மூன்று படிநிலைகளைக் கொள்ள வேண்டும். பழமொழி, விடுகதை போன்ற அமைப்பை ஆராய்ந்தால், அவை ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதைக் காண்கிறோம். இ·து அமைப்பியல் ஆய்வின் பயனாகும். ஏட்டிலக்கியத்தில் ஏதேனும் ஒருவரி திரும்பத் திரும்ப வரின், அது கூறியது கூறல் எனும் குற்றத்தின் பாற்படும். ஆனால், நாட்டுப்புறவியலில் சில அடிகள் திரும்பத் திரும்ப வருதல்(Repetitions) இயல்பாகும். நினைவில் வைத்துப் பாடுவதாலும் பாடியது மறவாமல் இருக்கவும் சில அடிகள் திரும்பத் திரும்பப் பாடப்படுகின்றன.

நாட்டுப்புறவியல் (Folklore) விளக்கம் குறித்து நாட்டுப்புறவியல் அறிஞர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விளக்கங்கள் அளிக்கின்றனர். எழுதப்பெற்ற இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்றால், நாட்டுப்புற இலக்கியம் சமுதாயத்தைக் காட்டும் கண்ணாடி எனலாம். நாட்டுப்புற இலக்கியம் கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமின்றி அவர்களது உணர்வுகளையும் பிரதிபலித்து

நிற்கின்றது என இந்தியாவின் மூத்த நாட்டுப்புறவியல் பேரறிஞர் சங்கர் சென்குப்தா (Sankar Sen gupta) கூறுகிறார். எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாடு (oral culture) அனைத்துமே நாட்டுப்புறவியல் என போர்ட்கின் கூறுகிறார். பிரான்சிஸ் லீ உட்லி வாய்மொழியாகப் பரப்பப்படும் இலக்கியமே நாட்டுப்புறவியல் என வரையறை செய்கிறார். நாகரிகம் வாய்ந்த மக்களின் மரபு வழி வந்த படைப்புக்களும் நாட்டுப்புறவியலாகும். இவை ஒலிகளையும் சொற்களையும் ஒருவித ஓசை அமைப்புக்குட்படுத்தி அமைக்கப்பட்டவையாகும். மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், நடனம் முதலியவையும் இவற்றுள் அடங்கும். மேலும் நாட்டுப்புறவியல் நாட்டுப்புற மக்களைப் பற்றிய ஒரு அறிவியல் அல்ல. ஆனால் மரபு சார்ந்த நாட்டுப்புற மக்களின் அறிவியலாகும், மரபு சார்ந்த நாட்டுப்புற மக்களின் அறிவியல் என்கிறார் ஜோன்ஸ் பாலிஸ் (Jones Balys) அவர்கள்.

மானிடவியல் பேரறிஞர் வில்லியம் பாஸ்கம் அவர்கள் புராண மரபுக் கதைகள், கதைகள், பழமொழி, விடுகதை, பாடல்கலையின்பாற்பட்ட கூறுகள், அனைத்தின் அறிவையும் நாட்டுப்புறவியல் என்ற சொல் உணர்த்துகிறது எனக் கூறுவதோடு இலக்கியத்தைப் போலவே நாட்டுப்புற இலக்கியமும் இசை, நடனம், ஓவியம் முதலியவற்றோடு தொடர்புடையது. ஆனால் வெளிப்படுத்தும் முறையில்தான் வேறுபடுகின்றது என்கிறார்.

‘Folklore’ என்பது மக்களால் பரம்பரை பரம்பரையாக மரபு வழி உண்டாக்கப்பட்ட ஆக்கங்கள் (creation) எனவும் ‘எழுத்துருவமில்லாத மொழிகளைக் கொண்ட மக்களிடையே காணப்படுவன எல்லாம் இதில் அடங்கும்’ எனவும் ‘புராணம் நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், விடுகதைகள்’ போன்றவை எனவும் ‘குடிமக்களிடையே காணப்படும் கலாச்சாரத்தின் ஒரு பகுதி’ எனவும் ‘பழமையான நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாட்டுச் சின்னங்கள்…’ என்றெல்லாம் அறிஞர்கள் விளக்கம் அளிக்கின்றனர். மக்களால் ஆக்கப்பட்ட, ஆக்கப்படுகின்ற ஆக்கங்களை இச்சொல் குறிப்பிடுகின்றது. ஒரு காலத்தில் இச்சொல் வழக்காறுகளை மட்டும் குறிப்பதாய் இருந்தது. ஆனால் காலப்போக்கில் வழக்காறுகளைப் பற்றி ஆயும் ஆராய்ச்சியையும் குறிப்பதாயிற்று என்ற இரஷ்யப் பேரறிஞர் செக்கலோவ் (Sokolav) கூறுகிறார். இதே நிலையினை வேறு சில அறிஞர்களிடமும் காணலாம். அலெக்ஸாண்டர் கிராப்பி (Alexander

Krappe) என்பார், இச்சொல் Volkskunde போலன்றி குறிப்பிட்ட வழக்காறுகளை மட்டுமின்றி அது பற்றி ஆராயும் ஆய்வையும் குறிப்பதாகக் கூறுகிறார். இதனால் தான் இதனை ஓர் அறிவியல் (Folklore is an historical science) என்றும் குறிப்பிட்டுச் செல்கிறார்.

பண்டைய நம்பிக்கைகள், வழக்கங்கள் பற்றிய அறிவியலே நாட்டுப்புறவியல் என ஸ்ரி.ஃ.பன்பியூக்ஸ் கூறுகிறார். மரபு வழியாக வழங்கப்படும் வழக்காறுகள் ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவுவதைப் பற்றி ஆராய்வதே நாட்டுப்புறவியலாகும் என ஆர்ச்சர் டெய்லர் (Archer Taylor) குறிப்பிடுகின்றார். நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழி, விடுகதை போன்றவை மக்கள் பேசும் மொழியிலேயே அமைந்திருப்பது நாட்டுப்புற இலக்கியத்தின் சிறப்புக்கூறு என ரிச்சார்ட் வாட்டர்மேன் குறிப்பிடுகிறார். மக்களது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், புராணக் கதைகள், மரபுக் கதைகள் முதலியன மக்களது பண்பாட்டை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்தியம்புகின்றன. எனவே நாட்டுப்புறவியல் என்பது மக்களது பண்பாட்டை ஆராயும் ஆய்வு என தியோடர் கஸ்டர் (Theodor gaster) கூறுகிறார். நாட்டுப்புற வழக்காறுகள் மரபு வழிப்பட்ட கருவிகளைப் பற்றியும் மரபுவழிச் சின்னமான ஸ்வஸ்திகா போன்றவற்றைப் பற்றியும் பல்வேறு நம்பிக்கைகளைப் பற்றி ஆராயும் ஆய்வே நாட்டுப்புறவியல் என டெய்லர் குறிப்பிடுகிறார். நாட்டுப்புற இலக்கியத்தின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பதிந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதை கற்றதோ, அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும் என்கிறார் எஸ்பினோசா என்னும் அறிஞர்.

மக்களது நம்பிக்கைகள், கதைகள், விளையாட்டு, ஆட பாடல் ஆகியவற்றை விளக்குவதே நாட்டுப்புறவியல் என்றும் அஃது அனைத்து மக்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப் பெற்று, தலைமுறை தலைமுறையாக வழங்கப்பெற்று, பயிற்சி பெற்ற, ஆய்வாளர்களின் முயற்சியால் எழுத்துருவாக்கம் பெறுகின்றது என்றும் கெர்ட்ரூத் கூரத் (Gertrude P. Kurath) கூறுகிறார். நாட்டுப்புற இலக்கியம் என்பது உயிரோடுள்ள புதைவடிவமாகும். அஃது அழிந்து போக மறுப்புடன் மனித சமுதாயத்தின் இலட்சக்கணக்கான ஆண்டு வாழ்வின் அனுபவங்களின் பண்பாட்டின் அறிவியலின் படிவங்களாகும்

என்கிறார். சார்லஸ் பிரான்சிஸ் போர்ட்டர் (Charles Francis Potter) எனும் அறிஞர். மக்களது பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவற்றில் காணப்படும் பதிவுபெறா மரபுகளை (unrecorded tradition) ஆராயும் அறிவியலே நாட்டுப்புறவியல் என குரோகன் டை (K. Krohen Die) குறிப்பிடுகின்றார்.

இன்றுவரை நாகரிக சமுதாயத்திலுள்ள கல்லாத மக்களிடையே எஞ்சியுள்ள நம்பிக்கைகள், வழக்கங்கள், மரபுகள், புராணங்கள், பழமரபுக் கதைகள், மூட நம்பிக்கைகள், திருவிழாச் சடங்குகள், மரபு விளையாட்டுப் பாடல்கள், கலைகள், ஆட்டங்கள் முதலியவற்றைப் பற்றி ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் என்கிறார் ஜான் எல். மிஷ் (John L. Mish) அவர்கள். நாட்டுப்புறச் சமுதாயத்தில் நிலவும் வாய்மொழியாக வழங்கும் கதை, பாடல், பழமொழி, விடுகதைப் பற்றி ஆய்வது நாட்டுப்புறவியலாகும். வாய்மொழியாகப் பரப்பப்படும் பண்பாட்டை ஆராய்வதும் நாட்டுப்புறவியலாகும். மரபு வழிபட்ட படைப்புகளான உரைநடை, பாடல்களைத் தவிர பண்பாட்டு மானிடவியலாளர் குறிப்பிடும் கலை, கைவினைப் பொருள், நம்பிக்கை, வழக்கங்கள் பற்றியும் நாட்டுப்புறவியல் ஆராய்கின்றது என்கிறார் எர்மின் டபில்யூ வோகலின் (Erminie W. Voegelin) அவர்கள். கூரத் போன்றே ஜேம்ஸன் அவர்களும் நாட்டுப்புறவியல் (Folklore) என்ற சொல் பண்பாட்டு இனவியல் எனப் பொருள்படுவது என்றும் இவ்வியலுக்கு வேண்டிய மூலப்பொருட்களைப் பண்டைப் புராணங்கள், பழைய மரபுக் கதைகள், பாடல்கள், கதைகள் போன்றவை என்றும் குறிப்பிடுவர். இவர் கருத்துப்படி நாட்டுப்புறவியல் என்ற சொல் முதலில் வழக்காறுகளைக் குறிப்பிடுவதாகத் தோன்றிப் பின்னர் வழக்காறுகளையும் வழக்காறு பற்றி ஆயும் ஆய்வினையும் குறிப்பிடுவதாக மாறிற்று.

Folklore என்ற சொல் நாட்டுப்புற மக்களின் வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பாடல், கதை, பழமொழி, விடுகதை, மந்திர தந்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பதோடு, தனி மனிதர்களின் கூட்டு முயற்சியாகப் பரிணமிப்பதோடு மாற்று வடிவங்களும் மீண்டும் மீண்டும் வருதலுமாகிய பண்புகளையும் கொண்டது என மரியா லீச் (Maria Leach) குறிப்பிடுகின்றார். இச்சொல் ஒரு நூற்றாண்டுப் பழமை வாய்ந்தது எனினும் அதன் பொருள் குறித்துக் கருத்தொற்றுமை ஏற்படவில்லை என்றும் மரபுகள் தலைமுறை தலைமுறையாக நினைவு கூர்தல் மூலம் பாதுகாக்கப்படுவதோடு வழக்கங்கள்,

நம்பிக்கைகள், சடங்குகள், நாட்டுப்புறவியல் எனக் கூறலாம் என்கிறார் ஸ்டித் தாம்ஸன் (Stith Thompson) அவர்கள். நாட்டுப்புறவியலின் கூறுகளை அல்லது வடிவங்களை முழுமையாக ஆராயும் வரை, நாட்டுப் புறவியல் ஒரு துறை என்பதை முழுமையாக விளக்க இயலாது என்கிறார் ஆலன் டாண்டீஸ் (Alan Dundes) எனும் அறிஞர். சுருங்கக் கூறின் நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட படைப்புக்கள் எனலாம்.

தமிழில், 'நாட்டுப் பண்பாட்டியல், வழக்காற்றியல்' நாட்டுப்புறவியல் நாட்டார் என வழங்குகின்றது. நாட்டுப்புறவியல் என்பதே நிலைத்து நிற்கின்றது.

**நாட்டுப்புற இயலின் வகைப்பாடு**

எந்த அறிவியல் ஆய்விலும் சேகரித்தலும் வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் இன்றியமையாதவையாகும். இம்மூன்று முறைகளும் தன்னிச்சையானவை என்றாலும் ஒன்றையொன்று சார்ந்தவைகளாகும். வகைப்படுத்துதல் மிகமிக இன்றியமையாதொன்றாகும். வகைப்படுத்தலைச் சிறப்பாகச் செய்யின் ஆய்வு சிறப்பாக அமையும்.

## நாட்டுப்புறவியல் ஆய்வின் வளர்ச்சி

நாட்டுப்புறவியல் ஆய்வின் வளர்ச்சியைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

சேகரிப்பு நிலை (Collection stage) → விளக்க நிலை (Description stage) →ஒப்பாய்வு நிலை (comparative stage) → அமைப்பியல் ஆய்வுக்கு முன்னைய நிலை (Pre-Structural stage) → அமைப்பியல் ஆய்வுக்குப் பின்னைய நிலை (Post-Structural stage).

இத்துறை தனியொரு துறையாக வளர்ந்தால் பல்வேறு துறையினருக்கும் பயன்படுவதோடு தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் (reconstruction) செய்யப் பெரிதும் துணை புரியும்.

## நாட்டுப்புறவியலும் வரலாறும் (Folklore and History)

கதைகளும் கதைப் பாடல்களும் பல வரலாற்றுச் செய்திகளை நமக்கு அளிக்கின்றன. கடந்த காலத்தைப் பற்றிய எந்தச் செய்தியும் பின்னர்

வரலாறாகப் பரிணமிக்கின்றது. எனவே தான் ‘இன்றைய செய்தி நாளைய வரலாறு’ எனக் கூறுகின்றனர். ஆப்ரிக்க நாட்டு வரலாற்றின் ஒரு பகுதி வாய்மொழியாக வழங்கப்படும் கதைப் பாடல்களை மீட்டுருவாக்கம் செய்ததாகும். வரலாறும் நாட்டுப்புறவியலும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருக்கின்றன.

மனிதனுடைய கடந்த காலத்தைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுவதால், நாட்டுப்புறவியலை வரலாற்று அறிவியல் (Historical science) என்று கூறுவர். வரலாற்றிற்குக் கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் எழுத்திலக்கியமும் சான்றாகத் திகழ்வன போல, நாட்டுப்புற இலக்கியங்களும் சான்றாகத் திகழ்கின்றன. குறிப்பாக நாட்டுப்புறவியலுக்குப் பண்பாட்டு வரலாறு நெருங்கிய தொடர்புடையதாகும். வரலாறும் நாட்டுப்புறவியலும் மக்களுடைய எழுதப்படாத மரபுகளைப் பற்றி ஆராய்கின்றன. வரலாற்றுப் பேரறிஞரும் நாட்டுப்புறவியல் பேரறிஞரும் பண்பாட்டு வரலாற்று மீட்டுருவாக்கத்தில் (Reconstruction of cultural history) அதிக ஈடுபாடு உடையவர்கள். இந்திய நாட்டுத் தொல் வரலாற்றையறிய 1) மரபு 2) தொல் பொருள் ஆய்வு 3) ஒப்பு இலக்கியம் முதலியவற்றைச் சான்றுகளாகப் பயன்படுத்துகின்றனர். மரபு என்பது நாட்டுப்புறவியலுக்கும் வரலாற்றிற்கும் பொதுவானதாகும். வாய்மொழி மரபு நாட்டுப்புறவியலின் உயிர்நாடியாகும்.

நாட்டுப்புறக் கதைகள் மூன்று வகை வரலாற்றினை எழுதத் துணை புரிகின்றன:

- நாட்டின் பொது வரலாறு
- வட்டார வரலாறு
- குடும்ப வரலாறு

நாட்டுப்புற இலக்கியங்கள் மூலம் ஒரு நாட்டின் வரலாற்றையும் அரசியல், சமூக வரலாற்றையும் அறிந்துகொள்ளலாம். கதைப்பாடல்களில் வரலாற்றுக் கதைப்பாடல்கள் (Historical ballads) வரலாற்றையறிய பெருந்துணையாக உள்ளன. இராமப்பய்யன் கதைப்பாடல் (கி.பி. 1623-59) சடைக்கத் தேவனுக்கும் திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பய்யனுக்கும் நடந்த போரை விவரிக்கின்றது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த முதல் வீரன் கட்ட பொம்மன் (கி.பி. 1761-1799) எனலாம். கட்டபொம்மன் கதைப்பாடல் மூலம் கட்டபொம்மன்

கோட்டை கட்டிய வரலாறு. பாஞ்சாலங்குறிச்சிக்கும் எட்டையபுரத்துக்கும் ஏற்பட்ட பகைமை, ஆங்கிலேயருக்கும் கட்டபொம்மனுக்கும் ஏற்பட்ட மோதல், வெள்ளையம்மாளின் வீரம் அனைத்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

டாக்டர் நா.வானமாமலை அவர்கள் வரலாற்றுக் கதைப்பாடல்களின் துணைகொண்டு மூன்று வரலாற்றுக் கட்டங்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

- பாண்டியர்களுக்கும் கன்னடியர்களுக்கும் போர் ஐவர் ராசாக்கள் கதை கன்னடியன் படைப்போர்.
- மதுரை நாயக்கர்களும் மறவர்களும் போரிடல் இராமப்பய்யன் அம்மானை.
- பாளையக்காரர்களும் பிரிட்டிஷ்காரர்களும் போரிடல் கட்டபொம்மன் கதைப்பாடல்.

வரலாற்றுக் கதைப் பாடல்கள் மூலம் நாட்டுப்புறவியல் வரலாற்றுத் துறையோடு கொண்ட தொடர்பினை நன்கு அறியலாம்.

## நாட்டுப்புற இயலின் வரலாறு

மனிதன் தோன்றிய போதே நாட்டுப்புற வழக்காறுகள் தோன்றிவிட்டன. நம்பிக்கைகளும் பழக்க வழக்ககங்களும் என்று மனித இன வரலாற்றில் தோன்றினவோ, அன்றே இவ்வியலும் தோன்றிவிட்டது. பொதுமக்களைச் சார்ந்த மரபுமுறைகள் (Populer antiquities) என்ற பெயரிலும், பொதுமக்கள் இலக்கியம் (Populer literature) என்ற பெயரிலும், பொதுப் புராணவியல் (Common mythology) என்ற பெயரிலும் ஆய்வுகள் நடைபெற்றன. பின்னர் நாட்டுப்புறவியலைக் குறிக்கும் ‘Folklore’ என்ற சொல் உருவாக்கப்பட்டது. Folklore என்ற சொல்லையும் பகுப்பையும் செய்த பெருமை வில்லியம் ஜான் தாமஸ் (William John Thomas) அவர்களையே சாரும். இவ்வாங்கிலேயர் இச்சொல்லை உருவாக்கிய காலம் கி.பி. 1846 ஆகும். இதற்குப் பின்பே நாட்டுப்புறவியல் அறிவியல் ஆய்வாக மலர்ந்தது. மனிதனின் சடங்கு முறைகள், நம்பிக்கைகள், கதைப் பாடல்கள், பழமொழி, நாட்டுப்புறப் பாடல் முதலியவற்றை இச்சொல் குறிப்பதாக அவர் கூறியுள்ளார். நாட்டுப்புறவியல் என்பது பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (Cultural survival) என்பது அவர் கருத்தாகும். வில்லியம் பஸ்கம் (William Bascom) என்ற மானிடவியல் பேரறிஞர் ‘Verbal art’ மொழிக்

கலை என்றும், 'Non-verbal art' என்பது வாய்மொழி சாராத கலை என்றும், வாய்மொழி இலக்கியத்தில் அடங்காத இசை, மந்திரங்கள் முதலியவற்றை எதில் அடக்குவது என்று எண்ணியே 'Verbal art' என்ற தொடரை உருவாக்கினார். ஆனால், அது நெடுநாள் வழக்கில் இல்லை. அயர்வொர்த் பீட் (Iorwerth Peate), டான் யோடர் (Don Yoder) போன்றோர் 'Folk life' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். நாட்டுப்புற வாழ்வியல் (Folk life) என்ற சொற்றொடர் நாட்டுப்புறப் பண்பாட்டின் அனைத்துத் துறைகளையும் குறிப்பிடும் இருபதாம் நூற்றாண்டின் கண்டுபிடிப்பாகும். சுருங்கக்கூறின் நாட்டுப்புற வாழ்வியல் என்பது பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கி ஆராய்வதாகும். நாட்டுப்புறவியலைக் குறிக்கப் பல சொற்கள் தோன்றியும் 'Folklore' என்ற சொல்தான் நிலைத்து நின்றது.

கி.பி. 1846 ஆம் ஆண்டில் 'Folklore' என்ற சொல் உருவாவதற்கு முன்பே, நாட்டுப்புற வழக்காற்றைப் பற்றிப் பல நூற்கள் தோன்றிவிட்டன. 19 ஆம் நூற்றாண்டிலேயே ஐரோப்பிய நாடுகளிலும் ருஷ்யா, பின்லாந்து, ருமேனியா, பல்கேரியா போன்ற நாடுகளில் நாட்டுப்புற இயல் வளரத் தொடங்கிவிட்டது. இந்நூற்றாண்டின் முற்பகுதியில்தான் முறையான ஆய்வுக்கு வித்திடப்பட்டது என்று கூறலாம். ஜெர்மானியில் கிரீம் சகோதரர்கள் நாட்டுப்புறவியலை அறிவியல் நோக்கில் ஆராயத் தொடங்கிவிட்டனர். உலகிற்குப் பல நாட்டுப்புற இயல் அறிஞர்களை ஈந்தது பின்லாந்து எனின் அது மிகையாகாது. எனவேதான் நாட்டுப்புறவியலில் பின்னிஸ் ஆய்வாளர்களின் கோட்பாட்டினையொட்டி Finnish school ஒன்று எழுந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. எலியஸ் லின்ரோட் (Elias Linnrot) (கி.பி. 1802 1884) பின்லாந்து நாட்டுப்புறவியல் குறித்து நூல் ஒன்று வெளியிட்டார். இவரே கலேவலா (Kalevala) என்ற தேசிய காவியத்தையும் வெளியிட்டார். இந்நூலைத் தொடர்ந்து The Proverbs of the Finnish (1842). The Riddles of the Finnish (1844) என்ற நூற்கள் வெளிவந்தன. பின்னிஸ் நாட்டுப்புறவியல் அறிஞர்களில் ஜூலியஸ் குரோகன் (கி.பி. 1835-1888), கார்லே குரோகன் (கி.பி. 1863-1933) ஆன்ட்டி ஆர்னே (கி.பி. 1867-1925) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். பின்லாந்தைப் போன்று ஜெர்மனியும் 19 ஆம் நூற்றாண்டில் நாட்டுப்புறவியல் ஆய்வில் முனைந்து நின்றது. நாட்டுப்புறவியலின் தந்தையெனக் குறிப்பிடும் ஜேக்கப் கிரீம் சகோதரர்கள் ஜெர்மன் நாட்டைச்

சார்ந்தவர்களே. நாட்டுப்புறவியல் துறையில் அமெரிக்க நாடு காலந்தாழ்த்தி அத்துறையில் ஈடுபட்டாலும் அத்துறையில் மிகச் சிறந்து விளங்கும் நாடுகளில் ஒன்றாக அமெரிக்க இன்று விளங்குகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 1). பழைய ஆங்கில நாட்டுப்புறவியல் எச்சங்கள், 2). நீக்ரோக்களின் நாட்டுப்புறவியல், 3). வட அமெரிக்க இந்தியப் பழங்குடிகளின் நாட்டுப்புறவியல், 4). பிரெஞ்சு, கனடா, மெக்ஸிகோ நாட்டுப்புறவியல் என அமெரிக்க நாட்டுப்புறவியலை நான்காகப் பகுத்து ஆராய்கின்றனர். அமெரிக்கா இன்று எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருப்பது போல, நாட்டுப்புறவியல் துறையிலும் முன்னேறியுள்ளது.

நாட்டுப்புற இயலின் வரலாற்றையறிய, நாட்டுப்புறவியல் அறிஞர்களின் பணியைத் தொகுத்து நோக்குவது இன்றியமையாததொன்றாகும். இது நாட்டுப்புற இயலின் வரலாற்றை ஓரளவு அறிந்தது போன்று ஆகும். நாட்டுப்புற இயலின் வரலாற்றை நூலாகவே எழுதலாம் என்பதால் நாட்டுப்புற இயலின் வரலாற்றை நாட்டுப்புறவியல் அறிஞர்களின் பணியின் அடிப் படையில் மிகச் சுருக்கமாகக் காண்போம்.

## ஜேக்கப் கிரீம் (Jacob Grimm) (கி.பி. 1785-1863)

ஜேக்கப் கிரீம் அவர்கள் நாட்டுப்புறவியலை அறிவியல் அடிப்படையில் ஆராய வழி வகுத்தவர். இவரை நாட்டுப்புற இயலின் தந்தை (Father of folklore science) என்பர். இவரும் இவர் அது சகோதரரும் ஜெர்மனிய மூலிகை ஆராய்ந்த பொழுது நாட்டுப்புறவியலில் நாட்டம் கொண்டனர். கிரீம் சகோதரர்கள் கி.பி.1812 ஆம் ஆண்டு நாட்டுப்புறக் கதைகளின் முதல் தொகுதியையும் கி.பி. 1815 ஆம் ஆண்டு இரண்டாவது தொகுதியையும் வெளியிட்டனர். கி.பி. 1884 ஆம் ஆண்டு கிரீமின் ஆய்வு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கிரீமின் ஆய்வு 50 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது எனின், அதன் சிறப்பைக் கூறவேண்டியதில்லை. நாட்டுப்புறக் கதைகளை ஒப்பாய்வு செய்து கி.பி. 1822 ஆம் ஆண்டு மூன்றாவது தொகுதியை வெளியிட்டார். மொழியியல் துறையில் ஜெர்மன் மொழியை ஆராய்ந்த பொழுது 'கிரீம்ஸ் விதி' என்ற ஒலியியல் விதி ஒன்றையே உருவாக்கினார். இவர் ஒப்பியல் ஆய்வு முறையை நாட்டுப்புறவியலுக்கும் பயன்படுத்த தொடங்கினார் வாய்மொழி இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஜெர்மன் புராணவியல் (German

Mythology) (கி.பி. 1835) என்ற நூலில் விரிவாக விளக்கியுள்ளார். சுவார்ட்ஸ் (Schwartz), மென்ஹார்ட் (Mannhart), மாக்ஸ்முல்லர் போன்றோர்கள் கிரீமின் கோட்பாடுகளைப் பின்பற்றினர்.

ஜேக்கப் கிரீமின் கோட்பாடுகளை மாக்ஸ் முல்லர் (Max Muller) அவர்கள் ஒரு பள்ளியாகவே (Mythological school ) உருவாக்கி விட்டார். ஜெர்மானியப் புராணங்களில் காணப்படும் தொல்வடிவங்களை (Proto form) ஆராய்ந்ததோடு புராணவியல் படைப்புகளைப் பற்றியும் அலசி ஆராய்ந்தார். இப்பள்ளியை ஒப்பியல்பள்ளி (Comparative School) என்றும் கூறுவர். இப்பள்ளியைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் நாட்டுப்புறவியலை மரபுமுறையில் ஆராய்ந்தனர். இப்பள்ளி உருவானதன் விளைவாக 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் புராணவியல் கோட்பாடு ஒன்று உருவாகியது.

## தாமஸ் கிராவ்டன் குரோக்கர் (Thomas Crofton Croker) (கி.பி.1798-1854)

கிரீம் சகோதரர்கள் ஜெர்மானிய நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்தது போன்று, இவர் அயர்லாந்தில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து Fairylegends and traditions of the South of Ireland என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் பல பதிப்புகளைக் கண்டதும் பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதும் இந்நூலின் சிறப்பை வெளிப்படுத்துவதாகும். இந்நூலில் இவர் மற்ற நாடுகளில் வழங்கும் கதைகளோடு ஒப்பிட்டும் ஆராய்ந்துள்ளார். ஒப்பாய்வு செய்வதன்மூலம் கதைகளின் தோற்றம், பரவுதல், வளர்ச்சி முதலியவற்றை அறியலாம். இவர் விவசாய மக்களிடையே வழங்கும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றைத் தொகுத்து Researches in the South of Ireland Illustrative of the scenery, architectural remains and the manners and superstitions the peasantry என்ற நூலைக் கி.பி. 1824-லிலும் The Legends oflats Saints and doings at Killarney என்ற நூலைக் கி.பி. 1829-லும்,The keen of the South of Ireland: as illustrative of Irish Political and domestic history, manners, music and superstitions என்ற நூலை1844-லிலும் வெளியிட்டார். இந்நூல்களனைத்தையும் ஒருங்கே நோக்கும்போது, இவரது நாட்டுப்புறவியல்

அறிவினையும் எதனையும் சிந்தித்து ஆராயும் தன்மையினையும் நன்கு காணலாம்.

## தியோடர் பென்பே (Theodor Benfey) (கி.பி.1809-1901)

இவர் கி.பி. 1859 ஆம் ஆண்டு பஞ்சதந்திரக் கதைகளை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்ததோடு அழகிய முன்னுரையொன்றும் எழுதினார். பென்பே அவர்களுக்குச் சமஸ்கிருத வாய்மொழி இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு உண்டு. இந்திய நாட்டுப்புறக் கதைகள் மத்தியதரைக் கடல் வழியாக மேலை நாட்டுற்குப் பரவியிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு பரவுவதற்குக் கலாச்சாரத் தொடர்பும் காரணம் எனக் கூறுகின்றார். நாட்டுப்புறக்கதைகளில் காணப்படும் ஒற்றுமைக்கு ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் கதை பரவுவதே காரணமென இவர் கருதியதால் இவரது கோட்பாட்டைப் 'புலம் பெயர்வுக் கோட்பாடு' (Migration theory) என்பர். சிலர் இதனைக் 'கடன் வாங்கல்' (Theory of borrowing) என்றும் குறிப்பிடுவர். இவரது கோட்பாட்டைப் பிரெஞ்சு நாட்டுக் காஸ்கெயினும் (Cosquin), இங்கிலாந்து நாட்டுக் குலோஸ்டினும் (Clostin), ஜெர்மன் நாட்டு லோன்டோவும் (Loundo) ஆதரித்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவர்கள் எழுதிய நூல்கள் அனைத்தும் பென்பேயின் கோட்பாட்டைப் பின்பற்றியவையாகும். மாக்ஸ்முல்லர் போன்றோரும் இவரது கோட்பாட்டை ஆதரித்தனர் என்பதும் ருஷ்ய நாட்டிலும் இவரது கோட்பாட்டிற்கு ஆதரவு இருந்தது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. இவரது கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள் மேலும் அதை வளர்க்கவில்லை. இவரது கோட்பாட்டிலுள்ள குறைகளைச் ஜோசப் பேடியர் (Joseph Bedier) அவர்கள் சுட்டிக்காட்டி ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள் என்றாலும் இவரது கோட்பாட்டின் அடிப்படையில் பென்பே பள்ளி (Benfey School) எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அடல்பெர்ட் குகன் (Adalbert Kuhn) (கி.பி. 1812-1881)

ஜேக்கப் கிரீமைப் போலவே இவரும் ஒப்பு மொழியியல் அடிப்பைடியில் நாட்டுப்புறவியலை ஆராய்ந்தார். இவர் 'The Descent of fire and the Drinks of the Gods' என்ற நூலில் கிரேக்க புராணத்தில் வரும் பிராமோதிஸை

(Prometheus) வட மொழியில் The stages in the development of myth என்று மற்றொரு நூலையும் எனப்படும் பிராமோதிஸீடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். இயற்கையின் புயல், இடி, மின்னல், காற்று, மேகம் முதலியவைகள் புராணங்களுக்கு அடிப்படையாக உள்ளன எனக் கண்டறிந்தார். இருட்டு, வெளிச்சம் முதலியவற்றின் முரண்பாட்டுக் கோட்பாடுடையனவாகப் பெரும்பாலான புராணங்கள் அமைந்துள்ளன எனக் குகனைப் பின்பற்றும் சுவார்ட்ஸ் குறிப்பிடுகிறார். மேலும் புராணங்களை 'மேல்நிலைப் புராணங்கள், கீழ்நிலைப் புராணங்கள்' என இருவகையாகப் பகுக்கின்றார். மேலும் கடவுள் கதை சம்பந்தப்பட்ட புராணங்கள் கிறிஸ்தவ மிஷனரிகளால் அழிக்கப்பட்டன என்றும் கூறுகிறார். மரம், நீர், ஆவிகள் சம்பந்தப்பட்ட கதைகளைக் கொண்ட கீழ்நிலைப் புராணங்கள் தற்காலக் கதைகளில் ஊடுருவிக் கொண்டுள்ளன என்றும் குறிப்பிடுகிறார்.

## வில்ஹெல்ம் மான்ஹார்ட் (Wilhelm Mannhardt) (கி.பி.1831 1880)

நீர், ஆவிகள் பற்றிய புராணத்தை ஜெர்மன் நாட்டுப் புறவியல் கூறுகளுடன் ஒப்பிட்டு, அஃது மானிடவியல் பள்ளிக் கோட்பாடுடன் டெய்லர், லாங்க், பிரேஜர் கருத்துகளுடன் ஒத்திருந்ததைச் சுட்டிக்காட்டி ஆராய்ந்தார். புராணவியல் பள்ளியின் ஆய்வு நெறிமுறையின் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டினார். இவரும் புராணவியல் பள்ளியைச் சார்ந்தவராகயிருந்தும், அப்பள்ளியின் ஆய்வுநெறி குறைபாட்டைச் சுட்டி அதை நீக்க வழிமுறைகளைக் காணவேண்டும் என்றும் கூறுகிறார்.

## மாக்ஸ் முல்லர் (Max Muller) (கி.பி. 1823 - 1900)

ஜேக்கப் கிரீமின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இவரது ஆய்வுகள் அமைந்துள்ளன எனக் கூறுவாருமுளர். சமஸ்கிருதப் பேரறிஞரும் மொழியியல் வல்லுநருமான மாக்ஸ் முல்லர் புராணவியல் ஒப்பாய்வில் மிகுந்த ஈடுபாடு உடையவர். இந்தோ ஐரோப்பியப் புராணங்களின் தோற்றத்தை ஆராய்ந்தவர். இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் காணப்படும் பொருள் வேற்றுமையும்

ஒருசொல் பல பொருட்களைத் தருவதும் புராணங்கள் தோன்றுவதற்குக் காரணம் எனக் கருதினார். ஒரு கால கட்டத்தில் வேதக் கடவுள்களின் பெயர்கள் மறக்கப்பட்டு, அப்பெயர்களைப் புராணங்களில்தான் காண முடிந்தது என்கிறார். பெரும்பாலான புராணங்களுக்கு இயற்கையின் படைப்பான சூரியனுடன் தொடர்பு இருப்பதாக இவர் கருதுவதால், இவரது கோட்பாட்டை 'SolarTheory' என்று கூறுவர். மாக்ஸ் முல்லரின் கோட்பாட்டை ஆன்ட்ரூ லாங்கும் மான் ஹார்ட் போன்றோரும் மறுக்கின்றனர். ஜேக்கப் கிரீமின் கோட்பாட்டை மாக்ஸ்முல்லர் ஒரு பள்ளியாகவே (Mythological School or Comparative School) உருவாக்கினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் நாட்டுப்புறவியல் சம்பந்தப் தொகுப்புகள் குவிந்தன. மானிடவியலாளர். மொழியியலாளர், புவியியலாளர், நாட்டுப்புறவியலாளர் மக்கள் பழக்க வழக்கங்கள், படைப்புகள், மொழி முதலியவற்றை ஆராயத் தொடங்கினார். மொழியியலாளரும் நாட்டுப்புறவியலாளரும் வேற்றுமையில் ஒற்றுமை காண முற்பட்டனர். இந்த ஒற்றுமைக் கூறுகள் முன்னோரது பண்பாட்டினின்றும் பெற்றதாகவோ அல்லது கடன் பெற்றதாகவோ கூற முடியவில்லை. இந்நிலையில் மானிடவியல் பள்ளி (Anthropological School) தோன்றியது. டெய்லர் போன்றோர் இப்பள்ளியின் கோட்பாட்டினை விரிவாக எடுத்துரைத்தனர்.

## சுவார்ட்ஸ் (Schwartz)

அடல்பொட் குகன் போன்று எல்லாப் புராணங்களுக்கும் இடி மின்னல் தான் அடிப்படைக் காரணம் என்பது இவரது கோட்பாடாகும். இதைத்தான் Storm theory என்பர். இருட்டுக்கும் ஒளிக்குமிடையேதான் பல புராணக்கதைகள் எழுந்தன என்பது இவர் வாதமாகும். இவ்விஷயத்தில் ஜேக்கப் கீரிமைவிட ஒரு படி முன்னேறி, மான்ஹார்ட் (Mannhardt) போன்றோர்க்கு வழிகாட்டியாக விளங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது. புராணக் கதைகளைச் சேகரிப்பதும் அவற்றின் தோற்றத்தை ஆராய்வதும்தான் நாட்டுப்புறவியல் ஆராய்ச்சியாக இருந்தது.

## டெய்லர் (E.B.Taylor) (கி.பி. 1832-1917)

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் நாட்டுப்புறவியல் சம்பந்தப் தொகுப்புகள் குவிந்தன. மானிடவியலாளர். மொழியியலாளர், புவியியலாளர், நாட்டுப்புறவியலாளர் மக்கள் பழக்க வழக்கங்கள், படைப்புகள், மொழி முதலியவற்றை ஆராயத் தொடங்கினார். மொழியியலாளரும் நாட்டுப்புறவியலாளரும் வேற்றுமையில் ஒற்றுமை காண முற்பட்டனர். இந்த ஒற்றுமைக் கூறுகள் முன்னோரது பண்பாட்டினின்றும் பெற்றதாகவோ அல்லது கடன் பெற்றதாகவோ கூற முடியவில்லை. இந்நிலையில் மானிடவியல் பள்ளி (Anthropological School) தோன்றியது. டெய்லர் போன்றோர் இப்பள்ளியின் கோட்பாட்டினை விரிவாக எடுத்துரைத்தனர்.

## ஜூலியஸ் குரோகன் (Julius Krohan) (கி.பி.1835-1888)

ஹெல்சிங்கி பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய இவர் வரலாற்று நிலவியல் கோட்பாட்டை விரிவாக ஆராய்ந்தார். நாட்டுப்புறப் பாடல்களின் தொன்மை வடிவ வரலாற்றை அறிய, திரிபு வடிவங்களை ஒப்பிட்டு ஆராய ஆரம்பித்தார். வரலாற்று புவியியல் கோட்பாட்டின்படி தனியொரு கதையின் வரலாற்றையும் அறியமுடியும். இம்முறையானது கதைகளை வகைப்படுத்தத் துணை புரிகின்றது.

## லாங்க் (Lang) (கி.பி. 1844-1912)

லாங்க் அவர்கள் மாக்ஸ் முல்லர் கோட்பாட்டினை எதிர்த்தே வந்துள்ளார். இவருடைய ‘கருத்து மாறுபாட்டு இலக்கியம்’ (Literature of controversy) என்பதனை ரிச்சார்ட் டார்சன் தமது கட்டுரையொன்றில் சுருக்கிக் கொடுத்துள்ளார். மனித இன வரலாற்றில் காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிக் நிலைக்கு மாற்றம் பெற்று வளர்கின்ற வளர்ச்சியைக் காண்கிறோம். பழங்கால பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவைகள் நாட்டுப்புற மக்களிடையே நிலவுவதைக் காணலாம். நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவைகள் பழங்கால மக்களது பழக்க வழக்கங்களின் எச்சமாகும். இவ்வெச்சங்கள் மனித இன வரலாற்றையும் பண்பாட்டையும் மீட்டுருவாக்கம் செய்ய துணை புரிகின்றன. பழங்கால மனிதன் ஆவியை மரங்களுக்கும் விலங்குகளுக்கும் இயற்கைக்கும் மாற்றினான். புராணங்களும் கதைகளும் ஆவியுலகக் கோட்பாட்டினையும் (animism) குலமரபுச்சின்ன வாழ்க்கை முறையையும் (Totemism) விளக்குவனவாக

உள்ளன. ஏனென்றால் பழங்கால மனிதனால் இயற்கைக்கும் மனித இயல்புக்கும் வேறுபாட்டைக் காண முடியவில்லை. கிரேக்க தெய்வங்களைப் பற்றிச் செவ்விந்தியர்களின் குலமரபு மூலம் அறிகிறோம். இவர் 'Myth, ritual and religion (கி.பி. 1887) என்ற நூலை எழுதியுள்ளார்.

## தாமஸ் நைட்லி (Thomas Knightley)

ஜரிஷ் நாட்டைச் சார்ந்த இவரது 'The fairy mythology (கி.பி. 1828). Tales and popular fiction (கி.பி.1834) நூற்களும் ஒப்பு நாட்டுப்புறவியலின் மிகச் சிறந்த நூல்களாகக் கருதப்படுகின்றன. இவர் குரோக்கரின் தூண்டுதலின் பேரில் இத்துறையில் ஈடுபட்டார். பலவிடங்களில் வழங்கிய கதைகளையெல்லாம் திரட்டி இன அடிப்படையில் வகை செய்துள்ளார். சில கதைகள் ஜெர்மானிய மக்களிடையே தோன்றி, பின்னர் கெல்டிக் மக்களிடையே பரவியது என்றும், பழைய ஐரிஸ் மக்களிடையே மோகினிக்கதைகள் காணப்படவில்லை என்றும் குறிப்பிடுகின்றார். பல்வேறு நாட்டுக் கதைகளை ஒப்பிட்டு, அவற்றிடையே காணப்படும் ஒற்றுமைக்குக் காரணங்கள் காணவும் முற்பட்டார். பல்வேறு நாட்டுப்புறக் கதைகளில் காணப்படும் ஒற்றுமைக்கு மனித இன வரலாற்றில் மக்களிடையே காணப்படும் ஒரே விதமான எண்ணம்தான் காரணம் என்கிறார். சில கதைகள் ஒரே இடத்தில் தோன்றிப் பின்னர் பல இடங்களுக்கும் பரவியிருக்கலாம் என்றும், சில நாடுகளில் கதைகள் தனித்தனியே தோன்றியிருக்கலாம் என்றும், மற்றும் சில கதைகள் மக்களின் ஒருமித்த எண்ணத்தால் தோன்றியிருக்கலாம் என்றும் கூறுகிறார். லாங்க் அவர்களது கோட்பாட்டினையே இவரும் கொண்டிருந்தார் எனக் கூறலாம். நாட்டுப்புறவியலுக்கு வித்திட்ட அறிஞர்களுள் இவரும் ஒருவர் எனலாம்.

## வில்லியம் தாமஸ் (William Thomas)

நாட்டுப்புற இயல் வரலாற்றில் மறக்கமுடியாத இடத்தைப் பெற்றிருப்பவர் இவரே. இவர்தாம் கி.பி. 1846 ஆம் ஆண்டு 'Folklore' என்ற சொல்லை உருவாக்கினார். இச்சொல்லை உருவாக்கிய பின்புதான் நாட்டுப்புறவியல் ஆய்வு அறிவியல் ஆய்வாக மாறத் தொடங்கியது. இச்சொல்லை உருவாக்கியதோடு கிபி. 1878 ஆம் ஆண்டு நாட்டுப்புறவியல் கழகம் (Folke-loreSocietல) ஒன்றும்

இவரால் ஏற்படுத்தப்பட்டது. இவரே இயக்குநராகவும் கொம்மே கௌரவச் செயலாளராகவும் இருந்து பணியாற்றினர். 'Folklore Record' என்ற இதழையும் (Journal) நடத்தினார். பின்னர் இது 'Folklore' என்ற பெயரில் வந்தது. உலகிலே முதன் முதலில் துவங்கப்பட்ட கழகம் இது தான். 'Folklore' என்ற சொல்லை உருவாக்கியதோடு, நாட்டுப்புற இயலுக்கு வித்திட்டவர்களுள் முதன்மையானவர் வில்லியம் தாமஸ் அவர்களேயாவர். நாட்டுப்புற இயலுக்கு வித்திட்ட பெருமையும் நாட்டுப்புற இயலின் வரலாற்றில் முதலிடமும் இவருக்குண்டு.

## ஜேம்ஸ் ஜார்ஜ் பிரேஜர் (James George Frazer) (கி.பி.1854-1941)

ஸ்காட்லாந்தைச் சார்ந்த இவர் லிவர்ப்பூர் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். நாட்டுப்புறவியல் துறையில் மானிடவியல் கோட்பாடு (Anthropological theory) வளரலாயிற்று. எதையும் அறிவியல் அடிப்படையில் ஆராயவேண்டும் என எண்ணினார். இவர் பல தொகுதிகளைக் கொண்ட 'The Golden Bough' (கி.பி. 1890) என்ற உலகப் புகழ் பெற்ற நூலை எழுதியுள்ளார். பழங்குடி மக்களது வழக்காறுகள், சடங்குகள், கதைகள் போன்றவற்றையெல்லாம் சேகரித்து அளித்துள்ளார். இந்நூல் உள்ளவரை இவரது புகழ் உலகில் அழியாது நிலைத்து நிற்கும். நாட்டுப் புறவியல் துறையில் இந்நூல் குறிப்பிடத்தக்க நூலாகும்.

## கார்லே குரோகன் (Kaarle Krohn) (கி.பி. 1863-1933)

இவர் ஹேல்சிங்கி (Helsinki) பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். இப்பல்கலைக்கழகம் தான் உலகிலேயே முதன் முதலாக நாட்டுப்புறவியலுக்கு ஓர் இருக்கையை (Chair for folklore) ஏற்படுத்தியது. இளம் நாட்டுப்புறவியல். ஆய்வாளர்கட்கு ஹெல்சிங்கியை மெக்கா என்று கூறுவாருமுளர். இவர் டென்மார்க், பின்லாந்து, நார்வே நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து வகைப்படுத்தி ஒப்பியல் அடிப்படையில் ஆராய்ந்தார். நாட்டுப்புறக்கதைகள் எந்த நாட்டில் தோன்றி, எந்தெந்த நாட்டிற்குப் பரவின என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்தார். ஒரு கதையின் வரலாறும் அது சென்ற இடங்களைப்பற்றி ஆராயும் ஆய்வை 'வரலாற்று நிலவியல் முறை' என்பர். கி.பி. 1962-ல் இவர் வெளியிட்ட A working method of folklorists என்ற நூலில் தமது கோட்பாடுகளை விரிவாக

ஆராய்ந்துள்ளார். மிகப் புகழ் வாய்ந்த நாட்டுப்புறவியல் அறிஞர்களுடன் இணைந்து International federation of folklorists என்ற அமைப்பை ஏற்படுத்தி, பல நூற்களை வெளியிட்டனர். பென்பேயின் அடிப்டையில் இவ்வமைப்புச் செயல்பட்டாலும், இவ்வமைப்பினர் சில கோட்பாடுகளை உருவாக்கி அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்தனர் எனக்கூறின் மிகையாகாது. இக்கொள்கையைப் பின்பற்றி ஆண்டர்சன் (Anderson), ஆன்ட்ரே (Andrey), ஸ்டித் தாம்சன் (Stith Thompson) போன்றோர் ஆராய்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பேடியர் (Bedier) (கி.பி. 1864-1983)

பேடியர் 'LesFabliax' (கி.பி. 1893) என்ற நூலில் பென்பேயின் கோட்பாடுகளைத் தாக்குவதுடன், வன தெய்வங்களைப் பற்றிய கதைக்கும் களியாட்டக் கதைக்கும் வேறுபாடுகாட்டவில்லை என்றும் கூறுகிறார். ஒரே கதையோ அல்லது நாட்டுப் புறப்பாடலோ உலகின் பல்வேறு பகுதிகளில் தனியே தோன்றியிருக்கலாம் என்ற பல்வேறு மூலவினத் தோற்றக் கொள்கையை (polygenesis) உருவாக்கினார். பின்னால் வந்த நாட்டுப்புறவியல் அறிஞர்கள் இதை ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்ளவில்லை. செக் நாட்டுப்புறவியல் அறிஞர் யூரி போலிவ்கா (Yuri Polivka) பென்பேயைப் பற்றி அகர வரிசை அட்டவணைத் தொகுப்பு ஒன்று தயாரித்தார்.

ஸ்காண்டிநேவியா அறிஞர்கள் திரிபு வடிவத்தைப்பற்றியும் மாற்று வடிவத்தைப் பற்றியும் ஆராயத் தொடங்கினர். பின்னிஸ் நாட்டுப்புறவியலாளர்கள் மாற்று வடிவங்களைச் சேகரிப்பதிலும் ஆராய்வதிலும் நாட்டம் செலுத்தித் தொல் வடிவக் கதையை (Proto tale) மீட்டுருவாக்கம் செய்தனர்.

## ஆன்டி ஆர்னே (Antti Aarne) (கி.பி. 1867 - 1925)

ஆன்டி ஆர்னே அவர்கள் குரோகனின் மாணவராவர். கி.பி. 1913 ஆம் ஆண்டு (Principles of the comparative study of tales) என்ற நூலும், கி.பி. 1910 ஆம் ஆண்டு Index of the subject of tales என்ற நூலூம் வெளியிட்டார். இவ்விரண்டு நூற்களும் நாட்டுப்புறவியல் துறையில் மிக முக்கிய நூல்களாகும்.

இந்நூல்களையொட்டிப் பல்வேறு நாடுகளிலும் பல நூற்கள் எழுந்ததுடன் இந்நூல்கள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட கதைக்குக் குறிப்பிட்ட எண்ணை இடும் வழக்கத்தையும் இந்நூலில் காண்கிறோம். இந்நூலையொட்டித் தான் ஸ்டிக் தாம்சன் அவர்கள் ஏழு தொகுதிகளை (Motif Index Folk literature 1935 - 36) உருவாக்கினார். ஆன்டி ஆர்னே அவர்கள் கதை வகைகளை ஆய்வு செய்து Verizeichnisder Marchenty pen என்ற நூலை ஜெர்மன் மொழியில் கி.பி. 1911ல் வெளியிட்டார். இதே நூலை ஸ்டித் தாம்ஸன் (Stith Thompson) அவர்கள் கி.பி. 1928 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து The types of the Folke tale' என்ற பெயரில் வெளியிட்டார். இது கதைகளின் அகரவரிசைத் தொகுப்பாகும் (Index) ஆர்னே கதைகளை மூன்று பெரும் பிரிவாகப் பிரித்தார்: 1. மிருகக் கதைகள் (Animal tales), 2. சாதாரண நாட்டுப்புறக் கதைகள் (Ordinary folk tales), 3. கேலியும் செய்தித் துணுக்கும் (Jokes and anpedotes), ஆகும். இரண்டாவது பகுதி நான்கு உட்பிரிவுகளைக் கொண்டதாகும். 1. மந்திரக் கதைகள் (Tales of magic), 2. மத சம்பந்தமான கதைகள் (Religious tales), 3. காதல் கதைகள் (Romantictales), 4. மனிதனைத் தின்னும் அரக்கன் கதைகள் (Tales of Stupid Ogre) முதலியன, ஆண்டி ஆர்னேயின் தொகுப்பு உலகிலே புகழ் பெற்றது. உலகெங்கும் வாழும் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் தங்கள் நாட்டுக் கதைகளுக்குக் 'கதை வகை அகர வரிசைத் தொகுப்பைத் தொகுக்க ஆரம்பித்தனர்'. ருஷ்ய நாட்டு அறிஞர் ஆன்டிரேய்வ் (N.P. Andreyev) முறையே ருஷ்ய நாட்டுக் கதைகளுக்கு ஒப்பிட்டுப்பார்த்தார். ஆர்னேயின் தொகுப்பில் காணப்படாத பல்வேறு கதை வகைகள் ருஷ்ய நாட்டுக் கதை வகைகளில் இருப்பதைக் கண்டார். இவ்விரண்டு அகர வரிசைத் தொகுப்புக்களும் நாட்டுப்புறவியல் துறைக்குப் பேருதவியாகயிருந்தன.

இக்காலக் கட்டத்தில் ஒப்பியல் மொழியியலின் ஆய்வு முறை (Comparative linguistic method) நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைக்குப் பெருந்துணை புரிந்தது எனின் மிகையாகாது நாட்டுப்புறவியலில் ஈடுபாடு கொண்ட பெரும்பாலோர் மொழியியல் பேரறிஞர்களாக இருந்தமையால், இம்முறையை இத்துறையிலும் பயன்படுத்தலாயினர். இம்முறையைப் பயன் படுத்தும்போது கடன் பெற்ற சொற்களின் ஆய்வு பெரும் சிக்கலை

ஏற்படுத்தியது. கடன் பெற்ற நாட்டுப்புறக் கதைகள் அந்தந்த நாட்டின் கதைகளாகவே உருமாற்றம் பெற்றமையால், சில பிரச்சினைகளும் எழுந்தன.

## ஸ்டித் தாம்சன் (Stith Thompson) (கி.பி. 1885-1910)

நாட்டுப்புறவியலை வளர்த்த அறிஞர்களுள் இவரும் ஒருவர் எனக் கூறலாம். ஆன்டி ஆர்னேயின் நூலையொட்டி ஸ்டித் தாம்சன் அவர்கள் Motif Index of Folk literature என்ற தலைப்பில் ஏழு தொகுதிகளை வெளியிட்டார். நாட்டுப் புறவியல் வளர்ச்சியில் ஆன்டி ஆர்னே, ஸ்டித் தாம்சன், விளாடிமிர் பிராப் போன்றோர்களின் ஆய்வுகள் மிகச் சிறப்பாகக் கருதப்பட்டன. இவர் எழுதிய European tales among the North American Indians (1919), The Types of the folktale (1928), Tales of the North American Indians (1929), The Folktale (1946) இந்நூல்கள் அனைத்தும் நாட்டுப்புறவியல் துறையில் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

## ஆர்ச்சர் டெய்லர் (Archer Taylor 1890)

நாட்டுப்புறவியல் வளர்ச்சிக்குப் பாடுபட்ட பேரறிஞர்களுள் இவரும் ஒருவர். பழமொழி பற்றிய இவரது ஆய்வு இன்றும் அறிஞர் பெருமக்களால் பாராட்டக்கூடிய பெருமையைப் பெற்றுள்ளது. Journal of American Folklore (1941), California Folklore Quarterly போன்ற இதழ்களின் ஆசிரியராகவும் இருந்தார். இவர் எழுதிய நூல்கள்: The Proverb (1931),A Collection of Welsh Riddles (with vernam E. Hull 1942),The Literary Riddle before 1600 (1948).

## ஆலன் டாண்டிஸ் (Alan Dundes)

இன்றைய நாட்டுப்புறவியல் பேரறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆலன் டாண்டிஸ். நாட்டுப்புறவியல் வரலாற்றை அமைப்பியல் ஆய்வுக்கு முற்பட்ட நிலை (Pre-structural period) அமைப்பியல் ஆய்வுக்கு பிற்பட்ட நிலை (Post structural period) என இரண்டாகப் பகுத்து நோக்கின், இரண்டாவது கால கட்ட

ஆய்வின் முன்னோடியாக ஆலன் டாண்டிஸ் திகழ்கின்றார். அமைப்பியல் முறையினை நாட்டுப்புறவியலுக்குப் பயன்படுத்தத் தொடங்கினார். இதற்கு முன் ரோமன் ஜாக்கோப்சன் அமைப்பியல் ஆய்வின் இன்றியமையாமையை நாட்டுப் புறவியலுக்குப் பயன்படுத்தினார். ஆலன் டாண்டிஸின் நூற்களும் ஆய்வுக் கட்டுரைகளும் இன்றைய நாட்டுப்புறவியல் துறையில் மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.

## விளாடிமிர் பிராப் (Vladimir Proop)

குஷ்ய நாட்டுப்புறவியல் பேரறிஞர் விளாடிமிர் பிராப்பின் நாட்டுப்புறக் கதையின் உள்ளமைப்பு (Morphology of Folk tales) என்ற நூல் வெளியானதைத் தொடர்ந்து நாட்டுப்புறவியல் ஆய்வுத் துறையில் ஒரு திருப்பமே ஏற்பட்டது எனலாம். இந்நூல் கி.பி. 1928 ஆம் ஆண்டு வெளியாயிற்று. கி.பி. 1958-ஆம் ஆண்டு தான் ஆங்கிலத்தில் வெளியாயிற்று. ருஷ்யக் கதைகளில் 31 செயற்பாடுகள் (Functions) இருப்பதாகக் கூறுகின்றார். ஆலன் டாண்டிஸ் அவர்கள் நிலைத்த அமைப்புடையவற்றை (Constant unit) கென்னத் பைக்கின் (Kenneth Pike) ‘Emic’ உடனும். மாறுபடும் அமைப்புடையவற்றை (Variable unit) ‘Etic’ உடனும், இணைத்து நோக்குகின்றார். விளாடிமிர் ஆலன் டாண்டிஸ், லெவி ஸ்ட்ராஸ் முதலியவர்களைத் தொடர்ந்து அமைப்பியல் ஆய்வு முறை மிக்க செல்வாக்குடன் விளங்குகின்றது.

## ரிச்சார்டு டார்சன் (Richard M. Dorson)

அமெரிக்காவிலுள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக விளங்கும் ரிச்சார்டு டார்சன் அவர்கள் இன்றைய நாட்டுப்புறவியல் அறிஞர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவராவார். இவர் ‘fakelore’ க்கும் ‘folklore’ க்கு மிடையேயுள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டினார். அமெரிக்க நாட்டுப்புறவியலை அமெரிக்க வரலாற்றோடு இணைத்துப் பார்க்க வேண்டுமென்கிறார். அமெரிக்க நாட்டுப்புறவியலை 1) காலனி நாட்டுப்புறவியல் (Colonial Folklore), 2) நகைச்சுவை, 3) வட்டார நாட்டுப்புறப் பண்பாடு, 4) குடியேறியவர்களில் நாட்டுப்புற இயல், 5) நீக்ரோக்களின் நாட்டுப்புற இயல், 6) நாட்டுப்புற வீரர்கள், 7) இக்கால நாட்டுப்புறவியல் (Modern Folklore) என வகைப்படுத்தி வேண்டுமென்கிறார். மொத்தத்தில் அமெரிக்க நாட்டுப்புறவியல்

பழைய உலக நம்பிக்கைகளைப் புதிய உலகச் சூழ்நிலையில் அளிப்பதாகும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்காவில் பல்வேறு நாட்டினரும் தத்தம் நம்பிக்கைகளுடனும் பழக்க வழக்கங்களுடனும் மரபுடனும் பண்பாடுடனும் குடியேறினர். கலப்புப் பண்பாடு உருவாயிற்று. இதனைக் குறித்து இவர் Blood stoppers and Bear walkers என்ற நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார் . Folklore and Folklife - An Introduction என்ற இவரது தொகுப்பு ஆய்வுக் கட்டுரை நூலும் மிகச் சிறந்ததொன்றாகும். நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோட்பாடுகளை விளக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார். இன்றைய நாட்டுப்புறவியலின் ஆய்வுகள் குறித்து ரிச்சார்டு டார்சனின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. இந்தியா, வங்காள தேசத்தைச் சார்ந்த பலர் இவரிடம் நாட்டுப்புறவியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது ஆய்வைப் பின்பற்றி இளம் நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் உலகெங்கும் ஆராய்ந்து வருவது இவண்கண் நோக்கத்தக்கது. இன்றைய நாட்டுப்புறவியல் பேரறிஞர்களுள் ரிச்சார்டு டார்சனும் ஒருவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறவியல் வளர்ச்சியில் நாட்டுப்புறவியல் கழகங்களும் (Folklore Societies) பெரும்பணி ஆற்றியுள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பற்றிக் காண்போம்.

## நாட்டுப்புறவியல் கழகங்கள் (Folklore Societies)

- இலண்டனில் கிபி. 1878 ஆம் ஆண்டு நாட்டுப் புறவியல் கழகம் (Folklore Society) ஒன்று துவங்கப்பட்டது. வில்லியம் தாமஸ் இயக்குநராகவும் கொம்மே கௌரவச் செயலாளராகவும் பணியாற்றினர். ‘Folklore Record’ என்ற இதழையும் நடத்தினர். பின்னர் ‘Folklore’ என்ற பெயரில் வெளிவந்தது. உலகிலே முதன்முதலில் ஏற்படுத்தப்பட்ட கழகம் இதுதான். இதைத் தொடர்ந்து உலகின் பல பாகங்களிலும் நாட்டுபுறவியல் கழகங்கள் தோன்றலாயின.
- கி.பி. 1888 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டுப்புறவியல் கழகம் ருஷ்ய (Folklore Society Amercan) தோன்றியது. கி.பி. 1888 ஆம் ஆண்டே நேவல் (Newell) தலைமையில் இதழ் வெளியாயிற்று. அமெரிக்க

நாட்டுப்புறவியல் கழகம் பல கிளைகளைப் பெற்று நல்லதொரு கழகமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

- ஜெர்மனி, பிரான்சு, ஸ்பெயின், ஸ்கான்டிநேவியா, ருமேனியா, துருக்கி போன்ற நாடுகளில் நாட்டுப்புறவியல் கழகங்கள் தோன்றின.
- கி.பி. 1926 ஆம் ஆண்டு அயர்லாந்து நாட்டுப்புறவியல் கழகம் தோன்றியது.
- கி.பி. 1930 ஆம் ஆண்டு ஐரிஸ் அரசினர் ஐரிஸ் நாட்டுப்புறவியல் நிறுவனம் ஒன்றைத் தோற்றுவித்தனர்.
- கி.பி. 1952 ஆம் ஆண்டு உப்சலா பல்கலைக் கழகத்தில் நாட்டுப்புறவியல் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.
- கி.பி. 1950 ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் நாட்டுப் புறவியல் கழகம் தோன்றியது.
- இந்தியாவில் முதலில் கல்கத்தாவிலும் லக்னோவிலும் பின்னர் மைசூரிலும் நாட்டுப்புறவியல் கழகங்கள் தோன்றின. கல்கத்தாவிலிருந்து சங்கர் சென்குப்தா அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'Folklore' என்ற இதழ் வெளி வருகிறது. மைசூரிலிருந்து Journal of folkloristics' வெளிவந்தது.
- கி.பி. 1981 ஆம் ஆண்டு இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம் (Tamil Folklore Association of India) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் தோற்றுவிக்கப்பட்டது. மொழியியல் பேரறிஞர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் செயலராகவும் இந்நூலின் ஆசிரியர் டாக்டர் சு. சக்திவேல் பொருளாளராகவும் பணியாற்றுகின்றனர். இக்கழகத்தின் சார்பாக 'நாட்டுப்புறவியல்' என்ற இதழ் வெளிவருகின்றது. டாக்டர் தே. லூர்து அவர்கள் 'நாட்டார் வழக்காற்றியல்' இதழின் ஆசிரியராகயிருந்து நடத்திவருகிறார்.

நாட்டுப்புறவியல் பேரறிஞர்களின் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு, நாட்டுப்புறவியலின் வரலாற்றினை ஓரளவு கோடிட்டுக் காட்டியுள்ளேன். நாட்டுப்புற இயல் வரலாறானது இயல் கடந்த ஆய்விலும் (Metaphysicism), வரலாற்று உண்மையிலும் (Historicism) தொடங்கி தற்பொழுது அமைப்பியல் ஆய்விலும் (Structuralism) அழகுக் கோட்பாட்டிலும் (Aestheticism) இயங்குகின்றது எனக் கூறலாம்.

## கள ஆய்வு முறை

நாட்டுப்புறவியலும் மானிடவியலும் கள ஆய்வு சார்ந்த துறைகளாகும் (Field oriented subject). இவ்விரண்டு துறைகளும் கள ஆய்வை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். கள ஆய்வின்றி நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வே செய்ய முடியாது என்கிறார் கென்னத் கோல்ட்ஸ்டெயின் (Kenneth Goldstein) அவர்கள். ஏனென்றால் நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழி, விடுகதை, நாட்டுப் புறக்கலை, நாட்டுப்புறத் தெய்வங்கள், நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் அனைத்தும் நாட்டுப்புற மக்களிடையே தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. அவைகள் பல்லாண்டுக் காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. அவற்றைச் சேகரித்தால் தான் . இத்துறையில் ஆய்வு மேற்கொள்ளப்படும். கள ஆய்வு இன்றி இத்துறையே இல்லை என்று கூறிவிடலாம். கள ஆய்வு தான் இத்துறைக்கு உயிர்நாடி என்றும் கூறலாம். மக்களது நம்பிக்கைகள் பாடல், கதை, கலை, ஆடல், பாடல் முதலியவற்றை விளக்குவதே நாட்டுப்புறவியல் என்றும் அஃது அனைத்து மக்களின் கூட்டுமுயற்சியால் உருவாக்கப்பெற்று தலைமுறை தலைமுறையாக வழங்கப்பெற்று, பயிற்சி பெற்ற ஆய்வாளர்களின் முயற்சியால் எழுத்துருவாக்கம் பெறுகின்றது என்ற கூரத் (Gertude P. Kurath) இன் கூற்றும் இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறவியல் வழக்காறுகளைச் சேகரிப்பதே முதல் பணியாகும். எந்த அறிவியல் ஆய்விலும் சேகரித்தலும் (collection) வகைப்படுத்தலும் (classifi cation) ஆய்வு செய்தலும் (Analysis) இன்றியமையாத மூன்று முறைகளாகும். நாட்டுப்புறவியல் துறைக்கும் இம்மூன்று முறைகளும் பொருந்தும். இம்மூன்று முறைகளும் தன்னிச்சையானவைகள் என்றாலும் ஒன்றையொன்று சார்ந்தவைகளாகும். கள ஆய்வில் சேகரிப்புப் பணியைச் (collection) செய்கிறோம்.

தமிழகத்தில் பல்லாண்டு காலமாகப் பொழுது போக்காகச் சேகரிப்போரின் (Amateur Collections) சேகரிப்புகள் (Collections)தான் நிறைய உள்ளன. அவைகள் அறிவியல் முறையில் தொகுக்கப்பெற்றன அல்ல. இத்தகைய சேகரிப்புகளில் பேச்சு வழக்கை மாற்றி எழுத்து வழக்கை மேற்கொண்டிருப்பர். தகவலாளி (Informant) கூறுவதை அப்படியே எழுதாமையையும்

கொச்சையானது (Vulgar) என்று திருத்தப்பட்டிருப்பதையும் காணலாம். மேலும் தகவலாளியைப் பற்றியோ அவரது வயது, கல்வி, சாதி, சூழல் முதலிய குறிப்புக்களையோ காண முடியாது. இக்குறிப்புக்கள் வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டுக்கு உதவியாக இருக்கும். இத்தகைய சேகரிப்புக்களில் நாட்டுப்புற வழக்காறுகளை அவர்களது எண்ணம் போல் திருத்தம் செய்யப் பெற்றிருப்பதைக் காணலாம். பல ஆய்வேடுகளில் கூட பேச்சு வழக்கு முழுதும் மாறி எழுத்து வழக்கில் எழுதப்பெற்றுள்ளது. மாவட்ட நாட்டுப்புறவியலை அறிந்து கொள்வதற்கு இ∴து பயன்தராது. இக்குறைகளைத் தவிர்ப்பதற்கு முறையான கள ஆய்வு இன்றியமையாததாகும்.

சேகரிப்புப் பணியை (collection) களப்பணி ஆய்வாளரின் சோதனைக் கூடம் என்பர். களப்பணி ஆய்வாளர் களப்பணி ஆய்வு நடக்கும் மக்களிடையே தாமும் ஒருவராக வாழ்ந்து அவர்களது அன்பைப் பெறவேண்டும். களப்பணி ஆய்வாளர் பண்பாலும் நடத்தையாலும் நல்ல பெயர் எடுக்கவேண்டும். அம்மக்களது ஆதரவே ஆய்வு வெற்றி பெறுவதற்கு அடிப்படையாகும். நாட்டுப்புற மக்களைப் போன்றே ஆடை அணிதல் நல்லது. களப்பணி ஆய்வாளர் மக்களது நம்பிக்கையைப் பெறாவிட்டால், களப்பணி சிறப்பாக அமையாது. அவர்களது சடங்குகளிலும் கலந்து, அவர்களுள் ஒருவராக வாழ வேண்டும். பொறுமையும் (patience) நாட்டுப்புற இயலுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் இயல்பும் (dedication) களப்பணி ஆய்வாளருக்கு இன்றியமையாதனவாகும். களப்பணி ஆய்வாளன் திறந்த மனத்துடன் எத்தகைய துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு பொறுமையுடன் பணியாற்ற வேண்டும். புதியனவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் இருக்க வேண்டும்.

களப்பணி ஆய்வுக்குச் செல்வதற்கு முன் இத்துறையில் வந்துள்ள நூல்களையும் ஆய்வு கட்டுரைகளையும் முழுமையாகவும் முறையாகவும் கற்றிருக்க வேண்டும். களப்பணி ஆய்வாளன் தன் ஆய்வினைத் தொடங்கும் முன் கள ஆய்வு நடத்தப்படும் மக்களைப் பற்றியும் அவர்கள் வாழும் பகுதியைப் பற்றியும் இதுவரை வெளிவந்த நூல்கள், மக்கட்கணிப்புத் தொகுதி (Census Volume) மாவட்ட விவரத் தொகுப்புகள் (DistrictGazatteers) முதலியவற்றைப் படிக்கவேண்டும். முன்னரே யாரேனும் அப்பகுதியில் பணியாற்றியிருந்தால், அவரைச் சந்தித்து விவரங்களைச் சேகரிக்க வேண்டும். அவர்தரும் விவரங்கள் களப்பணி ஆய்வுக்குப் பெரும் பயன் நல்கும்.

அப்பகுதியைப் பற்றியோ அவ்வட்டார மக்களைப் பற்றியோ நாளிதழ், மாத இதழ்களில் செய்தி வந்திருப்பின், அவற்றைப் படித்துக் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். கள ஆய்வு செல்வதற்கு முன் கள ஆய்வு பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகளைச் சேகரிப்பதற்குக் கள ஆய்வு நுட்பங்களையும் அறிந்திருக்க வேண்டும்.

களப்பணி ஆய்வாளர் களப்பணிக்குச் செல்லும்போது பாட்டரியால் இயங்கும் ஒலிப்பதிவு நாடா கருவி (tape recorder) ஒன்றும் மின்விசையால் இயங்கும் ஒலிப்பதிவு நாடா கருவி ஒன்றும் எடுத்துச் செல்லுதல் நல்லது. பேனா, பென்சில், குறிப்பேடு, பேப்பர், பிளேடு, மை பாட்டில் போன்றவற்றையும் கவனமாக எடுத்துச் செல்லுதல் வேண்டும். களப்பணியில் ஒன்று இல்லாவிட்டாலும், பணி தடைப்படும். ஒலிப்பதிவு நாடா கருவியைப் பழுதுபார்க்கத் தெரிந்திருப்பது மிகமிக நல்லது.

## ஆய்வுச்சிக்கலை எடுத்துரைத்தல் (Problem statement and analysis)

சேகரிக்கும் முன்பு எவ்வகை ஆய்வு சிக்கலைத் தீர்க்கப் பயன்படும் என அறுதியிட்டுக் கொள்ளவேண்டும். எந்தவொரு ஆய்வின் அடிப்படை நோக்கமும் சில இன்றியமையாத வினாக்களுக்கு விடை காண்பதாக அமையவேண்டும் என்கிறார் நாட்டுப்புறவியல் பேரறிஞர் ஜான் ஹெரால்டு பிரண்வாண்ட் (Jan Harold Brunvand) அவர்கள்.

- வரையறை செய்தல்
- வகைப்படுத்துதல்
- மூலம்
- தோற்றம்
- பரவுதல்
- மாற்றம்
- அமைப்பு
- செயல்-பயன்
- பொருளும் நோக்கமும்
- பயனும் பயன்படுத்துதலும்

கருதுகோளை (Hypothesis) அடிப்படையாக வைத்து ஆய்வு செய்யவேண்டும். ஆய்வுச்சிக்கலே கருதுகோள் வடிவில் அமையும். கருதுகோள் தெளிவாக அமைய வேண்டும். தரவுகட்கு நெருங்கிய தொடர்புடையதாகக் கருதுகோள் இருக்க வேண்டும். கருதுகோளை உருவாக்கிய பின்பு, எந்தச் செய்திகள் ஆராயின் ஆய்வுச்சிக்கலுக்கு முடிவு கிடைக்கும் என்பதே ஆய்வுச்சிக்கலைப் பகுத்தாராய்வதன் நோக்கமாகும். சான்றாக, வில்லுப்பாட்டை ஆராய விரும்பினால், திருநெல்வேலி மாவட்டத்தைக் களமாகக் கொள்ளவேண்டும். ஆய்வுச்சிக்கலைத் தீர்க்கத் தேவையான செய்திகளையும் விளக்கக் குறிப்புக்களையும் வரையறுக்க வேண்டும். கள ஆய்வு செய்ய வேண்டிய கால அளவு (time) பற்றி முன்னரே திட்டமிடல் வேண்டும். ஆய்வுச் சிக்கலை நன்கு உணர்ந்து, அதற்கேற்றவாறு கருதுகோளை உருவாக்கி, தரவுகளைச் சேகரித்துப் பகுத்து ஆராயவேண்டும்.

கென்னத் கோல்டுஸ்டெயின் அவர்கள் சேகரிப்புத் திட்டங்களைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

## 1.கள ஆய்வுத் திட்டங்கள் (Survey Project)

எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படாத பகுதிகளில் இத்தகைய திட்டங்களை மேற்கொள்ளலாம். ஆங்கிலத்தில் இதனை (Survey Project) என்பர். காலமும் நிதியும் இவ்வாய்வுத் திட்டத்தில் கவனிக்க வேண்டியதொன்றாகும்.

## 2. ஆழ்ந்த ஆய்வுத்திட்டங்கள் (Depth Project)

ஓரினத்தாரிடமிருந்தோ அல்லது வட்டாரக் குழுவிடமிருந்தோ நிலவும் அனைத்து வழக்காறுகளையும் தொகுக்கும் முயற்சியாகும். பலர் குழுவாகச் சேர்ந்து செய்யும் நீண்டகால ஆய்வாக இருப்பினும் பயனுடைய ஆய்வுத் திட்டங்களாகும்,

## 3. உள்ளூர்த் திட்டங்கள் (Local Projects)

களப்பணி ஆய்வாளன் ஒரு குடும்பம், உறவினர், அல்லது ஊரில் வழங்கும் வழக்காறுகளைச் சேகரிப்பதை இதன்கண் அடக்கலாம். கட்டபொம்மன் வரலாற்றைக் கட்டபொம்மன் வம்சாவழியினரிடமிருந்து சேகரிக்கலாம். இத்தகைய ஆய்வுத்திட்டங்கள் மிகப் பெரிய திட்டங்களுக்கு அடிப்படையாக அமைவதும் உண்டு. உற்றுநோக்கிச் சேகரிக்கும் முறை இத்திட்டத்தில் பின்பற்றப்படுகின்றது.

இத்தகைய ஆய்வுத்திட்டங்களை மேற்கொண்டு பணியாற்றும்போது, எதிர்பாராச் சேகரிப்பும் (incidental collections) கிடைக்க வாய்ப்பு உண்டு. அந்த சேகரிப்பும் ஆய்வுக்குப் பயன்படும்.

கள ஆய்வுக்குச் செல்வதற்கு முன் கீழ்க்கண்டவற்றையும் கள ஆய்வாளன் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

## களப்பணி ஊர்களைத் தேர்ந்தெடுத்தல் (Selection of the places)

எந்தக் களப்பணியும் துவங்குவதற்கு முன்பு திட்ட களப்பணி செல்லக்கூடிய இடங்களை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும். உதாரணமாக ஒரு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களை ஆய்வு செய்வோர், அந்த மாவட்டத்திலுள்ள வட்டங்களைத் (taluks) தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஐந்து ஊர்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஐந்து ஊர்களுக்கும் இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். புதிய வழக்காறுகள், பாடல்கள் கிடைக்க வாய்ப்பாக இருக்கும். முடிந்த மட்டும் நகர நாகரிகத்தினின்றும் விலகி ஆற்றங்கரை, மலையடிவாரம் கடலோரப்பகுதி போன்ற இயற்கையமைப்பை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

## தகவலாளியைத் (Informants) தேர்ந்தெடுத்தல் (Selection of the Informants).

களப்பணி இடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ அந்த அளவு தகவலாளியை தேர்ந்தெடுக்கும் போதும் கவனம் செலுத்தவேண்டும். சமூகத்தில் ஒரு சிலர்தான் பாடல், கதை, பழமொழி முதலியவற்றைத் தெரிந்தவராகயிருப்பர். மேலும் தகவலாளியின்,

- பெயர் (Name)
- வயது (Age)
- கல்வி (Education)
- பால் (Sex)
- இடம் (place)
- சாதி (Caste)
- சூழல் (Context)

போன்ற அனைத்து விவரங்களையும் தொகுக்கவேண்டும். விளக்கம் கேட்பது தாலாட்டு, ஒப்பாரி தாய்க்குலத்தின் படைப்பாகும். ஒப்பாரியும் தாழ்ந்த சாதியினரிடையேதாம் அதிகம் காணமுடியும். தகவலாளியிடமே பாடலுக்கான பொருள் பயனுடையதாக இருக்கும். நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரிக்கும்போது சூழல் (context) பற்றியும் ஆராயவேண்டும். சமூகச்சூழல் வழக்காறுகளின் உள்ளடக்கத்தைப் பாதிப்பதும் உண்டு. வழக்காறுகளின் நடைத்திறனையும் (style) கவனத்தில் கொள்ளவேண்டும். மாலினோவ்ஸ்கி (Malinowski) வில்லியம் பாஸ்கம் (William Bascom) கென்னத் கோல்டுஸ்டெயின் (Kenneth Goldstein) போன்றோர் சமூகச்சூழல் பற்றி நிச்சயம் குறிப்பிட வேண்டும் என்கிறார்கள்.

## சேகரிக்கும் இடம் (Place of interview)

பெரும்பாலோர் தொழில் செய்யும் இடத்தில் சேகரிப்பது இயற்கையாக இருக்கும் என்பர்.

## காலமும் பொழுதும் (Duration of interview)

பெரும்பாலும் கோடைக்காலம்தான் களப்பணிக்கு ஏற்ற காலமாகும். பகலில் சேகரிப்பதும் இரவில் சேகரிப்பதும் கள ஆய்வாளனையும் தகவலாளியையும் பொறுத்ததாகும். சில நாட்டுப்புறக் கலைகள் இரவில் நிகழ்த்துவதால் இரவில்தான் செய்திகளைச் சேகரிக்கவேண்டும். அப்பொழுதுதான் ஐயம் ஏற்படும். தேவையான செய்திகளில் பலரிடம் விளக்கம் கேட்டுப்பெறலாம். தொடர்ந்து பணியாற்றினால் இருவருக்குமே மனச்சோர்வு

ஏற்படும். சிறிது இடைவேளைக்குப்பின் பணி தொடர்வது நல்லது. சேகரிப்பில் தகவலாளியின் கையொப்பம் பெறுதல் நல்லது.

## வினாநிரலும் வினாப்பட்டியலும் (Questionnaire and Schedule)

களஆய்வின் வெற்றி வினாநிரலையும் வினாப்பட்டியலையும் நல்லமுறையில் தயாரிப்பதில்தான் உள்ளது. கள ஆய்விற்கு இவ்விரண்டும் இன்றியமையாதனவாகும். இவைகள் நல்லமுறையில் அமைந்துவிட்டால், களப்பணி ஆய்வாளன் எதிர்பார்த்த பலனை அடையலாம். வினாநிரல், வினாப்பட்டியல் என்பது மொத்தத்தில் சேகரிக்கவேண்டிய செய்திகளின் கருத்தை அறிய உதவும் சாதனமாகும். சமூக அறிவியல் துறைகளில் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் முறைகளாகும்.

வினாநிரல் (Questionnaire) என்பது ஆய்வாளர் தாம் எடுத்துக் கொண்ட ஆய்வுத்தலைப்பிற்கேற்ப வினாக்களைத் தயாரித்து அதனை அச்சிட்டுத் தபால்மூலம் தகவலாளிக்கு அனுப்பி வைத்தலாகும். தகவலாளி அதனைப்படித்து வினா நிரலைப் பூர்த்தி செய்து களப்பணி ஆய்வாளருக்கு அனுப்புவார். இம்முறையை (Opensystem) என்றும் கூறுவர். நாட்டுப்புறவியலில் வினா நிரலின் பங்கு மிகச் சிறியதாகும். ஏனென்றால் பெரும்பாலான நாட்டுப்புற வழக்காறுகள் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்களிடமிருந்து சேகரிப்பதாகும். வினாநிரல் மூலம் நம்பகமான தகவல்களைப் பெறமுடியாது. மொழியியல் ஆய்வு சர்வே (Linguistics Survey of India) போன்று நாட்டுப் புறவியலில் ஆய்வு சர்வே (Folklore Survey of India) நடத்தினால் இம்முறை பெரிதும் பயன்படும்.

## வினாநிரல் (Questionnaire)

நான்கு பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்.

- நோக்கம் (Aim & purpose)
- நெறிமுறைக் கட்டளைகள் (Instructions)
- தகவலாளி பற்றிய விவரம் (Informant’s details)
- வினாநிரலின் உடல்பகுதி (Body of Questionnaire)

களப்பணி ஆய்வாளர் எடுத்துக்கொண்ட ஆய்வின் நோக்கத்தை விவரித்திருப்பார். பின்னர் வினா நிரலைப் பூர்த்தி செய்வதைப் பற்றிய விளக்கம் உண்டு. அதன்பின்னர் தகவலாளி பற்றிய குறிப்பும் வினாநிரலும் அமைந்திருக்கும்.

## வினாநிரல் (Questionnaire)

1)கட்டமைப்புடைய வினாநிரல் (Structured Questionnaire)

1.1.வரையறுத்த வடிவமுடைய வினாநிரல் (Closed form questionnaire)

1.2.பரந்த வடிவமுடைய வினாநிரல் (Open form questionaire)

2)கட்டமைப்பில்லா வினாநிரல்(Unstructured Questionnaire)

வினாநிரலைக் கட்டமைப்புடைய வினாநிரல் என்றும் கட்டமைப்பில்லா வினாநிரல் என்றும் இருவகையாகப் பகுப்பர். கட்டமைப்புடைய வினாநிரல் என்பது ஆய்வுத் தலைப்பிற்கேற்ப வினாக்களை நன்கு சிந்தித்துத் தயாரித்ததாகும். கட்டமைப்புடைய வினாநிரலை வரையறுத்த வடிவமுடைய வினாநிரல் என்றும் பரந்த வடிவமுடைய வினா நிழல் என்றும் இருவகையாகப் பகுப்பர். வரையறுத்த வகைகளில் செய்திகளைச் சேகரிக்க ஆய்வாளர் முன்னதைப் பயன்படுத்துகிறார். தகவலாளி தனது விருப்பம்போல் விடை தருவதற்கேற்ற முறையிலமைந்த வினா நிரலைப் பேட்டியின் வழிகாட்டி (Interview guide) என்று கூறுவர். ஓரளவு வளைந்துகொடுக்கும் தன்மை உடையது.

நாட்டுப்புறத் தெய்வங்களைப் பற்றிய நாட்டுப்புற விளையாட்டுப் பற்றிய மாதிரி வினாநிரலும் பின்னிணைப்பில் (Model questionnaire) கொடுக்கப்பட்டுள்ளன.

## வினாப்பட்டியல் (Schedule)

வினாப்பட்டியலை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) உற்று நோக்கி நிரப்பும் வினாப்பட்டியல் (Observation Schedule)
2) ஆவண வினாப் பட்டியல் (Document Schedule)

3) மதிப்பீடு வினாப் பட்டியல் (Evaluation Schedule)

உற்றுநோக்கி நிரப்பும் வினாப்பட்டியல் மூலம் மக்களது பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றைப் பதிவு செய்யலாம். ஆவணங்கள், வரலாறு (case history) முதலியவற்றிலிருந்து தரவுகள் திரட்ட ஆவண வினாப்பட்டியலைப் பயன்படுத்தலாம். மதிப்பீட்டு வினாப்பட்டியல் மூலம் மக்கட்தொகைக் கணிப்புப் போன்றவற்றைச் சேகரிக்கலாம். வினாப்பட்டியல் மூலம் ஆய்வாளனுக்கும் தகவலாளிக்கும் நேரடித் தொடர்பு ஏற்படுவதுடன் மேலும் மேலும் துருவித் துருவிக் கேட்டுச் செய்திகளைச் சேகரித்துக் கொள்ள வாய்ப்புள்ளது. நாட்டுப்புறவியல் துறையில் வினாப்பட்டியலைத்தான் பெரும்பாலும் பயன்படுத்துகிறோம். தகவலாளியிடமிருந்து செய்திகளைச் சேகரிக்க இம்முறைதான் சிறந்த முறையாகும்.

வினா நிரலையும் வினாப்பட்டியலையும் நல்லமுறையில் தயாரித்தால், ஆய்வில் நாம் எதிர்பார்த்த பலனை அடையலாம்.

## உற்று நோக்கல் (Observation)

மனதில் நோக்கத்தை வைத்துக்கொண்டு ஒன்றை நுணுக்கமாக நோக்குவது உற்றுநோக்கல் எனப்படும். வினாநிரல் வினாப்பட்டியல் போன்றே உற்றுநோக்கல் மூலமும் செய்திகளை அறிந்துகொள்ளலாம். உற்றுநோக்கலை இருவகையாகப் பகுக்கலாம். அவை,

1.பங்குபெறும் உற்றுநோக்கல் (Participant observation)

2.பங்குபெறா உற்றுநோக்கல் (Non-participant observation)

நாட்டுப்புறக்கலைகள் (Folk arts) ஒரு சமுதாயத்தின் குலச் சடங்குகள் முதலியவற்றை ஆய்வு செய்வோர் உற்று நோக்கல் முறைகளைப் பயன்படுத்தித் தரவுகள் திரட்டலாம். மானிடவியல் துறையில் இம்முறைதான் பெரிதும் பயன்படுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறவியலைப் பொறுத்த மட்டில் நாட்டுப்புறக்கலைகளைச் செய்வோர்கள் இம்முறைகளைப் பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கலாம். மேலும் இக்கலையின் நுணுக்கங்களை அறிய, அக்கலையிலே பங்கு பெறலாம். அக்கலையில் பங்குபெற்றால்தான் கலையின் நுணுக்கங்களையும் அக்கலையில் ஈடுபட்ட கலைஞர்களையும் நன்கு அறிந்துகொள்ளவும் இக்கலைகளில் ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் சிலர்

அக்கலைகளை நடத்துமளவிற்குத் தேர்ந்த கலைஞராகிவிடுவதையும் காண்கிறோம். கரக ஆட்டம், தெருக் கூத்து, வில்லுப்பாட்டு போன்றவற்றில் ஆய்வு செய்வோர்கள் சிலர் இந்த முறைகளைப் பின்பற்றுகிறார்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

உற்றுநோக்கல் கருதுகோளை (hypothesis) உருவாக்கப் பயன்படுகிறது. கருதுகோளை உருவாக்க மட்டுமின்றிக் கருதுகோளைச் சோதித்துப் பார்க்கவும் இம்முறை பயன்படுகின்றது.

## பேட்டி முறை (Interview Method)

களப்பணி ஆய்வாளர் தகவலாளியை நேரே கண்டு கலந்துரையாடுவதாகும். வினாநிரல், வினாப்பட்டியல், உற்று நோக்கல் போன்று பேட்டிமுறையும் செய்திகளைச் சேகரிக்கப் பயன்படும் முறைகளில் ஒன்றாகும். பேட்டிமுறையை ஐந்து வகையாகப் பகுக்கலாம். அவை,

1.கட்டமைப்புப் பேட்டி (Structured (interview)

2.கட்டமைப்பில்லா பேட்டி (Unstructured interview)

3.ஒருமுகப்படுத்தும் பேட்டி (Focussed interview)

4.பன்முறைநிகழும் பேட்டி (Repeated interview)

5.ஆழ்ந்த பேட்டி (Depth interview)

இதழியல் துறையில் (Journalism) பயன்படுத்தப்பட்டு வந்த இம்முறை நாட்டுப்புறவியல் துறையிலும் பயன்படுத்தத் துவங்கிவிட்டனர். நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரிக்கவும் வழக்காறு பற்றி நாட்டுப்புற மக்களின் எண்ணங்களை அறியவும் இம்முறை சிறந்ததெனலாம். நாட்டுப்புற நம்பிக்கை பற்றிச் சேகரிப்போர், நாட்டுப்புற நம்பிக்கை பற்றி தகவலாளியின் கருத்து, உணர்வு முதலியவற்றை அறிந்துகொள்ள இம்முறை பயன்படுகின்றது. பரவல் (Diffusion) பற்றியும் நேர்க்கு நேர் கேள்விகேட்டு அறிந்து கொள்ள முடிகிறது. தலைகளை ஆராயும் ஆய்வாளர் கட்டமைப்பில்லாப் பேட்டி முறையைப் பயன்படுத்தி, கலைஞர்களிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பர். தகவலாளியைப் பல விஷயங்களைப் பற்றிப்பேசி, தனது ஆய்வுத்தலைப்புக்கு ஈர்த்துச் சென்று, அதன்மூலம் ஆர்வத்தைத் தூண்டி, ஐயங்களை எழுப்பி, வினாவுக்கு விடை காண முற்படுவர். தகவலாளியிடம் நேரடியாகவன்றி மறைமுகமாகச்

செய்திகளைக் கேட்டு அறிவதற்கு இம்முறை பெரிதும் பயன்படுகின்றது. கட்டமைப்புப் பேட்டி முறை மூலம் ஆய்வுக்கு வேண்டிய வினாக்களை முன்னரே சிந்தித்துத் தெளிவாக வரையறுத்துக்கொண்டு தகவலாளியிடமிருந்து தரவுகளைச் சேகரிக்கலாம். இவ்விரண்டு முறைகளும் இத்துறையில் நன்குபயன் படுத்தப்படுகின்றன. ஒரே பொருள் குறித்துப் பலரிடமும் வினவலாம். தகவலாளர்களைத் நேரில் சந்தித்து உரையாடுவதால் ஐயங்களையும் நுட்பமான தகவல்களையும் பெறலாம். ஆய்வாளர் ஏற்படும் சந்தேகங்களை மீண்டும் மீண்டும் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். மெய்ம்மைகளின் உண்மைத் தன்மையை ஒப்பிட்டுக் காணலாம். படியாத கலைஞர்களிடம் இப்பேட்டி முறையைப் பயன்படுத்தி நிறைய தரவுகள் சேகரிக்கலாம்.

இம்முறைகளைப் பயன்படுத்தித் தகவலாளியிடமிருந்து செய்திகளைச் சேகரிக்கலாம். நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகளை ஆராய்வோர் அவற்றிற்கேற்றவாறு தனித்தனி வினா ஏடு தயாரிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, மீனவர் நாட்டுப் புறப் பாடல்கள் மூலம் மீனவர் சமூகத்தை ஆராயும் ஆய்வுக்குப் படகு, தோணி, கட்டுமரம், வலை, மீன்களின் பெயர், மீன் பிடிக்கச்செல்லும் நேரம், பருவகாலம், காற்று, இரவில் நேரத்தை அறிய உதவும் விண்மீன்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றைப் பற்றி அறியும் நோக்கத்துடன் வினாநிரல் அமைய வேண்டும். அதே வினாநிரலைப் பழமொழி, விடுகதைக்குப் பயன்படுத்த முடியாது. நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகளுக்கேற்ப வினாநிரல் தாயரிக்கவேண்டும். வினா நிரல் தாயரிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

## சேகரிப்புச் சூழல்கள் (Collecting contexts)

வினாநிரல், வினாப்பட்டியல், உற்றுநோக்கல்முறை, பேட்டி முறை மூலம் தகவலாளியிடமிருந்து செய்திகளைச் சேகரிக்க வேண்டும். சேகரிக்கும்போது ஏற்படும் பொதுப் பிரச்னைகளைக் காண்போம். ஆய்வுக்குச் செல்லும் இடங்களில் ஒருவரை நண்பராக்கிக்கொண்டு, அவர் மூலம் தகவலாளியைச் சந்திக்க வேண்டும். தகவலாளிகளை நண்பர்களாகக் கருதிப் பழகினால் நிறைய செய்திகள் சேகரிக்க வாய்ப்புண்டு. தகவலாளியிடமிருந்து உடனே செய்தி சேகரிப்பதோ அல்லது பாடல் பாட வைப்பதோ அவ்வளவு எளிமையான

காரியமல்ல. அவற்றிற்குப் பல உத்திமுறைகளைக் கையாளவேண்டும். எந்தச் சூழலில் நாட்டுப்புற வழக்காறுகளைச் சேகரிக்கவேண்டும் என்பதையும் ஆராய்ந்து அறியவேண்டும். ஆய்வாளன் எந்தச் சூழலில் எந்த முறையில் தொகுக்கவேண்டும் என்பதை முடிவு செய்தாக வேண்டும். சூழல் வகைகளைப் பற்றி ஆராய்வது நாட்டுப்புற இயலில் இன்றியமையாததொன்றாகும். சூழல்களை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவை,

1. இயற்கைச்சூழல்(Natural contexts)
   - நெகிழ்வற்ற சூழல்(Highly formal context)
   - அரை நெகிழ்வற்றசூழல் (semi formal context)
   - நெகிழ்வுச் சூழல் (Non-formal context)
2. செயற்கைச்சூழல்(Artificial context)
3. தோற்றுவிக்கப்பட்ட இயற்கை சூழல்(induced natural context)

இயற்கைச் சூழலில்தான் (Natural context) செய்திகளைச் சேகரிக்க வேண்டுமென கள ஆய்வு நூல்கள் கூறுகின்றன. இது ஓரளவிற்குத்தான் உண்மை. மீனவர் பாடும் அம்பா பாடலை கடலில் சென்றுதான் பதிவு செய்தேன். தொழில் பாடல்களைத் தொழில் செய்யும் இடத்திற்குச் சென்று பதிவு செய்தால்தான் இயற்கையாக இருக்கும் என எண்ணிய காலமுண்டு. இத்துறையில் கள ஆய்வு நடத்தியபோதுதான் இயற்கைச் சூழலில் பதிவு செய்தல் அவ்வளவு சுலபமல்ல என உணர்ந்தேன். கதைப்பாடல்கள் போன்றவற்றை இயற்கைச் சூழலில் தொகுத்துக் கொண்டு, விளக்கங்களைவிட செயற்கைச் சூழலில் தொகுக்கலாம். நாட்டுப்புற வழக்காறுகள் அனைத்தும் இயற்கைச் சூழலில் தொகுக்கமுடியாது.

தமிழ் நாட்டுப்புறவியல் சேகரிப்புக்கள் அனைத்தும் பெரும்பாலும் செயற்கைச் சூழலில் தொகுக்கப்பட்டவையாகும். பலர் பங்கு பெறும் சூழலைச் செயற்கையாக உருவாக்கமுடியாது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக ஒப்பாரிப் பாடல்களைச் சாவு வீட்டிற்குச் சென்று சேகரிக்க முடியுமா? ஒப்பாரிப் பாடல்களைச் செயற்கைச் சூழலில் மட்டுமே சேகரிக்க முடியும். செயற்கைச் சூழலில் தொகுப்பினை இயன்றவரை இயல்பாகவும்

இயற்கையாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். சமுதாய உணர்வு, பயன்பாடு பற்றிய ஆய்வுக்குச் செயற்கைச் சூழல் பயன்படாது.

தாலாட்டுப் பாடவேண்டுமானால் தொட்டில் கட்டி அதில் குழந்தையை இட்டு ஆட்டினால் தான் சிலருக்குப் பாட வருகிறது. தோற்றுவிக்கப்பட்ட இயற்கைச்சூழலில்தான் சிலருக்குப் பாட வரும். கும்மிபாட்டு போன்றவற்றையும் இச்சூழலில்தான் சேகரிக்கமுடிந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் முத்துப்பட்டன் கதையை வில்லுப்பாட்டு மூலம்தான் பதிவு செய்ய முடிந்தது. முன்னரே பதிவு செய்யப்பெற்ற பாடங்களை ஒலி பரப்பி, புதிய தகவலாளரை ஊக்குவிக்கலாம். தனது குரலை மீண்டும் ஒலிப்பதிவில் பாடிக் கேட்கப் பலர் முன்வருவதை என் கள ஆய்வில் நேரிலே கண்டேன். இந்த உத்திமூலம் பாட மறுக்கும் சிலரும் தொடர்ந்து பலமணி நேரம் பாடினர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புற வழக்காற்றுச் சேகரிப்புக்கு இயற்கைச் சூழலே சிறப்பு. அது இயலாதபோது தோற்றுவிக்கப் பட்ட இயற்கைச் சூழலைப் பயன்படுத்தலாம். கள ஆய்வாளர் பார்வையாளராக இருந்து செய்திகளைச் சேகரிக்க வேண்டும்.

நாட்டுப்புறப்பாடல் போன்றவற்றை அவ்வாறே சேகரிக்க வேண்டும். அவர்கள் உச்சரிப்பது போன்றே எழுதப்பட வேண்டும். நாட்டுப்புறப் பாடல்களின் சொற்களை மாற்றிப் பொருள் கொள்ள முயலக்கூடாது. அவ்வாறு பொருள் கொண்டால் அ∴து நமது உணர்வுகளைத்தான் பிரதிபலிக்கும். நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிக்கும்பொழுது சேகரித்த பாடலை அப்படியே கொடுத்து விட்டு, அடிக்குறிப்பில் (Footnotes) களப்பணி ஆய்வாளர் தமது விளக்கங்களையோ சொல் மாற்றங்களையோ கொடுக்கலாம். பாடல்களில் காணப்படும் சில சொற்கள் பல வரலாற்று உண்மைகளை நமக்கு அளிக்கும்.

களப்பணி ஆய்வில் சேகரித்தல்தான் (collection) முக்கிய பணியாகும். ஆனால், எந்தவொரு ஆய்விலும் சேகரித்தலும் வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் இன்றியமையாதவையாகும். கள ஆய்விற்கு வகைப்படுத்துதலும் ஆய்வு செய்தலும் நேரடித் தொடர்பு இல்லையெனினும், ஆய்வுக்கு இன்றியமையாதவை என்ற நிலையில் அவற்றைப்பற்றி மிகமிகச் சுருக்கமாகக் காண்போம்.

## வகைப்படுத்துதல் (Classification)

ஒரே மாதிரியாக இருப்பனவற்றை இனங்கண்டு ஒன்றாக்குவதே வகைப்படுத்தல் எனப்படும். கதைக்கும் கதைப்பாடலுக்கும் உலகப் புகழ்பெற்ற இருவகை வகைப்படுத்தும் முறை உண்டு.

1. Tale-type Index
2. Motif Index

இம்முறைகளை ஆண்டி ஆர்னேயும் ஸ்டித்தாம்சனும் உருவாக்கினார்கள்.

தமிழக நாட்டுப்புறப் பாடல்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

- தாலாட்டுப் பாடல்கள்
- குழந்தைப்பாடல்கள்
- காதல் பாடல்கள்
- தொழில் பாடல்கள்
- கொண்டாட்டப் பாடல்கள்
- பக்திப் பாடல்கள்
- ஒப்பாரிப் பாடல்கள்
- பன்மலர்ப் பாடல்கள்

நாட்டுப்புறக் கதைகளை நான்கு வகையாக வகைப்படுத்தலாம்.

- மனிதக் கதைகள்
- மிருகக் கதைகள்
- மந்திரக் கதைகள்
- தெய்வக் கதைகள்

நாட்டுப்புறக் கதைப் பாடல்களை மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

- சமூகக்கதைப் பாடல்கள்
- வரலாற்றுக் கதைப் பாடல்கள்
- புராணக் கதைப் பாடல்களும் புனைகதைப் பாடல்களும்

தமிழ்ப் பழமொழிகளை

- அளவு அடிப்படையிலும்
- பொருள் அடிப்படையிலும்

- அகரவரிசை அடிப்படையிலும்
- அமைப்பியல் அடிப்படையிலும்
- பயன்பாட்டு அடிப்படையிலும் வகைப்படுத்துகின்றனர்.

தமிழ்ப் பழமொழித் தொகுப்புக்கள் அகரவரிசையில் அமைந்துள்ளன.

## ஆய்வு செய்தல் (Analysis)

கள ஆய்வில் சேகரித்ததை, பின்னர் வகைப்படுத்தி ஆய்வு செய்யவேண்டும். வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் கள ஆய்வுக்குப் பின்னர் செய்யவேண்டியவை எனினும் இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும். சேகரிப்பும் வகைப்படுத்தலும் நல்ல முறையில் அமைந்தால், ஆய்வும் சிறப்பாக அமையும். தமிழகத்தில் மேற்கொண்ட பெரும்பாலான ஆய்வுகள் விளக்க ஆய்வாகவே உள்ளன. டாக்டர் பா. ரா. சுப்பிரமணியம் அவர்கள் அமைப்பியல் முறையை (Structural method) தாலாட்டு, ஒப்பாரிக்குப் பயன்படுத்தி ஆராய்ந்தார். நாட்டுப்புற மரபுகளை ஆராய வரலாற்றை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்கிறார் ரிச்சர்ட் டார்சன் அவர்கள். இத்துறை வளம்பெற சமூக அறிவியல் துறைகளில் பயன்படுத்தப்படும் ஆய்வுமுறைகளையும் பின்பற்ற வேண்டும். பரிணாம வாதிகள் (Evolutionists) ஊடுருவிப்பரவலாளர்கள் (Diffusionists) அமைப்பியலாளர்கள் (structuralists) போன்றவர்களால் இத்துறை ஆய்வு வளர்ச்சி பெற்றது என்று கூறலாம். நிகழ்த்துக்கலை (performing folk arts) மேலைநாட்டில் ஒரு கோட்பாடாக உருவாகி வருகிறது. அதன் அடிப்படையில் கணியான்கூத்து, தெருக்கூத்து போன்றவற்றை ஆராய வேண்டும். முறையான, அறிவியல் சார்ந்த பல்துறை நோக்கில் (Interdisciplinary approach) ஆராயப்பட வேண்டும். மேலைநாட்டில் காணப்படும் கீழ்க்கண்ட நாட்டுப் புறவியல் ஆய்வுக்கோட்பாடுகளை நமது ஆய்வுக்கும் பயன்படுத்த வேண்டும். அமெரிக்க நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சார்ட் எம். டார்சன் அவர்கள் பன்னிரண்டு கோட்பாடுகளைப் பற்றி விளக்கியுள்ளார்.

- வரலாற்று-புவியியல் கோட்பாடு (Historical-geo graphical)
- வரலாற்று மீட்டுருவாக்கக்கோட்பாடு (Historical reconstruction)
- இலட்சியக் கோட்பாடு (Idcological)

- செயல்திறன் கோட்பாடு (Functional)
- உளவியல் ஆய்வுக்கோட்பாடு (Psycho analytical)
- அமைப்பியல் கோட்பாடு (structural)
- வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு (Oralformulae)
- கலப்புப் பண்பாட்டுக்கோட்பாடு (cross cultural)
- நாட்டுப்புறப் பண்பாட்டுக்கோட்பாடு (Folk cultural)
- மக்கள் பண்பாட்டுக் கோட்பாடு (Mass cultural)
- அரைநிலைக்கோட்பாடு (Hemispheric)
- சூழ்நிலைக்கோட்பாடு (Contextual)

இக்கோட்பாடுகள் உருவாகிப் பல ஆண்டுகளாகியும் இக்கோட்பாடுகளைப் பயன்படுத்தித் தமிழகத்தில் ஆய்வு செய்யப்படவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆய்வுக் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் பொருத்திக்காட்டுவதாகவும் நமது மரபிற்கேற்ப புதிய நெறிமுறைகளை உருவாக்குவதாகவும் தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வு அமைதல் வேண்டும்.

களப்பணி நாட்டுப்புறவியல் துறைக்கு அடிப்படையாகும். ஆய்வு சிறப்பாக அமைய, கள ஆய்வு அறிவியல் அடிப்படையில் அமையவேண்டும்.

## பின்னிணைப்பு (Appendix:1)

நாட்டுப்புறத் தெய்வம் பற்றிய மாதிரி வினாநிரல் (Model Questionnaire)

- உங்கள் ஊரில் எத்தனை சதவீதத்தினர் மாரியம்மன். காளி, அய்யனார் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களை வணங்குகின்றனர்?
- மாரியம்மன் பொது இடத்தில் ஒரு குடும்பத்தினராலோ அல்லது ஒரு குறிப்பிட்ட இனத்தினராலோ வழிபடப்படுகிறதா?
- இந்துக்களிலுள்ள உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதியினரில் எப்பிரிவினர் அதிகமாக மாரியம்மனை வழிபடுகின்றனர்?
- வழிபாடு பிராமண பூசாரியால் நடத்தப்படுகிறதா? அல்லது பிராமணரல்லாத பூசாரியால் நடத்தப்படுகிறதா?
- உருவம் வைத்து வழிபடுகின்றனரா?

- என்னென்ன பொருட்களை வைத்து வழிபாடு நடத்துகின்றனர்? (தேங்காய், பழம், சூடம், சாம்பிராணி, கள், சாராயம் முதலியன)
- மரத்தினடியில் உள்ளதா? அல்லது கோயிலில் உள்ளதா?
- மாரியம்மன் முன்னே ஆடு, கோழி பலியிடப்படுவதுண்டா?
- எப்பொழுது வழிபடுவர்?
- மாரியம்மனை வழிபடுவதற்குரிய காரணங்கள் எவை?
- மாரியம்மன் வழிபாட்டின்போது அக்கினிச்சட்டி எடுப்பதுண்டா?
- நெருப்பின் மீது நடப்பதுண்டா?
- மாரியம்மன் வேறு ஏதேனும் பெயரில் வழிபடப்படு கின்றதா?
- உங்கள் ஊரில் இதுவரை வேறு ஏதேனும் சிலை தோண்டி எடுக்கப்பட்டுள்ளதா?
- மாரியம்மன் விழாவின் போது முளைப்பாரி எடுப்பதுண்டா?

## பின்னிணைப்பு (Appendix:2)

நாட்டுப்புற விளையாட்டுப் பற்றி மாதிரி வினா நிரல்

- விளையாட்டினை எப்பெயரால் அழைக்கின்றனர்? விளையாடும் நேரம் காலம் என்ன?
- விளையாட்டின் வடிவம் யாது? (வட்டம், சதுரம். நீண்ட சதுரம், எதிரும் புதிரும், வரிசை குழி).
- விளையாட்டின் தன்மை யாது? (ஓடுதல் ஒளிதல், துரத்துதல், தொடுதல், மூச்சுப் பிடித்தல், சூழ்ச்சி செய்தல்)
- விளையாடுவோர் எத்தனை குழுவாகப் பிரிவர்? சமமான எண்ணிக்கையா?
- விளையாட்டின் போது பாட்டு பாடப்படுமா?
- விளையாட்டின் விதிகள் யாவை?
- வெற்றி, தோல்வி எவ்வாறு தீர்மானிக்கப்படும்?
- சிறுவர்கள் விளையாடும் விளையாட்டா? அல்லது சிறுமியர் விளையாடும் விளையாட்டா?
- பரிசுகள், தண்டனைகள் உண்டா?
- விளையாட்டு பற்றிய நம்பிக்கை உண்டா?
- விலக்குகள் (taboos) உண்டா?

நாட்டார் வழக்காற்றியல் - கள ஆய்வு,

## தொகுப்புரை

- மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்கள் தோன்றிவிட்டன.
- நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் கலைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியல் ஆகும்.
- நாட்டுப்புறவியல் விளக்கம் குறித்து அறிஞர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படாத நிலையில் பல்வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்
- folklore என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக பெரும்பாலும் நாட்டுப்புறவியல் என்ற சொல் வழங்கப்படுகிறது.
- இவ்வாங்கிலச் சொல்லை 1846-இல் வில்லியம் ஜான் தாமஸ் என்ற அறிஞர் உருவாக்கியுள்ளார்
- வாய்மொழியாகப் பரவுதல், மரபுவழிப்பட்டது, பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல், ஆசிரியர் இல்லாமை, ஒரு வித வாய்ப்பாட்டுக்கு அடங்குதல் என்ற ஐந்து பண்புகளும் நாட்டுப்புறவியலின் முக்கியப் பண்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- நாட்டுப்புறவியலின் வரலாற்றினை உலக அளவிலான நாட்டுப்புறவியல் வரலாறு, தமிழக நாட்டுப்புறவியல் வரலாறு, இந்திய நாட்டுப்புறவியல் வரலாறு எனப் பிரித்து அறியலாம்

## அருஞ்சொற்பொருள்

1. விலக்குகள் - நடைமுறை வாழ்விலிருந்து விலக்கப்பட்ட சொற்கள் மற்றும் செயல்பாடுகள்
2. தமர் - சுற்றத்தார்
3. ஞாயிறு - சூரியன்
4. கோட்பாடு - கொள்கை (அ) அறிவியல் உண்மை
5. திரிபு வடிவம் - மாறுபட்ட வடிவம்

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'நாட்டுப்புற வழக்காற்றியல் மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்ததாக இருக்கவேண்டும்' என்றவர்.
   அ) வில்லியம் பாஸ்கம் ஆ) ஆண்டர்னே
   இ) சு.சக்திவேல் ஈ) சண்முகசுந்தரம்
2. 'folk lore' என்ற சொல்லை உருவாக்கியவர்
   அ) ஆண்டி அர்னே ஆ) வில்லியம் ஜான் தாமஸ்
   இ) அடல்பெர்ட் குகன் ஈ) விளாடிமிர் பிராப்
3. நாட்டுப்புறவியலை அறிவியல் அடிப்படையில் ஆராய வழிவகுத்தவர்
   அ) மாக்ஸ்முல்லர் ஆ) லெவிஸ்ட்ராஸ்
   இ) ஜேக்கப் கிரீம் ஈ) ஸ்டித் தாம்சன்
4. பஞ்ச தந்திரக் கதைகளை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தவர்
   அ)தியோடர் பென்பே ஆ) வில்லியம் பாஸ்கம்
   இ) ஸ்டித் தாம்சன் ஈ) அடல்பெர்ட் குகன்
5. வாய்வழியாகப் பரவல் முதலான ஐந்து முக்கியப் பண்புகள் நாட்டுப்புறவியலுக்கு இருப்பதாக வகைப்படுத்தியவர்
   அ) தே.லூர்து ஆ) வில்லியம் பாஸ்கம்
   இ) பிருண்வார்ட் ஈ) ஜேக்கப் கிரீம்

### விடைகள்

1. அ) வில்லியம் பாஸ்கம்
2. ஆ) வில்லியம் ஜான் தாமஸ்
3. இ) ஜேக்கப் கிரீம்
4. அ) தியோடர் பென்பே
5. இ) பிருண்வார்ட்

### பயிற்சிகள்

1. களஆய்வு நெறிமுறைகளின் அடிப்படையில் நும் ஊரில் உள்ள நாட்டுப்புற விடுகதைகளைச் சேகரிக்க

## சிறுவினாக்கள்

1. நாட்டார் வழக்காற்றியல் குறித்த தகவல்களைச் சேகரிக்க உதவும் சூழல் பற்றி விவரிக்க
2. நாட்டார் வழக்காற்றியல் விளக்குக.

## நெடுவினாக்கள்

1. நாட்டுப்புறவியல் குறித்த அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
2. நாட்டுப்புறவியலில் கள ஆய்வின் முக்கியத்துவத்தை எழுதுக

## பாடம் தொடர்பான நூல்கள்


1. நாட்டுப்புற இயல் ஆய்வுகள், 1997. ஆறு. இராமநாதன், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. நாட்டுப்புறவியல் கள ஆய்வு, 2003, இரா.சந்திரசேகரன் சி.மா. இரவிச்சந்திரன் முதலானோர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
3. நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம், 1986, கோ.கேசவன், புதுமைப்பதிப்பகம், திருச்சி
4. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், 1997, தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், பாளையங்கோட்டை


## பாடம் தொடர்பான இணைய இணைப்புகள்

1. https://www.tamilvu.org
2. https://thogupppukal.blogspot.com
3. https://thamizhstudio.com

## பாடக்குறிப்பிற்கு உதவிய புத்தகங்கள்


1. நாட்டுப்புற இயல் ஆய்வு – டாக்டர் சு. சக்திவேல்
2. நாட்டுப்புறவியல் - பேரா. சு. சண்முகசுந்தரம்

# அலகு 2

# நாட்டுப்புறவியல் இலக்கிய வகைமை

## நோக்கம்

- நாட்டுப்புற இலக்கிய வகைமைகளை எடுத்துரைத்தல்.
- நாட்டுப்புற இலக்கிய வகைகளை அறிஞர்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் புரிந்து கொள்ளுதல்
- நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல், புராணக்கதைப்பாடல், பழமொழி, விடுகதை, நாட்டுப்புற நம்பிக்கைகள் ஆகியவற்றின் தோற்றம் அமைப்பு சூழல் ஆகியவற்றை அறிந்துகொள்ளுதல்.
- நாட்டுப்புற இலக்கியங்களை ஆய்வுக்கு உட்படுத்தி புதிய கோட்பாடுகளை உருவாக்குதல்.
- நாட்டுப்புற இலக்கியத்தின் இன்றியமையாத பண்புகளை உணர்தல்.

## இயலில் இடம் பெறுபவை

- அறிஞர்களின் வகைப்பாடும் அடிப்படையும்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- கதைகள்
- கதைப்பாடல்
- புராணக்கதைப்பாடல்
- பழமொழி
- மரபுத்தொடர்
- விடுகதை
- நாட்டுப்புற நம்பிக்கைகள்
- பழக்க வழக்கங்கள்
- சடங்குகள்

## அறிஞர்களும் வகைப்பாடும்:

கி.வா.ஜகநாதன் (1975), ஏழு வகை (சூழல், பயனாளர், பாடுபொருள், வடிவம்)

கி.வா. ஜகநாதன் அவர்கள் ‘நாடோடி இலக்கியம்’ என்ற நூலில் நாட்டுப்புறப் பாடல்களை 29-ஆக வகைப்படுத்தியுள்ளார். இவரே ‘மலையருவி’ என்ற நூலில் நாட்டுப்புறப் பாடல்களைப் 13-ஆக வகைப்படுத்தியுள்ளளார்

1. தெம்மாங்கு
2. தங்கரத்தினமே
3. ராசாத்தி
4. ஆண்,பெண் தாக்கம்
5. கள்ளன் பாட்டு
6. தொழிலாளர் பாட்டு
7. குடும்பம்
8. தாலாட்டு
9. சிறுவர் உலகம்
10. புலம்பல்
11. கும்மி
12. தெய்வம்
13. பல கதம்பம்

அன்னகாமு (1966), ‘ஏட்டில் எழுதாக் கவிதைகள்’ எனும் நூலில் பதின்னான்கு வகைப்படுத்தியுள்ளார்.

1. கடவுள் துதி
2. மழை
3. நாட்டுச் சிறப்பு
4. பிறப்பு , வளர்ப்பு
5. குழந்தைகளின் விளையாட்டு
6. திருமணம்
7. நவீனம்
8. களியாட்டங்கள்
9. தொழில்
10. கதைப்பாடல்

11. வாழ்க்கையில் சோதனைகள்
12. வேதாந்தப் பாடல்கள்
13. ஆதிவாசி பாடல்கள்
14. மங்களம்

டாக்டர். ஆறு. அழகப்பன், நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு திறனாய்வு என்ற நூலில் ஏழாக வகைப்படுத்தியுள்ளார். (பொருண்மை, சூழல்)

1. குழந்தைப் பாடல்கள்
2. பக்திப் பாடல்கள்
3. தொழில் பாடல்கள்
4. கொண்டாட்டப் பாடல்கள்
5. உணர்ச்சிப் பாடல்கள்
6. ஒப்பாரிப் பாடல்கள்
7. பன்மலர்ப் பாடல்கள்

மா.வரதராஜன் (1978) அவர்கள் பத்து வகைப்படுத்துகிறார். (பாடுவோர், சூழல், பொருண்மை)

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. வேடிக்கைப் பாடல்கள்
4. கும்மி,ஒப்பாரிப் பாடல்கள்
5. காதல் பாடல்கள்
6. விவசாயப் பாடல்கள்
7. தொழில் பாடல்கள்
8. ஒத்தாரிப் பாடல்கள்
9. வேதாந்தப் பாடல்கள்
10. பல்சுவைப் பாடல்கள்

டாக்டர். சு.சண்முகசுந்தரம் அவர்கள் தமிழில் நாட்டுப் புறப்பாடல்கள் என்பதில் 9-ஆக வகைப்படுத்துகிறார் (சூழல், பாடுவோர்)

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. தொழில் பாடல்கள்

4. காதல் பாடல்கள்
5. மண வாழ்த்து
6. பக்திப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. ஆட்டப் பாடல்கள்
9. கதைப் பாடல்கள்

டாகடர். நா. வானமாமலை (1977) அவர்கள் பொருள் அடிப்படையில் பத்தாக வகைப்படுத்துகிறார்.

1. தெய்வங்கள்
2. மழையும் பஞ்சமும்
3. தாலாட்டு
4. விளையாட்டு
5. காதல்
6. திருமணம்
7. குடும்பம்
8. சமூகம்
9. உறவும் தொழிலும்
10. ஒப்பாரி

டாக்டர். ஆறு ராமநாதன் அவர்கள் எட்டு வகைப்படுத்துகிறார். (சூழல்)

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. தொழில் பாடல்கள்
4. காதல் பாடல்கள்
5. கொண்டாட்டப் பாடல்கள்
6. பக்திப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. பல்பொருள் பற்றிய பாடல்கள்

## நாட்டுப்புற நம்பிக்கைகள்

நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்.

நாட்டுப்புறவியல் என்பது மக்களது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படை பொதுக்கூறு எனப்படும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவை தாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் அவர்கள். வாழ்க்கை முறைகளின் கூட்டுச்சேர்க்கை பண்பாடு என்கிறார் மாலினோவஸ்கி. நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வும் நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாக தொடர்ந்து வரக் காண்கிறோம். நம்பிக்கைகள் பெரும்பாலும் மற்ற உணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாக காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்கு காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.

## பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும்

பண்டைக்கால முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடியைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தோன்றலாயின. உலகெங்கிலும் வாழும் பழங்குடி சமுதாய வரலாற்றை நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். பண்டைத் தமிழரிடையே நிலவிய விளையாட்டு நம்பிக்கைகளையும் சகுனங்களையும் இவண்கண் சுருக்கமாகக் காண்போம். கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த "ஆசாரக்கோவை" மூலம் பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளைப் பற்றி அறிகிறோம்.

தொல்காப்பியத்திலே "நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்" (தொல். பொருள் - 91) எனக் குறிக்கப்பட்டுள்ளது. "புள்" எனக் குறிப்பிட்டது. முன்னர் பறவையையும் பிற்காலத்தே சகுனங்களைப் பற்றியும் குறிப்பனவாக அமைந்துள்ளதை "வாய்ப்புள், பறவாப்புள்" எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

'கூகை அலறினால் சாவு வரும்'

என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம். இதனைப் புறநானூறு நமக்குக் காட்டுகின்றது.

'அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்''(புறம். 280)

'காகம் கத்தினால் விருந்தினர் வருவர்' என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும்.

இது போன்று நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றன. அவை பலவாறான அடிப்படைகளின் கீழ் நடைபெறுகின்றன.

## நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாகும். நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டுப்புறப் பாடலின் பொருளாகின்றன. மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புறப்பாடல்கள். நாட்டுப்பாடல், நாடோடிப்பாடல், நாட்டார் பாடல், வாய்மொழிப் பாடல், பாமரர் பாடல், பரம்பரைப் பாடல், கிராமியப் பாடல், கல்லாதார் பாடல், மக்கள் பாடல், ஏட்டில் எழுதாக் கவிதை, மலையருவி, காட்டுப்பூக்கள், வனமலர், காற்றிலே மிகுந்த கவிதை என்றெல்லாம் நாட்டுப்புறப் பாடலை அழைக்கின்றனர். ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு இயல்பைக் காட்டுவதாக உள்ளன. நாட்டுப்புறப் பாடல் என்பதே நின்று நிலவுகின்றது.

நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலும் காடு கழனிகளிலும் தோட்ட வயல்களிலும் தொழில் செய்யும் இடங்களிலும் பிறக்கின்றன. நிலத்தை உழும்போதும் ஏற்றம் இறைக்கும் போதும் நாற்று நடும்போதும் களையெடுக்கும் போதும் கதிர் அறுக்கும் போதும் உழுதுண்டு வாழும் மக்கள் பாடுகின்றனர். நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை தாலாட்டுப் பாடலில் தொடங்கி விளையாட்டு, காதல் பாடல்களில் வளர்ந்து திருமணப்பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடலில் முடிவடைகின்றது. இன்ப துன்பங்களைப் பற்றி மக்களே பாடுவதால் இதனை மக்கள் இலக்கியம் என்றும் கூறுவர். நீல வானத்தையும் பசுமை நிறைந்த நிலத்தையும் வானுற ஓங்கிவளர்ந்த மலையையும் முத்து விளையும்

கடலையும் மலையின் முடியையும் கடலின் அடியையும் இணைக்கும் வற்றாத ஆறுகளையும் ஆறு பாய்ந்து கொழிக்கு வயல்களையும் வயல்களில் உழைக்கும் மனித இனத்தை பற்றியும் நாட்டுப்புறப் பாடல்களில் காண்கிறோம். மனித உள்ளத்தின் ஆழத்தையும் அங்கே தோன்றி எதிரொலிக்கும் பல்வேறு இதய ஒலிகளையும் இன்பத் துன்பங்களையும் ஆசாபாசங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம். எனவே ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவன நாட்டுப்புறப் பாடல்கள்.

நாட்டுப்புறப் பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. நாட்டுப்புறப் பாடல்களை இயற்கைப் பாடல்கள் எனலாம். இயற்கை அன்னை தன்னை முகம் பார்க்கத் தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி நாட்டுப்புறப் பாடல். இப்பாடலின் படைப்பாளிகள் இம்மண்ணின் மைந்தர்கள். நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை, இனியவை, எழுதப் படாதவை, வாயில் பிறந்து செவிகளில் உலவி காற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை. தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டிருப்பவை. என்று பிறந்தது, எவரால் பிறந்தது என எடுத்துச் சொல்ல இயலாத பண்பும் பாங்கும் பெற்றவை. நாட்டுப்புறப் பாடல்கள் என்னும் பறவை இசைச்சிறகால் காலவானில் கட்டின்றிக் கவலையின்றிப் பறக்கின்றன. நாட்டுப்புறப்பாடல்களில் ஓசை இருக்கும். உணர்ச்சி இருக்கும். சொல் தொடை அழகிருக்கும். எனினும் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் இருக்கும். எனவேதான் நாட்டுப்புறப் பாடல்களைத் தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டு மலருக்கும் மலையினின்று வீழும் அருவிக்கும் ஒப்பிடுகின்றனர். நாட்டுப் புறப்பாடலில் இசைக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. ‘பண்ணுடன் பாடப்படாத நாட்டுப்புறப் பாடல்கள் எல்லாம் சிறகில்லாப் பறவைகள்’ என சத்தியார்த்தி கூறுவது குறிப்பிடத்தக்கது. அவை மனித உணர்வின் வடிகாலாகத் திகழ்கின்றன. எந்த மண்ணில் வாழ்ந்தனரோ எந்த வேலையைச் செய்தனரோ எதைக் கேட்டனரோ எதை உணர்ந்தனரோ எல்லாவற்றையும் கற்பனை நிறைந்த கவிதைகளாகப் பொழிகின்றனர்.

நாட்டுப்புறப் பாடல்கள் நேற்று தோன்றியவை அல்ல. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் பேசத் தொடங்கிய நாளன்றே நாட்டுப்புறப் பாடல்களும் முகிழ்த்தன. தொடக்ககால மனிதர்கள் ஏடும் எழுத்தாணியும்

கொண்டு கவிதை புனைவதற்கு முன்பே நாட்டுப்புறப்பாடல்கள் தோன்றிவிட்டன எனத் தொல்காப்பியம் மூலம் அறிகிறோம்.

## நாட்டுப்புறப்பாடல் வகைப்பாடு (classification of folk songs)

எந்தவொரு அறிவியல் ஆய்விலும் சேகரித்தலும் (collection) வகைப்படுத்தலும் (classification) ஆய்வு செய்தலும் (analysis) முக்கிய ஆய்வு நெறிமுறையாகக் கருதப்படுகின்றன. வகைப்படுத்துதல் என்பது ஒரே மாதிரியாக இருப்பனவற்றை இனங்கண்டு வகைப்படுத்தலாகும். வகைப்படுத்துதல் எவ்வளவுக்கெவ்வளவு நுணுக்கமாகவும் செம்மையாகவும் அமைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வுகள் நுணுக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கி.வா. ஜெகந்நாதன் அவர்கள் “நாடோடி இலக்கியம்’’ என்ற நூலில் நாட்டுப்புறப்பாடல்களை இருபத்தியொன்பதாக வகைப்படுத்தியுள்ளார். இவரே “மலையருவி’’ என்ற நூலில் நாட்டுப்புறப் பாடல்களைப் பதின்மூன்றாக வகைப்படுத்தியுள்ளார்.

1. தெம்மாங்கு
2. தங்கரத்தினமே
3. ராசாத்தி
4. ஆண், பெண் தர்க்கம்
5. கள்ளன் பாட்டு
6. தொழிலாளர் பாட்டு
7. குடும்பம்
8. தாலாட்டு
9. சிறுவர் உலகம்
10. புலம்பல்
11. கும்மி
12. தெய்வம்
13. பல கதம்பம்.

அன்னகாமு அவர்கள் “ஏட்டில் எழுதாக் தவிதைகள்’’ என்ற நூலில், நாட்டுப்புறப் பாடல்களைப் பதினான்காக வகைப்படுத்தியுள்ளார்.

1. கடவுள் துதி
2. மழை
3. நாட்டுச் சிறப்பு
4. பிறப்பு, வளர்ப்பு
5. குழந்தைகளின் விளையாட்டு
6. திருமணம்
7. தொழில்
8. நவீனம்
9. களியாட்டங்கள்
10. கதைப்பாடல்
11. வாழ்க்கையில் சோதனைகள்
12. வேதாந்தப் பாடல்கள்
13. ஆதிவாசி பாடல்கள்
14. மங்களம்

'டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு திறனாய்வு' என்ற நூலில் ஏழாக வகைப்படுத்துகிறார்.

1. குழந்தைப் பாடல்கள்
2. பக்திப் பாடல்கள்
3. தொழில் பாடல்கள்
4. கொண்டாட்டப் பாடல்கள்
5. உணர்ச்சிப் பாடல்கள்
6. ஒப்பாரிப் பாடல்கள்
7. பன்மலர்ப் பாடல்கள்

'மா. வரதராசன்' அவர்கள் பத்தாக வகைப்படுத்துகிறார்.

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்

3 வேடிக்கைப் பாடல்கள்

4. கும்மி, ஒப்பாரிப் பாடல்கள்

5. காதல் பாடல்கள்
6. விவசாயப் பாடல்கள்
7. தொழில் பாடல்கள்
8. ஒப்பாரிப் பாடல்கள்
9. வேதாந்தப் பாடல்கள்
10. பல்சுவைப் பாடல்கள்

'டாக்டர் நா. வானமாமலை' அவர்கள் பொருள் அடிப்படையில் பத்தாக வகைப்படுத்துகிறார்.

1. தெய்வங்கள்
2. மழையும் பஞ்சமும்
3. தாலாட்டு
4. விளையாட்டு
5. காதல்
6. திருமணம்
7. குடும்பம்
8. சமூகம்
9. உறவும் தொழிலும்
10. ஒப்பாரி

டாக்டர் சு. சண்முகசுந்தரம் அவர்கள் "தமிழில் நாட்டுப் புறப்பாடல்கள்" என்ற நூலில் பாடல்களை ஒன்பதாக வகைப்படுத்துகிறார்.

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. தொழில் பாடல்கள்
4. காதல் பாடல்கள்
5. மண வாழ்த்து
6. பக்திப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. ஆட்டப் பாடல்கள்

9. கதைப் பாடல்கள்

‘டாக்டர் ஆறு. இராமநாதன்’ அவர்கள் எட்டாகப் பகுக்கின்றார்.

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. காதல் பாடல்கள்
4. தொழில் பாடல்கள்
5. கொண்டாட்டப் பாடல்கள்
6. பக்திப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. பல்பொருள் பற்றிய பாடல்கள்

## தாலாட்டுப் பாடல்கள்

தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்துப் பிறக்கின்றது. எனவே தான் “தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு” என்பார் தமிழண்ணல். தாலாட்டு என்ற சொல்லைத் தால் + ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நக்கு என்றும், நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனும் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர். தாலாட்டு என்ற சொல் சில இடங்களில் “ராராட்டு” என வழங்கி வருகிறது. மேலும் தாலா்ட்டைத் தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, ரோராட்டு, ராராட்டு, தொட்டில் பாட்டு, ஒலாட்டு, திருத்தாலாட்டு எனப் பல்வேறு பெயர்கள் இன்றைய உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கி வருகின்றன. தமிழில் தாலாட்டு என்று கூறுவது போன்று மலையாளத்தில் “தாராட்டு” என்றும், தெலுங்கில் “ஊஞ்சோதி” என்றும், கன்னடத்தில் “ஜோகுல” என்றும் கூறுவர். “இருவர் கொள்ளும் காதலைவிட, உடன் பிறந்தார் கொள்ளும் வாஞ்சையைவிட, ஏன் உலகளக்கும் அருளினையும்விட, பிள்ளைப் பாசமே ஆழமானது, வலிமை மிக்கது, உணர்ச்சிமயமானது. இத்தகைய தாயும் சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டு” என்று தமிழண்ணலும், “தாய் ஆழங்காண முடியாத அன்புக் கடல். அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு” என்று டாக்டர் ஆறு. அழகப்பனும் கூறுகின்றனர். இத்தகைய

தாலாட்டு மனிதகுலத் தொடக்க முதல் தொடர்ந்து வருகின்றது. உலகில் தாய்மையும் சேய்மையும் இருக்கும் வரை, பாசமும் பற்றும் உள்ள வரை, பாடலும் இசையும் நிலவும் வரை மனித சமுதாயத்தில் தாலாட்டுகள் இருக்கும். "நடையழகில் ஜெயங்கொண்டானையும், இனிமையில் இளங்கோவையும், கற்பனையில் கம்பனையும், சொல்லாட்சியில் மணிவாசகரையும், நாகரிகவிளக்கத்தில் சங்கப் புலவர்களையும் ஒப்புவமையாகப் பெற்றுப் பெருமையாக விளங்குகிறது தாலாட்டு'' என்பார் தமிழண்ணல், தாலாட்டில் தாய்மையின் தவிப்பும் பூரிப்பும் எதிர்பார்ப்புகளும் வைகறையின் வசந்தங்களும் இறைவனின் இனிய நாமங்களும் வரலாற்றுப் பெட்டகங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

தாலாட்டுப் பாடல்களைக் கருவாகக் கொண்டு எழுந்த இடைக்கால இலக்கியங்கள் ''தாராட்டு'' என்றும், பிள்ளை. தமிழ்ப் பிரபந்தங்கள் ''தாலேலோ'' என்றும் குறிப்பிடுகின்றன தமிழ் மொழியில் முதன் முதலாகத் தாலாட்டுப் பாடியவர் பெரியாழ்வார் ஆவார். தொல்காப்பியத்திலும் தாலாட்டின் கூறு பற்றிக் கூறப்பட்டுள்ளது:

"குழவி மருங்கினும் கிழவதாகும்'' (புறத்திணை-82)

என்றும் ''கண்படை கண்ணிய கண்படை நிலையும்'' என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார். சங்க இலக்கியமான பரிபாடலிலும் தாலாட்டு என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது.

''வரையழி வாலருவி வாதாலாட்ட'' (6-52)

பெரியாழ்வார் கண்ணைத் தொட்டிலி லிட்டு,

'மாணிக்கங் கட்டி
வயிரம் இடைகட்டி
..............................
தாலேலோ' (1-3-1)

எனத் தாலாட்டுகிறார். பெரியாழ்வாரைத் தொடர்ந்து குலசேகர ஸ்ரீஆழ்வாரும் இராமனைக் குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டுகிறார். களவியலுரை, தேவாரம், முத்தொள்ளாயிரம், கம்ப இராமாயணம், விறலிவிடுதூது போன்ற தமிழ் இலக்கியங்களிலும் தாலாட்டுப் பற்றிய குறிப்புகள்

காணக்கிடக்கின்றன. தாலாட்டிற்கு ‘‘ஓலுறுத்தல்’’ எனும் சொல்லாட்சி பெருங் கதையிலும் சூளாமணியிலும் காணப்படுகின்றது. சீராட்டுதல் என்ற சொல்லாட்சி தாலாட்டுதல் என்ற பொருளையும் தருவதைப் பிரபுலிங்கலீலை மூலம் அறிகிறோம். பதினைந்தாம் நூற்றாண்டு முதல் தாலாட்டு பிரபந்த நிலையை அடைந்தது புதிய பிரபந்த வகைகளுள் ஒன்றான பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தில் தாலப்பருவம் என்ற பருவத்தை அமைத்துச் குழந்தை தாலாட்டுவதையே அப்பருவத்திற்குரிய பொருளாக கொண்டனர். தாலாட்டு சிற்றிலக்கியமாக இருந்த நிலைமாறி தனிப்பாடல் நிலையைப் பாரதிக்குப் பின் பெற்றது.

தாலாட்டுப் பாடல்கள் குறுகிய அளவு உடையன. ஆனால் பெரும்பாலான தாலாட்டுப் பாடல்களுக்கு அடிவரையரை இல்லையென்றே கூறலாம். தாயின் மனநிலைக்கேற்பவும் குழந்தையின் உறக்கநிலைக்கேற்பவும் தாலாட்டுப் பாடல்கள் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ இருக்கும். தாலாட்டின் பன் நீலாம்பரி ஆகும். தாய்மார்கள் நினைத்தபோது நினைத்த படி பாடுவதால் தாலாட்டுப் பாடல்களில் பாட வேறுபாடு இருப்பதை காணலாம். தாலாட்டுப் பாடல்களில் தொடக்கம் வெறும் நாவசைகளின் ஒலிகளேயாகும்.

தாலாட்டின் பாடற்பொருளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

1. குழந்தையைப் பற்றியன.
2. குழந்தைக்குரிய கருவிகளைப் பற்றியன.
3. குழந்தைகளின் உறவினரைப் பற்றியன.

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கின்ற வாழ்விலே பிள்ளைக்கனியமுது ஒன்று பெற்றிடவேண்டும் என்று அனைவரும் விரும்புவது இயற்கையே. அப்பிள்ளைக்கனியமுது இல்லாவிட்டால் அவர்களது வாழ்க்கை பற்றுக்கோடு இல்லாமல் போவதாலும் அவர்களது குலக்கொம்பு வளர வாய்ப்பில்லாமல் போவதாலும் சமூகம் அவர்களை மலடி, மலடி என்று தூற்றுவதாலும் பிள்ளைப்பேற்றை அனைவரும் விரும்புகின்றனர். பிள்ளைக்கனியமுதுக்காக ஏங்கும் பாடலை இங்குக் காண்போம்.

“கிண்ணியிலே போட்ட சோற்றைக்
கீறித் தின்னப் பிள்ளை இல்லை
ஊருக்குப் போகையிலே

உடன்வரப் பிள்ளை இல்லை’’

-என்று வருந்துவதோடு.

“பூக்கிற காலத்திலே

பூமாறிப் போனேனே!

காய்க்கிற காலத்திலே

காய்மாறிப் போனேனே’’

-என்று வெந்து சாகின்றாள்.

ஒரு தாய் மகப்பேற்றை விரும்பித் தான் செய்ததான தருமங்களை ஒரு தாலாட்டில் அடுக்கிக் கூறுகிறாள்,

“எட்டாத கோவிலுக்கு எட்டி விளக்கேற்றி

தூரத்துக் கோவிலுக்குத் தூண்டா விளக்கேற்றி

சோதி பரதேசிகளுக்குத் தூமடமும் கட்டிவைத்து

நல்ல தண்ணீர்க் கிணறுகளும்

............. ............. கட்டிவைத்து’’ - என்று பாடுகிறாள்.

வரம் பெற்றுப் பிறந்த குழந்தையைத் தாய் வருணிக்கிறாள்.

“மாசிப் பிறையோ நீ வைகாசி மாங்கனியோ

தேசப் பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ

எங்கள்குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசாமல்

தங்கமலி பொக்கிஷத்தைத் தானாள வந்தகண்ணோ’’ - என்று வருணிக்கிறாள்.

தாய் தான் பெற்ற பிள்ளையமுதைத் தொட்டிலிலிட்டு ஆட்டுகின்றாள். தாலாட்டும்பொழுது அவள் உள்ளத்திலே ஆயிரம் கற்பனைகள் அக்கற்பனைகளெல்லாம் தாலாட்டுப் பாடல்களில் வெளி வருகின்றன. தாய்மாமன் வாங்கி வந்த பாலூட்டும் சங்கின் அழகை ஒரு தாய் தனது தாலாட்டுப் பாடலில் கூறுகின்றாள்.

“கடைக்குக் கடை பார்த்துக்

கல்லிழைத்த சங்கெடுத்துச்

சுத்திச் சிகப்பிழைத்துத்

தூருக்கே பச்சை வைத்து
வாய்க்கு வயிரம் வைத்து
வாங்கி வந்தார் தாய்மாமன்''

தாலாட்டு தாய்க்குரிய இலக்கியமாகையால் அதில் தாய் மாமனின் பெருமையும் அவர்கள் தரும் சீர்வரிசைகளின் சிறப்பும் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. பொதுவாகப் பெண்கள் அனைவரும் தாய்வீட்டுப் பெருமையைப் பேசிக் கொள்வதிலேயே பெருமை அடைவார்கள். குழந்தையின் தாய்மாமனுடைய செல்வச் செழிப்பையும் மகனின் கல்வியறிவையும் ஒருசேர இணைத்துப் பார்க்கும் தாயுள்ளம் அதனைப் பாட்டாக வடிக்கின்றது. ''வெள்ளியால் செய்த ஏட்டில் வைர எழுத்தாணி கொண்டெழுத பள்ளியில் சேர்க்க மாமன் பரிவுடன் வந்திடுவார்''

''தாலாட்டு'' என்ற சொல்லாட்சி பற்றியும், தாலாட்டின் அமைப்பு, தோற்றம் வளர்ச்சி பற்றியும், தாலாட்டின் பாடற் பொருளான குழந்தையைப் பற்றியும், குழந்தைகளின் கருவியைப் பற்றியும், குழந்தையின் உறவினரைப் பற்றியும் மிகச் சுருக்கமாகக் கண்டோம்.

## காதல் பாடல்கள்

அகத்தின்கண் மறைந்தும் புறத்தின்கண் புலப்பட்டும் மெய்ப்பாடுகளால் தாக்கப்பெறும் வலியின் சக்தியே காதல். ஆண் பெண் என்ற தத்துவத்தின் வித்தாகவும் அவற்றின் வாழ்வுக்கும் வளமைக்கும் அடிப்படையாகவும் காதல் விளங்குவதை காணலாம். மனித இனம் தோன்றிய அன்றே காதல் உணர்வுகளும் தோன்றின. தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்திருப்பதைப் போன்று இன்பம் உணர்ச்சிக்குத் தாலாட்டுகளையும், துன்பம் என்ற உணர்ச்சிக்குக் காதல் பாட்டுகளையும், அன்பு ஒப்பாரிப் பாடல்களையும் எடுத்துக்காட்டாகக் கூறுவர். பருவமடைந்த இரு உள்ளங்கள் ஒன்றாகச் சேர வேண்டும் என் வேட்கையால் எழும் உணர்ச்சி எல்லா மனங்களுக்கும் பொதுவானதாகும். உளவியலார் கூறுவது போன்று மனிதன் பிறக்கும்போதே அவ்வுணர்வு தன்னோடு இருப்பினும், பருவம் அடையும் போது அவ்வுணர்வு மலர்ந்து மணம் வீசுகிறது. அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தும் வடிகாலாக இக்காதல் பாட்டுகள் உள்ளன. இலக்கியக் காதலும் நாட்டுப்புறக் காதலும் சில

வகையில் ஒன்றுபட்டும் சில வகையில் வேறுபட்டும் நிற்கின்றன. தலைவன் தலைவி வனப்பு நோக்கிக் காதல் உண்டாவது இலக்கியக் காதல் உறவின் அடிப்படையில் எழுதுவது நாட்டுப்புறக் காதல். நாட்டுப்புறக் காதலில் காதலன் பெயரைக் கூறுவது சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றது. இலக்கியத் தோழியை இங்குக் காண முடியாது. காதலனும் காதலியும் நேருக்கு நேர் சந்தித்துத் தமது உல இன்ப, துன்பங்களையும் விருப்பு, வெறுப்புகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். இலக்கியக் காதலைப் போன்றே நாட்டுப்புறக் காதலிலும் கைக்கிளையும் பெருந்திணையும் உண்டு.

காதல் பாடல்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று காதலர்களே பாடுவது. மற்றொன்று காதலர்கள் அல்லாதவர்கள் தொழில் செய்யும்போது காதல் பாட்டுகள் பாடுவது. ஆனால் பெரும்பாலும் நாட்டுப்புறக் காதல் தொழில் செய்யுமிடங்களில் தான் பிறக்கிறது. வண்டிக்காரன் பாடும் தெம்மாங்குப் பாடல்களில் காதல் சுவையைக் காணலாம், உறவில் இன்பம் காண்பதும் பிரிவில் வேதனையடைவதும் இவர்களது பாடற் பொருளாகும்.

காதலர்கள் சந்திக்கும் பொழுது பகற்குறி, இரவுக்குறி முதலியவற்றைக் குறித்தலும், பகற்குறியிடையீடு, இரவுக்குறியிடையீடு ஏற்படுதலும், அதனை நினைத்து வேதனைப்படுவதும் நாட்டுப்புறக் காதலில் காண்கிறோம், சந்திப்பு வளர வளரத் திருமணம் செய்து கொள்ளும் உறுதிமொழியும் பிறக்கிறது. இதற்கிடையே ஊடலும் பிரிவகற்றலும், ஊடல்தணிதலும், பிரிவும், இற்செறித்தலும், உடன்போக்கும் நடைபெறுகின்றன. பரத்தையை நாடிச் செல்வதையும் கள்ளக்காதலையும் அதன் விளைவான விவகாரத்தையும் காண்கிறோம். இலக்கியத்தில் காணப்படும் களவு, கற்பு போன்றவற்றை ஓரளவு நாட்டுப் புறப் பாடல்களிலும் காணலாம்.

தனது அன்புக் காதலியை வருணித்துத் தேர் பார்க்க வரும்படி ஆசையுடன் காதலன் அழைக்கிறான்.

“அன்ன நடையழகி
அலங்கார உடையழகி
பின்னல் நடையழகி - செல்லம்மா
புறப்படம்மா தேருபார்க்க’’ என்று பாடுகிறான். அதற்கு அவள்,
“மதன வடிவழகா
மாமோகச் சொல்லழகா
வண்ண உருவழகா
என் ஆசை மச்சானே

வரமாட்டேன் தேரு பார்க்க'' என்கிறாள்.

நாட்டுப்புறக் காதலில் காதலனும் காதலியும் சந்தித்து நெருங்கி உறவாடினாலும் காதலியானவள் தனது கற்புக்குப் பங்கம் ஏற்படாது காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றாள். காதலன் எப்போதும் துடிப்பு மிக்கவனாகவே உள்ளான். அத்துடிப்பை ஒருவாறு ஆற்றுப்படுத்துகின்றாள். அந்நிகழ்ச்சியைக் கீழ்க்கண்ட பாடல்கள் மூலம் அறியலாம்.

"மண்குடம் கொண்டு மலையோரம்

தண்ணிக்குப் போகும் - மாமன் மகளே

உன் இரண்டு மண்குடத்தின்

விலை என்ன?'' எனக் கேட்கிறான்.

"மண்குடம் போனால்

மறுகுடம் வாங்கலாம்

மானம் போனால் - மாமன் மகனே

உலகம் என்ன சொல்லும்?'' எனப் பதிலளிகிறாள்.

பரத்தையர் தொடர்பு, கள்ளக்காதல், மனக்கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் கணவன், மனைவியரிடையே உறவு முறிவதுண்டு. அவ்வாறு உறவு முறிந்த பெண்ணொருத்தி தன் மனக் குமுறலைப் பாட்டாக வடிக்கின்றாள்:

"கூடினமே கூடினமே கூட்டுவண்டிக் காளைபோல

விட்டுப் பிரிஞ்சமையா ஒத்தவண்டிக் காளைபோல''.

## தொழில் பாடல்கள்

இயற்கையைத் தனக்குச் சாதனமாகப் பயன்படுத்திக கொள்ளும் செயலே பழங்காலத்தில் தொழில் எனக் கருதப்பட்டது. இன்று தொழிலே உலகத்தை இயங்கும் சக்தியாக வளர்ந்துள்ளது. 'வினையே ஆடவர்க்குயிரே' என்றும், ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்றும் நம்புகின்றனர். பொதுவாகத் தொழில் புரியும்போது பாடும் பாடல்களைத் தொழில் பாடல்கள் என்கிறோம். தொழிலின் சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமல் இருக்கப் பாடுகின்றனர். தொழிலாளர்கள் தங்கள் வேதனைக்கு வடிகாலாகவும் பயன்படுத்துகின்றனர். மனிதர்கள் கூடித் தொழில் செய்யும்போது அக்கூட்டுறவிலே பிறப்பது தொழில் பாடல்கள். தொழில் பாடல்களிலே அன்பு மலர்வதையும், பாசம்

பொங்குவதையும், உழைப்பின் ஆர்வத்தையும் நன்மையில் ஈடுபாட்டையும், தீமையில் வெறுப்பையும் காண்கிறோம். தொழில் பாடல்கள் தொழிலாளர்களது இன்ப துன்பங்களையும் நெஞ்சக் குமுறல்களையும் ஆசாபாசங்களையும் விருப்பு வெறுப்புகளையும் வெளியிடுகின்றன. தொழில் பாடல்களை ஏலோலங்கிடி பாட்டு, தில்லாலங்கடி பாட்டு, தெம்மாங்குப் பாட்டு, ஏற்றப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் வழங்குவர்.

தொழிற்பாடல்கள் சில குறியீடுகளுடன் தொடங்குகின்றன. விவசாயப் பாடல்களில் ஏலேலோக் குயிலே ஏலங்குடிலேலே, ஏலேலே அன்னக்கிளி, ஏலேலோ குயிலே, பொலி பொலி பொல் என்றும், கப்பற் பாட்டுகளில் ஏலேலோ ஐலசா, ஏலை ஏலோ சல சலா என்றும், பாரந்தூக்குவோர்கள் ஐலசா ஐலசா, ஏலம் பிடி ஏலம் என்றும் வண்டியோட்டுவோர் ஏலங்கிடிலேலோ என்றும் பாடுவர்.

தொழிற்பாடல்களில் அத்தொழில்களைப் பற்றிய குறிப்புக்களைத் தவிர வேறுபல பொருட்களைப் பற்றியும் பாடுவர் தொழிற்பாடல்களில் தொழிலுக்கு அடுத்தபடியாகக் காதல் இடம் பெறுவதுண்டு, வழிபாடுகளும் புராணக்கூறுகளும் இடம் பெறுகின்றன. தொழிற்பாடல்கள் மூலம் மக்கள் செய்த தொழில்களைப் பற்றியும், அதனாலேற்ப்பட்ட ஏற்றத்தாழ்வுகளைப் பற்றியும், சமுதாய அமைப்பு பற்றியும் அறிகிறோம். இன்று தொழிற்பாடல்கள் சமுதாயத்தில் எழுச்சியையும் ஏற்படுத்துகின்றன.

## ஏற்றப்பாட்டு

ஏற்றம் இறைக்கும்போது பாடும் பாடல்களை ஏற்றப்பாட்டு என்பர். பயிர்த்தொழில் பாடல்களில் ஏற்றப்பாட்டிற்குத் தனிச்சிறப்பிடம் உண்டு. ‘‘ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை’’ என்ற பழமொழி இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஏற்றம் இறைக்கத் தொடங்குமுன் உழவர்கள் தாங்கள் வழிபடும் தெய்வங்களை அருள்புரியவேண்டும் என விரும்புவர்.

‘‘பெருமாளே வாரீர் சிவனாரே வாரீர் சிவனும் பெருமாளும் சேர்ந்து மடலேறும் அரியும் சிவனும் அமர்ந்து மடலேறும்’’. ஏற்றம் இறைக்கச் செல்லும் நேரம் வைகறைப் பொழுதாகும். இலைகள் மீதும் புல்லின் மீதும் பனித்துளிகள் முத்து முத்தாய் விளங்குகின்றன. அதைக்கண்ட நாட்டுப்புறப்பாவலன் அக்காட்சியைத் தனது ஏற்றப்பாடலில் வடிக்கின்றான்.

“மூங்கில் இலைமேலே தேங்கும் பனிநீரே !

கோவை இலைமேலே கொள்ளும் பனிநீரே !

பாவை இவைமேலே படரும் பனிநீரே !

வாழை இலைமேலே படரும் பனிநீரே !''

## படகுக்காரன் பாட்டு

நதியிலே படகு மிதந்து செல்கிறது. மாலைச் செவ்வானம் நீரிலே பிரதிபலிக்கிறது. படகிலே படகோட்டியும் காதலியும் உள்ளனர். அவன் உள்ளத்திலே இன்பம் பொங்கி வழிகிறது. படகோட்டி இனியநாதம் இசைக்க ஆரம்பிக்கிறான். “மண்ணை நம்பி'' என்று அவன் பாட, “ஏலேலோ'' என்று அவள் கூற, “மரமிருக்க'' என்று அவன் பாட, “ஜலசா'' என அவள் பாடுகிறாள். அவள் ஏலேலோ ஜலசா என்று கூறாவிட்டால் பாட்டுக்குத் தாளமே அமைவதில்லை.

''மண்ணை நம்பி -ஏலேலோ

மரம் இருக்க ஜலசா

மரத்தை நம்பி -ஏலேலோ

கிளை யிருக்க - ஜலசா

கிளையை நம்பி - ஏலேலோ

கோல் இருக்க - ஜலசா

கோலை நம்பி - ஏலேலோ

இலை யிருக்க - ஜலசா

இலையை நம்பி - ஏலேலோ

பூ விருக்க - ஜலசா

பூவை நம்பி - ஏலேலோ

பிஞ்சிருக்க - ஜலசா

பிஞ்சை நம்பி - ஏலேலோ

காயிருக்க - ஜலசா

காயை நம்பி - ஏலேலோ

பழ மிருக்க - ஜலசா லசா

பழத்தை நம்பி – ஏலேலோ

நீ யிருக்க - ஜலசா

உன்னை நம்பி - ஏலேலோ

நானிருக்கேன் ஜலசா!”

மண்ணிலிருந்து தொடங்கி பழம் வரை சென்று “உன்னை நம்பி நானிருக்கேன்” என்று தொடர்புபடுத்தி முடிக்கிறான். மண்ணில் தொடங்கி கனிக்குமேல் கனியாக அவளைக் காண்பதற்குத்தான் என்பதை நேரடியாகக் கூறாமல் எங்கேயோ ஆரம்பித்து, அழகிய நிலைக்களனை ஏற்படுத்தி அதன் முடிவாக முக்கியக் கருத்தை அமைக்கிறான் நாட்டுப்புறப் பாவலன்.

## மீனவர் பாடல்

மீனவர்கள் இரவில் சென்று கடலில் மீன் பிடிக்கும் போது நட்சத்திரங்கள் தாம் அவர்களுக்கு விளக்காகும். பரந்த கடலே அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடம், அலையே அவர்களது தோழர்கள் மேகமே ஆடையாகவும், புயலே ஊஞ்சலாகவும், பனிமூட்டமே போர்வையாகவும், காயும் வெயிலே கூரையாகவும், கட்டுமரமே வீடாகவும், மீன்வலையே அரிச்சுவடியாகவும், பிடிக்கும் மீன்களே வாழ்வுக்குரிய பொருளாகவும், வெண்மணலே பஞ்சு மெத்தையாகவும், முழு நிலவே கண்ணாடியாகவும் கொண்டு வாழ்கின்றனர். மீனவரது வாழ்வையே படம் பிடித்துக் காட்டும் இப்பாடலைக் காண்போம்.

“விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா
அடிக்கும் அலையே நம்தோழன் - ஜலசா
அருமைமேகம் நமது குடை - ஜலசா
பாயும் புயல் நம் ஊஞ்சல் ஜலசா
பனிமூட்டம் உடல் போர்வை ஜலசா
காயும் ரவிச்சுடர் கூரை ஜலசா
கட்டுமரம் வாழும் வீடு ஜலசா
மின்னல்வலை அரிச்சுவடி ஜலசா
பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் ஜலசா
மின்னல் இடிகாணும் கூத்து ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை - ஜலசா
முழுநிலாதான் கண்ணாடி ஜலசா
மூச்சடக்கி நீந்தல் யோகம் ஜலசா
தொழும் தலைவன் பெருவானம் ஜலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் ஜலசா”

## வண்டிக்காரன் பாட்டு

வண்டியோட்டும் காளையொருவன் ஒருத்திமீது காதல் கொள்கிறான். காதல் வளர்கிறது. அவள் அழகான சேலை உடுத்தி வருகிறாள். யார் கொடுத்த சேலை என வினவுகிறான். நெஞ்சில் முள்ளாகத் தைக்கிறது. பொங்கி எழுகிறாள். உழைத்து வாங்கியது எனக் கூறுகிறாள். அவர்கள் பாடும் பாடல் இது.

“வட்ட வட்டப் பாறையிலே - குட்டி
வரகரசி தீட்டையிலே
ஆர்கொடுத்த சாயச்சீலை - குட்டி
ஆலவட்டம் போடுதடி ?
ஆருங் கொடுக்கவில்லை
அவிசாரி தான் ஆகவில்லை
வன்பாடு பட்டுதான் - மச்சான்
வாங்கினேண்டா சாயச்சீலை’’.

## ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரி என்பர். இறந்தவர்களின், இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப்பாடுவதும் ஒப்பாரியாகும். வாழ்வில் முன்னுரை தாலாட்டு. ஆனால் முடிவுரை ஒப்பாரியாகும். தாலாட்டு கலங்கரை விளக்கமானால், ஒப்பாரி நினைவுச் சின்னமாகும். தாலாட்டும் ஒப்பாரியும் பெண்குலத்தின் படைப்பாகும். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி ஒப்பாரியை ஒப்ப - ஆரி எனப் பிரித்து ஒப்புச் சொல்லி அழுதல் எனப்பொருள் தருகிறது’’. ஒரு தமிழ் - ஆங்கில அகராதி ஒப்பாரிக்கு ஒப்புச்சொல்லி அழுதல் என்று பொருள் கூறுகிறது. அதோடு பெண்களால் பாடப்படுவது என்றும். இறந்தவர்க்கும் அடுத்த பிற பொருள்களுக்கும் ஒப்புச்சொல்லிப் பாடுவது என்றும் கூறுகிறது. தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம். பிணக்கானம், கையறு நிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு எனப் பல்வகையாகக் கூறுவர். பாதுகாப்பை இழந்தாலும், பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிகளில் சோகம் கொப்பளிக்கின்றது. கணவனுக்காகவும் பெற்றோர்க்காகவும், உடன் பிறந்தவர்க்காகவும், மாமன் மாமிக்காகவும் இறந்த பொழுது பெண்கள் ஒப்பாரி பாடுகின்றனர். “தலைச்சன் பிள்ளை பெத்தவளுக்குத்

தாலாட்டும், புருஷனை இழந்தவளுக்கு ஒப்பாரியும் தானாகவே வரும்'' என்ற பழமொழி இக்கருத்துக்கு அரணாக விளங்குகிறது.

நமது தமிழ்ச் சமுதாயத்தில் பெண்சமுதாயம் ஒரு சார்பு சமுதாயமாகும். ஒரு பெண்ணானவள் தன் வாழ்க்கை முழுதும் யாரையேனும் சார்ந்தே வாழ்கிறாள். குழந்தைப் பருவத்தில் பெற்றோரைச் சார்ந்தும், திருமணத்திற்குப் பின்பு கணவனை சார்ந்தும், கணவன் இறந்து விட்டால் மகனையோ அல்ல மகளையோ சார்ந்தும் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் நம் சமூக அமைப்பில் இருந்து வருகிறது. நம் சமுதாயத்தில் விதவையின் நிலையை எண்ணிப் பார்த்தால் வேதனைதான் மிஞ்சும். விதவைகளைப் பாதிக்கும் சமூகப் பிரச்சினைகளும் நிறைய உண்டு.

இறந்தவரின் பெருமையும் அவரது குணநலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும் பேசப்படுவதுண்டு. ஒப்பாரி பாடுகின்றவர்கள் இறந்தவரை நேசித்தமுறையும் தன்னுடைய நிலைமை பற்றியும் குடும்பத்தின் நிலைமை பற்றியும் பாடுகின்றனர். ஈமச்சடங்குகள் பற்றிய விவரங்களும் கூறப்படுவதுண்டு. காலனது கொடுமையும் விதியின் வலிமையும் விதவையின் வேதனையும் இறந்தவரால் அடைந்த இழப்பும் ஒப்பாரியின் பொருளாகின்றன. ஒருவருடைய மனக்குறையைப் பிறரிடம் கூறினால் மனப்பாரம் குறையும் என மனிதர்கள் எண்ணுவது இயல்பாகும். ஒப்பாரியை அவற்றின் வெளிப்பாடு (Outlet) என்றே கூறலாம். இறந்தவர்களின் ஆவி ஒப்பாரிகளால் சாந்தியடைவதாகவும், ஒப்பாரி பாடாவிட்டால் ஆவிகள் துன்புறும் என்றும், இவ்வுலகம் விட்டு மறுவுலகம் செல்ல ஒப்பாரிகள் இறக்கைகளாக உதவுகின்றன என்றும், ஆவிகள் மூலம் தீங்குவாராமல் காக்கலாம் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

கணவன் இறந்துவிட்டால் கனவுகளில் மிதக்கவேண்டிய மனைவி கண்ணீரில் மிதக்க வேண்டும். கணவனை இழந்து பெண்கள் படும் துயரம் வார்த்தைகளால் விவரிக்க முடியாது கணவனை இழந்துவிட்டால் அவளுக்குப் பூவும் பொட்டும் சொந்தமில்லை. அணிகலன்களால் அழகு செய்ய முடியாது. நிகழ்கால வாழ்க்கை சரிந்து வருங்காலத்தில் எண்ணற்ற துன்பங்களை எதிர்நோக்க வேண்டியவளாகிறாள். கணவனை இழந்த பெண்ணொருத்தி கணவன் இறந்தபின்பு தாலியைக் கழற்ற மனம் ஒப்பவில்லையே என்றும், சாப்பாட்டிற்கே வழியில்லையே என்றும் கூறி ஒப்பாரி வைக்கிறாள்:

"தாலி பெருஞ்சரடு

தாழம்பூ நச்சரடு
தாலிமேல் கைவச்சா
தாளாதய்யா எம்மனசு!
மாலையோ பெருஞ்சரடு
மகிழம்பூ நச்சரடு
மாலைமேல் கைவச்சா
மாளாதய்யா எம்மனசு!
கொத்தான பெருஞ்சரடு
கோர்வையான செஞ்சரடு
கொத்துமேல் கைபோட்டா
கோணுதய்யா எம்மனசு!
.......... .......... ...........
........... .......... ..........
பம்ப புளியமரம்
பந்தடிக்கும் நந்தவனம்
பந்தடிச்சி வீடுவந்தா
பச்சதண்ணி யார் தருவா ?
கடன் வாங்கிச் சோறுதின்னா
கடன்காரன் நச்சரிப்பான்
கண்கலங்கி நிக்கையிலே
கண்டசனம் பேசுமய்யா !"

கணவன் இறந்து விடுகிறான். கணவனின் இழப்பிற்கு இவர்களெல்லாம் காரணமாக இருக்கலாம் என்று எண்ணி வேதனைப்படுகின்றாள்.

"தாலிக்கு அரும்பெடுத்த
தட்டானும் கண் குருடோ?
சேலைக்கு நூலெடுத்த
சேணியனும் கண்குருடோ?
பஞ்சாங்கம் பாக்கவந்த
பார்ப்பானும் கண்குருடோ

எழுதினவன் தான் குருடோ?

எழுத்தாணி கூர் இல்லையோ?"

பெற்றெடுத்த தாய் இறந்துவிட்டாள். அத்தாயின் இழப்பை எண்ணி மகள் வருந்துகின்றாள். அவள் நெஞ்சிலுள்ள நெருப்பு என்று தணியும் என ஏங்கி இரங்குகிறாள்.

"தச்சன் ஒலை நெருப்பு

தணியும் ஒரு சாமம்

என் தங்கமடி நெருப்பு

தான் தணிவது எக்காலம்?

கொல்லன் ஒலை நெருப்பு

குளிரும் ஒரு காலம்

என் கொடிய மடி நெருப்பு

தான் குளிருவது எக்காலம்".

'பனைமரத்து நிழலில் பறவைகள் வந்து தங்கி இளைப்பாறுவது வழக்கம். அந்த மரம் புயலில் சாய்ந்து விட்டால் பறவைகள் தங்க நிழலின்றித் தவிக்கும். அதுபோன்று தந்தையை இழந்து நாங்கள் தவிக்கின்றோம்' என்று ஒரு பெண் புலம்பி பாடும் பாடல் இது.

"கூந்தல் பனஞ்சோலை

குயிலடையும் மண்டபங்க - நீங்க

கூந்தல் பனைசாஞ்சா - நாங்க

குயிலடைய அஞ்சுறோம்பா

மட்டை பனஞ்சோலை

மயிலடையும் மண்டபங்க - நீங்க

மட்டை பனைசாஞ்சா - நாங்க

மயிலாட அஞ்சுறோம்பா.

நீல குளத்தங்கரை - நாங்க

நின்னழுவும் மந்தகரை

நின்னழுது வீடுவந்தா

நீரா தண்ணி யார் கொடுப்பா?
மூன்று கதவிருக்க
முத்திரை போட்டிருக்க
முத்திரையை நான் திறக்க
உத்தரவு யார் கொடுப்பா?''

சீராட்டிப் பாராட்டி வளர்த்த அருமை மகளை மணக்கோலத்தில் காணவிரும்புகிறாள் தாய். மணக்கோலத்தில் காண வேண்டிய மகளைப் பிணக்கோலத்தில் காணுகிறாள். அவள்படும் வேதனைக்கு அளவில்லை.

''மணவறைப் பந்தலிலே - உன்
மணக்கோலம் பாராமல்
பிணவறைப் பந்தலிலே - நானும்
பேரிழவே கொள்ளுகின்றேன்''.

## ஒப்பாரி காட்டும் பெண்கள் நிலை

குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய கணவன் இறந்து போனால் மனைவி பெரும் பாதிப்புக்குள்ளாகிறாள். பேரிழப்பை மட்டுமின்றி அமங்கலி என்ற சொல்லையும் தாங்கிக் கொள்ள வேண்டியவளாகிறாள். கணவனை இழந்த இழப்பைக் காட்டிலும் கைம்மை நோன்பின் கொடூரம் வேதனைக்குள்ளாக்குகிறது. விதவைகள் எந்தச் சுபகாரியத்திலும் பங்கு பெறக்கூடாது. அவள் தொட்ட காரியம் துலங்காது. எதிரே வந்தால் சகுனத்தடை, என்றெல்லாம் சமூகம் நினைக்கிறது. பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத நிலையில் பெண்களுக்கு நேரும் துயரங்களை ஒப்பாரிப் பாடல்களில் காண்கிறோம். பெற்றோருக்குப் பின் பிறந்த வீட்டிலும் வரவேற்பில்லை. தன் வயது ஒத்த அண்ணி கொடுமையின் சின்னமாக நாட்டுப்புறப் பாடல்களில் சித்தரிக்கப் பட்டுள்ளாள். பெற்றோரை இழந்த பெண்ணொருத்தி தனக்குப் பொன்னும் பொருளும் சீதனமும் வேண்டாம். அன்பான வார்த்தை கூறி வரவேற்றால் போதும் என வேதனையால் புலம்புவதையும் காண்கிறோம்.

"அள்ளி கொடுக்க வேண்டாம்
அரண்மனையில் பாகம் வேண்டாம்
அன்பான வார்த்தை சொல்லி-என்னை

அரவணைத்தால் போதும்,
பணங்காசு கொடுக்க வேண்டாம்
பட்டுப்பாய் போட வேண்டாம்
பாசமுள்ள வார்த்தை சொல்லி - என்னை
பராமரிச்சா போதும்
சீர்வரிசை செய்ய வேண்டாம்
சப்பக்கட்டு கட்ட வேண்டாம்
சாந்தமான வார்த்தை சொல்லி-என்னை
சிரிக்கவைச்சா போதும்.''

சுருங்கக்கூறின் பெண்களின் சோக உணர்ச்சிகள் முழுமையும் ஒப்பாரிப் பாடல்களில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

## நாட்டுப்புறக் கதைகள்

''பொருள் மரபில்லாப் பொய்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்''

என்று தொல்காப்பியர், இரு வகையான உரைகளில் அமைந்த கதைகளைக் கூறுகிறார். அவை, பொருளில்லா கட்டுக்கதைகள் என்றும், பொருளுடையவை என்றும் நகைச்சுவைக் கதைகள் என்றும் பகுக்கப்படுகின்றன. நாட்டுப்புறக் கதைகளின் தோற்றத்தைப்பற்றித் திரு.தி.அ. பாலசுப்பிரமணியம் கூறும்போது ''ஆதி மனிதன் காட்டில் வேட்டையாடிச் சென்று திரும்பியவுடன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னதிலேயே கதையின் தொடக்கத்தைக் காணலாம்'' என்று குறிப்பிடுகின்றார்.

இந்நாட்டுப்புறக் கதைகள் பொழுதுபோக்குக்காக மட்டும் சொல்லப்படுவதில்லை. பல அரிய கருத்துகளை அறியாதாரும் அறியும்படி எளிமையாக இனிமையாக எடுத்துச் சொல்லவே இக்கதைகள் பயன்பட்டன. கதைபாத்திரங்கள் இவ்வாறு இருந்தன; இவ்வாறு இருந்ததால் இந்த விளைவுகளைப் பெற்றன; இவ்வாறு இருந்ததால் இவ்விளைவுகளைப் பெற முடியவில்லை; என்று கூறுவதன் மூலம் நாம் எவ்வெவ்வாறு இருக்கவேண்டும் என்றும் நாட்டுப்புறக் கதைகள் போதிக்கின்றன.

நாட்டுப்புறக் கதைகளைக் கற்றவர்கள்தாம் புனைந்தனர் புனைய முடியும் என்று சொல்வது தவறு. சிறிது கற்பனையும், சிறந்த சொல்லாற்றலும் கொண்ட எவரும் கதைகளைப் புனையலாம். கண்டவைகளுக்கும் கேட்டவைகளுக்கும் வித விதமான ஒப்பனைகளை அளித்துக் கேட்பவர்களின் உள்ளங்களில் கிளர்ச்சிகளை ஏற்படுத்தி விடலாம். கேட்க ஆளிருந்தாலே சிலருக்குக் கதை சொல்லும் ஆர்வம் பிறந்து விடுகின்றது.

## நாட்டுப்புறக் கதைகளின் தன்மைகள்

இன்றைய நாவலையும் சிறுகதையையும் போன்றுதான் இந்த நாட்டுப்புறக் கதைகள் உள என்றாலும் இவை குறிப்பிட்ட ஒருவரால் எழுதப்படாதன. ஏட்டில் இடம் பெறாதன வாய் வழியாக வாழ்வன. உருவம் தேய்ந்தும் வளர்ந்தும் நிலையற்ற வடிவைக் கொள்வன, இவ்வாறு பல வேறுபாடுகளைக் காணும் வகையில் இவை அமைந்துள்ளன.

பழங்கதைகள் ஆசை நிறைவிற்குரிய கருவியாகும் என்கிறார் பிராய்டு. நாட்டுப்புறக் கதைகள் மனித குலத்தின் நனவிலி மனக் கனவுகளைக் காட்டும் என்கிறார். இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்றவைகளைப் பற்றியும் இந்நாட்டுப்புறக் கதைகள் கூறுகின்றன என்கிறார் பிரேச்சர்.

டாக்டர் பா.ரா. சுப்பிரமணியம் ஒவ்வொரு முறையம் மாறாமல் ஒன்றுபோல் பிழையும் பிசிரும், இல்லாமல் கதை சொல்வது என்பது முடியாத காரியம். எனவே, காலப்போக்கில் கதைகள் மாறுதல்களைப் பெறுகின்றன, கதைகள் எவ்வாறு உருமாறுகின்றன காட்டுகிறார்.

“கதைகள் எதற்காகத் தோன்றின என்று ஆராயப் புகின் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிவதற்காகவும், மக்கள் இனிமையாகப் பொழுதுபோக்குவதற்காகவும், நீதிநெறிகளை மக்களுக்கு எளியமுறையில் புகட்டுவதற்காகவும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்” என்று திரு. சு.அ. இராமசாமிப் புலவர் நாட்டுப் புறக் கதைகள் அன்று தோன்றிய காலத்தின் தன்மைகளைக் கூறுகின்றார்.

“இக்கதைகள் நமது மக்களின் படைப்பு. அவர்களது கற்பனை, நியாய உணர்வு, அறிவு நுணுக்கம் இவற்றின் வெளியீடு. இவை அதீதமான கற்பனைச் சரக்காகவே இருக்கின்றன” என்று நாட்டுப்புறக் கதைகள் சொல்லப்படும்

தன்மைகளைத் “தமிழ்நாட்டுப் பழங்கதைகள்” என்ற நூலின் “பதிப்பகத்தார்” கூறுகின்றனர்.

நாட்டுப்புறக் கதைகளில் எல்லாப் பொருட்களும் இடம் பெறுகின்றன. எல்லா மொழிச் சொற்களும் இடம் பெறுகின்றன. எல்லா வகைப் பாத்திரங்களும் இடம் பெறுகின்றன.

மனிதன் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்வதற்கு முன் தன் உணர்வுகளைக் கலை நயத்துடன் வெளிப்படுத்தி வாய்மொழி வாக்கில் பலருடைய நாவிலும் பயின்று நிலைக்கச் செய்தவைகளே கிராமியப் பாடல்களும், கதைகளுமாகும். இந்தப் பழைய சம்பத்துகள் இன்று மிக மிக அருகி வருகின்றன. இவற்றை நாம் இழப்பது மிகத் தொன்மை வாய்ந்த இலக்கிய நூல்களின் உள்ளார்ந்த ஒரு ஆத்ம குரலை இழந்ததாக முடியும். ஏனென்றால் இது மாபெரும் இதிகாசங்களும் காவியங்களும் நாடோடிக் கதைகளுடனும் பாடல்களுடனும் ஊடாடிக் கலந்து ஊட்டம் பெற்று வளர்ந்து வந்திருப்பதைப் பார்க்கிறோம்” என்பார் கு. சின்னப்ப பாரதி.

நாட்டுப்புறக் கதைகள் மக்கள் வாழ்ந்த வரலாற்றையும் வாழும் வாழ்க்கையையும் புரிந்து கொள்ளத் துணைபுரியும் அகராதிகள் இவை ஏன் தோன்றுகின்றன? எவ்வாறு பரவுகின்றன? எவ்வாறு நிலை பெறுகின்றன? எவ்வாறு மாற்றமுறுகின்றன? ஏன் அழிகின்றன? என்ற வினாக்களுக்கு விடை காண முற்பட்டால் அவ்விடைகள், மக்கள் வாழ்ந்த, வாழும் வாழ்க்கை முறைகளைப் புரிந்துகொள்வதற்குப் பயனுடையதாக இருக்கும் என்பார் டாக்டர் ஆறு. இராமநாதன்.

நாடோடிக் கதைகள் காலந்தோறும் தோன்றிக் கொண்டே இருக்கும். நம்பூதிரிகள் பற்றிய கதைகள், சிங் கதைகள், கோமுட்டிச் செட்டியார் கதைகள் போன்றவை இத்தகையன. காந்தியையும் நேருவையும் பற்றிக்கூடப் புதுக்கதைகள் தோன்றியுள்ளன. கி. ராஜநாராயணன் கூறுவதுபோன்று “விஷயம் புதியதாக இருந்தாலும் விதம் பழையதுதான்.”

“வதந்தி, கதைகட்டி விடுகிறது, கட்டுக்கதை, கதை, இதுகளுக்கெல்லாம் கொஞ்சம் வித்தியாசம் உண்டு. வதந்தி துவேசத்திலிருந்து பிறப்பது. கதை கட்டி விடுவது சுவாரஸ்யத்திலிருந்து பிறப்பது. கட்டுக்கதை வெறும் சம்பவம் போலத்தான் இருக்கும். இட்டுக்கட்டியிருப்பது கவனிப்பவர்களுக்குத்

தெரிந்துவிடும். கதை என்பது கதையாகவே இருப்பது'' இது எல்லோராலும் செய்ய முடியாது.

இக்கதைகளின் பெரும்பாலானவையின் நாதமே நகைச்சுவைதான் என்று சொல்லலாம். கதைகளைத் தொடங்கியவுடன் நம்மைப் பற்றிக் கொள்வது இந்த உணர்ச்சிதான். உலகத்திலேயே பொழுதுபோக்குகளில் எல்லாம் சிறந்த பொழுதுபோக்கு இந்தக் கதை சொல்லலும், அதைவிடக் கேட்டலும் தான். இந்தக் கதைகளை உண்டாக்கியவர்கள் பாமரர்களிலிருந்து அறிவு ஜீவிகள் வரை என்று சொல்லலாம். இதன் வீச்சு ஒன்றுந்தெரியாத உழுகிறவனிலிருந்து, உபநிஷத்துக் கதைகளை உண்டு பண்ணிய வேதகால ரிஷிகள் வரை போகிறது. இதிகாசங்களின் ஊற்றுக்கண் எங்கே இருக்கும் என்று தேடிக்கொண்டே போனால் இந்தக் கதைகளில் தடங்களில் தான் கொண்டுவந்து விடும்.

‘‘ஜனங்களிடம் கதைகள் சென்று சென்று திரும்பும் போதெல்லாம் அதற்குப் புதுசு புதுசாகச் சிறகுகள் முளைக்கின்றன. ஒவ்வொரு மனுசனுக்குள்ளேயும் கதை படைக்கிற ஒரு மனுசப் பயல் வாழ்ந்து கொண்டிருக்கிறான்'' என்று கதைகளின் தன்மைகளைத் தரம் பிரித்துக் கூறுகிறார் கி. ராஜநாராயணன்

## நாட்டுப்புறக் கதைகளின் வகைகள்

நாட்டுப்புறக் கதைகளை நான்கு வகையாகப் பகுக்கலாம்.

1. மனிதக் கதைகள்,
2. மிருகக் கதைகள்,
3. மந்திரக் கதைகள்,
4. தெய்வக் கதைகள் என்று பிரித்துக் கொள்ளலாம்.

### 1. மனிதக் கதைகள்

மனிதர்களே கதாபாத்திரங்களாக உள்ளனர். இக்கதைகளில் அரசர்களின் பங்கும் உள்ளது. குடிமக்களின் பங்கும் உள்ளது. நீதியைப் போதிக்கும் கதைகள், நகைச்சுவைக் கதைகள், பொழுதுபோக்குக் கதைகள் என்ற மூன்று உட்பகுப்புகளும் இதில் உண்டு. மனிதர்களின் விருப்பு வெறுப்புகள், அபிலாசைகள் எல்லாம் இவற்றில் இடம் பெறும்.

**2. மிருகக் கதைகள்**

மிருகங்கள் கதாபாத்திரங்களாகப் பங்கு கொள்கின்றன. பேசாத மிருகங்களும் இக் கதைகளில் பேசுகின்றன. பாடாத பறவைகளும் பாடுகின்றன. நீதி, நகைச்சுவை, பொழுதுபோக்கு என்ற மூன்று கூறுகளும் இக்கதைகளில் இடம் பெற்றுள்ளன. மனிதர்களின் எண்ணங்கள் மிருகங்களின்மேல் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

**3. தெய்வக் கதைகள்**

இக்கதைகளை இயற்கை இறந்த கதைகள் (Super natural tales) என்று கூறலாம். இவற்றில் தேவதைகளும், தெய்வங்களும், கதாபாத்திரங்களாக உலவுகின்றனர். நீதி, நகை, பொழுதுபோக்கு என்ற மூன்று கூறுகள் இவற்றிலும் உண்டு.

**4. மந்திரக் கதைகள்**

மந்திரவாதிகள், மந்திரக் குணம் கொண்ட கிழவிகள், அரக்கர்கள், அரக்கிகள் ஆகியோர் இக்கதைகளில் கதா பாத்திரங்களாகின்றனர். இவற்றில் பொழுதுபோக்கும், விந்தை நிகழ்ச்சிகளும், வியப்புக்குரிய பொருட்களும் இடம் பெறுகின்றன.

இந்த நாலு பிரிவுகளின் இடையே கலந்தும் அல்லது தனித்தும் நீதிக் கதைகளும், நகைச்சுவைக் கதைகளும் அதிக அளவில் செல்வாக்குப் பெறுகின்றன. மிருகங்களும் மனிதர்களும் தனித்தனியாகக் கதைகளில் இடம் பெறாமல் கலந்தும் சில கதைகளில் இடம் பெறுகின்றனர். இக்கதைகளில் வரலாற்றையும் புராண இதிகாசங்களையும் அடிப்படையாகக் கொண்டு அப்பாத்திரங்களோடு புனையப்பட்ட நாட்டுப்புறக் கதைகளும் உண்டு. அவை, மூலங்களோடு மாறுபட்டும் விளங்குவதுண்டு. காரணம், சொல்பவரின் கற்பனையும் சேர்ந்து கொள்வதுதான்.

## நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

கதையைப் பாடலாகப் பாடப்படுவதைக் கதைப்பாடல் என்பர். அது ஒரு கதையாகவோ அல்லது பல உட்கதைகள் கொண்ட கதையாகவோ இருக்கலாம். ஆங்கிலத்தில் இதனை 'ballad' என்று கூறுவர். Ballare என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். நடனம் என்ற பொருளும் உண்டு.

மேலை நாட்டில் இச்சொல் பல பொருளில் வழங்கி, பதினாறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே இச்சொல்லுக்குக் குறிப்பிட்ட வரையறை ஏற்பட்டது. கதைப்பாடல்கள் முதலில் பாடுவதற்கே எழுந்தனவாகும். நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்துக் கூறுகளும் கதைப் பாடலுக்கும் பொருந்தும். கதைப்பாடல்கள் பெரும்பாலும் மக்களது பேச்சு மொழியிலே அமைந்திருக்கும். காப்பியங்கள் தோன்றுவதற்குக் கதைப்பாடல்களே மூலகாரணம் எனின் மிகையாகாது. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கதைப் பாடல்களை உலகிலே எங்கும் காணமுடியாது.

## கதைப்பாடல்கள் அறிமுகம்

கதையைப் பாடலாக இசையுடன் கூறுவதைக் கதைப் பாடல் என்பர். அது ஒரு கதையாகவோ அல்லது பல உட்கதைகள் கொண்ட கூட்டுக் கதையாகவோ இருக்கலாம். ஆங்கிலத்தில் இதனை 'Ballad' என்று கூறுவர். 'Ballare' என்ற இலத்தீன் சொல்லினின்று பிறந்ததாகும்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் வாய்மொழியாகப் பரப்பப்படுவது. பொருளிலும் வடிவிலும் நடையிலும் நாட்டுப்புற மக்களுக்கே உரியது. ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. நாடக உத்தி அமைந்து காணப்படுவது. கதைப் பாடலுக்குப் பெரும்பாலும் ஆசிரியர் இல்லாமல் இருக்கும். சில கதைப் பாடல்கள் இசையோடும் நடனந்தோடும் இயைந்து பாடப்படுவதாகும்.

கதைப் பாடலில் கதையின் நிகழ்ச்சிப் போக்கு, பாத்திரங்கள், பின்புலம், கரு முதலியன முக்கியப் பண்புகளாகும். கதைப் பாடல்கள் பாடுவதற்காகவே முதலில் எழுந்தவைாகும். நாட்டுப்புற இலக்கியக் கூறுகளில் ஒன்றான திரும்பத் திரும்ப வருதலைக் கதைப் பாடலிலும் காணலாம். கதைப் பாடல்கள் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் பேச்சு மொழியிலேயே அமைந்திருக்கும்.

பொழுது போக்குக்காகவே எழுந்தன கதைப் பாடல்கள் எனினும் சமூக நீதியையும், சமூக ஒற்றுமையையும், நன்மை, தீமை ஆகியவற்றையும் நன்னிமித்தங்கள், நீதிமித்தங்கள் பற்றியும், பழக்க வழக்கங்கள் பற்றியும் அறிய பெருந்துணையாக உள்ளன. இத்துடன் பக்தி உணர்வையும், தேசிய உணர்வையும் வளர்க்க கதைப் பாடல்கள் உதவுகின்றன எனக் கூறலாம்.

## தமிழில் கதைப்பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும்

கதைப்பாடலுக்குத் தமிழில் ‘‘அம்மானை’’ என்ற பெயரும் உண்டு. அம்மானையில் கதை நழுவா நிலையிலிருந்து கதை தழுவிய நிலையின் வளர்ச்சியைக் காண வேண்டும். பொதுவாக அம்மானை என்பது பெண்களின் விளையாட்டினையும் கதைப்பாடலையும் குறிக்கின்றது. ‘‘அம்மானை வரி’’ என்பது அவ்விளையாட்டின் போது பாடப்படும் பாடலாகும். ‘‘அம்மானை மடக்கு’’ என்பது வினா விடையாகப் பாடப்படுவதாகும். ‘‘அம்மானைப் பாட்டு’’ என்பது கதைப்பாடலைக் குறிக்கின்றது. சங்க காலத்தில் ‘‘அம்மானை’’ என்பது கழங்காட்டம் வழங்கப்பட்டது. இராசாராம் அவர்கள் ‘‘தமிழில் அம்மானைப் பாடல்கள்’’ என்ற தமது நூலில் அம்மானை அமைப்பையொட்டி அம்மானையை நான்கு வகைகளாகப் பகுக்கின்றனர்.

1. சிலப்பதிகார நிலையில் அமைந்த வினாவிடை நிலை.
2. திருவாசகம், பிள்ளைத் தமிழில் ‘‘அம்மானை’’ எனும் சொல் வருதல்
3. அம்மானைப் பாட்டு எனும் இசைப்பாடல் நிலை
4. அம்மானை ஆட்டம் தாள இசைக்குத்தக்க அமைந்த நிலை

சிலப்பதிகாரத்தில் ‘‘அம்மானை வரி’’ என்றும், திருவாசகத்தில் ‘‘திரு அம்மானை’’ என்றும் கலம்பகங்களில் ‘‘அம்மானை’’ என்றும் பிள்ளைத் தமிழ், உரை போன்றவற்றில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அம்மானைப் பருவம் என ஒரு பருவமே சிலப்பதிகாரத்தில் அம்மானை வினா விடை என்ற நிலையில் உள்ளது.

‘‘வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர் கோள்
ஓங்கரணங் காத்த உரவோன் யார் அம்மானை’’

இளங்கோ பல கதைகளை அம்மானை வரியில் கூறுகின்றார். கலம்பக அம்மானையில் வினாவுக்குப் பதில் பொதுக் கூற்றும், பின்னர், வினாவும் விடையுமாக அமைந்துள்ளது.

‘‘வற்றா வளக்காஞ்சி வாழ்ந்தருள் ஏகாம்பரார்
செற்றார் புரமெரித்த தீயர்காண் அம்மானை’’

தனிப் பாடல்களாகவும் அம்மானை உள்ளது.

“திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேல் பெருமானார்
இருபாலைக் குயத்தியரோடு இன்பமுற்றார் அம்மானை
நருவாரோ சட்டிகுடம் சாறு வைக்க அம்மானை”

தனிப்பாடல்களிலும் கதை கூறுகின்ற பண்பைக் காணலாம்

“நருவார் காணி சட்டிகுடம் ராறுவைக்க அம்மானை”

திருவாசக அம்மானைக்கும் சிலப்பதிகார அம்மானைக்கும் வேறுபாடு உண்டு. வினா விடை என்ற நிலை மாறி ஒரே பெண்ணே பாடி ஆடும் நிலையைக் காண்கிறோம். சிலம்பு, வாசகம் ஆகியவற்றில் கலம்பகத்தில் பாடுவதற்குரிய அம்மானைப் பாடல்கள் காணப்படுகின்றன. பிள்ளைத்தமிழில் அம்மானைப் பருவமே உள்ளது. இது இலக்கிய வளர்ச்சியைக் காட்டுகிறது. மனோன்மணிய நாடகத்திலும் அம்மானை “கழல்” எனும் பெயரால் குறிக்கப்படுகின்றது.

## கதைப்பாடல் வகைகள்

நாட்டுப்புறவியல் அறிஞர் “பெலிக்ஸ் ஜே.ஒய்னாஸ்” கதைப்பாடல்களை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்துகின்றார்.

1. மந்திரக் கதைப்பாடல்கள்
2. வீரர் கதைப்பாடல்கள்
3. காதலன் கதைப்பாடல்கள்
4. வரலாற்றுக் கதைப்பாடல்கள்

நாட்டுப்புறவியல் அறிஞர் நா.வானமாமலை அவர்கள் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்.

1. தெய்வீகக் கதைப்பாடல்
2. புராணக் கதைப்பாடல்
3. சமூகக் கதைப்பாடல்
4. வரலாற்றுக் கதைப்பாடல்

தமிழ்ப் பேரறிஞர் மு.அருணாசலம் அவர்கள் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்.

1. காதல் கதைப்பாடல்கள்
2. வரலாற்றுக் கதைப்பாடல்கள்
3. புராணக் கதைப்பாடல்கள்
4. சமூகக் கதைப்பாடல்கள்

இப்பிரிவுகள் அனைத்தையும் கூர்ந்து நோக்கும் போது, தமிழகக் கதைப்பாடல்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. புராணக் கதைப் பாடல்கள்
2. வரலாற்றுக் கதைப்பாடல்கள்
3. சமூகக் கதைப்பாடல்கள்

சிறுதெய்வ வழிபாடு வளர்ந்த வளர்ச்சி பற்றிய கதைப்பாடல்களும், புராண இதிகாசங்களில் காணப்படும் துணுக்குகளை அடிப்படையாகக் கொண்ட கதைப்பாடல்களும் புராணக்கதைப் பாடல்களில் அடங்கும். ஒவ்வொரு வகைக் கதைப்பாடலுக்கும் சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

**1. புராணக் கதைப்பாடல்கள்**

- மகாபுராண அம்மானை
- சித்திரபுத்திர நயினார் கதை
- அல்லி அரசாணி மாலை
- பவளக்கொடி மாலை
- புலந்திரன் களவு
- கோமதியம்மன் தவமகிமை அம்மானை
- திரௌபதி குறம்
- வைகுந்த அம்மானை
- மதகைாமராசன் கதை
- பொன்னுருவி மசக்கை
- இசக்கியம்மன் கதை முதலியன.

**2. வரலாற்றுக் கதைப்பாடல்கள்**

- இராமப்பய்யன் அம்மானை
- சிவகங்கை அம்மானை
- இரவிக்குட்டிப் பிள்ளைப்போர்
- கட்டபொம்மன் கதை
- தேசிங்குராஜன்
- கான் சாகிபு சண்டை
- ஐவர் ராசாக்கள் கதை
- வீணாதி வீணன் கதை
- சோணமுத்துப் பாண்டியன் கதை
- அண்ணன்மார் சுவாமி கதை முதலியன.

**3. சமூகக் கதைப்பால்கள்**

- நல்லதங்காள் கதை
- சின்ன தம்பி கதை
- முத்துப்பட்டன் கதை
- காத்தவராயன் கதை
- சின்னநாடன் கதை
- மதுரைவீரன் கதை
- சுடலைமாடன் கதை
- ஜம்புலிங்கம் கதை
- கௌதல மாடன் கதை
- ஈனமுத்து பாண்டியன் கதை முதலியன.

## வரலாற்று கதைப்பாடல்கள்

12-ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகத்தின் சில பகுதிகளை ஆட்சி செய்த குறுநில மன்னர்களும், அவர்தம் தளபதிகளும் நடத்திய போர்களைப் பற்றிய கதையாடல் பாட்டுக்களையே வரலாற்றுக் கதைப்பாடல்கள் என்று குறிப்பிட்டு வருகிறோம். இது குறித்த வரையறைபற்றி இன்னும் கவலைப்படவில்லை. இக்கதைப்பாடல்களில் கூறப்படும் செய்திகள் 13-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவை.

ஐவர் ராசாக்கள் கதை, கன்னடியான் படைப்போர், பஞ்சபாண்டியர் கதை, வெட்டும் பெருமாள் கதை, உலக முழுதுடையாள் கதை ஆகிய ஐந்து

வரலாற்றுக் கதைப்பாடல்களும் ஒரே வரலாற்றைச் சொல்லுவன. இராமப்பய்யன் அம்மானை, இரவிக்குட்டி பிள்ளை போர், தம்பிமார் கதை, தேசிங்குராஜன் கதை, கான் சாகிப் சண்டை, சிவகங்கைக் கும்மி, கட்டபொம்மன் வரலாறு, கட்டபொம்மன் கதைப்பாடல், வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல், கட்டபொம்மு கூத்து, கட்டபொம்மு கும்மிப்பாடல், அண்ணன்மார் சுவாமிகதை, உலகுடைய பெருமாள் கதை போன்றவை வரலாற்றுக் கதைப்பாடலாகும்.

## கன்னடியன் போர்

இதனைப் பேராசிரியர் சர்வேஸ்வரனும் திருடராஜனும் வெளியிட்டுள்ளனர். இதில் ஐவர் ராசாக்கள் கதையின் செய்திகளே கூறப்பட்டுள்ளன. குலசேகரனைப் பற்றிப் பண்டாரங்கள் சொன்னதைக் கேட்டுக் கன்னடியன் மணம் பேசுதலும், மன்னன் மருப்பன் (மதிப்பன்) கதையும், இடைச்சி கதையும் இதன் உள்ளடக்கங்களாகும்.

## இராமப்பய்யன் அம்மானை

நமக்கு கிடைத்த முதல் கதைப்பாடல் இராமப்பய்யன் அம்மானையாகும். கி.பி.1623 முதல் 1656 வரை மதுரையில் ஆட்சி புரிந்த திருமலை நாயக்கரிடம் தளவாயக இருந்த இராமப்பய்யன் இராமநாதபுரத்தை ஆண்டு வந்த சேதுபதி சடைக்கத் தேவன் மீது போரத் தெடுத்து அவனைச் சிறை செய்து வந்த கதையைக் கூறும் கதைப்பாடலாகும்.

இக்கதைப் பாடலின் மூன்று பிரதிகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டு அரசாங்கக் கையெழுத்து நூலகத்தில் இரண்டு பிரதிகளும், தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் ஒரு பிரதியும் உண்டு. இப்பிரதிகளுக்கிடையே வேறுபாடு உண்டு.

## கதைச்சுருக்கம்

திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பய்யன் சடைக்கத் தேவரின்மீது போர் தொடுக்கச் செல்கிறான். செல்லும் வழியில் மானாமதுரையில் தங்கியிருந்த போது, சடைக்கத் தேவன் தனது மருமகள் வள்ளியனை அனுப்பி இவன்மீது போர்தொடுத்து வெற்றி பெறுகிறான். எழுபத்திரண்டு பாளையக்காரர்கள் இராமப்பய்யனுக்கு உதவி செய்தும், போரில் வெற்றி பெறவில்லை. போகலூார் கோட்டையிலே நடந்த போரிலும் வன்னியனே வெற்றி பெறுகிறான்.

இராமப்பய்யன் அரியாசபுரத்தை முற்றுகையிட்டுத் தாக்கும்போது சடைக்கத் தேவன் காயமுற்று இராமேசுவரம் செல்கிறான்.

இதற்கிடையில் இராமப்பய்யன் இராயருக்கு உதவி புரிவதற்காக வடக்கே அனுப்பப் பெற்று வெற்றி வாகை சூடுகிறான், மீண்டும் கோலூர் கோட்டையை முற்றுகையிட்டுக் குமரன் அழகனைப் பிடித்துச் சித்திரவதை செய்து கொல்கிறனர். இராமேசுவத்திலுள்ள சேதுபதியுடன் போரிட்ட பரங்கியர் உதவியுடன் கப்பல் போரும் நடைபெறுகின்றது. வெற்றியும் தோல்வியும் இரு பக்கமும் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் வன்னியன் ‘வைசூரி’ அம்மையினால் துன்பப்படுகிறான். பாம்பன் துறைப் போரில் வன்னியன் இறக்க, அவன் மனைவி ஈமத்தீயில் விழுந்து உயிர் துறக்கிறான். பின்னர், சடைக்கத் தேவன் சரணடைய சிறையில் அடைக்கப்படுகிறான். சிறையிலிருந்த காலத்தில் நினைத்து வழிபட்டதால், தளைகள் அறுத்ததாகக் கூறுவர் சிலர், திருமலை நாயக்கரே விடுதலை செய்ததாகவும் கூறுவர் சிலர்.

## இக்கதைப் பாடல் மூலம் அறியலாகும் வரலாற்றுச் செய்திகள்

மதுரையை ஆண்ட நாயக்கர்களில் ஆறாவதாகப் பட்டத்திற்கு வந்தவர் திருமலை நாயக்கர். இவரது சேனாதிபதி தான் இராமப்பய்யன். இராமப்பய்யன் மைசூர் போரில் வென்ற பிறகு, சேதுபதியுடன் போரிட்டு வென்றார். அப்போரைப் பற்றிய கதைப் பாடலே இது. இராமப்பய்யனுக்கும் சடைக்கத் தேவனுக்கும் நடந்த போரில் வெற்றி தோல்வி இருபுறமும் உண்டு. இலங்கையிலிருந்தும் கொச்சியிலிருந்தும் கப்பல்களில் பரங்கியர் வந்து இராமப்பய்யனுக்கு உதவி புரிந்ததாய் பாதிரியார் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கதைப் பாடலுக்கும் வரலாற்றிற்கும் சில வேறுபாடுகள் இருப்பதைக் காண்போம். வரலாற்றில் போரின் இறுதியில் இராமப்பய்யன் இறந்ததாக அறிகிறோம். ஆனால், கதைப் பாடல் வன்னியத் தேவன் இறந்ததினால் சடைக்கத்தேவன் அடைக்கலம் புகுந்தான் எனக் கூறுகிறது. சடைக்கத் தேவனின் தம்பி சோரபுத்திரனைப் பற்றிக் கதைப்பாடலில் குறிப்பிடப்படவில்லை. பாரதியாரின் வேண்டுகோளின்படி சேதுபதி விடுதலையடைந்ததாக வரலாறு கூறுகின்றது. தெய்வப் பக்தியால் தளைகள் உடைய இவர் விடுதலை செய்யப்பட்டார் எனக் கதைப்பாடல் கூறுகின்றது. திருமலை நாயக்கர் காலத்தில் எழுபத்திரெண்டு பாளையப்பட்டுகள் இருந்தமையும் அறிகிறோம். சில

வேறுபாடுகள் இருப்பினும் வரலாற்றிற்கு பெருந்துணையாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

## இக்கதைப் பாடல் உணர்த்தும் அக்காலச் சமூக நிலை

போருக்குச் செல்லும்முன் ஆலயம் சென்று வழிபடுதலையும், யாகம் செய்து பிளவு உண்டாக்கலையும் போரில் பிடிப்பட்டவர்களைச் சித்திரவதை செய்வதையும், மன்னன் இறந்ததால் மனைவியர்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தையும் அறிகிறோம். வள்ளியன் இறக்க அவன் மனைவி உடன்கட்டை ஏறுகிறாள். குமரன் அழகன் கொல்லப்பட்ட அவன் தேவி உயிர் துறக்கிறாள். இராமப்பய்யன் அம்மானை கதைப்பாடல் மூலம் மதுரை நாயக்கர் வம்சம் பற்றியும் இராமநாதபுர சேதுபதிகள் வம்சம் பற்றியும் அறிகிறோம்.

## சமூக கதைப்பாடல்கள்

குலதெய்வக் கதைகள் போல சில கதைகள் மக்களிடம் என்றும் சிறப்பு வாய்ந்தவையாக இருக்கின்றன. அந்த கதைகள் பாடல்கள் வழியாகப் பலதலைமுறைகளைக் கடந்து வந்திருக்கின்றன. தங்கள் சந்ததியினர் அந்தக் கதைகளை அறிந்து கொள்ள வேண்டும் என நம்முன்னோர்கள் விரும்பியிருக்க வேண்டும். அவைகளை சமூகக் கதைப்பாடல்கள் என அறிஞர்கள் கூறுகிறார்கள்.

வாய்மொழி கதைப் பாடல்களாக இருத்தவைகளை ஆவணம் செய்துவிடப் பல தன்னார்வலத் தொண்டர்கள் ஆர்வம் காட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த கதைகளுள் சிறந்த பத்து கதைகள் இங்கே,

1. நல்லநங்காள் கதை
2. முத்துப்பட்டன் கதை
3. சின்ன நாடான் கதை
4. சின்னத்தம்பி கதை
5. மம்பட்டியான் கதை
6. வெங்கலராசன் கதை
7. கௌதல் மாடன் கதை
8. மதுரை வீரன் கதை

9. காத்தவராயன் கதை
10. கள்ளழகர் கதை

## கதைகளின் கருத்து

பேராசிரியர் நா. வானமாமலை என்பவர் இந்தக் கதைகளை ஐந்து வகையாகப் பிரிக்கின்றார். அவர் சொல்லும் விதத்தில் சமூகத்தின் அடிப்படை தவறுகளைச் சுட்டிகாட்ட மக்கள் இந்தக் கதைகளை கையாண்டதை நம்மால் தெரிந்து கொள்ள இயலும்.

1) கலப்பு மணமும் அவற்றின் துன்பியல் விளைவுகளும். (முத்துப்பட்டன் கதை, மதுரை வீரன் கதை, சின்னநாடான் கதை)

2) சாதிய அடக்குமுறையும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த நாட்டார்களுக்கு உயர்சாதி மக்களால் விளைவிக்கப்படும் கொடுமைகளும். (சின்னத் தம்பி கதை)

3) தாய்வழி, தந்தைவழிச் சமூகக் குழுவினருக்கிடையே தாய்வழியினர் தந்தை வழியினரிடம் மணஉறவு தேடும் பொழுது ஏற்படும் சண்டைகள் (தோட்டுக்காரி அம்மன் கதை, வெங்கலராசன் கதை)

4) பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்படுதலும் அவற்றின் துன்பியல் விளைவுகளும் (நல்லதங்காள் கதை)

5) சாதி சமயக் கட்டுப்பாடுகளைக் கடந்த மனிதாபிமானம் (கௌதல மாடன் கதை)

நாட்டார்கள் என்றால் சாதியாக கருதவேண்டாம். குடிமக்கள் எனும் கருத்தில் அவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது.

## காலம்

இந்தக் கதைகளில் வருகின்ற சாதி அமைப்புகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பின்பு சில கதைகளில் சொல்லப்பட்டிருக்கும் பஞ்சம், எல்லாவற்றையும் கவனித்துப் பார்க்கையில் கதைப் பாடல்களின் நிகழ்வுக் காலம் கி.பி. 16, 17, 18 ஆகிய நூற்றாண்டுகள் எனலாம். அதாவது தமிழ் பேசும் பகுதிகளில் பாளையக்காரர் ஆட்சி முதல் ஆங்கிலேய ஆட்சி வரையிலான காலப் பகுதி உறுதிப்பட்டது.

கதைப் பாடல்களுக்கும் குலதெய்வ வழிபாட்டிற்கும் நிறைய சம்மந்தம் இருக்கிறது. இதில் வரும் மதுரை வீரன் கதையை காணும் போது சிலருடைய குலதெய்வம் மதுரை வீரன் என நினைவிலே கொள்ள வேண்டும். இந்தக் கதையில் திருமலை நாயக்கர் என்றொரு பாத்திரம் வருவதால் அதன் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்கின்றனர்.

## கதை நாயகர்களின் காரணம்

கி.பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்பேசும் பகுதிகளைப் பல இனத்தினர் கொள்ளைக் காடாகப் பயன்படுத்தினர். நாயக்கர்கள் முசுலீம்கள், மராத்தியர், கன்னடியர், டச்சுக்காரர், போர்ச்சுகீசியர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் ஆகிய இனங்களின் கொள்ளை இடும் பகுதியாகத் தமிழகப் பகுதி இருந்தது. எங்கு நோக்கினும் களவு, கொள்ளை, லஞ்சம், வழிப்பறி ஆகியவை நடந்தன. பஞ்சமும் வாட்டியது. இவற்றால் அதிகம் பாதிக்கப் பட்டவர்கள் தமிழ்நாட்டின் தென்பகுதி மக்களே. அதிலும் அடிநிலை மக்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்குச் சமூகத்தில் நிரந்தர இடமும் இல்லை, பாதுகாப்பும் இல்லை.

சமூகத்தில் பாதுகாப்புத் தன்மை குறைந்த காலத்தில் இத்தகைய பாத்திரங்கள் ஒருவேளை மக்களைக் கவர்ந்திழுத்திருக்கலாம். நிலவுடைமை வர்க்கம் இந்தச் சமூக மரபு மீறலாளர்களைக் கொன்று விடுகிறது. இத்தகைய சோக முடிவு இவர்களை மக்கள் கண்முன் நாயகர்களாக நிறுத்துகிறது. எனினும் இத்தகைய சோக முடிவு மட்டுமே சமூகக் கதைப்பாடல்களின் ஆக்கத்திற்குக் காரணமாக அமைந்துவிடவில்லை. இவர்களின் சமூக மரபு மீறல் சமூகப் பாதுகாப்பற்ற அடித்தட்டு மக்களைக் கவர்கின்றது. அன்னாரின் முனுமுனுப்புக் குரல்கள் மக்களை ஈர்க்கின்றன. எத்தனையோ பேர் கொல்லப்பட்டுச் சோக முடிவுக்குள்ளாகும் பொழுது இல்லாத பற்று இவர்கள் சோக முடிவு அடையும் போது இவர்கள் மீது வருவதற்குக் காரணமே அந்த ஈர்ப்பாக இருக்கலாம். நம்மால் செய்ய இயலாத ஒன்றைச் செய்த இம்மரபு மீறலாளர்களை ஏற்றுக் கொள்ளும் மக்கள் இவர்களைக் கதைத் தலைவர்களாக்கிப் பாடல் வடிவில் உயர்த்திப் பீடிக்கின்றனர்.

## அதிகம் நடந்த பகுதிகள்

பேராசிரியர் வானமாமலை வகைப்படுத்தியுள்ள சிக்கலைக் கருவாகக் கொண்ட சமூகக் கதைப் பாடல்கள் தோன்றியதற்கான காரணம், கி.பி. 16, 17,

18-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகச் சீர்கேடுகளே ஆகும். தமிழகத்தின் தென்பகுதியான மதுரை, நெல்லை, இராமநாதபுரம் பகுதிகளிலேயே இச்சீர்கேடுகள் அதிகமாக நடைபெற்ற காரணத்தால் சமூகக் கதைப்பாடல்களும் இப்பகுதிகளிலேயே அதிக அளவில் தோன்றி மக்களிடையே பரவியுள்ளன எனலாம்.

## முத்துப்பட்டன் கதைப்பாடல் கதைச்சுருக்கம்

முத்துப்பட்டன் அழகன், வீரன், ஆளுமைமிக்கவன். ஆரிய நாட்டில் அந்தணன் ஒருவனுக்கு எட்டாவது பிள்ளையாகப் பிறந்தான். இளமையில் கலைகள் பலவும் கற்றான். பெற்றவர்களும் உடன்பிறந்தவர்களும் வாய்மைக்கு மாறாக வாழ்ந்தது பொறுக்காமல் அவர்களைப் பிரித்து கொட்டாரக் கரைக்குச் சென்றான்.

கொட்டாரக் கரையை ஆண்ட இராமராசன் என்ற மன்னன் முத்துப்பட்டன் திறமையை அறிந்து அரசுப் பணியில் அணிகளை அமர்த்திக் கொண்டான். தம்பியைத் தேடி வந்த அண்ணன்மார் விரும்பிய வண்ணம் மன்னனிடம் விடைபெற்றுச் சொந்த ஊருக்குச் சென்றான்.

அரசடித்துறை என்ற இடத்தில் பாட்டிசைத்துக் கொண்டிருந்த பானையர் இருவரைக் கண்டு காதல் கொண்டான். தாங்கள் சக்கிலிய இனப்பெண்கள் எனக் கூறி காதலை மறுத்தனர் பொம்மக்காவும், திம்மக்காவும், முத்துப்பட்டனின் உண்மைக் காதலை உணர்ந்த அப்பெண்ணின் தந்தை வாலப்பகடை கொல்லவந்த மாடறுக்கும் கத்தியை கீழே எறிந்து சில நிபந்தனைகளை விதித்தான். சக்கிலியப் பெண்களை மணக்க விரும்பிய பட்டனை அண்ணன்மார் சூழ்ச்சிகள் செய்தனர். அச்சூழ்ச்சியில் இருந்து மீண்டான் முத்துப்பட்டன்.

தன் சாதிக்குரிய அடையாளமாகிய பூநூல் குடுமியை அறுத்தெறிந்தான். செருப்பைத் தைக்கவும் கற்று வாலப்பகடையிடம் நிருபணம் செய்து அவ்விரு பெண்களையும் மணந்தான். மண நாளன்றே வாலப்பகடையின் பசுக்களை கர்ந்த வன்னியர் பத்துபேரை வீழ்த்தினான். குருதிக் கறையைக் கழுவ ஆற்றில் குளித்தபோது மறைந்திருந்த பகையன் ஒருவனால் குத்தப்பட்டான். தம்மைக் குத்தியவனைக் கொன்று பின் உயிர் துறந்தான். முத்துப்பட்டன் இறந்ததைக் கண்ட மனைவியர் மீளாத்துயரத்தில் சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் அனுமதி பெற்று உடன்கட்டை ஏறினர்.

## காத்தவராயன் கதைப்பாடல்கள்

இக்கதை அக்காலச் சமூகத்தில் சாதியம் எவ்வாறு இருந்தது என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது. காத்தவராயன் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன். ஒரு பிராமணப் பெண் அவனைக் காதலித்துப் பின் தொடர்ந்தாள். அவன் தன்னைத் தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லிய பின்னும் அவள் அவனையே மணந்து கொள்ள உறுதியாக இருந்தாள். இவர்கள் திருமணம் செய்து கொள்ளச் சமூகச் சட்டங்கள் இடம் கொடுக்கவில்லை. எனவே, இருவரும் வேறு நாட்டிற்குச் சென்று சேரியில் வாழ்ந்து வந்தனர். பிராமணர்கள் சமுதாயம் ஒழுக்கம் கெட்டுவிட்டதென அரசனிடம் முறையிட்டனர். மனுதர்மம் அழிந்து விட்டதென ஓலமிட்டனர். அரசன் காத்தவராயனின் தந்தையை அழைத்துக் காத்தவராயனைப் பிடித்து கொணர்ந்து கழுவேற்றும்படிக் கட்டளையிட்டான்.

காத்தவராயன், அவனுடைய தந்தை தேடிவந்த பொழுது சிலவேறு சாதிப் பெண்களை மணந்து வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய தந்தை தனது குடும்பம் அழிந்து விடும் என்று முறையிட்டுக் காத்தவராயனைக் கழுவேறச் சம்மதிக்கச் செய்து அழைத்து வந்தான். காத்தவராயன் தான் செய்தது நியாயமென்றே வாதிட்டான். மனம் ஒத்தவர்கள் மணம் செய்து கொள்வது நியாயம் என்று கூறினான்.

அரசனும் பல சாதிகளில் பெண்களை மணந்தவன். ஆதலால் காத்தவராயனது கருத்தை ஒப்புக்கொண்டான். ஆனால், பிராமணர்களும், காத்தவராயனது மற்ற மனைவியர்களின் சாதிப் பெரியவர்களும், அவன் செய்த குற்றம் மிகப் பெரியதென்று கூறி அவனைக் கழுவில் ஏற்ற வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். அரசனும் கழுவேற்ற அணையிட்டார். இதன் பின்னர், கதை புராணப் போக்கில் செல்கிறது. இவ்வாறு கழுவேறிச் சாக வேண்டும் என்ற சாபம் அவனுக்கிருந்தது என்று ஒரு முற்பிறப்புக் கதை புனையப்பட்டுள்ளது.

அச்சாபம் அவனுக்குச் சிவபெருமானால் அளிக்கப்பட்டது. சில கணங்களுள் ஒருவனாகக் கைலாயத்தில் இருந்த காத்தவராயன் தேவமாதர் மீது ஆசை கொண்டான். இதையறிந்த சிவன் அவனை இவ்வுலகில் பிறந்த அவர்களை மணந்து பின் கழுவேறிச் சாக வேண்டும் என்று சபித்து விட்டார். இச்சாயத்தின் விளைவாகக் காத்தவராயனின் இரண்டாம் பிறப்பு நிகழ்ச்சிகள் கதை நிகழ்ச்சிகள் நடைபெற்ற சிறிது காலத்துக்குப்பின் கற்பனை செய்யப்பட்ட

புனைக்கதை, கதைப்பாடல்கள் தமிழக வரலாற்றை அறிவதற்குத் துணைபுரிகின்றன. அத்துடன் மக்கட் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளைக் கதைப்பாடல்கள் உணர்த்துகின்றன. முக்கியமாகச் சாதிக் கட்டுப்பாடுகள் உயர்ந்த வர்க்கத்தினரால் மிகவும் வலியுறுத்தப்பட்டன. திருமண நிகழ்ச்சியில் சாதி பெரும் இடத்தை வகித்திருக்கிறது. கலப்புத் திருமணங்கள் ஆதரிக்கப்படவில்லை. சாதிக்கட்டுப் பாடுகளை மீறியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். முத்துப்பட்டன் கதையில் சாதிக் கட்டுப்பாட்டை மீறிய முத்துப்பட்டன் கொலை செய்யப்படுகிறான். காத்தவராயன் கதையில் காத்தவராயன் கழுவிலேற்றப்படுகிறான்.

## புராண இதிகாசக் கதைப்பாடல்கள்

புராண இதிகாசங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கதையைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே புராணக் கதைப்பாடல் என்று பார்த்தோம். இக்கதைப்பாடல்கள் கிராமப்புற விழாக்களில் இரவு நேரங்களில் கூத்துகளாக நிகழ்த்தப்பட்டதாகவும், பாடப்பட்டதாகவும் குறிப்புகள் கிடைக்கின்றன. எனவே புராணத்திற்கும், இக்கதைப் பாடல்களுக்கும் பாடுபொருள் ஒன்றாக இருப்பினும் பாடுகளம் வேறாக இருக்கின்றது. கிராமங்களைப் பாடுகளமாகக் கொண்ட புராணக் கதைப்பாடல்களின் அமைப்பையும் கருக்கத்தையும் காண்போம்.

## வரையறை

புராணங்களில் வரும் கதை நிகழ்வுகளையும் பாத்திரங்களையும் மட்டுமே கொண்டு விளங்குவது புராணக் கதைப்பாடல்களாகும். இவை மகாபாரதம், இராமாயணம் மற்றும் புராணங்களிலிருந்து உள்ளடக்கத்தில் வேறுபடவில்லை. சிவ புராணம், விஷ்ணு புராணம், பாகவத புராணம் போன்றவற்றிலிருந்து கதை நிகழ்வுகளையும் பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டுள்ளதை விட மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களிலிருந்தே கதை நிகழ்வுகள் அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## புராணச் சார்புக் கதைப்பாடல்

இதிகாசங்களில் காணப்படும் ஒரு சிறந்த சிறு நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு பரந்த அளவில் கற்பனை கலந்து பாடலாகப் புனைந்து எழுதப்பட்ட கதைப்பாடல்கள் புராணம் சார்புக் கதைப்பாடல்களாகும். பெரும்பாலான புராணக் கதைப்பாடலின் கதைக் கருக்களே இவற்றுக்கும் மூலக் கருத்துகள் ஆகும்.

புராணக் கதைப்பாத்திரங்களுடன் யதார்த்தத்தில் உள்ள புவியியல் பகுதிகளும் மன்னர்களும் கற்பனை மனிதர்களும் இவற்றில் இடம் பெறுவது உண்டு.

இவ்விரு வரையறைகளிலிருந்தும் தெரிய வருவது இரண்டிற்கும் அடிப்படைக் கருக்கள் பெரும்பாலும் இதிகாசக் கதைகளே என்பதுதான். இக்காரணங்கருதியே புராணக் கதைப்பாடலும் புராணச் சார்புக் கதைப்பாடலும் "புராணக் கதைப்பாடல்" என்ற பிரிவிற்குள்ளேயே வகைப்படுத்தப்பட்டிருக்கலாம். இந்த அடிப்படையிலேயே இங்கும் பாடம் விரித்துரைக்கப்படுகின்றது.

## அமைப்பு

அனைத்து வகையான கதைப்பாடல்களும் பொதுவாக ஒரே புற அமைப்புடையனவாகக் காணப்படுகின்றன. பொதுவாக இறை வணக்கம், காப்பு அவையடக்கம், நாட்டு வருணனை, நகர வருணனை, கதை, வாழி என்னும் அமைப்பில் அமைந்து காணப்படுகின்றன. சில கதைப்பாடல்களில் சற்று வேறுபட்டு முன்னுள்ளது பின்னாகவும் பின்னுள்ளது முன்னாகவும் அமைந்துள்ளன. கதைப்பாடல்களின் அமைப்புப் பற்றிய விளக்கம் முதற் பாடத்திலேயே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இங்கே நினைவூட்டும் வகையில் ஒன்றிரண்டு கருத்துகளைக் காணலாம்.

பவளக் கொடி மாலையின் தொடக்கம் கலிவிருத்தத்தாலான காப்புச் செய்யுளாக உள்ளது.

> "சோக வாரியி னால்வருந் துன்பமும்
>
> போக ஆனை முகவளைப் போற்றுவாம்"

என்று வரும் முதல்பாடல் இறைக்காப்பை இனிது வேண்டுகிறது.

காப்புப் பாடலைத் தொடர்ந்து விநாயகர் துதி, கலைமகள் துதி, துரோபதை துதி ஆகியவை பாடப் பெறுகின்றன. வருணனைப் பகுதிகள் விரிவாகவும் பலவிதமான சிறப்புச் செய்திகளைத் தாங்கியும் வந்துள்ளன. மின்னொளியாள் குறம் கதைப்பாடலில் வரும் வருணனைப் பகுதி பின்வருமாறு.

> "நும்பசையத் தேன் சொரியும் சோழன் திருமடந்தை
>
> சேற்றால் மடை அடைத்தால் செல்வம் குறையுமென்று

பணத்தால் மன அடைந்தூம் பாசி பீடிக்குமென்று

சோற்றால் மடை அடைக்கும் சோழன் திருமடந்தை''

இவ்வருணனைப் பகுதி மிகையாகவும் புதுமையாகவும் இருப்பதைக் காணலாம். இவை கதைப்பாடல்களுக்கு உரிய இயல்புகள் ஆகும். இதே போன்று மதுரை நகர் பற்றியும் விரிவான வருணமனை அல்லியரசாணி மாலை கதைப்பாடலிலும் உள்ளது. பொதுவாகப் புராணக் கதைகளின் தொடக்கம் மக்களைக் கவரும் வண்ணத்தில் அமைந்து காணப்படுகின்றன. அல்லி அரசாணி மாலையின் கதையின் தொடக்கம் அருச்சுனனின் பெருமைகளை விரித்துக் கூறுகின்றது.

சான்று:

``நாரார் நனஞ்செயனார் தர்மருக்கு நேரிளையோன்

போரானை வென்ற போர் விமனுக் கிளையோன்

ஆனாலழகு மன்னன் அர்ச்சுன சுவாமியவன்

தோளாலழகன் தொய்வில்லாப் புகழ்வீரன்

மெட்டானவில்லி விசையன் பெருமாள் காண''

என்று அருச்சுனனின் பெருமைகளைத் தொடக்கமாகப் பறை சாற்றுகின்றது. கதைப்பாடல் இதுபோன்ற கவர்ச்சியான தொடக்கத்தால் மக்கள் கவரப்படுகின்றனர். கதையைக் கவனிக்கத் தலைப்படுகின்றனர். இதுதான் ஒரு படைப்பாளியின் வெற்றி எனக் கொள்ள முடியும்.

புராணக் கதைப்பாடல்களின் முடிவும் மங்களகரமாகவே முடிகின்றது. தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்ட புராணக் கதைப்பாடல் கதைப்பாத்திரங்கள் கதை முடிவில் உயிர் விடுவது இல்லை, எனவே எல்லாப் புராணக் கதைப்பாடல்களும் மங்களமான முடிவையே கொண்டு அமைந்துள்ளன.

கதையை நிறைவு செய்த பின்னர் கதை ஆசிரியர்கள் வாழ்த்துப் பாடல் பாடிச் சேர்த்துள்ள நிலையைப் பெரும்பான்மையான கதைப் பாடல்களில் காண முடிகின்றது. அவ்வாழ்த்துப் பாடலில் எல்லாத் தெய்வங்களும் வாழவேண்டும் என்றும் கதையைக் கேட்டோர். படித்தோர் அனைவரும் சுகவாழ்வு வாழ

வேண்டும் என்றும் எல்லாக் கவலைகளும் தீரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். இதனை ‘‘வாழி பாடுதல்’’ என்று கூறுவர்.

‘‘இந்தக் கதை தன்னை இவ்வுலகிற் கேட்டவர்கள்

கேட்டோர் கிளை தழைத்துக் கீர்த்தியுடன் தாம்வாழ்க’’

## பழமொழிகள்

மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. நினைப்பிற்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருவவை என்பதைப் பழமொழியிலுள்ள மொழி என்னும் சொல் உறுதிப்படுத்துகிறது. சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக்கூறுகளையும் விளக்கும் சான்றாகப் பழமொழிகளும் விடுகதைகளும் திகழ்கின்றன. தமிழில் பழமொழிக்கு மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுச்சொல், பழஞ்சொல் என ஆறுபொருள் இருப்பதாகச் சேந்தன் திவாகரம் கூறுகின்றது. மேலும் மலையாளத்தில் ‘‘பழஞ்சொல்’’ என்றும் தெலுங்கில் ‘‘நாதுடி’’ என்றும், கன்னடத்தில் ‘‘நாண்ணுடி’’ என்றும், ஆங்கிலத்தில் 'proverb' என்றும் அழைக்கின்றனர். தமிழ் இலக்கண இலக்கியங்ககளை ஆராய்ந்தால், பழமொழியைக் குறிக்க முப்பத்தினான்கு சொற்கள் இருப்பதாக டாக்டர் வ. பெருமாள் குறிப்பிடுகிறார். பழகுமொழி, தொன்னெறி மொழி, முதமொழி, முதுசொல், தொன்றுபடு கிளவி, தொன்றுபடு பழமொழி, பழமொழி, வாய்மொழி, அறம், நெடுமொழி, பல்லவையோர் சொல், பண்டைப் பழமொழி, சொலவு, மூதுரை, பழஞ்சொல், மூத்தோர் சொல் வார்த்தை, வழக்கு, உரை, பழைய நெறியனாய் வரும் சொல். பலவார்த்தை, உலகமொழி, உபகதை, சுலோகம், சொலவடை, வசனம், எழுதா இலக்கியம், வாய்மொழி இலக்கியம், எழுதாக் கிளவி, வாய்மொழி இலக்கியம், கேள்ளி, சருத நீதிமொழி, மொழிமை, முதுமை, முன்சொல் என்பனவாம். அனுபவ முதிர்ச்சியிலே பிறந்த பழமொழிகள் சுருக்கம், தெளிவு, பொருத்தம், ஆகிய இயல்புகளால் மாறாத அமைப்புடன் (fixed phrase genre) பயின்று வருகின்றன.

பழமொழி என்ற சொல்லே பழமொழி என்ற சிறந்த வரையறையாக அமைந்துள்ளது என்கிறார் ஜான் லாசரஸ் அவர்கள். பழமொழி என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கி கூறுவது ஆகும். அப்பழமொழி முழுமையாக இல்லாவிடினும் அதை விளக்கிக்

கூறும்போது முழுக்கருத்தும் வெளிப்படும் என்கிறார் துர்கா பகவத் அவர்கள். ரிச்சார்ட் டார்சன் அவர்கள் பழமொழியானது எளிதில் கவனிக்கக்கூடிய சேர்க்கக்கூடிய தொன்மை வாய்ந்த கருத்தாகும். இருப்பினும் எளிதில் புரிந்துகொள்ளக் கடினமானது என்கிறார். ஜான் ரஸ்ஸல் அவர்கள் பழமொழி பலரின் அறிவையும் ஒருவரின் உண்மைத் தன்மையையும் உணத்துவனவாகும் என்கிறார். எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளைச் சிறு வாக்கியத்தில் வெளிப்படுத்துவன பழமொழிகள் என ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி எடுத்தியம்புகின்றது.

பழமொழி என்ற சொல்லே மிகப் பழமையானவற்றை உணர்த்துவதாகும். பலரது அறிவையும் ஒருவரது நுண்ணுணர்வையும் எனலாம். பழமொழிகள் மக்களது வாழ்வுடன் பழமொழி மூலம் மக்களது பண்பாட்டையும் சமூகத்தின் அனைத்து நிலைகளிலுமுள்ள அறியமுடியும் அறிவின் சுருக்கமே பழமொழி வாழ்வாகப் பின்னிப்பிணைந்துவிட்டன. நாகரிகத்தையும் அறிந்துகொள்ளலாம். மக்களின் பண்பாட்டை அறியத்துணை புரிகிறது. பொருட் செறிவும் ஆழ்ந்த கருத்துக்களும் நிரம்பிய சொற்றொடர்கள் பழமொழி என்ற குறியுடன் நின்று நிலவுகின்றன. பழையமொழி பழமொழி. அது பழமையும் எளிமையும் இனிமையும் வாய்ந்தது. பழமொழிகள் அறவுரையையும் அறிவுரையையும் கொண்டிலங்குவதோடு வாழ்க்கைக்குக் கைவிளக்காகவும் பயன்படுகின்றன. வாழ்க்கை அனுபவ அடிப்படையில் எழுந்த குறுகிய அமைப்புடையது என்கிறார் ஜெர்மன் நாட்டுப் பேரறிஞர் செல்வந்தே அவர்கள் பழமொழி ஒரே மூச்சில் சொல்லக்கூடியதாகவும் சுருக்கமாகவும் செறிவாகவும் கூர்மையாகவும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்கிறார். இவன் கூறும் வரையறை ஏறத்தாழ தொல்காப்பியர் கூறும் வரையறை போன்று உள்ளது எனலாம்.

## பழமொழியும் தமிழ் இலக்கியங்களும்

தொல்காப்பியர் பழமொழியை “முதுசொல்’’, “முதுமொழி’’ என்று குறிப்பிடுகிறார்.

‘‘அங்கதம் முதசொலோடு அவ்வேழ் நிலத்தும்” (தொல்.செய்.391)

‘‘ஏது நுதலிய முதுமொழி என்ப” (தொல்.165)

எனத் தொல்காப்பியர் பழமொழிக்கு விளக்கம் தருகிறார்.

‘‘நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மை என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி’’

கருதிய பொருளை விளக்கும் வகையில் நுண்மை, சுருக்கம், தெளிவு, மென்மை ஆகிய இயல்புகளுடன் பழமொழி விளங்கும். தொல்காப்பியர் நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய இயல்புகளுடன் குறிப்பிட்ட பொருளைக் காரணத்துடன் உணர்த்த வல்லது பழமொழி எனப் பழமொழிக்கு வரையறை செய்கிறார். ஒரு கருத்தை உணர்த்துவதும் அக்கருத்து காரணத்துடன் அறிவுக்கு ஏற்றதாகவும் நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை உடையதாகவும் இருக்க வேண்டும். ‘‘கூரியதாய்ச் சுருங்கி விழுமியதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளை முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழி என்ப” எனப் பேராசியர் விளக்கம் தருகிறார்.

தொல்காப்பியர் பழமொழியை “முதுமொழி, முதுச்சொல்’’ என்ற பெயரால் அழைக்கிறார். இளங்கோவடிகள் “நெடுமொழி’’ என்று அழைக்கிறார். திருவெம்பாவை “பழஞ்சொல்” என்றும் குமரேச சதகம் ‘‘உலகமொழி’’ என்றும், கொன்றை வேந்தன் “மூத்தோர் சொல்’’ என்றும் அழைக்கின்றன. கம்பரும் பழமொழியை “மூதுரை’’ என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். கி.பி 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நச்சினார்க்கினியார் பழமொழியை “பழம் வார்த்தை’’ என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். கி.பி 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த படிக்காசுப் புலவர் “பழமொழி’’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அதே நூற்றாண்டில் வாழ்ந்த முத்தப்ப செட்டியார் பழமொழியை “பழமைச்சொல்’’ என்று குறிப்பிட்டுள்ளார். பார் புகழும் பாரதி பழமொழியைத் தனது பாடல்களில் புகுத்திப் பாடியுள்ளார். பழமொழியைச் சுருக்கியும் கருத்தை விரிவாக விளக்கியும் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் காலந்தொட்டு இலக்கிய வழக்கில் பயின்று வந்ததை அறிகிறோம்.

## பழமொழி வகைப்பாடு

சுமித் அவர்கள் பழமொழிகளை ஏழு பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்.

1. உவமைத் தன்மையன
2. கேலித் தன்மையன
3. சிலேடைத் தன்மையன
4. மரபுத் தொடர்கள்
5. சொற்றொடர்கள்
6. விடுகதைத் தன்மையன
7. ஒலி இயைபின

ஆப்ரஹாம் அவர்கள் பழமொழிகளை நான்கு வகைகளாகப் பாகுபடுத்துகிறார்.

1. நேர்சம மதிப்பு (Positive equivalence) - காலம் பொன்னானது.
2. எதிர்மறை சமமதிப்பு (Negative equivalence )ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை.
3. நேரடி காரணக் காரியத் தொடர்பு (Positive ausational) - பதறிய காரியம் சிதறிப் போகும்.
4. எதிரிடை காரணக் காரியத் தொடர்பு (Negative causational)

பிரௌனே அவர்கள் பழமொழியை இரண்டாக வகைப்படுத்துகிறார்.

1. இலக்கியப் பழமொழி (Literary)
2. இலக்கியமில்லாப் பழமொழி (Non Literary ) அல்லது மரபுப் பழமொழி

டாக்டர் சு.சக்திவேல் அவர்கள் தமிழ் பழமொழிகளை ஐந்து வகையாக வகைப்படுத்துகிறார்.

1. அளவு அடிப்படை (Size basis)
2. பொருள் அடிப்படை (Subject basis)

3. அகரவரிசை அடிப்படை (Alphabetical basis)

4. அமைப்பியல் அடிப்படை (Structural basis)

5. பயன் அடிப்படை (Functional basis)

டாக்டர் க. சாந்தி அவர்கள் தமிழ்ப் பழமொழிகளை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கின்றார்.

1. உருவத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்
2. பொருளை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்

## பழமொழியின் நன்மை

தினந்தோறும் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டே பழமொழியாகும். அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தவை, அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம். வாழ்க்கையில் உயிர்ப் பண்பும் அறிவுப் பண்பும் பழமொழிகளில் கருவாக அமைந்து வாய்மொழி இலக்கியங்களில் சிறந்ததொன்றாகக் கருதப்படுகின்றது. சிந்தனை ஆற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணையாக உள்ளது. தமிழ்ப் பழமொழிகளைத் தமிழ் மக்களின் அறிவுக் களஞ்சியம் என்றே கூறலாம்.

பழமொழி செய்யுளிலும் உரைநடையிலும் அமைந்துள்ளது. செய்யுளுக்குரிய எதுகை, மோனை, இயைபு முதலியவற்றை இவற்றில் காணலாம். பழமொழி கூறப்படும் சூழலையொட்டிப் பொருள் வேறுபடுவதும் உண்டு. சில பழமொழிகள் கதைகளின் சாறு ஆகும். எனவே தான் பழமொழிக்குத் தஞ்சை மாவட்டத்தில் “உபகதை” என்றும் இராமநாதபுர மாவட்டத்தில் “ஓவத்தை” என்றும் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது. பழமொழிகள் பெரும்பாலும் உவமைகளாகவும் சிலேடைகளாகவும் சொற்றொடர்களாகவும் மரபுத் தொடர்களாகவும் கேலித் தன்மையினவாகவும் விடுகதைத் தன்மையினவாகவும் அமைந்திருக்கின்றன. பழமொழியும் விடுகதையும் நிலைத்த தொடர் அமைப்புடையவாகும் (Fixed phrase genre), பழமொழி அது வழங்கும் சூழலை பொறுத்தே அமையும். வழங்கும் இயற்கைச் சூழலைப் பொறுத்தே நேர் பொருளை உணர்த்துவதோடு பழமொழி தற்சார்பற்றதாகும்.

பழமொழிகள் பொதுவான (Universal) அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மக்களிடையே வழக்கில் உள்ளனவாக இருக்க வேண்டும். அளவில் சிறியவையாக இருக்க வேண்டும். நன்மதிப்பு (Moral value) உடையவையாக இருக்கவேண்டும். இயற்கையிலே உருவகம் அமைந்தவையாக இருக்கவேண்டும். மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிப்பனவாகவும் உணர்த்தக் கூடிய கருத்தின் அடிப்படையிலும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் மிகவும் புகழப்பட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவும் இருக்க வேண்டும்.

## பழமொழியின் அமைப்பு

பழமொழிக்கு இருசொற்கள் இருந்தே தீர வேண்டும். இதனைத்தான் ஆலன் டாண்டிஸ் தலைப்பு முடிபுரை பெற்றிருக்க வேண்டும் என்கிறார். இதன் மூலம் ஒரு சொல் பழமொழிக்கு வாய்ப்பில்லை என அறிகிறோம்.

தலைப்பு:

அழுத பிள்ளை : பால் குடிக்கும்

அதிக ஆசை : அதிக நஸ்டம்

காய்த்த மரம் : கல்லடி படும்

## பழமொழியின் கருப்பொருள்

உலகில் காணப்படும் அனைத்துப் பொருட்கள் பற்றியும் பழமொழி பேசுகின்றது. பழமொழி தொடாத பொருளே இல்லை எனலாம். பழமொழியில் காணப்படும் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மனித சமுதாயத்தில் காணப்படும் நம்பிக்கை, பழக்கவழக்கங்களையும் பழமொழி விளக்குகின்றது. மனித சமுதாய வரலாற்றை விளக்கும் வாயிலாகவும் உள்ளது.

# விடுகதைகள்

## விடுகதை - அறிமுகம்

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது. மறை பொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். விடுகதை என்னும் சொல்லுக்குப் புதிர்மைப் பண்புடையது என்றும் விடுவிக்கப்பட வேண்டிய

பொருள் கதையாக அமைந்துள்ளது என்றும் தெளியலாம். வினா எழுப்பும் வகையாகவும் விடையிறுக்கும் தன்மையாகவும் விடுகதைகள் உள்ளன. தமிழிலே புதிர்ப்பண்பை அடிப்படையாகக் கொண்டு அறிவு ஊட்டுவதும் சிந்தனையைத் தூண்டுவதும் விடுகதையின் குறிக்கோளாகும். கதைக்கு ஆதாரமாகவும் செய்யுளுக்கு உயிராகவும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் உள்ளது. பெரியோர்களும் சிறியோர்க்குமிடையே தொடர்பை ஏற்படுத்துகிறது. விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும்.

விடுகதையால் கூறுபவனின் உளப்பான்மை வளர்கிறது ஆர்வத்தினின்றும் விடுதலை கிடைக்கிறது. சிறியோர்க்கும் பெரியோர்க்கும் தொடர்பை ஏற்படுத்துகிறது. கனவு மனிதனது அடிமன உணர்வுகளுக்கு வெளியீடு தருவதுபோல விடுகதைகளும் வெளியீட்டிற்கு உதவி வருகின்றன எனக் 'கார்லோசு' கூறுகிறார். சில விடுகதைகள் கதையைப் போலவே விரிவாக இருக்கும். சின்னச்சின்ன விடுகதைகட்குப் புதிர் என்ற பெயரே மிகவும் பொருந்தும். கதைபோல் வருவனவற்றதை விடுகதை என்று குறிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என நாட்டுப்புறவியல் அறிஞர் கி.வா.ஜ. கூறுகிறார்.

விடுகதையின் வரலாறு தொல்காப்பியத்தில் தொடங்கி இன்றுவரை தொடர்கிறது. இனிமேலும் தொடரும் உரையாசிரியர்கள் விளக்கம் தந்தனர். இடைக்காலப் புலவர்கள் விடுகதைப் புலவர்கள் செய்யுள் வடிவில் பாடினர். இருபதாம் நூற்றாண்டில் விடுகதைகளைத் தொகுக்க ஆரம்பித்தனர். தற்போது விடுகதைகளைப் பற்றி ஆய்வே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தொல்காப்பியர் யாப்பு முறையைக் குறிப்பிடும்போது விடுகதை பற்றியும் குறிப்பிடுகிறார்.

"பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்மொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்" (செய்யுளியல்-79)

அடிவரையில்லாத ஆறுவகை யாப்பினையும் தொல்காப்பியர் உரைக்கிறார்.

"நூலி னான உரையி னான

நொடியோடு புணர்ந்த பிசியி னான

ஏது நுதலிய முதுமொழி யான

மறைமொழி கிளந்த மந்திரத் தான

கூற்றிடை வைத்த குறிப்பி னான” (செய்யுளியல் - 169)

இவற்றில் பிசி என்பது விடுகதையாகும்.

“ஒப்போடு புணர்ந்த உவமத் தானும்

தோன்றுவது கிளர்ந்த துணவி னானும்

என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே”

உவமையாக அமைவதும் தெளிவுபட வருவதும் என விடுகதை இருவகையில் அமையும் என்கிறார் தொல்காப்பியர். விடுகதையை விளக்கியவர் தொல்காப்பியரே ஆவார்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் உவமை விடுகதைக்கு கீழ்க்கண்ட சான்றைத் தருகிறார்.

“அச்சுப்போல பூப்பூக்கும்

அமலேயேன்னக் காய்காய்க்கும்”

பேராசிரியர் மூன்று விடுகதைகளும் தந்து அவற்றிற்கு விடையும் தருகிறார். விடுகதைகளைத் தொகுத்தவர்களில் பேராசிரியரே முதல்வராவார்.

“பிறை கவ்வி மலை நடக்கும் யானை

முத்துப்போல் பூத்து

முதிரில் களாவண்ண

நெய்த்தோர் குருதி

நிறங்கொண்டு வித்துதிர்த்து” – கழுகு.

“நீராடான் பார்ப்பான்

நிறஞ்செய்யான் நீராடின்

ஊராடு நீரிற் காக்கை” - நெருப்பு

தமிழில் பிசி, நொடி, புதிர், விடுகதை என்றும் வழங்கப்படுகின்றன. விடுகதை என்ற சொல்லாட்சி பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணப்படவில்லை. இச்சொல்லாட்சி எக்காலத்துப் புகுந்தது என்பதற்குச் சான்றில்லை. பிசி என்ற சொல்லே பின்னாளில் பிதிர் என்றாகிப் பின் புதிர் என்றாகியிருக்க வேண்டும். கிராம மக்களின் அன்றாடப் பேச்சில் குறுகிய காலத்தில் கூறத்தகாதவாறு சுருங்கிய அமைப்புடையது என்ற கருத்தில் நொடி என்ற சொல் கையாளப்பட்டிருக்க வேண்டும். திருச்சி, தென்னார்காடு, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் வெடி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் விடுகதையை அழிப்பாங்கதை என்கிறார்கள். ஒருவர் விடுகதை போட, மற்றவர் அதனை விடுவித்துவிட்டால் அவர் அதனை அழித்துவிட்டார் என்று பொருளாகும். எனவவே அழிப்பாங்கதை என்கிறார்கள். கதையில் ஏற்படும் சிக்கலை, புதிரை அவிழ்த்தல் என்ற பொருளில் அழிப்பாங்கதை எனக் கூறுவாருமுளர். பேச்சு வழக்கில் விடுகதை என்றும் இலக்கிய வழக்கில் புதிர் என்றும் கொள்ளலாம்.

உலகில் பல்வேறு மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி பற்றி இங்குக் காண்போம். அவ்வம்மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி அதன் தன்மையை விளக்குவது போல் காணப்படுகின்றது.

**தமிழ்**

நொடி

புதிர்

விடுகதை

வெடிபோடுதல்

அழிப்பாங்கதை

**தெலுங்கு**

விடிகதா

பொதபுக்கலு

**கன்னடம்**

ஓட்கதா

விடிகதா

**மலையாளம்**

விடிகதா

கடன்கதா

**வடமொழி**

பிரம்மோத்யம்

பிரஸ்னம்

கூதம்

பிரவக்லிகா

விவாத

சமஸ்யா

குடா

**மராத்தி**

உகானா

**வங்கமொழி**

பிராஹெல்இகதந்தா

**குஜராத்தி**

வரத்

**இராஜஸ்தானி**

பஹேலி

**அஸ்ஸாமி**

சதுர்

**ENGLISH :** RIDDLE

**GERMEN :** RATSEL

**GREEK :** ENIGMA

**AFRICAN :** ALO

**WESTERN COUNTRIES :** QUIZ, PUZZLE.

நாட்டுப்புறய இயலை நாட்டுப்புற இலக்கியம் என்றும் நாட்டுப்புறக்கலை, நம்பிக்கை என்றும் இரண்டு பிரிவாகப் பிரிப்பர். விடுகதை நாட்டுப்புற இலக்கியத்தின் பாற்படும். அந்த நாட்டுப்புற இலக்கியத்தையும் இரண்டு வகையாகப் பிரிப்பர். மாறும் அமைப்புடையவை என்றும் மாறா அமைப்புடையவை என்றும் பிரிப்பர். விடுகதையை மாறா அமைப்புடையவையின் கீழ் வகைப்படுத்துவர். நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்துப் பண்புகளும் விடுகதைக்கும் பொருந்தும் விடுகதைகள் அறிவுக்கு உரைக்கல்லாகவும் சிந்தனைக்குத் தூண்டுகோலாகவும் கதைக்கு ஆதாரமாகவும் உள்ளவை. கதைகளிலும் விடுகதையின் பண்பைக் காணலாம். விடுகதைகள் பழமொழிகளைக் காட்டிலும் பழமைப் பண்பு வாய்ந்தவை. பழமொழிகள் ஒரு உண்மை அல்லது கருத்து உருவகப்படுத்தப்பட்டு வருகின்றன. விடுகதை பொருளையோ அல்லது கருத்தையோ மறைத்துக் கூறுகின்றது. விடுகதையில் ஒப்புவுமைப் பண்பும் உருவக அமைப்பும் இன்றியமையாதவையாகும். உவமையும் உருவகமும் இல்லையெனில் விடுகதையே இல்லை எனலாம். பெரும்பாலான விடுகதைகளில் உவமை உருவகப் பண்பு அடிப்படையான அமைந்துள்ளன.

### விடுகதைகளின் வகைகள்

விடுகதைகளை டி. ஆப்ரகாம் அவர்களும் ஆலன் டாண்டிஸ் அவர்களும் ஒன்பது வகையாகப் பிரிக்கின்றனர்.

1. விளக்க விடுகதைகள்
2. எதிர்மறை விடுகதைகள்
3. தலைதப்பும் விடுகதைகள்
4. கதையமைப்பு விடுகதைகள்

5. உரையாடல் வகை
6. சொல் விளையாட்டு
7. நகை வினாக்கள்
8. அறிவு வினாக்கள்
9. புதிர்கள்

**தொகுப்புரை**

- அறிஞர்கள் பல்வேறு வகையான வகைகளில் நாட்டுப்புற இலக்கியங்களை வகைப்படுத்தியுள்ளனர். அறிஞர்களின் வகைப்பாடுகள் சூழல் அடிப்படையில் அமைந்துள்ளன.
- நாட்டுப்புற பாடல்கள் தாலாட்டு, தெம்மாங்கு, காதல், தொழில் பாடல்கள் ஆகிய அடிப்படைகளில் காணப்படுகின்றன.
- நாட்டுப்புறக்கதைகள் தெய்வக்கதை, அறிவுரைக்கதை, பொழுதுபோக்குக் கதை, மனிதக் கதை, தெய்வக்கதை, மிருகக்கதை, மந்திரக்கதை ஆகிய வகைகளில் காணப்படுகின்றன.
- வரலாற்றுக் கரைப்பாடல், புராணக் கதைப்பாடல், சமூகக் கதைப்பாடல் முதலிய கதைப்பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் புலப்படுகின்றன.
- நாட்டுப்புற பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள் ஆகியவற்றை பற்றி அறிய இயலுகிறது.

**அருஞ்சொற்பொருள்**

1. பிசி – விடுகதை
2. ballad – கதைப்பாடல்
3. தெம்மாங்கு – காதல் பாடல்கள்
4. உபகதை, ஓவ கதை – விடுகதை
5. வைசூரி – அம்மை நோய்

**தன்மதிப்பீட்டு வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. வாழ்வின் முன்னுரையாகக் கருதப்படுவது
   அ)தாலட்டு ஆ)ஒப்பாரி இ) காதல் பாடல் ஈ)தொழிற்பாடல்

2. ballad என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள்
   அ)கதை ஆ) பழமொழி இ) கதைப்பாடல் ஈ)நாட்டுப்புறப் பாடல்

3. கதைகளின் கருவூலம் என்றழைக்கப்படும்
   அ)இந்தியா ஆ)தமிழ்நாடு இ) மராத்தி ஈ) கிரேக்கம்

4. தொன்மங்கள் இலக்கியங்களின் ஆன்மா என்றவர்
   அ)டேவிட் கிறெய்க் ஆ)கார்ல் மார்க்ஸ் இ) ஜான் தாமஸ் ஈ)அரிஸ்டாட்டில்

5. மரியா லீச் என்பவர் விடுகதைகளை எத்தனை வகையாகப் பகுத்துள்ளார்.
   அ)5 ஆ) 4 இ) 12 ஈ)2

**விடைகள்**

1. அ) தாலட்டு
2. இ) கதைப்பாடல்
3. ஆ) தமிழ்நாடு
4. ஈ) அரிஸ்டாட்டில்
5. ஈ) 2

**பயிற்சிகள்**

1. உங்கள் ஊரில் கூறப்படும் விடுகதைகளைத் தொகுத்தெழுதுக
2. உங்கள் ஊரில் காணலாகும் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்தெழுதுக

**சிறுவினாக்கள்**

1. கதைப்பாடல்களின் வகைகளை எழுதுக.
2. பழமொழியின் தன்மைகளை அறிந்து விளக்குக.
3. நாட்டுப்புற விடுகதைகள் அமையும் பாங்கினை விளக்குக

**நெடுவினாக்கள்**

1. நாட்டுப்புற பாடல்கள் மற்றும் அவற்றின் வகைகளை விளக்கி கட்டுரை வரைக

2. புராணங்களில் காணலாகும் அமைப்பியல் கோட்பாட்டை விளக்குக.

**இணைய இணைப்புகள்**

1. www.tamilheritage.org<http://www.tamilheritage.org>
2. books.tamilcube.com
3. www.ulib.prg<http://www.ulib.prg>.
4. books.tamil cube.com

**பாடம் தொடர்பான நூல்கள்**

1. கதைப்பாடல்களும் சமுதாயமும், 1981, கோ. கேசவன்,தோழமை வெளியீடு, கும்பகோணம்.
2. கதைப்பாடல்களின் இயல்புகள், தே. லூர்து.
3. தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவுகள், 1971. நா. வானமாமலை

**பாடக்குறிப்பிற்கு உதவிய புத்தகங்கள்**

1. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வுகள்
2. சு. சண்முக சுந்தரம், நாட்டுப்புறவியல்

# இயல் 3

# நாட்டுப்புற இயல் ஆய்வுக் கோட்பாடுகள்

## நோக்கம்

- நாட்டுப்புறவியல் துறையில் காணப்படும் பல ஆய்வுக்கோட்பாடுகளை அறிமுகம் செய்தல்
- புதிய ஆய்வுக்கோட்பாடுகளை நாட்டுப்புறவியலில் பொருத்திப்பார்த்தல்.
- ஆய்வுக்கோட்பாடு தோன்றிய முறைகளை விளக்குதல்
- நாட்டுப்புறவியல் இலக்கியங்கள் மற்றும் கலைகளை சில ஆய்வுகளுக்கு உட்படுத்தி உண்மைகளை அறிதல்.

## இயலில் இடம் பெறுபவை

- தொன்மவியல் கொள்கை
- புலப்பெயர்வுக்கொள்கை
- வரலாற்று நிலவியல் ஆய்வு அணுகுமுறை
- அமைப்பியல் கோட்பாட்டு ஆய்வுமுறை
- வரலாற்று மீட்டுருவாக்க அணுகுமுறை
- உளப்பகுப்பாய்வு
- வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு
- செயன்முறைக் கோட்பாடு
- மானிடவியல் கோட்பாடு

நாட்டுப்புறவியல் இன்று வளர்ந்து வரும் துறையாகும். நாட்டுப்புறவியலின் பல்வேறு கூறுகள் இன்று அலசி ஆராயப்படுகின்றன. நாட்டுப்புறவியலில் கடந்த பத்தாண்டுகளாக ஆராய்ச்சி பெருகியும் பரவியும் வருகின்றது. வளர்ந்து வரும் துறைக் கேற்பப் பல்வேறு கூறுகளை ஆராய, பல்வேறு கோட்பாடுகள் (theories) உருவாவது இயற்கையாகும். அக்கோட்பாடுகள் பற்றிய சிந்தனையும் அவற்றைத் தம் ஆராய்ச்சிகளில் பொருத்திப் பார்க்கும் முனைப்பும் வளரத் தலைப்பட்டுள்ளன. அமெரிக்க நாட்டு நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சார்ட் எம். டார்சன் (Richard M. Dorsan) Folklore and Folklife-An Introduction என்ற நூலில் பன்னிரண்டு ஆய்வுக்கோட்பாடுகளைப் பற்றி (Current theories of

folklore) விளக்கியுள்ளார். இக்கோட்பாடுகளைப் பற்றி முதன்முதலில் பேராசிரியர் தே. லூர்து அவர்கள் தமிழில் எழுதியுள்ளார்கள். மேலை நாட்டில் வளர்ந்த இவ்வாய்வுக் கோட்பாடுகளை நோக்கும்போது இத்துறையில் நாம் எவ்வளவு பின்தங்கியுள்ளோம் என்று தெரிகிறது. இக்கோட்பாடுகளில் ஒன்றான அமைப்பியல் ஆய்வுக் கோட்பாட்டைப் பா.ரா. சுப்பிரமணியம் அவர்கள் தாலாட்டுக்கும் ஒப்பாரிக்கும் பயன்படுத்தி ஆய்வு செய்துள்ளார். இவரைத் தவிரத் தமிழில் யாரும் இக்கோட்பாடுகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்யவில்லை. தமிழக நாட்டுப்புறவியலுக்குச் சிறு வரலாறு உண்டு, நெடுங்காலமாகத் தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வு விளக்க ஆய்வுகளாகவே நடைபெற்றுவருகின்றன. இதுவரை வெளிவந்த நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் ஆய்வேடுகளும் இதற்குச் சான்று பகர்கின்றன. பிற துறைகளுடன் இணைந்து நோக்கும் ஆய்வாக இனிமேல் தான் வளர வேண்டும் அத்துடன் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் பொருத்திக் காட்டுவதாகவும் நமது மரபிற்கு ஏற்ப புதிய நெறிமுறைகளை உருவாக்குவதாகவும் நமது ஆய்வு அமைத்தல் வேண்டும். தற்போது சிலர் நாட்டுப்புறவியல் ஆய்வு கோட்பாடுகளைத் தமது ஆய்வுகளில் பொருத்திக் காட்ட முனைந்துள்ளனர். இப்போக்கு வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

## வரலாற்றுப் புவியியல் கோட்பாடு

கதைகளின் தோற்றம், பரவிய விதம், அதற்குரிய காரணங்கள் ஆகியவற்றை அறிய இக்கோட்பாடு உதவுகின்றது.இதனைக் கோட்பாடு என்பதற்குப் பதிலாக முறை (Method) 105 என்றே கூறலாம். இக்கோட்பாட்டின்படி ஒப்பியல் நாட்டுப் புறவியலாளர் (Comparative folkorists) நாட்டுப்புறப் பாடலையோ, கதையையோ மீட்டுருவாக்கம் செய்கின்றனர். இக்கோட்பாட்டின் படி ஒரு கதை நூறு மாற்று வடிவங்களில் காணப்படலாம். ஆனால், அவையனைத்தும் ஒரு காலத்தில் ஓர் இடத்தில் ஒரு மனிதன் கூறிய கதையிலிருந்து பரவியிருக்கலாம். அக்கதை தோன்றிய இடத்திலிருந்து பல்வேறு இடங்களுக்கும் சென்று பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கலாம். ‘ஒரு கதையானது மொழி எல்லை,பண்பாட்டு எல்லை கடந்து பரவாது என்ற கொள்கையை பின்னிஸ் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. சில கதைகளும் நாட்டுப்புறக் கதைப் பாடல்களும் மொழி எல்லை, பண்பாட்டு எல்லையைத் தாண்டிப் பரவுகின்றன’ முன்னேறிய மக்களிடமிருந்து பின்தங்கிய மக்களுக்குச் சென்று பரவுகின்றன. 15, 16 - ம் நூற்றாண்டு ஐரோப்பிய

குடியேற்றக்காரர்கள் வட, தென் அமெரிக்காவுக்கும் ஆப்ரிக்காவுக்கும் குடியேறியபோது, தங்கள் கதைகளையும் அங்குப் பரப்பினர். ஆனால், ஆப்ரிக்க, அமெரிக்க இந்தியர்களுடைய கதைகளை ஐரோப்பிய விவசாயிகளிடையேகாண முடியவில்லை. மிகப் பரவலாக ஊடுருவிச் சென்ற நாட்டுப் புறக் கதைகளின் பிறப்பிடம் இந்தியாவும் மேற்கு ஐரோப்பாவும் ஆகும். ஆசியா மைனரும் ஐரோப்பாவின் மற்றைய பகுதிகளும் ஊடுருவிப் பரவுதலில் இரண்டாம் இடத்தைப் பெறுகின்றன. மிருகங்களைப் பற்றிய கதையோ கதைப்பாடல் ஒன்றையோ தேர்ந்தெடுத்து, அவற்றின் மாற்று வடிவங்களைத் தொகுத்து ஒவ்வொரு தனிக் கூறும் எவ்வெவ்விடங்களில் எத்தனை முறை வருகின்றது என்று அட்டவணை மூலம் தயாரித்துப் படம் ஒன்று வரைந்து, தொகுக்கப்பட்டதை மதிப்பீடு செய்து பழைமையான கூறு எது என்று முடிவுக்கு வர வேண்டும். கதையானது பரவும்போது சில பகுதிகள் விடுபட்டு, உருத்திரிதல் (Compression), சில பகுதிகள் சேர்ந்து விரிவடைதல் (Elaborotion) போன்ற மாற்றங்கள் இம்முடிவுக்குவரத் துணை புரிகின்றன. இவ்வாய்வு முறையை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்.

'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' (All the glitters is not gold) என்ற பழமொழியை ஆர்ச்சர் டெய்லர் அவர்கள் ஆராய்ந்து, மீட்டுருவாக்கம் செய்தார். Glitter என்பதுடன் glister என்றொரு திரிபு வடிவமும் இருப்பதைக் கண்டு ஆய்வு செய்து glister என்பதே தொல் வடிவம் (Proto-form) எனக் கண்டார். 18-ஆம் நூற்றாண்டின் டேவிட் காரிக் என்பவர் glister என்பதை glitter என உச்சரித்தார். சேக்ஸ்பியர் Merchant of Venice என்ற நாடகத்தில் 'glister' என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். இதைவிட மிகச்சிறந்த சான்று மீட்டுருவாக்கக் கோட்பாட்டுக்குக் கிடைக்காது என இப்பழமொழியை ஆராய்ந்த ஆர்ச்சர் டெய்லர் குறிப்பிடுகின்றார்.

பின்னிஸ் வரலாற்றுப் புவியியல் கோட்பாடானது கதை ஆய்வை வெறும் புள்ளி விபரமாகவும் கதைச் சுருக்கமாகவும் குறியீடாகவும் அட்டவணையாகவும் வரைபடமாகவும் மாற்றி விடுகின்றது என்றும், கதையில் காணப்படும் அழகுணர்ச்சியையோ நடையையோ கூறுபவரின் மனித உணர்வுகளையோ புறக்கணித்து விடுவதாகவும் இக்கோட்பாட்டைச் சிலர் குறை கூறுகின்றனர்.

## அமைப்பியல் கோட்பாடு

1960 ஆம் ஆண்டளவில் அமெரிக்க நாட்டுப்புற இயல் அறிஞர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற கோட்பாடு அமைப்பியல் கோட்பாடாகும். அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை என ருஷ்ய நாட்டுப் பேரறிஞர் விளாடிமிர் பிராப் (Vladimir Propp) அவர்களைக் குறிப்பிடலாம். ஆர்னி தாம்சனின் ஆய்வு முறை அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்ற காரணத்தால், இக்கோட்பாட்டை உருவாக்கினார். 1928 ஆம் ஆண்டு ருஷ்ய மொழியில் ‘நாட்டுப்புறக் கதைகளின் உள்ளமைப்பு’ (The morphology of North American Indian Folklore) என்ற நூலை வெளியிட்டார். ஆலன் டாண்டஸ் அவர்கள் பிராப்பின் கொள்கையையே பின்பற்றினாலும், அவரும் இக் கோட்பாட்டில் சில மாற்றங்களைச் செய்தார். பிராப் அவர்கள் கையாண்ட ‘function’ என்ற சொல்லை நீக்கி மொழியியல் பேரறிஞர் கென்னத் பைக்கின் ‘motifeme’ என்ற சொல்லைக் கையாண்டார். மாற்று வடிவத்திற்கு ‘allomotif’ என்ற சொல்லைக் கையாண்டார். பிராப் அவர்களைத் தொடர்ந்து மொழியியலை அடிப்படையாக வைத்து நாட்டுப்புற வழக்காறுகளை அமைப்பியல் கோட்பாட்டின்படி ஆராய்ந்தவர் லெவி ஸ்டிராஸ் (Levistrauss) எனும் மானிடவியல் பேரறிஞர். The structural study of myth என்ற ஆய்வுக்கட்டுரையில் புராணங்களைப் புதிய நோக்கில் ஆராய்கின்றார். லெவிஸிடிராஸ் பிராப்பின் முறையினின்றும் சிறிது விலகிச் சென்றாலும், அமைப்பியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கிறார். லெவிஸ்டிராஸின் அமைப்பியல் ஆய்வுக் கோட்பாட்டின் ஆய்வினால் புராணங்களை வகைப்படுத்தும் வேலை முடிந்துவிட்டது என்று கூறுவர் சிலர் அமைப்பியல் கோட்பாட்டின் மூலம் அனைத்து நாட்டுப்புறக் கதைகளும் ஓர் அமைப்புக்கு உட்பட்டவை என்றும், இக்கோட்பாட்டினால் வகைப்படுத்துதல் என்னும் முறை எளிமையாகின்றது என்றும், பண்பாட்டுக் கூறு களைப் பிரித்தறியவும் பயன்படுகிறது என்றும் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழில் முதன்முதலில் அமைப்பியல் கோட்பாட்டைத் தாலாட்டிற்கும் ஒப்பாரிக்கும் பயன்படுத்தி ஆய்வு செய்தவர் டாக்டர் பா.ரா. சுப்பிரமணியம் அவர்கள். இக்கோட்பாட்டை மற்ற நாட்டுப்புற இலக்கியங்களுக்கும் பயன்படுத்தி ஆய்வு செய்யலாம்.

குறியீடாகவும் அட்டவணையாகவும் வரைபடமாகவும் மாற்றி விடுகின்றது என்றும், கதையில் காணப்படும் அழகுணர்ச்சியையோ நடையையோ கூறுபவரின் மனித உணர்வுகளையோ புறக்கணித்து விடுவதாகவும் இக்கோட்பாட்டைச் சிலர் குறை கூறுகின்றனர்.

## வரலாற்று மீட்டுருவக்கக் கோட்பாடு

ஆதாரம் கிடைக்காத ஒரு கால கட்டத்தின் வரலாற்றை, நாட்டுப்புறவியல் சான்றுகளைக் கொண்டு உருவாக்குவதற்கு வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு என்பர். ஜேக்கப் கிரீமின் இக்கொள்கை 19 ஆம் நூற்றாண்டின் நாட்டுப்புறவியல் அறிஞர்களைப் பெரிதும் கவர்ந்தது. ஆனால், டார்வினின் பரிணாமக் கொள்கை வெளிவந்தவுடன், இக்கோட்பாட்டுக்கு அவ்வளவாக மதிப்பில்லை என்றே கூறலாம். ஜார்ஜ் லாரன்ஸ் கொம்மே (George Lawrence Gomme) அவர்கள் ‘நாட்டுப்புறவியல் ஒரு வரலாற்று அறிவியல்’ (Folklore as an Historical Science) (1908) என்று பல தொகுதிகள் வெளியிட்டு, இங்கிலாந்தில் காணப்படும் நாட்டுப்புற வழக்காற்றிலுள்ள ஆரியர் பழக்கங்களையும் ஆரியருக்கு முந்திய பழக்கங்களையும் இனம் பிரித்தறிந்தார். கொம்மேயின் கோட்பாட்டினைக் குனியா யனகித (KuniyoYanagita) போன்ற ஜப்பான் நாட்டு நாட்டுப்புறவியல் அறிஞர்கள் ஆதரித்தனர். ஜப்பானியர்களின் பழங்கால ஆவியுலகக் கோட்பாட்டுச் சமயத்தை (Animistic religion) மீட்டுருவாக்கம் செய்ய இக்கோட்பாடு பயன்பட்டது. வாய்மொழியாக எடுத்துரைக்கப்படும் மரபுவழி வரலாற்றுச் செய்திகளில் எந்த அளவிற்கு வரலாற்று உண்மைகள் பொதிந்துள்ளன என்பதை இக்கோட் பாட்டாளர்கள் ஆராய்கின்றனர்.

லார்ட் ராக்லன் (Lord Raglan), ராபர்ட் லூயி போன்றோர் வரலாற்று மரபுச் செய்திகளைப் புராணக் கதைகள் என ஒதுக்கி விட்டனர். ஆனால், ஹெக்டர் (Hector), நோரா சாட்விக் (Nora Chadwick) போன்றோர் நாட்டுப்புற இலக்கியங்களில் வரலாற்றுச் செய்திகள் இருப்பதைக் கண்டனர். தனித் தனியாக ஒவ்வொரு மரபுச் செய்தியையும் குறிப்பிட்ட விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்த பின்னரே ஒரு முடிவுக்கு வரவேண்டும். மரபு வழியொழுகுவோர் தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக ஒரே இடத்தில் வாழ்ந்தவர்களா? அவர்களது பண்பாடு வரலாற்றாசிரியனுக்குச் சான்றுகளை அளிக்கின்றனவா? என்ற வினாக்களுக்கு விடை கிடைப்பின் வரலாற்று

உண்மையை நிறுவ முடியும். அமெரிக்க நாட்டில் நாட்டுப்புற வழக்கியலையும் வரலாற்று முறை இரண்டையும் இணைத்து, ஒரு புதிய முறையை உருவாக்கி வரலாற்று மீட்டுருவாக்கம் செய்கின்றனர். இராமப்பய்யன், கான் சாகிபு சண்டை போன்ற வரலாற்றுக்கதைப் பாடல்கள் வரலாற்றுக்குப் பெரிதும் துணைபுரிவதைக் காண்கிறோம். இராமப்பய்யன் கதைப் பாடலை நாயக்கர் வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து, வரலாற்று நிகழ்ச்சிகளைக் காணமுடியும். தேசிங்குராஜன் கதையை கர்நாடக ராசாக்கள் சுவிஸ்தாரம் போன்றவற்றுடன் ஒப்பிட்டு வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் காணலாம்.

## இலட்சியக் கோட்பாடு

இருபதாம் நூற்றாண்டில் நாட்டுப்புறவியலை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் எண்ணம் எழுந்தது. மக்களது எண்ணங்களையும், எழுச்சிகளையும், இன்ப துன்பங்களையும், நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் எண்ணம் எழுந்தது. மக்களது ஆசாபாசங்களையும் நாட்டுப்புற இலக்கியம் புலப்படுத்துகின்றது. ஒரு நாட்டின் உண்மையான பண்பாட்டை அறிய வேண்டுமானால், அந்நாட்டுப்புற இலக்கியங்களைத்தான் ஆராயவேண்டும். ஜெர்மானியிலும் ருஷ்யாவிலும் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பியதில் நாட்டுப்புறவியலுக்குப் பெரும் பங்கு உண்டு எனக் கூறலாம். அடிமைப்பட்டுக்கிடந்த நாடுகளில் நாட்டுப்புறவியல் அந்நியர்க்கெதிரான ஓர் இயக்கமாகத்தான் எழுந்தது. அயர்லாந்து, பிலிப்பைன்ஸ், கியூபா நாட்டு மக்களின் விடுதலை எழுச்சி இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் பயன்பட்டன. அல்ஜிரியா நாட்டு அணிவகுப்புப் பாடல் கிராமிய மெட்டில் அமைந்து வீரர்களுக்கு உற்சாகம் அளித்தது. தமிழகத்திலும் சுதந்திரப் போராட்டக் காலத்தில் கட்ட பொம்மு சமூகக் கதைப் பாடலைக் கூறி, சுதந்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர். பின்னர் கட்சிக் கொள்கையை மக்களிடம் பரப்ப அரசியல்வாதிகள் வில்லுப்பாட்டைப் பயன்படுத்தினர். கு வில்லியம் ரியல் என்பவர் ஜெர்மானீய தேசிய உணர்வுகளைத் தட்டியெழுப்ப, நாட்டுப்புற இலக்கியங்களைப் பயன்படுத்தினார். ருஷ்யாவின் கம்யூனிசக் கொள்கையைப் பரப்ப நாட்டுப்புற வழக்காறுகளைப் பயன்படுத்தினர். சோகோலாவ் (Sokolov) எனும் ருஷ்ய நாட்டு நாட்டுப்புறவியலாளர் ‘பழமையைப் பிரதி பலிப்பதாகவும் இன்றைய நிலையை எடுத்துக் கூறுவதாகவும் வர்க்கப் போராட்டத்தின் பிரதிபலிப்பாகவும் நாட்டுப்புறவியல் உள்ளதாகக் கூறுகிறார். உழைக்கும்

வர்க்கத்தின் ஆசாபாசங்களை ‘அறிந்து கொள்ள, நாட்டுப்புறவியலை சமூக அரசியல் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டும் என்கிறார் லெனின். கார்க்கி தமது நூலில் நாட்டுப்புறவியல் கருத்துகளை எடுத்தாண்டுள்ளார். நம்முடைய மலைநாட்டுத் தொழிலாளர் பாடல்களிலும் வர்க்க பேதங்களைக் காணலாம்.

‘சொத்துரிமை சமூகத்தில் தோன்றும்போது வர்க்கப் பிரிவினையும் தோன்றியது. சொத்துள்ளவர்கள் தமக்கென ஓர் உயர் கலையைப் பேணினர். சொத்தில்லாத உழைப்பாளிகள் நாட்டுக் கலையைத் தமதாக்கிக் கொண்டனர். அன்றிலிருந்து இன்று வரையான கலைகள் சமூக வளர்ச்சியில் வளர்ந்தன. ஒன்று உழைப்பேர் கலைகள் மற்றது சுகிப்போர் கலைகள். இரண்டும் இரண்டு வேறு வர்க்கங்களைப் பிரதிபலிப்பன.’

## உளவியல் ஆய்வுக் கோட்பாடு

19-ஆம் நூற்றாண்டின் புராணக் கதைகட்கும் நாட்டுப்புறக் கதைகட்கும் பாலியல் குறியீட்டு விளக்கமளிக்க ஆரம்பித்தனர். ஆப்ரஹாம் அவர்கள் தமது நூலான Dreams and Myth-ல் பிராமித்தியுஸ் புராணக் கதைகளுக்குப் புதிய விளக்கமளிக்கின்றார். மின்னல்தான் பழங்கால மனிதனுக்குப் நெருப்பை அளித்தது என்ற நம்பிக்கை நிலவியது. ஆனால், பழங்கால மனிதன் ஒரு கோல்கொண்டு வட்டவடிவ மரக்கட்டையைக் கடைந்து தீயை உண்டாக்கினான். இப்பொருட்கள் எல்லாம் பிறப்பு உறுப்புக்களின் குறியீடுகளாகும். எரிக் ஃபிரம் (Erich Fromm) என்பவர் பிராய்டிசக் குறியீட்டுப் பட்டியல் ஒன்றைத் தருகிறார். ‘குச்சி, மரம், குடை, கத்தி, பென்சில், சம்மட்டி, வானவூர்தி போன்ற குறியீடாக ஆண் பிறப்பு உறுப்பு உருவகப்படுத்தப்படுகின்றது”. நடனம், சவாரி செய்தல், மலை ஏறுதல் முதலியன பற்றிய கனவுகள் பாலியல் உறவாகக் கருதப்படுகின்றன. சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freud) அவர்கள் அடி மனத்தை அறிய (Subconscious mind) நாட்டுப்புறக் கதைகள், புராணக் கதைகள், விலக்குகள் (taboos), மூட நம்பிக்கைகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு விளக்குகிறார். தமது கருத்துகளை “கனவுகளின் விளக்கம்“ (Interpretation of Dreams) என்ற நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார். “தனிமனிதனின் புராணக் கதையே கனவு’’ என ஆப்ரஹாம் கூறுகிறார். கனவுகளிலும் புராணக் கதைகளிலும் ஒரே வகையான உத்திகளே உள்ளன என்று கருதப்படுகின்றன.

கனவுகள் மனிதனின் நிறைவேறாத ஆசைகளை வெளியிடுவது போல, புராணங்கள் ஓர் இனத்தாரின் நிறைவேறாத ஆசைகளை வெளிப்படுத்துகின்றன. புராணங்கள் பாலியல் கதைகளை உள்ளடக்கி அமைந்துள்ளன. ஒடிப்பஸ் (Oedipus) என்ற புராணக் கதை ஆசைகளை வெளியிடுகின்றதற்கு எடுத்துக்காட்டு எனப் பிராய்டு கருதுகிறார். அடி மனத்தின் வெறித்தனமான ஆசைகளுக்கு மேல் மனம் (Super ego) ஒரு தடையாக உள்ளது. அவற்றைக் கனவுகளும் புராணக் கதைகளும் குறியீட்டுப் போர்வையில் வெளியிடுகின்றன். குறியீட்டுக் திரையை நீக்கி, அடிமனத்தின் விருப்பங்களைப் புரிந்து கொள்வதே உளவியல் முறை ஆய்வாளர்களின் பணியாகும்.

வளமைச் சடங்கு பற்றி (Fertility ritual) ஆராய்வோரும் உளவியல் ஆய்வுக் கோட்பாட்டைப் பின்பற்றி ஆராய்கின்றனர். பண்டைய மனிதன் இயற்கை தனக்கு உதவ வேண்டுமாயின் இயற்கையைப் போல நடக்க வேண்டுமென்றும் தான் செய்வதைப் பார்த்து இயற்கையும் அவ்வாறே செய்யும் என்றும் நம்பினான். அந்த நம்பிக்கையின் காரணமாகச் செய்யப்படும் சடங்குகளே வளமைச் சடங்குகள் ஆகும். பெண்கள் சிவப்புப் பொட்டு இடுவதைப் பற்றிக் கூறப்படுவதைக் காண்போம். பல திருமணச் சடங்குகளில் மணமகள் நெற்றியில் சிகப்பு பூசுகின்றனர். இது அவள் தன் கணவனுக்கு மட்டுமே உரியவள் என்பதையும் பிற ஆடவர்கட்கு உரியவள் அல்ல என்பதையும் தன் கணவனுக்குக் குழந்தைப் பேற்றினை உறுதிப்படுத்தும் வளமுடையவள் என்பதையும் குறிக்கும் அடையாளமாகும். தமிழ் நாட்டு விளைநிலங்களில் பெண்மை உறுப்பும் மார்பும் பெரிதாகக் காட்டப்பட்டிருக்கும். மனித குலத்துக்கு இனப்பெருக்கம் செய்து வளம் கொழிக்கும் பெண் உறுப்பைக் காட்டின் அதிலிருந்து நிலம் வளம் பெறும் என்றும், பயிர்கள் பலமடங்கு விளைவு தரும் என்றும் நம்புகின்றனர். மனுதர்ம சாஸ்திரம் கூட லிங்கம் தொடக்கத்தில் பயிர்த் தொழிலின் குறியீடாகவிருந்தது என்கிறது. வளமைச் சடங்கை ஆராய்வோர் இக்கோட்பாட்டைப் பின்பற்றி ஆராய்கின்றனர்.

## வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு

நாட்டுப்புற இலக்கிய ஆய்வில் ஈடுபடுவோர்கள் இக்கோட்பாட்டை வளர்க்க ஆரம்பித்தனர். நாட்டுப்புற இலக்கியங்களின் படைப்பும் அமைப்பும் சொல்லுவோனின் முறையையும் சொல்வோன் செயல்படும் முறையையும் சார்ந்தமைகின்றது என்பதே இக்கோட்பாடாகும். ஆல்பர்ட் லார்டும் (Albert Lord),

டேவிட் பைனமும் (David Bynum) இக்கொள்கையை வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். லார்டு அவர்களின் 'நாட்டுப்புறப் பாடலின் ஒவ்வொரு வரியையும் ஆராயும்போது தொடர்பு அமைப்பு என்பதும் பாடலின் முழு அமைப்பையும் ஆராயும் போது கதையின் நோக்கம் தெளிவாகின்றன' எனக் கூறுகிறார். வாய்பாடு என்பது பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சூழலில் தேவைப்படும் போதெல்லாம் பயன்படுத்தப்படும் சொற்றொடராகும். இவ்வாய்பாடுகள் எல்லாம் ஒரே தன்மையும் பயனும் உடையனவாகும். சங்ககாலச் செய்யுட்களிலும் இத்தகை அமைப்பு காணப்படுவதாக டாக்டர் கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

## சூழ்நிலைக் கோட்பாடு

சமூக அறிவியல் துறைகளைச் சார்ந்தவர்களே இக்கோட்பாட்டில் ஆர்வமுடையவர்கள். ரோஜர் ஆப்ரஹாம் (Roger Abraham), டான்பென் அமோஸ் (Dan Ben Amos), ஆலன் டாண்டஸ், இராபர்ட் ஜார்ஜ், கென்னத் கோல்டுஸ்டெயின் போன்றோர்கள் இக்கோட்பாட்டில் ஆர்வமுடையவர்கள். நாட்டுப்புற வழக்காற்றைச் சூழல், வெளிப்படுத்தும் முறை, செயல்படும் முறை ஆகியவற்றுடன் இணைத்துக் காண முற்படுகின்றனர். 'வெளிப்பாட்டு முறையை (Verbal behaviour) மொழியியலாளரிடமிருந்தும், செயல்பாட்டு முறையை (Functionalism) மானிடவியலாளரிடமிருந்தும், தனிமனிதச் செயல்களைச் சமூகவியலாளரிடமிருந்தும், தனிமனிதனின் உள்மனச் செயல்பாட்டு முறையை (ego mechanism) உளவியலாளரிடமிருந்தும் பெற்று, அவற்றை இவ்வாய்வில் பயன்படுத்த முனைகின்றனர்'. நிகழ்ச்சி முழுவதையும் தொகுக்கும்போது சூழலையும் (context) தொகுத்து ஆராய வேண்டும். சில நேரங்களில் இயற்கைச் சூழ்நிலையை உருவாக்கி, அந்தச் சூழலிலும் தொகுக்கலாம் எனக் கோல்டுஸ்டெயின் (Goldstein) குறிப்பிடுகின்றார். தமிழ் நாட்டில் வழங்கப்பெறும் ஒரு வழக்காற்றைக் காண்போம்.

"கம்புக்குக் களை எடுத்தாப் போல இருக்கும்
தம்பிக்குப் பெண் பார்த்தாப்போல இருக்கும்"

என்ற பழமொழியின் பொருளும் பயனும் சூழ்நிலையை வைத்துப் பார்த்தால் தெள்ளத் தெளிவாக விளங்கும். முதலில் விவசாயப் பின்னணியைப்

புரிந்து கொள்ளலாம். வேலை செய்யுமிடத்திற்கு எவ்வித அலங்காரமின்றி வேலை செய்வதற்கு வருவர். எனவே உழைப்பு, இயற்கை அழகு இரண்டையும் அறிய வாய்ப்புண்டு. உழைக்கும் சமுதாயத்தில் உழைப்புக்கு மதிப்பு அளிக்கப்படுதலைக் காண்கிறோம். இப்படிப்பட்ட சூழலில்தான் பெண்ணைப் பற்றி அறிய நிறைய வாய்ப்புண்டு. மேலும் நாட்டுப்புறக் கள ஆய்வில் சூழலும் முக்கிய காரணியாகக் கருதப்படுகின்றது. இயற்கைச் சூழலிலும் செயற்கைச் சூழலிலும் நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிக்கலாம். இவ்விரண்டிலும் செயற்கையாகத் தோற்றுவிக்கப்படும் இயற்கைச் சூழலே மிகச் சிறந்த ஒன்றாக எனது கள ஆய்வு மூலம் அறிந்து கொண்டேன். பாடுகின்ற சூழலை வைத்துச் சிலவற்றிற்கு விளக்கம் பெற முடிகின்றது. நாட்டுப்புறக்கதை போன்றவற்றையும் சூழலோடு வைத்தே ஆராய வேண்டும். ‘காலம், இடம், அருகிலிருப்போர் எனும் சூழல்களால் நாட்டுப்புற வழக்காறுகள் மாறுபடுகின்ற நிலையைப் பிற சமூகப் பழக்கவழக்கங்கள் மாறுபடுகின்ற நிலையுடன் ஒப்பிட்டு வேறுபடுத்தும் முறையைப் பென் அமோஸ் (Ben Amos) போன்றோர் வலியுறுத்துகின்றனர்’. இக்கோட்பாட்டினால் கள ஆய்வு மேலும் விரிவான ஒன்றாக வளரும் வாய்ப்பும் உள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## நாட்டுப்புறவியலும் மானிடவியலும் (Folklore and Anthropology)

தொடக்க காலத்திலிருந்து இன்றுவரை மனிதனைப் பற்றிய உருவத்தோற்ற, பண்பாட்டு வளர்ச்சியை ஆராய்வதே மானிடவியலாகும். தொல் பொருள் மனிதனைப்பற்றி ஆராயும் மானிடப் பரிணாமம் (Human evolution) இனக்குழுக்களின் உருவத்தோற்றத்தை ஆராயும் உருவத்தோற்ற மானிடவியல் (Physical anthropology), வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதனின் சமூகவாழ்க்கையை ஆராய்கிற தொல்பொருளியல், மனிதப் பண்பாடு அதன் மூலக்கூறுகள், அமைப்பு, மாற்றங்கள் போன்றவற்றை ஆராயும் பண்பாட்டு மானிடவியல் அல்லது சமூக மானிடவியல் (Cultural or Social anthropology) போன்றவை பிரிவுகளாகும். பொதுவாக மானிடவியல் எழுத்தறிவிற்கு முற்பட்ட மக்களுடைய பண்பாட்டினை ஆராய்வதுடன் அமைகிறது. மனிதனுக்கு இருவகையான பாரம்பரியம் உண்டு. ஒன்று உயிரியற் பாரம்பரியம் (Biological inheritance) மற்றது சமூகப் பாரம்பரியம் (Social inheritance). சமூகப் பண்பாட்டு மானிடவியலில் மனிதனின் வாழிடம், கால்வழி, தொழில், சமூக

அமைப்பு. இரத்த உறவுமுறை, தனிமனித வாழ்வின் படிகளான பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு என்பன, சமூக வாழ்வில் பெரும் பங்கு, குடும்பம், சொத்துரிமை, சமயம், சடங்குகள், நம்பிக்கைகள் என்பனவற்றை ஆயும் ஆய்வினையே நாட்டுப்புறவியலும் ஆராய்கின்றது. நாட்டுப் புறவியல் மானிடவியலின் ஒரு பிரிவாக இருப்பதுடன் பல்வேறு மானிடவியல் கூறுகளையும் தம்முள் கொண்டு விளங்குகிறது.

ஆரம்ப காலத்தில் மொழியியலை எவ்வாறு மானிடவியலாளர்கள் வளர்த்தார்களோ அதேபோன்று நாட்டுப்புறவியலையும் மானிடவியல் பேரறிஞர்களே முதலில் வளர்த்தனர். நாட்டுப்புற இயலும் மானிடவியலும் மிக நெருங்கிய தொடர்புடையவையாகும். இரண்டிற்கும் ஓர் எல்லை வகுப்பது மிகவும் சிரமமானதாகும். இவ்விரண்டு இயல்களும் மனிதப் பண்பாட்டை ஆராய்வனவாகும். ஆன்ட்ரு லாங்க் (Andrew Lang) இவ்வியலை மரபு எச்சமாகக் கருதுகின்றார். மக்களது நம்பிக்கைகள், பழங்கதைகள், வழக்கங்கள் எச்சக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. நாட்டுப்புறவியல் மரபுவழி சமூக அமைப்பிலும் புழங்குபொருள் பணபாட்டிலும் கவனம் செலுத்துகின்றது. நாட்டுப்புறவியலாளன் பிறப்பு முதல் இறப்பு (தாலாட்டு முதல் ஒப்பாரி) வரையிலுள்ள சடங்குகளை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் ஆராய்கிறான். பண்பாட்டு மானிடவியலாளன் சமூக அமைப்பின்கீழ் இவற்றை ஆராய்கிறான். மானிடவியலாளர் ஓர் இனத்தின் பண்பாட்டினை ஆராயும்போது அவ்வின மக்களிடையே காணப்படும் பழங்கதைகள், நம்பிக்கைகள் முதலியவற்றை ஆராயாவிட்டால் அவரது ஆய்வு முழுமை பெறாது. மரபு வழிப்பட்ட நம்பிக்கைகள், கலை, கைவினைப் பொருட்கள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் முதலியன ஆய்வுகள் நாட்டுப்புறவியலுக்கும் மானிடவியலுக்கும் பொதுவானவையாகும். நாட்டுப்புறவியல் ஓர் இனத்தின் அல்லது குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டை முழுமையாக ஆராய்வதில்லை. இதுவே பண்பாட்டு மானிடவியலுக்கும் நாட்டுப்புறவியலுக்குமுள்ள வேறுபாடு ஆகும். பழக்கவழக்கம், நம்பிக்கை, சடங்குகளில் காணப்படும் எழுதப்படாத மரபுகளை நாட்டுப்புறவியல் ஆராய்கின்றது.

மானிடவியலை முழுமையானதாகக் (Whole) கருதினால், நாட்டுப்புறவியலை அதன் பகுதியாகக் (Part) கருதலாம். ஓர் இனத்தின் பண்பாட்டைப் பற்றி அறிய வேண்டுமானால், அவ்வினத்தாரிடையே நிலவும்

பாடல்கள், கதைகள், கதைப் பாடல்கள், நம்பிக்கை, பழக்க வழக்கங்களையும் ஆராய வேண்டும். நாட்டுப்புற இயலின் செயல் முறையில் மானிடவியலாளர் கவனம் செலுத்துகின்றனர். கிரீம் சகோதரர்கள் 1819 ஆம் ஆண்டில் வெளியிட்ட Household tales என்பவற்றைத் தொடர்ந்து, நாட்டுப்புறவியல் அறிவியலாகக் கருதப்பட்டது. புராணக் கதையின் கூர்தலறக் கொள்கை பற்றி டெய்லர் ஆராய்ந்துள்ளார். லாங்க் என்பாரும் இக்கொள்கையை ஆதரிக்கின்றார். நாட்டுப்புற இயலின் தோற்ற வளர்ச்சியைப் பற்றிதான் முதலில் ஆராய்ந்தனர். ஆனால் இன்று உயிரியல் கோட்பாட்டிலும் (Evolution), பரவுதலிலும் (Diffusion) ஈடுபாடு காட்டுகின்றனர். புராணக் கதைகளும், கதைகளும் முறையே ஆவியுலகக் கோட்பாட்டினையும் (Animism) குலக்குறி கோட்பாட்டினையும் (Totemism) விளக்குகின்றன. பண்பாட்டு மானிடவியலாளர்கள் பண்பாட்டு விதிகளைப் பயன்படுத்தி நாட்டுப்புறவியலை விளக்குகின்றனர். மரபுகளை வகைப்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல் போன்ற நாட்டுப்புறவியலாளரின் ஆய்வு, மானிடவியலாளருக்குப் பெரும் துணையாக உள்ளது.

நாட்டுப்புறவியலுக்கும் மானிடவியலுக்கும் உள்ள தொடர்பினால், மானிடவியல் பள்ளியே (Anthropological School) உருவாகியுள்ளது. மானிடவியல் பள்ளி பண்பாட்டினை ஆராய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. பண்பாட்டு ஒற்றுமையைப் புலம் பெயர்வு மூலமோ, கடன்வாங்கல் மூலமோ, மர உரிமையாக அடைதல் மூலமோ விளக்கலாம். மானிடவியல் பேரறிஞர்களும் நாட்டுப்புறவியல் பேரறிஞர்களும் பண்பாட்டினையே மையமாக வைத்து ஆராய்கின்றனர். நாட்டுப்புற வளர்ச்சியில் மானிடவியலாளர்களுக்கே பெரும்பங்கு எனின் அது மிகையாகாது. நாட்டுப்புறவியல் கோட்பாடான வரலாற்றுப் புவியியல் கோட்பாடு மானிடவியல் ஆய்வுக்கும் பயன்படுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## தொகுப்புரை

- அமெரிக்க நாட்டுப்புறவியல் பேரறிஞரான ரிச்சர்டு எம். டார்சன் தனது Folklore And Folk Life – An Introduction என்ற நூலில் பன்னிரண்டு வகையான நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோட்பாடுகளைக் குறித்துள்ளார்.
- கதைகளின் தோற்றம், பரவிய விதம், அதற்குரிய காரணங்கள் ஆகியவற்றை அறிய வரலாற்றுப் புவியியல் கோட்பாடு உதவுகிறது.

- ஆதாரம் கிடைக்காத ஒரு காலகட்டத்தின் வரலாற்றை நாட்டுப்புறவியல் சான்றுகளைக்கொண்டு உருவாக்குவதற்கு வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு உதவுகிறது.
- புராணக் கதைகளுக்கு பாலியல் உணர்வின் அடிப்படையில் விளக்கமளிக்கிறது உளவியல் கோட்பாடு
- அனைத்து நாட்டுப்புறவியல் கூறுகளையும் அமைப்பியல் கோட்பாட்டின் வழி ஆராய முடிகின்றது.
- நாட்டுப்புற இலக்கியங்களின் படைப்பும் அமைப்பும் சொல்லுவோனின் முறையும் சொல்வோன் செயல்படும் முறையும் சார்ந்தமைகின்றது என்பதன் அடிப்படையில் வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு அமைகிறது.
- நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு அமைகிறது.

## அருஞ்சொற்பொருள்

1. தொன்மம் - புராணம்
2. எச்சம் - மிஞ்சிய அடையாளக் கூறுகள்
3. கோட்பாடு - கொள்கை
4. வாய்ப்பாடு – வாய்வழியாக தொடர்ந்து ஒரே மாதிரியாக வெளிப்படும் தன்மை.
5. பூப்பு – வளரிளம் பருவம் அடைதல்.

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. அமெரிக்க நாட்டு மானிடவியலின் தந்தை என்று கருதப்படுபவர்

அ) ரூத் பெனிடிக்ட் ஆ) பிரான்ஸ் போவாஸ்
இ) ஆப்ரஹாம் ஈ) எரிக் பிரம்

2. கனவுகளின் விளக்கம் என்ற நூலின் ஆசிரியர்

அ) குஸ்தவ் யுங் ஆ) விளாடிமிர் பிராப்
இ) சிக்மண்ட் பிராய்டு ஈ) லெவிஸ்ட்ராஸ்

3. அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை

அ) விளாடிமிர் பிராப் ஆ) லெவிஸ்ட்ராஸ்

இ)ஆண்ரூஸ் லாங் ஈ) எட்விட் சிட்னி

4. நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பெறும் ஆய்வுமுறை

அ) வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு
ஆ) மக்கட் பண்பாட்டுக்கோட்பாடு
இ) சூழ்நிலைக் கோட்பாடு
ஈ) நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு

5. நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சர்டு எம். டார்சன் எத்தனை வகையான நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோட்பாடுகளைக் குறித்துள்ளார்

அ) 15 ஆ) 8 இ) 12 ஈ) 18

### விடைகள்

1. ஆ) பிரான்ஸ் போவாஸ்
2. இ) சிக்மண்ட் பிராய்டு
3. அ) விளாடிமிர் பிராப்
4. ஈ) நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு
5. இ) 12

## பயிற்சிகள்

1. நும் ஊரில் பரவலாகக் காணப்படும் நாட்டுப்புறக் கதைகளில் நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோட்பாடுகளைப் பொருத்திப் பார்க்க

## சிறு வினாக்கள்

1. அமைப்பியல் கோட்பாடு மற்றும் அவற்றின் வகைகளை விளக்குக.
2. மானிடவியல் கோட்பாடு பற்றி கட்டுரை வரைக
3. உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின் அடிப்படை யாது?

## நெடுவினாக்கள்

1. நாட்டுப்புற ஆய்வுக் கோட்பாடுகள் பற்றிய கட்டுரை வரைக

## பாடம் தொடர்பான நூல்கள்


1. நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள், 1991, சரஸ்வதி வேணுகோபால், தாமரை வெளியீடு, மதுரை.
2. புராணவியல் கோட்பாடு, 1984, தே.லூர்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
3. மானிடவியல் கோட்பாடுகள், பக்தவச்சல பாரதி, அடையாளம் பதிப்பகம், திருச்சி.
4. நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், 1990, ஆறு. இராமநாதன், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
5. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு முறைகள் அன்றும் இன்றும், பா.ரா.சுப்ரமணியன், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.


## பாடம் தொடர்பான இணைய இணைப்புகள்

1. https://www.tamilvu.org
2. https://thogupppukal.blogspot.com
3. https://thamizhstudio.com

## பாடக்குறிப்பிற்கு உதவிய புத்தகங்கள்


1. நாட்டுப்புற இயல் ஆய்வு – டாக்டர். சு. சக்திவேல்

# அலகு - 4

# நாட்டுப்புறவியல் தொழில்நுட்பமும் பயன்பாடும்

## நோக்கம்

- நாட்டார் பயன்படுத்திய தொழில் நுட்பங்களை விளக்குதல்
- நாட்டுப்புற விளையாட்டுகளின் வழி நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை அறிதல்
- நாட்டுப்புற மருத்துவ வழி மக்களின் வாழ்வு நுட்பத்தை அறிதல்
- நாட்டார் தெய்வ வழிபாட்டை அறிதல்.
- நாட்டுப்புறவியல் துறையைப் பயன்பாட்டு நாட்டுப்புறவியலாக உயர்த்துதல்

## இயலில் இடம் பெறுபவை

நாட்டுப்புற விளையாட்டுக்கள் - விளையாட்டின் தன்மைகள் - விளையாட்டின் வகைகள் - விளையாட்டால் அறியப்படும் கருத்துக்கள் - நாட்டுப்புற மருத்துவம் - மருத்துவ விளக்கம் - சிறப்புகள் - மருத்துவக் குறிப்புகள் - வகைகள் - நாட்டுப்புற வழிபாட்டு முறைகள் - கல்வித்திட்டங்களுக்கு நாட்டுப்புறவியலைப் பயன்படுத்துதல் - மக்கட்பெயராய்வு - ஊர்ப்பெயராய்வு

## நாட்டுப்புறத் தொழில்நுட்பவியல்

மனித இன வரலாற்றில் மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்துகொள்ளச் சில பொருட்களை உண்டாக்கினான். அவற்றையே காலப்போக்கில் அழகுணர்ச்சி வெளிப்படும் வண்ணமும் தொழில்நுட்பம் வாய்ந்தவையாகவும் உருவாக்கி மகிழ்ந்தான். நாட்டுப்புற மக்களால் இப்பொருட்கள் படைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம். நாட்டுப்புற மக்களின் அறிவுத்திறனையும் எளிமையையும் திறமையையும் அழகுணர்ச்சியையும் காண்பதோடு அவற்றில் தொழில் நுட்பம் (technology) அமைந்திருப்பதையும் காண்கிறோம். இதனை நாட்டுப்புறத் தொழில்நுட்பம் (Folk Technology) எனலாம். தொழில் நுட்பம் பற்றிய அறிவு மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தேவைப்படுகின்றது. இந்தியாவில் நாட்டுப்புறத் தொழில்நுட்பம் பற்றி முழுமையாக ஆராயப்படவில்லை. கைவினைப் பொருட்கள் பற்றிய ஆய்வு

குழந்தை நிலையிலே உள்ளது எனலாம். பல்லாயிரம் ஆண்டுக்காலமாகத் தனது திறமையால் பல பொருட்களை உண்டாக்கினான். அப்பொருட்கள் அவனது தொழில் நுட்பத்தைப் பிரதிபலித்து நிற்கின்றன. இயந்திர யுகத்திற்கு முன்னர் தனது நினைவுகளை நிறைவேற்ற தான் அறிந்த தொழில்நுட்பத் திறனால், திறமையால் பல பொருட்களை உருவாக்குதல், மரபு வழியாகப் பல்லாண்டுக் காலம் அவனிடையே வழங்கி வருகின்றது.

நாட்டுப்புறமக்கள் மரபு வழியாகக் கடைப்பிடித்து வரும் முறைகளைக் கையாண்டு பொருட்களைத் தயாரித்தனர். அந்தந்த இடத்திலுள்ள மூலப்பொருட்களைக் கொண்டு தயாரித்தனர். கைவினைப் பொருட்கள் மரபுவழிக் கூறுகளைப் பெற்றிருக்கின்றன. மரபுவழிக் கூறுகளைப் பெற்றிருப்பதோடு கலையம்சம் மிகுந்தனவாகவும் காணப்படுகின்றன. கைவினைப் பொருட்களாக மண்பாண்டம் செய்தல், துணிநெய்தல், தந்த வேலைப்பாடுகள், சங்கு, எலும்பு போன்றவற்றில் உருவம் செதுக்கல், சிலைசெய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். கைவினைப் பொருட்களில் மட்டுமின்றி மனித வாழ்வுக்குப் பயன்படுத்தும் செக்கு, கலப்பை, மாட்டு வண்டி முதலியவற்றிலும் நாட்டுப்புற மக்களின் தொழில் நுட்பத்தைக் காணலாம். இப்பொருட்களெல்லாம் நாட்டுப்புற மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையிலும் முக்கிய பங்கு வகித்தன.

நாட்டுப்புற மக்கள் அன்றாடம் வாழ்க்கையில் பயன்படுத்தும் எண்ணெய் பிழிந்தெடுக்கும் செக்கு போன்றவற்றிலும் தொழில்நுட்பத்திறன் அடங்கியிருப்பதைக் காண்கிறோம். இந்தியாவின் கிழக்கிலுள்ள பெரும்பாலான பழங்குடிகள் இரண்டு கனமான கட்டைகளை எண்ணெய் எடுக்கப் பயன் படுத்துகின்றனர். இரண்டு கனமான மரக்கட்டை இடையே கூடைகளை வைத்து இறுக்கி எண்ணெயைப் பாத்திரங்களில் சேகரிக்கின்றனர். சீன நாட்டுப்புறங்களிலும் இதேபோன்ற தட்டையான எண்ணெய்ச் செக்குகள் காணப்படுகின்றன. மரக்கட்டைச் செக்கு பீஹாரிலும் ஒரிஸ்ஸாவிலும் பயன்படுத்தப்படுகின்றது. சுழலும் எண்ணெய்ச் செக்குகள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் இருந்தன. இரண்டு மரத்துண்டுகளாலான எண்ணெய்ச் செக்கில் இரண்டு எருதுகளைப் பயன்படுத்துகின்றனர். எண்ணெய்க் கால்வாய்க்குப் பதிலாக மஹாராஷ்டிரத்தில் எண்ணெய்த் துவாரம் உள்ளது. சிறிது மாற்றங்களுடைய செக்கை 'வார்தா கனி' என்றழைக்கின்றனர். இத்தகைய செக்குகளைக் கிராமோதயச் சங்கங்கள் பயன்படுத்துகின்றன.

எண்ணெயைப் பிழிந்தெடுக்க இயந்திரங்கள் உள்ள இக்காலக் கட்டத்திலும் கிராமப்புறங்களில் இன்றும் செக்குகள் பயன்படுத்தப்படுவதைக் காண்கிறோம்.

மனித இனம் நாடோடி வாழ்க்கைக்குப் பின், வேளாண்மையை மேற்கொண்டபோதுதான் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டது என மானிடவியல் பேரறிஞர்கள் கூறுகின்றனர். இக்காலக் கட்டத்தில்தான் பண்பாடும் தோன்றியது. பயிர்செய்யப் பல்வேறு வேளாண்மை முறைகளைப் பயன்படுத்திய மனித இனம், பின்னர் உழுவதற்குக் கலப்பை போன்றவற்றைப் பயன்படுத்தத் தொடங்கியது. மனித இனம் பயன்படுத்திய பல்வேறு வேளாண் முறைகளை இன்றும் பழங்குடி மக்களிடையே காணலாம். மனித இன வரலாற்றில் ஏர் கலப்பை உருவாக்கல் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். உழுவதற்குப் பயன்படுத்தப்படும் கலப்பையை அமைப்பு அடிப்படையில் நான்காக வகைப்படுத்துகின்றனர். ஒவ்வொரு கால கட்டத்திலும் மனிதனின் தொழில் நுட்ப அறிவு (teachnological knowledge) பெருகப் பெருக, அவன் உருவாக்கிய பொருட்களிலும் பல மாற்றங்களைச் செய்தான். அக்காலக் கட்டங்களை நோக்க உண்மையிலேயே இதனைக் கண்டுபிடிப்பாகத்தான் கருத வேண்டும். கொழுவைத் தவிர, தலை, உடல், கைப்பிடி, உத்திரம் எனப் பிரிக்கலாம். கொழு பொருத்தப்பட்டுள்ள பாகம் கலப்பையின் தலையாகும்.

**‘அ’ வகைக் கலப்பை**

இந்த வகைக் கலப்பையில் உடலும் தலையும் தொடர்ச்சியாக இணைக்கப்பட்டுக் கிடைமட்டமாக உள்ளன. கைப்பிடி, உத்திரம் கலப்பையின் உடலோடு தனியாக இணைக்கப் பட்டிருக்கின்றன. இந்த வகைக் கலப்பைகளை ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், உத்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் காணலாம்.

**‘ஆ’ வகைக் கலப்பை**

இந்த வகைக் கலப்பையில் உடலும் கைப்பிடியும் தொடர்ச்சியாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த வகைக் கலப்பைகளை இராஜஸ்தான், இமாச்சலப்பிரதேசம், மேற்கு உத்திரப் பிரதேசம், மேற்கு மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் காணலாம்.

**'இ' வகைக் கலப்பை**

உடலும் தலையும் ஒரே மரத் துண்டினாலானவை. கைப்பிடி பின்பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வகைக் கலப்பையை இந்தியா முழுவதும் காணலாம். உடலின் பின் பக்கத்தில் கைப்பிடி உள்ளது. உத்திரமானது உடற்பாகத்தில் கைப்பிடியின் கீழாகச் செல்லும், உடலின் உச்சியில் முன்பாகத்தில் கைப்பிடியைக் கொண்ட கலப்பையை ஒரிஸ்ஸாவில் காண்கிறோம். இந்த வகைக் கலப்பையில் கைப்பிடி உடற்பாகத்தில் முன்னால் பொருத்தப்பட்டுள்ளது. கேரளாவிலுள்ள கோட்டயத்தில் காணலாம். உடலின் மேலே பின் பக்கத்தில் கைப்பிடியுடன் கூடிய கலப்பையைப் பீஹாரில் காணலாம்.

**'ஈ' வகைக் கலப்பை**

தலை உடலோடு சாய்வாகப் பொருத்தப்பட்டுள்ளது. கைப்பிடி உடலோடு தொடர்ச்சியாக இணைக்கப்பட்டிருப்பதே இதில் காணப்படும் வேறுபாடாகும். உத்திரத்தைத் தவிர இதர பகுதிகள் யாவும் ஒரே மரத்துண்டினால் செதுக்கி உருவாக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்காளம், அஸ்ஸாம், பீஹார், திரிபுரா போன்ற பகுதிகளில் காணப்படுகின்றது. நாற்கோண வடிவமுள்ள கலப்பையை அஸ்ஸாமில் காணலாம்.

கிராம பொருளாதாரத்தில் மாட்டு வண்டிகள் முக்கிய இடம் வகிக்கின்றன. லாரி, வேன், சரக்கேற்றிச் செல்லும் இரயில் முதலியவை வழக்கத்திற்கு வருமுன் மாட்டு வண்டி மூலம்தான் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பொருட்களை ஏற்றிச் சென்றனர். இன்றும்கூட சந்தைகளுக்கு மாட்டு வண்டியில்தான் பொருட்களை ஏற்றிச் செல்கின்றனர். சக்கர அமைப்பின் அடிப்படையில் மாட்டு வண்டியை மூன்றாக வகைப்படுத்துகின்றனர்.

- ஆரக்கால் இல்லாதது (No spokes)
- இணையான ஆரக்கால்கள் குடத்தின் வழியே செல்வது (Spokes in pairs passing through hub)
- ஆரக்கால்கள் குடத்தைச் சுற்றிப் பொருத்தப்பட்டது. (Spokes radiating from hub).

மூன்று மரப்பலகைகள் ஒன்றோடொன்று பொருத்தப்பட்டு மரச்செக்குக் கருவியால் வட்டமாக உருவாக்கப்படுகிறது. ஆரக்காலில்லாத சக்கர வண்டிகளைப் பீஹார் மாநிலத்தில் காணலாம். வண்டிச்சக்கரத்தின் குடத்தோடு பொருத்தப்பட்ட ஆரவடிவச் சகடக்கால்கள் உள்ள சக்கர வண்டிகள் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் காணப்படுகின்றன. சில வகை வண்டிகளில் ஆரக்கால்கள் சக்கரத்தின் ஒரு ஓரத்திலிருந்து எதிர் ஓரத்திற்குக் குடத்தின் வழியாகச் செல்வதுண்டு. மூன்று ஜோடி சகடக் கால்களும் வெவ்வேறு அகலமுடையவை என்பது குறிப்பிடத்தக்கது. நான்கு இணையான ஆரக்கால்களைப் பெற்றுள்ள வண்டியைக் குஜராத்தில் காணலாம். தடிப்பான ஆரம் போன்ற சகடக் கால்கள், வளைவான மேடையையுடைய வண்டிகளை இராஜஸ்தானில் காணலாம்.

ஆரவடிவ சகடக் கால்களையுடைய மாட்டு வண்டிகளைப் பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா முதலிய நாடுகளில் காணலாம். ஆனால், இணைச் சகடக்கால்களைக் கொண்டுள்ள சக்கர வண்டிகள் இந்தியாவில் மட்டுமே காணப்படுகின்றன.

**மண்பாண்டக்கலை**

மண்பாண்டக்கலை மிகச்சிறந்த கலையாகும். கலையழகுடன் கைத்திறனையும் காட்டி மண்பாண்டம் செய்வதையே பெரும் கலையாக்கிவிட்டனர். உருவ அமைப்பில் மாற்றம் செய்து கலையழகுடன் பொருந்திய பொருட்களை உருவாக்குகின்றனர். பண்டைய வேலைத்திறனுடனும் இன்றைய கலைக் கண்ணோட்டத்துடனும் களிமண்ணால் செய்யப்படுகின்றன. மண்பாண்டம் செய்ததை மனிதநாகரிகத் தொடக்க காலம் என்பர். டாக்டர் வைத்தியநாத் சரஸ்வதி. இத்துறை பற்றி ஆய்வு செய்த முன்னோடியாவார். ஸ்டீபன் இங்கிலீஸ் (Stephen Inglish) மண்பாண்டம் செய்தலைப் பற்றியும் அய்யனார் போன்ற தெய்வங்களை உருவாக்குதல் பற்றியும் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். குயவர்கள் இன்று பழமையான வடிவ அமைப்போடு சித்திர வேலைப்பாடு கொண்ட பல பொருட்களை மண்ணால் உருவாக்குகின்றனர்.

மண்பாண்டம் செய்யும் தொழில் மிக முக்கிய கைவினைத் தொழிலாகக் கருதப்படுகின்றது. மண்பாண்டம் செய்வதை இரண்டாகப் பிரிக்கலாம்: 1. மண்பாண்டம் செய்தல் 2. சுடுமண் பாண்டப் பொருட்கள் (terracolta) செய்தல்.

மண்பாண்டம் செய்தல் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தோன்றியது என்பர். ஆரம்ப காலக்கட்டத்தில் கையாலே மண்பாண்டங்கள் செய்யப்பட்டன. மண்பாண்டம் செய்யும் சக்கரம் அக்காலக் கட்டத்தில் தோன்றவில்லை. மண்பாண்டம் செய்யும் சக்கரம் புதிய கற்காலத்தில் (Neolithic age) தான் தோன்றியிருக்க வேண்டும். ஆரம்பத்தில் கையால் உருவாக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கும் சக்கரத்தால் உருவாக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கும் அதிக வேறுபாடில்லை. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகத்தை நோக்கினும் மண்பாண்டக்கலை சிறந்து விளங்கியுள்ளதைக் காண்கிறோம். மண்பாண்டக்கலை இந்தியா முழுதும் சிறந்து விளங்கியுள்ளது. காலப்போக்கில் அலங்கரிக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கு மிக முக்கியத்துவம் தரப்பட்டது. மக்களின் தேவைக்கேற்ப உற்பத்தியும் பெருகியது. வண்ணங்கள் பூசுவதைப் பெருங்கலையாகக் கொண்டனர். சுடுமண் பொருள்களாலாக்கப்பட்ட மனித உருவங்கள், விலங்கு உருவங்கள், பொம்மைகள் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டன. சமுதாயம் சமூக பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்த காலக்கட்டத்தில் சுடுமண் பொருட்களின் உற்பத்தி பெருகியது எனக் கூறலாம். மண்பாண்டம் செய்தல் மூலம் மனிதனின் கைத்திறனையும் தொழில் நுட்பத்தினையும் அழகுணர்ச்சியையும் ஒருங்கே காணமுடிகிறது.

தமிழக மக்கள் செய்யும் கைவினைப் பொருட்களைக் கண்டு உலகமே வியந்து பாராட்டுகின்றது. கல் சிற்ப வேலைப்பாடு, உலோக சிற்ப வேலைப்பாடு, மர வேலைப்பாடு உலகில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கின்றது. அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பல பொருட்களிலும் அழகுணர்ச்சியையும் தொழில் நுட்பத்தையும் காண்கிறோம். அன்று கண்ட தொழில் நுட்பம் இன்று பல இயந்திர வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. நாட்டுப்புறத் தொழில்நுட்பம் பற்றிய ஆய்வுகள் பெருகின. பண்டைய மனிதன் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தொழில் மதிநுட்பத்தை எவ்வாறு வளர்த்து வந்துள்ளான் என்பதையும் இன்றைய அறிவியல் இயந்திர வளர்ச்சிக்கு அது அடிப்படையாக இருந்துள்ளது என்பதையும் உணராலாம்.

**பயன்பாட்டு நாட்டுப்புறவியல்**

நாட்டுப்புறவியல் ஆய்வு மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் உருவானதே பயன்பாட்டு நாட்டுப்புறவியல் (Applied Folklore). நாட்டுப்புறவியல் அறிஞர்களில் சிலர்

பயன்பாட்டு நாட்டுப் புறவியலைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். அறிவியல் துறைகள் அனைத்தும் பயன்பாட்டினைப் பற்றி (applied) ஆராயத் தொடங்கிவிட்டது. Applied Anthroplogy, Applied Linguistics என அத்துறைகள் விரிந்து பரந்து செயல்படும் போது, நாமும் நாட்டுப் புறவியலைச் சமுகத்திற்குப் பயன்படும் வகையில் (Social relevant) ஆராயவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். நாட்டுப்புறவியலை அறிவியல் துறையாக ஏற்றுக்கொண்டால், நிச்சயம் அதன் பயன்பாட்டினையும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நாட்டுப்புறவியலுக்கும் பிற துறைக்குமுள்ள உறவைக் கண்டறிவதும் பயன்பாட்டு நாட்டுப்புறவியலாளரின் (Applied Folklorists) கடமையாகும்.

சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி ஆராயும் போது, இழப்பு, பெற்றது, மாற்றம் பற்றி மிகக் கவனமாக ஆராயப் படவேண்டும். பயன்பாட்டு நாட்டுப்புறவியலைப் புறக்கணித்தால் இவ்வாய்வைச் செய்யமுடியாது. 'நாட்டுப்புறவியலையும் பயன்பாட்டு நாட்டுப்புறவியலையும் வேறுபடுத்திக் காண்பது இன்றியமையாதது. ஆராய்ந்தவற்றை மக்களுக்குப் பயன்படுத்தும் முறையைப் பற்றியும் ஆராயவேண்டும். அத்தகைய ஆய்வினைப் பயன்பாட்டு ஆய்வு (Applied research) என்பர். ஆய்வைச் செயல்வினை ஆய்வு (Action Research) பயன்பாட்டு ஆய்வு (Applied Research) எனப் பகுத்துக் காண்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பயன்பாட்டு ஆய்வு மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைய வேண்டும். நாட்டுப் புறவியலை சமூகத்திற்குப் பயன்படுத்தாவிட்டால், நமது கடமையினின்றும் தவறியவர்களாவோம். தாமஸ், கீரின் போன்றோர் வகுப்பறையில் போதிக்கும் கல்வி வாழ்க்கையோடு தொடர்புடையது இல்லை என்கிறார். நாட்டுப்புறவியல் கல்வி வாழ்வோடு தொடர்புடையது என்கிறார். மருத்துவம், முதியோர் கல்வி, சமூக நலத்திட்டங்களைப் பொது மக்களுக்கு எடுத்துரைக்க நாட்டுப்புறவியலைக் குறிப்பாக நாட்டுப்புறக்கலையைப் பயன்படுத்தலாம். தற்கால நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கோட்பாடுகளுக்கும் முறைகளுக்கும் மற்ற துறைகளுக்குக் கடமைப்பட்டுள்ளனர். பயன்பாட்டு நாட்டுப்புறவியலில் மதிப்பீடு மிக முக்கியமான தொன்றாகும்.

நாட்டுப்புறவியல் சமூகத்திற்கு எந்த வகையில் பயன்படத் தக்கது என்பது ஆழமாக ஆராயப்படவேண்டும். ஆராய்ச்சி ஆராய்ச்சிக்காகவே என்ற நிலை மாறி, ஆராய்ச்சி மக்களுக்காக என்ற நிலை வளரவேண்டும். நாட்டுப்புறவியலின் எந்தக்

கூறுகளும் அச்சமூகப் பண்பாட்டுச் சூழலில்தான் ஆராயப் படவேண்டுமென மாலினோவ்ஸ்கி குறிப்பிடுகிறார். நாட்டுப் புறவியல் மக்கள் பண்பாட்டின் ஒரு கூறு. அப்பண்பாட்டுக் கூறுகள் நம்முடைய பழக்க வழக்கங்களிலும் நம்பிக்கைகளிலும் கலைகளிலும் இலைமறை காய்போல் மறைந்து கிடக்கின்றன. இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு, வரதட்சணை, திருமண வயது போன்றவற்றிற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்களுக்கு, நம்பிக்கைகளுக்கு அ∴து எவ்வாறு எதிராக உள்ளது என்பதைப் பயன்பாட்டு நாட்டுப்புறவியலார் சிந்தித்து நீக்க முயல வேண்டும்.

‘நாம் இருவர்
நமக்கு ஒருவர்’

எனக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. ஆனால், நாட்டுப்புற மக்கள் மனதிலே ‘மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்’ என்றும் ‘குழந்தைப் பேறு கடவுளால் தீர்மானிக்கப்படுகிறது’ என்றும் நம்பிக்கொண்டுள்ளனர். சமூக மாற்றத்திற்கேற்ப எண்ணங்களிலும் செயல்பாட்டிலும் மாற்றம் இருக்கவேண்டும். மாற்றமின்றி முன்னேற்றமில்லை என்பது அறிஞர்கள் கண்ட முடிவு. பழங்குடி, சாதி, குழு பற்றிய தனி நிலை ஆய்வுகள் வந்துள்ளன. அச்சமுதாயத்தில் எப்படி மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. நாட்டுப்புற ஆய்வில் பயன்பாட்டு ஆய்வுக்கு நிறைய வாய்ப்புள்ளது. ஆய்வினைச் சமூகத்திற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற நோக்கில் சமூகவியல், மொழியியல், கணிதத்துறைகள் செயல்படத் துவங்கிவிட்டன.

எழுத்துமுறை தோன்றாத காலக்கட்டத்திலே வாய்மொழி இலக்கியங்கள் முறைசாராக் கல்வி (Non-formal education) போன்று செயல்பட்டன. இன்றும்கூட நாட்டுப் புறங்களில் அவ்வாறே செயல்படுவது குறிப்பிடத்தக்கது. குழந்தைப் பாடல்களான நாப்பயிற்சிப் பாடல்கள், எண்ணுப் பயிற்சிப் பாடல்கள், அறிவு வளர்ச்சிப் பாடல்கள், வினா விடைப் பாடல்கள் அனைத்தும் வாய்மொழியாகக் குழந்தைக்குக் கல்வி புகட்டுவன போன்று அமைந்துள்ளன. நீதியை மக்களுக்குப் புகட்ட நாட்டுப்புறக் கதைகள் பயன்பட்டன. இதுபோன்று வாய் மொழி இலக்கியங்கள் மூலம் முறைசாராக் கல்வி போதிக்கப்படுகிறது எனக் கூறலாம். அடிமைப்பட்டுக்கிடந்த நாடுகளில் அந்நியர்க்கெதிரான இயக்கமாக இருந்தது. தேசிய கலாச்சார எழுச்சிக்குப் பக்கபலமாக இருந்தது.

அயர்லாந்து, பிலிப்பைன்ஸ், கியூபா நாட்டு மக்களின் விடுதலை எழுச்சிக்கு நாட்டுப்புறப் பாடல்கள் பயன்பட்டன. வியட்நாம் வீரர்களைக் கிளர்ந்தெழச் செய்தது நாட்டுப்புறப் பாடல்களே. அமெரிக்காவில் வியட்நாம் யுத்த எதிர்ப்பினையும் அதனால் ஆயிரக்கணக்கான அமெரிக்க வீரர்கள் இறந்து படுவதைக் கண்டு அந்நாட்டைச் சார்ந்த ஜோன்பயஸ், பொம்டிலன் போன்றோர் பாடல்கள் இயற்றி மக்களிடையே பரவச் செய்தனர். இப்பாடல்களால் அமெரிக்க மக்களிடையே ஒருவித விழிப்புணர்ச்சி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. ''வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்குக் கப்பமேது'' எனக் கட்டபொம்மன் முழங்கியதை, ஆங்கிலேயக் ஆட்சிக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதையும் அறிவோம்.

நாட்டுப்புறப் பண்பாட்டை உணர்வு பூர்வமாகச் சமூக எழுச்சிக்குப் பயன்படுத்தியவர் பாரதியே. உருவம், உள்ளடக்கம் என இரண்டாகப் பகுத்துச் சமுதாயத்திற்குப் பயன்படக் கூடியது எது என அறிதல் வேண்டும். அஃது பயன்பாட்டு நாட்டுப் புறவியலாளரின் கடமையாகும். சுடலை மாடன், இசக்கி, முத்துப் பட்டன் முதலியவற்றைப் பாடிய வில்லுப்பாட்டு இன்று சமகாலப் பிரச்சனைகளையும் கூறும் வடிவமாக மாறியுள்ளது. நாட்டுப்புறப் பாடல்கள் அல்லது கலைகள் ஆகிய உருவங்கள் புதியவிடயங்களைக் கூறுவதற்குப் பயன்படுவதைக் காண்கிறோம். சமூக மாற்றத்திற்கான பங்களிப்பில் நாட்டுப் புறவியலின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும்.

1. கல்வித் திட்டங்களுக்கு நாட்டுப்புறவியல் கூறுகளைப் பயன்படுத்தல்
    1.1. பொதுக் கல்வி
    1.2. முதியோர் கல்வித்திட்டம்
2. சமூக நலத்திட்டங்களை மக்களுக்கு விளக்க நாட்டுப் புறவியல் கூறுகளைப் பயன்படுத்துதல் (நாட்டுப்புறக் கலை).

வாய்மொழி இலக்கியங்களைச் சார்ந்த நாட்டுப்புறப் பாடல், நாட்டுப்புறக் கதை, கதைப்பாடல், பழமொழி, விடுகதைகளில் எவையேனும் ஒன்றை மாணவர்களுக்குக் கற்பிக்கலாம். இவற்றைக் கற்பிப்பதன் மூலம் பண்பாட்டை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. எழுத்திலக்கியத்திற்கு முற்பட்ட நாட்டுப்புற இலக்கியத்தின் இயல்புகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. இவைகளனைத்தும் பேச்சு மொழியில் அமைந்திருப்பதால் பல்வேறு கிளைமொழி வழக்குகளையும் அறிந்து கொள்ளலாம். மேலும் பேச்சு மொழியிலுள்ள

சொற்கோவைகளை அறிந்து கொள்ளவும் முடியும். வழக்கில் இல்லாத தொன்மை வடிவங்கள் (archaic forms) நாட்டுப்புறப் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன. நாட்டுப்புறவியல் மூலம் அகப் பண்பாட்டையும் புறப் பண்பாட்டையும் அறியலாம். மேலும் வழக்கிலுள்ள பல சொற்கள் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன. மொழி வெளிப்பாட்டுத் திறனை வளர்க்க இஃது பயன்படும் என காப்மேனும் (Kaufman) டாக்லஸூம் (Daugles) கூறுகின்றனர். அவர்களே இச்சோதனையில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றிருக்கின்றனர். மொழி வெளிப்பாட்டுத்திறன் வளர்வதோடு அழகுணர்ச்சி எண்ணமும் வளர்வதைக் காண்கிறோம். பாடல்களும் கலைகளும் மாணவர்களின் கலை, கற்பனை, அழகு உணர்ச்சியை வளப்படுத்தும். நாட்டுப்புறப் பாடல்களை இசையோடு கற்றுத் தரும்போது மாணவர்களின் அறிவுத்திறன் வளர்வதாகச் சர்மா குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கக் கட்டுப்பாடின்மை, விரக்தி, எதிலும் வெறுப்பு, பொறுப்புணர்ச்சியின்மை போன்றவற்றால் சீரழிந்து கொண்டிருக்கும் மாணவர் சமுதாயத்தை நாட்டுப்புறக் கலையில் ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களை மாற்றவும் திருத்தவும் முடியும். இவ்வாறு திருத்துவதைக் கூத்துச் சிகிச்சை (drama therapy) என அழைக்கின்றனர். நாட்டுப்புறக் கலையில் ஈடுபடும் போது அவர்களது கவனம் வேறு திசையில் திருப்பப்படுகிறது. அது ஆக்கப் பணிக்குப் பயன்படும்.

வயது வந்தோர் கல்விக்கு (Adult Education) நாட்டுப் புறவியலைப் பயன்படுத்தலாம். வயது வந்தோர் கல்வியில் நாட்டுப்புறப் பாடலும் நாட்டுப்புறக் கலையும் பயன்படுத்தப்படுகின்றன. வயது வந்தோர் கல்வி மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவதோடு மக்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகட்கு வழி காணவும் கிராமப் பொருளாதாரம் உயரவும் வழி வகுக்கின்றது. வயது வந்தோர் கல்விக்கு வேறுபட்ட அணுகுமுறை தேவைப்படுகின்றது. சிந்தனையைத் தூண்டும் வீதத்தில் அறிவுப்பூர்வமாக இருத்தல் வேண்டும். நாட்டுப்புறப் பாடல் மூலம் உணர்த்துவது ஒரு வழியாகும். இசையுடன் பாடலைப் பாடும்போது எளிமையாக அவர்களது மனதில் பதிகிறது. நாட்டுப்புறப் பாடல்களின் இசையையும் மெட்டையும் கையாண்டு வயது வந்தோர் கல்வியின் அவசியத்தை உணர்த்தலாம்.

‘ஏமாத்தும் முதலாளி எழுதும் கணக்க நம்பிக்கிட்டு
ஓடாக உழைக்கிறீங்க மூணுகாசு மிச்சமில்லை
கண்ணிருந்தும் படிக்காமலே கைநாட்டு வைக்கிறீங்க
படிப்பு மட்டும் இருந்திச்சின்னா ஏமாத்தமே இருக்காதுங்க’

இவற்றின் மூலம் எண்ணறிவு, எழுத்தறிவு முதலியவற்றையும் கற்றுத்தர வேண்டும். நாட்டுப்புறக் கலைகள் மூலமும் கல்வி கற்பிக்கலாம். நாட்டுப்புறக்கலைகள் மக்கள் கலைகள். இக்கலைகள் பேச்சு மொழியிலே அமைந்துள்ளன. நாட்டுப்புறக்கலை ஒரு சமூகச் செயல் ஆகும். மக்களது எண்ணங்கள், எழுச்சி, செயல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் கூட்டு முயற்சியாகும். சமூக மாற்றங்களைக் கொணர நாட்டுப்புறக் கலைகளைப் பயன்படுத்தலாம். இக்கலைகளில் நாட்டுப்புற மக்களுக்கு ஒரு ஈடுபாடு உண்டு. ஈடுபாடு உள்ளவற்றின் மூலம் கற்பித்தால் நிச்சயம் அதற்கொருபலன் உண்டு. வயது வந்தோர் கல்வியில் புதிய திருப்பம் ஏற்படுத்த புதுமெருகு கொடுக்க இக்கலைகள் பயன்படும். மக்களுக்கு அறிமுகமான கலையைக் கொண்டு கற்க வாய்ப்பு அளிக்கும் போது அக்கல்வியில் பிடிப்பு, தன்னம்பிக்கை ஏற்படுகின்றன. வயது வந்தோர் கல்வியில் கலை மூலம் கற்பித்தல் ஒரு கிரியா ஊக்கியாகும்.

முதியோர் கல்வியின் சிறப்பை வில்லுப்பாட்டு மூலம் விளக்கலாம்.

‘சுயதேவைப் பூர்த்தி செய்திடவே
தூண்டுகோல் முறை சாராக்கல்வி
கேள்வி ஞானம் எழுத்தறிவு
கிளர்ந்து எழுந்திடச் செய்திடுமே’

‘உழைத்துக் கொண்டே படிப்பதற்கு வழியை வகுக்கும்
முறை சாராக் கல்வி, முதியோர்க் கல்வி
உழைத்து ஓய்ந்திருக்கும் நேரம் - கற்றிடலாமே
முறை சாராக் கல்வி, முதியோர் கல்வி
சுற்றுப்புறச் சூழ்நிலையை ஆய்ந்தளித்திடும்
முறை சாராக் கல்வி முதியோர்க்கல்வி’

‘தற்குறி கைநாட்டென்று
தாழ்ந்துள்ள நம்மவர்க்கு
அற்புதச் சக்தியடி கிளியே
அறிவைத் துவக்கும் கல்வி’

நாட்டுப்புறக்கலைகள் மூலம் வயது வந்தோர் கல்வியைப் புகட்டுவதுபோல, நாட்டுப்புறக்கலைகள் மூலம் மக்களுக்குச் சமூக

நலத்திட்டங்களையும் விளக்கலாம். வில்லுப்பாட்டு மூலம் ஐந்தாண்டுத் திட்டங்களும் குடும்பக் கட்டுப்பாடும் தேசிய வளர்ச்சித் திட்டங்களும் தொலைக்காட்சியில் காட்டப்படுகின்றன. அக்காலத்தே கலைவாணர் வில்லூப்பாட்டு மூலம் மதுவிலக்குப் பிரச்சாரமும் சுப்பு ஆறுமுகம் காந்தி மகான் கதையையும் கூறினர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டங்களை விளக்கப் பெரும்பாலும் நாட்டுப்புறக்கலையான வில்லுப் பாட்டைப் பயன்படுத்துகின்றனர். இக்கலைகள் மூலம் சிறுசேமிப்பு (small savings) கூட்டுறவின் நன்மை, பசுமைப் புரட்சித் திட்டம் முதலியவை விளக்கப்படுகின்றன. பொது மக்களின் ஆர்வத்தை தூண்டக்கூடிய கலை நிகழ்ச்சிகளில் இக்கருத்துக்களைக் கூறி மக்களை இதில் ஈடுபடச் செய்வது எளிதானதும் பயன்தரக் கூடியதும் ஆகும்.

**சிறுசேமிப்பு (small savings)**

‘தேனீயைப்போல வாழ்வில் சிறப்புடனே பணிபுரிந்து
சேமித்து வைக்கவேணும் கண்ணாத்தா- அவசரத்
தேவைக்குப் பயன் கொடுக்கும் பொன்னாத்தா
பாடுபட்ட பணத்தை அன்று பகுத்தறிவு இல்லாமலே
பூமியிலே பொதச் சாங்க கண்ணாத்தா - அதைப்
புதையல் என்று சொன்னாங்க பொன்னாத்தா
பாடுபட்ட பணத்தில் ரூபாய் பத்து மாதாமாதம்
சேமிப்பதில் சிரமமில்லை கண்ணாத்தா-தொகை
சிறப்புடனே வளர்ச்சிபெறும் பொன்னாத்தா
வளர்ச்சி பெற்ற தொகையளவுக்கு வயதான காலங்களில்
தளர்ச்சிதனை விரட்டிவிடும் கண்ணாத்தா
தன்மானத்துடன் வாழ்ந்திடுவோம் பொன்னாத்தா’.

நாட்டுப்புற மருத்துவம் (Folk medicine) காலங்காலமாக நாட்டுப்புற மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நாட்டுப்புற மருத்துவம் பற்றி இந்திய நாட்டில் விரிந்த அளவு ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. இன்றும் கூட நாட்டுப்புறத்தில் மட்டுமின்றி நகரப் புறத்தில் கூட மஞ்சள் காமாலைக்கு நாட்டுப்புற மருத்துவமே பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புற மருத்துவம் பற்றி அறிவியல் முறையில் பரிசோதனைக் கூடத்தில் (laboratory)

ஆய்வு செய்து, அதன் பலன் மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். இதனை அரசு உடனே செய்தாக வேண்டும்.

மாறிவரும் சமூக அமைப்புக்கேற்ப நாட்டுப்புறக் கலைகளைச் சமூக மாற்றத்திற்கான கருவிகளாக மாற்ற முயல வேண்டும். இத்தகைய ஆராய்ச்சிகள் மக்களுக்குப் பயன்படக் கூடியவையாகும்.

**நாட்டுப்புற விளையாடல்கள்**

விளையாட்டு என்பது செயற்பாட்டினைப் பொறுத்தது அன்று. ஈடுபடுவோரின் மனநிலையைப் பொறுத்தது. அம் மனநிலை செயற்பாட்டிலேயே ஆறுதல் பெறுவதாகும்.

வேலை வேறு, விளையாட்டு வேறு. கருத்தைக் கவருவது விளையாட்டு, கவராதது வேலை. இரண்டிலும் கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும் உண்டு.

ஆட்டம் வேறு விளையாட்டு வேறு என்பவரும் ஆட்டமும் விளையாட்டும் ஒன்றே என்பவரும் உளர். ஆட்டத்தில் வெற்றி தோல்வி இல்லை. விளையாட்டில் உண்டு. விளையாட்டில் சட்ட திட்டங்கள் உண்டு. ஆட்டத்தில் இல்லை. ஆட்டத்தில் கலையம்சமும் ஒப்பனையும் உண்டு. விளையாட்டில் இல்லை.

நாட்டுப்புறங்களில் நடைபெறும் விளையாடல்களை ஆய்வது அம்மக்களின் நடைமுறைகளையும் நல்வாழ்வினையும் ஆய்வது போன்றதாகும்.

## விளையாட்டுகளின் தன்மைகள்

விளையாட்டுகளைப் பற்றிப் பல கொள்கைகள் கூறப்படுகின்றன. 1. மிகுதியாற்றல் கொள்கை (Surplus Energy Theory), 2. ஓய்வுக் கொள்கை (Recreation Theory), 3. தொகுத்துரைக்கும் கொள்கை (Recapitulation Theory), 4. இயக்கக் கொள்கை ஆகியவை குறிப்பிடத்தக்கன.

## 1) மிகுதியாற்றல் கொள்கை

“உயிர்கள் தம் தேவைக்கு எஞ்சிய ஆற்றலை நோக்கமற்ற விளையாட்டில் செலவிடுகின்றன” என்பார் ஷில்லர் (Schiller).

### 2) ஓய்வுக் கொள்கை

“களைப்புத் தீர இளைப்பாறுவதற்கு வேண்டுவதே விளையாட்டு” என்பார் பாட்ரிக் (Patrich).

### 3) தொகுத்துரைக்கும் கொள்கை

“விலங்குகள் போல் திரிந்த நிலை, வேட்டை ஆடிய நிலை, நாடோடி நிலை, மாடு மேய்த்த நிலை, உழவு நிலை முதலியனவாக மக்களது பண்பாடு படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. இவையே விளையாட்டில் மிளிர்கின்றன” என்பார் ஸ்டான்லி ஹால் (Stanly Hall).

### 4) இயக்கக் கொள்கை

1. “உள்ளுக்குள்ளே கிடக்கும் கிளர்ச்சிகள் மனம் முறியாதபடி வெளிவர அமைந்த ஒரு வழியே விளையாட்டு” என்பார் ஆப்பிள்ட்டன் (Appleton) அம்மையார்.

2. “வேட்டை, போர், தொழில், போலச் செய்தல் போன்றவை விளையாட்டுகள் தோன்றும் நிலைக்களன்களாக அமைகின்றன” என்பார் இரா.பாலசுப்பிரமணியம்.

3. அ. பிச்சை என்பவரும் விளையாட்டுகளின் வரைவு இலக்கணம், வகைப்பாடு, அமைப்பு, ஆடும் முறை, விளைவு ஆகியவற்றை விளக்கமாக ஆராய்கிறார்.

### விளையாட்டுகளின் வகைகள்

விளையாட்டுகளை அவற்றின் நிலைகளைக் கொண்டு வீர விளையாடல்கள், பொழுதுபோக்கு விளையாடல்கள் என இருவகையாகப் பகுக்கலாம்.

- விற்போர், மற்போர், சிலம்பம், சடுகுடு, மஞ்சு விரட்டு, சேவல் சண்டை போன்றவை வீர விளையாட்டுகளாகும். சொக்கட்டான், பந்து, அம்மானை, பொம்மை, சீட்டுப் போன்றவை பொழுதுபோக்கு விளையாட்டாகும். மஞ்சுவிரட்டு, கோழிச்சண்டை, பன்றிச் சண்டை, ஆட்டுச் சண்டை

போன்றவை சில விழாச் சடங்குகளில் நடைபெறுவதால் இவற்றைச் சடங்குக் குரியவைகளாகக் கருதலாம்.

- வீர விளையாடல்களில் உடலுக்கு வேலை இருப்பது போன்று அறிவுக்கும் வேலை உண்டு. எனவே, இவற்றை இயக்க வகை விளையாடல் என்றும் அறிவு வகை விளையாடல் என்றும் அழைக்கலாம்.

விளையாட்டுகளைப் பொதுவாக அகவிளையாட்டுகள் (Indoor games) என்றும் புறவிளையாட்டுகள் (Outdoor games) என்றும் பகுத்துக் கொள்ளலாம்.

தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், மஞ்சள் நீர் தெளித்தல் போன்ற மகளிர் விளையாட்டுகளும் தென்னை மரத்து விளையாட்டு, பருப்புக் கடைதல், அத்தளி புத்தளி, கில்லாப்பறண்டி, உச்சரிப்பு விளையாட்டு, தட்டலங்கா புட்டலங்கா, ஐயன் கொம்பு, வினாவிடை சங்கிலி, சீப்பு விக்கிது போன்ற குழந்தை விளையாட்டுகளும் அகவிளையாட்டுகள் ஆகும்.

சல்லிக்கட்டு, பாரி வேட்டை, சிலம்பம், சடுகுடு, இளவட்டக்கல், ஓட்டம், உரிமரம் ஏறுதல், இரட்டை மாட்டுப் பந்தயம், மோடி விளையாட்டு, கட்ட விளையாட்டு, பதினைந்தாம் புலி, நட்சத்திர விளையாட்டு, பொம்மைச் சீட்டு, மூணு கட்டை, சூதுதாயம், பானை உடைத்தல், உறிப்பானை விளையாட்டுப் போன்ற ஆடவர் விளையாட்டுகளும் தொட்டு, குரங்கு, உயிரெழுப்பி, உயிர்கொடுத்து, கண்ணாமூச்சி, கோட்டான் கோட்டான், பூப்பறிக்க வருகிறோம், மெல்ல வந்து மெல்லப் போ, உருண்டை உருண்டை, எண் விளையாட்டு, நொண்டி, கோழிக்கால், நான்கு மூலைக்கல், எலியும் சோளக்கதிர், சிறு வீடு, பூப்பூ புளியம்பூ, குலை குலையாய் முந்திரிக்கா, கொம்பரைக் கொம்பரை, ஈசல் பிடித்தல், மரங்கொத்தி, காயா பழமா, கண்ணாம் பூச்சி, கல்லுக்குச்சி, காக்காக் குஞ்சு, காக்காக் கம்பு, வண்ணான் பொதி, நெல்லிக்காய், மந்திக் குஞ்சு, ஓடு குஞ்சு, ஓடு சிக்கு, உப்பு, நிலாப்பூச்சி, சீத்தடி குஞ்சு, அந்தக் கழுதை இந்தக் கழுதை, குத்து விளையாட்டு, ஐந்து பந்து, மதிலாட்டி பூக்குதிரை, கல்லுக் கொடுத்தான் கல்லே வா, குதிரைக் கல்லு, ஆனமானத்திரி, பச்சைக் குதிரை, கல்தாண்டி, கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, எறி பந்து, பம்பரம், குண்டு, எறிகாய், உருட்டான், கெல்லுக்காய், கண்டு முத்து, ஒற்றையா இரட்டையா, ஊது முத்து, குச்சு, தவளை, வில்லுக்குச்சி, கிளித்தட்டு, ராஜா மந்திரி, வண்டியுருட்டுதல், கால் தூக்குகிற கணக்குப்பிள்ளை, கள்ளன் போலீஸ், கல்லெடுத்தல், தீப்பந்தம் சுற்றுதல், பரணிபரணி, காற்றாடி, பட்டம்,

ஒண்ணாங்கிளி இரண்டாங்கிளி, பருப்புச் சட்டி, கண் கட்டி, தந்தி போகுது தபால் போகுது, மாது மாது, திரித்திரி, கில்லி, அக்கக்கா கிளி செத்துப் போச்சு, மெச்சிலே யாரு, கிழவி, கொக்கு, கொடுக்கு, மோரு, சோற்றுப் பானை, பூசணி, மத்தாடுதல், கரகர வண்டி, பிஸ்ஸாலே பறத்தல், இம்மாம் பறவை, கியாக்கியாக் குருவி, மலையிலே தீப்பிடிக்குது போன்ற சிறுவர் சிறுமியர்க்கான விளையாட்டுகளைப் புறவிளையாட்டுகள் என்றும் கூறுவர்.

பங்கு பெறுவோர் அடிப்படையில் விளையாட்டுகளை மூன்று வகையாகவும் பகுக்கலாம்.

1) தனி நபர் விளையாட்டு
2) இருவர் விளையாட்டு
3) குழுவினர் விளையாட்டு

## வீர விளையாட்டுகள்

வீர விளையாட்டுகள் பெரும்பாலும் வீட்டிற்கு வெளியே நடைபெறுவதுண்டு. இவற்றின் வெற்றி தோல்வி வீரர்களைப் பெரிதும் பாதிக்கும். உயிரைத் துச்சமாக்கித் துள்ளும் வீரர்களின் விளையாடலானது கண்டு களிக்கும் வகையில் சிறப்புடையன.

சடுகுடு, சிலம்பம், மற்போர், மஞ்சு விரட்டு, மிருகச் சண்டைகள் போன்ற வீர விளையாட்டுகள் ஊர் மன்றங்கள், தெருக்கள், மந்தைகள் ஆகிய களங்களிலேயே நடைபெறும்.

வீர விளையாட்டுகளில் பெரும்பாலும் ஆண்களே பங்கு கொள்ளுகின்றனர். குழந்தைகளும் பெண்களும் விலக்கப்படுகின்றனர்.

## சிலம்பம்

இது தற்காப்பு விளையாட்டாகவும், தாக்குதல் போராகவும் உள்ளது. கள்ளர் சாதியிடம் கோற்சிலம்பமும், மறவர் சாதியிடம் வாள் சிலம்பமும் வழக்கில் இருக்கிறது. இவற்றுடன் சுருள்வாள், பந்துகோல், எரிக்கழி போன்ற கருவிகளும் சிலம்பத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

பகைவரின் கல்லடி, கழிலடி போன்றவற்றை இவ்விளையாட்டு தடுக்கிறது. கண்டோர் வியக்கும் களி விளையாட்டு இது.

1. கம்பு விளையாட்டு, நெற்றிப் பொட்டுக் கம்பு விளையாட்டு, உயில் சிலம்பு என்று இதனைப் பல்வேறு பெயர்களால் அழைப்பர்.

2. சிலம்பு என்றால் ஒலித்தல் என்று பொருள். கம்புகளை அடித்து ஒலி எழுப்புவதால் இப்பெயர் வந்திருக்க வேண்டும்.

3. இது உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டு விளங்குகிறது. தனி மனிதன் தன் கலைத்திறனை விளக்கவும் இக்கலையில் இடமுள்ளது. வேகம், திடீரெனச் சுழற்சி மாற்றுதல், முன் பின் திரும்பி ஆடல் ஆகியவற்றில் கவர்ச்சியும் வியப்பும் உள்ளன. இதில் பலவிதமான சுவடு முறைகள் உள. அஞ்சாமை, வீரம், நுட்பம், துரிதம், கவனம் ஆகிய தன்மை உடையவர்களே தேர்ந்த சிலம்புக் கலைஞர்களாக முடியும்.

## மற்போர்

இது ஒரு தொன்மையான விளையாட்டு. உண்மையாகவே உள்ளத்தில் சினமோ, பகையோ இல்லாமல் வெற்றி தோல்விக்காக ஆடும் விளையாட்டு இது. இதற்குப் பயிற்சி தேவை.

மல் என்றால் வலிமை என்று பொருள். தம் வலிமையை வெளிப்படுத்தப் போரிடுவதே இவ்விளையாட்டு. இதற்கெனப் பழகிய மல்லர்களே இவ்விளையாட்டில் ஈடுபடுவர்

## மஞ்சுவிரட்டு

இதனைச் சல்லிக்கட்டு, மாடுபிடி, காளைப்போர், மஞ்சிவிரட்டு. மஞ்சு வெருட்டு என்று பலவாறு அழைப்பர். பழந்தமிழர் ஏறு தழுவல் என்றனர்.

பொங்கல் விழாவில் இவ்விளையாட்டு நடைபெறும். சல்லி என்பது காளையின் கழுத்தில் கட்டப்படும் வளையமாகும். காளையை அடக்கிச் சல்லியைப் பறிப்பவரே வென்றவர் ஆவர். வெற்றி வீரனுக்குப் பரிசு அளிக்கப்படும். தென் மாவட்டங்களில் இவ்வீர விளையாட்டு சிறப்பாக நடைபெறும். அதில் துணிவே துணை.

1. சல்லிக்கட்டு என்பதற்குச் சல்லி என்ற பெயருடையாத வீரன் ஒருவனே காரணம் என்று கலைக்களஞ்சியம் கூறும். சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையம் என்றும் கூறுவர்.

2. ஏறு தழுவுதல் என்று கலித்தொகை கூறும் (முல்லைக்கலி,104-103). ஆனால் இதனைப் பெண்ணுக்கு மணமகனைத் தேர்ந்தெடுக்கவே நிகழ்த்தினர்.

3. சல்லிக்கட்டு நடைபெறும் இடத்தினை வாடி வாசல் என்பர்.

## சடுகுடு

பலிஞ்சடுகுடு, பலீன் சடுகுடு, கபடி என்று பலவாறு அழைப்பர்.

1. பழந்தமிழரசர்களிடையே நிரை கவர்வதும், கவர்ந்த நிரைகளை மீட்பதும் ஆகிய செயல்கள் இருந்தன. இதனடிப்படையில் போரும் எழுந்தது. போரில் தங்கள் பக்கம் வெற்றி கிட்ட வேண்டுமென்று இரு தரப்பினருமே காளியை வணங்கினர். இச்சமயம் சடுகுடுப்பை அல்லது குடுகுடுப்பை என்ற பறையால் ஒலி எழுப்பிப் பலி கொடுத்து வழிபட்டிருந்திருப்பர். போரின் செயல்பாடு விளையாட்டிலும் இருப்பதால் பலிஞ் சடுகுடு என மாறி மருவி வந்திருக்கலாம் என்பார் எஸ். நவரோஜ் செல்லையா.

2. இவ்விளையாட்டில் திறன் சோதிப்பது, சஞ்சீவினி, ஆடாது ஒழிவது என்ற வகைகள் உள்ளன.

3. "சடுகுடு மலையில் ரெண்டான
தவறி விழுந்தது கெழட்டான
தூக்கிவிட்டது நாந்தான............"

என்பது போன்ற பாடல்கள் பாடப்படும்.

## மிருகப்போர்

1. பன்றி, ஆடு போன்ற மிருகங்களையும் சேவல் போன்ற பறவைகளையும் ஒன்றோடு ஒன்று போரிட வைக்கும் விளையாட்டும் உண்டு. யாருடைய மிருகம் அல்லது பறவை வெல்கிறது என்ற போட்டியே இவ்விளையாட்டில் உள்ளது.

2. சேவல் போரைச் சேவல் கட்டு என்பர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காடுவெட்டி என்ற ஊரில் வாரந்தோறும் நடைபெறுகிறது. பந்தயம் கட்டிக் களத்தில் சேவல்களை விடுவர். சேவல்களைப் போர்ச் சேவல் என்ற பெயரில் சிறப்பாக வளர்ப்பார்கள். காலில் கத்திகள் கட்டப்பட்டிருக்கும். வெல்லுகிற சேவலின் உரிமையாளருக்கும் பந்தயத் தொகை கிடைக்கும்.

வெற்றி தோல்வி இல்லாமல் இருந்தால் விராசி அதாவது சமாதானம் கூறி முடித்து விடுவர்.

3. ஆட்டுக்கிடாய்களும் போரிடும். அவற்றின் கொம்புகள் பயங்கரமான ஒலியுடன் மோதும். இதற்கெனப் போர்க்கடாக்களைக் கவனித்து வளர்ப்பர்.

4. மாட்டுவண்டிப் பந்தயமும் குறிப்பிடத்தக்கது. இவற்றில் ஒற்றை மாட்டுவண்டியை, ரேக்ளா என்றும் இரட்டை மாட்டுவண்டியை வண்டிப் பந்தயம் என்றும் அழைப்பர். முந்துகிற இரட்டை வண்டிக்காரருக்குப் பரிசுப் பணம் கிடைக்கும். குமரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கொட்டாரத்திலிருந்து கன்னியாகுமரி வரை இப்பந்தயம் நடைபெறும் என்பார் டாக்டர் ஏ. என். பெருமாள்.

## பொழுதுபோக்கு விளையாட்டுகள்

பொழுதுபோக்கு விளையாட்டுகள் பெரும்பாலும் வீட்டிற்கு உள்ளேயும் குறைந்த அளவில் வெளியேயும் நடைபெறும். இவற்றை அக விளையாட்டு (indoor), புறவிளையாட்டு (out door) என்று அழைப்பர்.

பொழுதுபோக்கு விளையாட்டுகளில் ஆண்களைவிடப் பெண்களே அதிகம் பங்கு கொள்ளுகின்றனர். குழந்தைகளும், முதியவர்களும், செல்வர்களும் ஓய்வில் உல்லாசமாக விளையாடுகின்றனர்.

## 1. பந்து விளையாட்டுகள்

கயிறு, துணி, இரப்பர் போன்றவற்றால் செய்யப்பட்ட பந்துகளை எறிந்தும் உதைத்தும் போட்டுப் பிடித்தும் விளையாடுகின்றனர். பிள்ளையார் பந்து, பேயம் பந்து, கிட்டிப் பந்து, எறி பந்து, மசப்பந்து, துவட்டிப் பந்து போன்ற பந்து விளையாடல்கள் கிராமங்களில் நடைபெறும். கால் பந்து, கூடைப் பந்து, பூப்பந்து, கைப்பந்து போன்ற நகர விளையாடல்கள் தற்போது கிராமங்களில் தலை நீட்டினாலும் இவை நாட்டுப்புற விளையாடல்கள் அல்ல.

1. ஒரு கல்லினைப் பிள்ளையாராகப் பாவித்துக் கொள்வர். அதனைப் பந்தால் எறிந்து வீழ்த்துவது பிள்ளையார் பந்து ஆகும். இரண்டு கட்சிகள் ஆகப் பிரிந்து கொண்டு ஒரு கட்சியர் எறிய, மற்றவர்கள் பிடித்து விளையாடுவர். எறிந்த பந்து எழும்பி வரும் போது எதிர்க் கட்சியினர் பிடித்து விட்டால் எறிந்தவர் வெளியேறி விடவேண்டும்.

2. எறி பந்தும் பேய்ப் பந்தும் ஒன்றுதான். கொஞ்சம் முரட்டுத்தனமான விளையாட்டாகையால் பேய்ப்பந்து என ஆயிற்று. பந்துள்ளவர் யாரையாவது குறிபார்த்து எறிய அவர் பிடிக்க என ஒருவர் மீது ஒருவர் எறிந்து விளையாடும் ஆட்டம் இது.

## 2. பம்பரம்

பம்பரம் என்பது ஒரு விளையாட்டுக் கருவி. சாட்டை எனப்படும் கயிற்றால் ஆடுவது கயிற்றுக்குப் பெயரே பம்பரக் கயிறு என ஆயிற்று.

இது குத்துப் பம்பரம் எனவும் அழைக்கப்படும். வட்டத்துக்குள்ளே ஒருவனது பம்பரம் இருக்க மற்றவர்கள் அப்பம்பரத்தைக் குத்தி வெளியே தள்ளுவார்கள். உடனே குத்தப்பட்டவனையும் சேர்த்து அனைவரும் பம்பரத்தைத் தரையில் விட்டுக் கயிற்றால் கையில் எடுக்க வேண்டும். கடைசியில் எடுப்பவர் வட்டத்துக்குள் பம்பரத்தை வைக்க வேண்டியதுவரும். பம்பரத்தைத் தரையில ஆடவிடுவதுடன் கயிற்றில், உள்ளங்கையில், உச்சந்தலையில், நெற்றியில் என ஆடவிடுவர். சிலர் பம்பரத்தைத் தரையில் படாமலேயே கையில் எடுத்து விடுவர்.

## 3. கோலிக்காய்

இதனைக் குண்டு விளையாட்டு என்றும் கூறுவர். இதனை வட்டாடுதல், உண்டை உருட்டுதல் என்றும் அழைத்திருக்கின்றனர். குழிக்குண்டு, உருட்டுக்குண்டு. பேந்தா, ஜெய் குண்டு என நான்கு வகைப்படும். உருட்டுக் குண்டினைச் சில இடங்களில் இரு குழியாட்டம் முக்குழி ஆட்டம் என்றும் அழைப்பர்.

சிறு குழி தோண்டி, குழியில் கோலிக்காய் உருட்டி விளையாடுவது, அரங்கிற்குள் குண்டினை உருட்டிப் பின் குறி பார்த்து அடித்தாடுவது உருட்டுக் குண்டு ஆகும். பேந்தா எனப்படும் செவ்வக கட்டத்தில் ஆடுவது பேந்தா ஆகும். அரங்கிலுள்ள குண்டுகளை உருட்டி வெளியேற்றினால் தனதாக்கி ஜெய்குண்டு என்பர்.

## 4. கிட்டிப்புள் (குச்சி)

ஒரு பெரிய குச்சியும் சிறிய குச்சியும் வைத்து ஆடும். ஆட்டத்தைக் கிட்டிப்புள் என்பர். இது கோட்டுக்கிட்டி, கீந்து கிட்டி என இருவகைப்படும்.

(1) வட்டமான கோடு வரைந்து விளையாடினால் கோட்டுக்கிட்டி ஆகும். நீளமான கம்பினைக் கையில் பிடித்துக் கொண்டு, சிறு கம்பினைப் பத்து வரைக்கும் தட்டுதல் வேண்டும். ஒரே தடவையில் பத்து அடித்தல் என்பது இயலாது. இரண்டு மூன்று தடவைகளில் அடித்து விடலாம். யார் முதலில் பத்து அடிக்கின்றாரோ அவர் பழமாகி விடுவார். இறுதியில் ஒருவர் காயாவார். அதாவது தோற்றுப் போவார். பழமேறியவர் வட்டமான கோட்டிற்குள் நின்று கொண்டு நீளக் கம்பினால், சிறு கம்பினை இழுத்து அடிப்பர். சிறு கம்பு எங்குப் போய் விழுகிறதோ அங்கிருந்து அதனைத் தூக்கி வட்டக் கோட்டிற்குள் விழும்வரை பழம் காய்ச்சுபவர் அடித்துக் கொண்டே இருப்பார். அடித்துப் போடும் சிறு கம்பினைத் தோற்றவர் பிடித்துவிட்டால் பழம் கருகிப் போய்விடும்.

(2) குழியில் சிறு கம்பினை வைத்து நீளக் கம்பினால் தள்ளி விளையாடுதல் இது. ‘கீந்து கிட்டி’ என அழைக்கப்படுகிறது. சிறுவர்கள் இரு அணியாகப் பிரிந்து நிற்பர். ஒரு அணி உரிமையைப் பெறும். கீந்திய பின்னர், நீளக்கம்பினைக் குழிக்கருகில் இருக்கும் பள்ளத்தில் வைத்து விடவேண்டும். எதிர் அணியினரில் ஒருவர் சிறு கம்பினை எடுத்து நீளமான கம்பினை நோக்கி எறிவார். சரியாக எறிந்து விட்டால் கீந்தியவர் ஆடுமுறை முடியும். பின் அடுத்தவர் கீந்த வேண்டும். குழிக்கருகில் எறிந்த சிறு கம்பு ஒரு கம்பளவு தள்ளி விழுந்தால் ஆட்டம் தொடரும். சிறு கம்பினைத் தூக்கி எறியும் போது கீந்துபவர் நீளக் கம்பினால் அடிக்கலாம். சிறு கம்பு நூறு கம்பளவு தூரத்தில் விழுந்தால் ஒரு மொட்டை என்று குறிப்பிடுவர். பின்னர் இதற்காகப் பழம் காய்ச்சுவர்.

## 5. பொம்மை விளையாட்டு

பெண்கள் துணி, மரக்கட்டை, மண், கல் போன்றவற்றால் பொம்மைகளைச் செய்து விளையாடுவர். குழந்தைகள் சிறுவீடுகட்டி விளையாடுவதும் இவ்விளையாட்டு தான். வண்டல் என்றும் பாவை என்றும் சங்கப்பாடல்கள் இதையே குறிப்பிடுகின்றன. வாழ்வின் ‘ஒத்திகை நாடகம்’ என்றே இதனைக் குறிப்பிடலாம்.

## 6. தாயம்

1. தாயம் என்பதற்கு உரிமை என்று பொருள். தொல்காப்பியம் கூறும் வல்லாட்டமும் குறள் கூறும் வட்டாட்டமும் இதனோடு தொடர்பு உடையது.

2. தாயம், பகடை, அஷ்டாபதம், சதுரங்கம், செஸ் இவை ஏறக்குறைய ஒத்த தன்மையின.

3. நான்கு கட்டத் தாயம், எட்டுக் கட்டத் தாயம், பத்துக் கட்டத் தாயம், தஞ்சாவூர்க் கட்டம், குரங்காட்டம் என நான்கு வகைப்படும் என்பர்.

4. கட்ட விளையாட்டின் வளர்ச்சியே தாயம். போர்க் காலங்களில் ஒரு நாட்டிலிருந்து பிறிதோர் நாட்டிற்குப் படையெடுத்துச் செல்பவர் மலைப்பகுதிகளைத் தாண்டிப் போயினர். இவ்விளையாட்டில் வெட்டுதல், குத்துதல், மலைபோன்ற சொற்கள் போரைக் குறிக்கும்.

## 7. கட்ட விளையாட்டுகள்

1. இதனைப், 'பதினைந்தாம் புலி' என்றும் 'புலியும் நாயும்' என்றும் 'ஆடுபுலி ஆட்டம்' என்றும் அழைப்பர். இவ்விளையாட்டு இந்தியா, இந்தோனேசியா, சீயம், சுமத்திரா, இலங்கை ஆகிய நாடுகளில் வழக்கில் உள்ளது. மூன்று புலிகளும் பதினைந்து ஆடுகளும் இவ்விளையாட்டில் இடம் பெறுகின்றன. புலியைக் கட்டுவதே இவ்வாட்டத்தின் நோக்கம். புலிக்கு வெட்டு இருப்பின் வெட்டவேண்டும் என்றும், புலி ஒரு வேளையில் ஒரு வெட்டே வெட்டலாம் என்றும், புலியும், ஆடும் நேராகவே நகரும் என்றும் சில விதிகள் உள. புலியாகக் கற்களும் ஆடுகளாகப் புளியங்கொட்டைகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஊர்ப் பொதுச் சாவடிகளிலும், தோப்பிலும் பெரும்பாலும் இவ்விளையாட்டு நடைபெறும்.

2. மூன்று கோடுகளால் இரண்டு கட்ட வரிசைகள் அமையுமாறு கட்டங்கள் வரைந்தும், இவற்றில் மூலக்கோடுகளைச் சேர்த்து வரைந்தும், நான்கு கோடுகளின் உதவியால் மூன்று கட்ட வரிசைகள் அமையுமாறு வரைந்தும் ஆடுவர். படைகளை நகர்த்துவது போலக் காய்களை நகர்த்தி வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பர். இது முற்றுகை நாட்களில் வீரரால் விளையாடப்பட்டதாக இருக்கலாம் என்பர்.

3. நட்சத்திரக் கோடுகள் வரைந்து ஆடுவது நட்சத்திர விளையாட்டு என்பர். இதில் 10 புள்ளிகள் 9 காய்கள் இருக்கும்.

4. ஆடுபுலி ஆட்டமானது குறிஞ்சி நிலத்திற்கும் முல்லை நிலத்திற்கும் இடைப்பட்ட இயற்கை வேட்டுவினைப் போராட்டம் விளையாட்டின்

தோற்றத்திற்குக் காரணமாய் இருக்கலாம் என்பார் இரா. பாலசுப்பிரமணியம். இதை மறுக்கிறார் அ. பிச்சை அவர்கள். அவரோ "மென்மைக்கும் வன்மைக்கும் நடக்கும் வர்க்கப் போராட்டம் என்று உய்த்துணரலாம்" என்பார்.

## 8. பல்லாங்குழி

1. இது பண்ணாங்குழி, பன்னாங்குழி, பள்ளாங்குழி, பதினாங்குழி, பரலாடுங்குழி, பாண்டி எனப் பலவிதமான பெயர்களில் வழங்குகின்றது. பல அழகிய குழிகளை வைத்துக் கொண்டு இவ்வாட்டம் ஆடப்பெறுவதால் பல்லாங்குழி ஆனது என்பர்.

2. தரையில் குழிகளை அமைத்தும், மரப்பலகைகளில் குழிகள் ஏற்படுத்தியும் விளையாடுவர். வெண்கலம், எவர்சில்வர் போன்ற உலோகக் குழிகளும் உள. காக்காமுத்து, வேப்பங்காய், களிப்பாக்கு மொச்சைவிதை, மஞ்சாடி, கற்கள், புளியங்கொட்டை, சோழி, கல்யாண முருங்கைக் கொட்டை, குன்றிமணி, கோழிக்காய் போன்றவற்றை முத்துக்களாகப் பயன்படுத்துவர்.

3. பசுப்பாண்டி, எதிர்ப்பாண்டி, இராஜாப்பாண்டி, காசிப் பாண்டி, கட்டும்பாண்டி, சீதைப்பாண்டி, சரிப்பாண்டி என ஏழு வகைப்படும்.

4. பாண்டி, அரசு, வால்குழி, பொய்க்குழி, நடுக்குழி, மூலைக்குழி, காய்க்குழி, காசிக்குழி, இராசாக்குழி, பொய்யாங்குழி எனக் குழிகள் பெயர் பெறும்.

5. காய்களுக்கு அலை, கண், கண்ணு, கன்று, கன்னு, காசு, பசு, முத்து என்று பல பெயர்கள் உள்ளன. இவ்வாட்டம் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் திராவிடப் பகுதிகளிலும், ஆப்பிரிக்காவிலும் வழக்கில் உள்ளது.

## பிற விளையாடல்கள்

மேற்சொன்ன விளையாடல்களைத் தவிரப் பொழுது போக்கு விளையாடல்கள் எண்ணற்றவை உள. அவை இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம் மாறுபடும். கிண்ணாங்கினி கிட்டி, கரம் ஆட்டம், கண்ணாம் பூச்சி, கூந்தலடி, சட்டாந்தரம், நாலு மூலைத்தாச்சி, வெயிலும் நிழலும், மேடுபள்ளம் ஆகியவற்றை இளைஞர்கள் ஆடுவர். வளர்ந்த பிள்ளைகள் கோட்டான் கோட்டான், கிளித்தட்டு, குந்தி காலாட்டம், கில்லியாட்டம், கோல் குந்தி,

மசப்பந்து, கவட்டிக்கவட்டி, கழுதை தூக்கி ஆகியவற்றை விளையாடுவர். பெண்கள் பன்னாங்கல், பன்னாங்குழி, தாயம், சோணாலி, சேரளப் பட்சி, பரமபதசோபான படம், புளியங்கொட்டை, குட்டுவைத்து ஊதுதல் போன்ற ஆட்டங்களை ஆடுவர். ஆண்குழந்தைகள், கோலியாட்டம், பம்பரம், கறங்கு, காற்றாடி ஆகிய ஆட்டங்கள் ஆடுவர். கோவை மாவட்டத்தில் இவ்வாடல் அதிகம் என்பர்.

## விளையாட்டால் அறியப்படும் கருத்துக்கள்

நாட்டுப்புற விளையாடல்கள் மூலம் பல்வேறு வகை கருத்துகளை அறியலாம். அவற்றில் சமூகம், வரலாறு, குடும்பம் போன்றவற்றின் அடிப்படையும் உள்ளன.

1. ‘ஒரு குடம் தண்ணி யெடுத்து ஒரு பூ பூத்தது’ என்ற விளையாட்டு உருவான சூழலைப் பற்றி இரா. பாலசுப்ரமணியம் கூறும்போது, “முகமதிய இனத்தைச் சார்ந்தவர் ஒருவர் புளியந்தோப்பில் விளையாடச் சென்ற சிறுவரோ சிறுமியரோ புளியங்காயினைப் பறித்துத் தின்றிருக்க வேண்டும். இதனை அறிந்த உரிமைக்காரர் அச்சிறுவனைப் பிடித்து நிறுத்த, அச்சிறுவனின் பெற்றோர்க்கும் உரிமைக்காரருக்கும் வாக்குவாதம் நடந்திருக்க வேண்டும். இது இச்செய்கை விளையாட்டில் எதிரொலிப்பதைக் காணலாம்” என்பர்.

2. வே. மாணிக்கம் அவர்கள், ‘இந்த விளையாட்டு மரமேறிக் காய் பறிப்பதல்ல. இடைக் காலத்தில் ஆண்களும் அதிகார வர்க்கமும் பெண்களைச் சிறையெடுத்தனர். இந்த விளையாட்டானது, பெண்களின் சிறை எடுப்புப் பற்றியும் சிறை மீட்புப் பற்றியும் விளக்கும்’ என்பார்.

## நாட்டுப்புற மருத்துவம்

நாட்டுப்புற மக்கள் அன்றாடம் தம் வாழ்வில் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்று கூறுவர். இந்நாட்டுப்புற மருத்துவத்தைப்பற்றி இதுவரை ஏராளமான நாவல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. அவை பெரும்பாலும் மருந்துவக் குறிப்புகளின் தொகுதிகளாகவே விளங்குகின்றன. மேனாட்டினரைப் போன்று நாட்டுப்புற இயலுள் நாட்டுப்புற மருத்துவத்தை இணைத்துப் பார்க்கும் முயற்சி தமிழில் வளரவில்லை எனலாம். ஆய்வாளர் க. வெங்கடேசனின் ‘ஆய்வு நோக்கில்

நாட்டுப்புற மருத்துவம்' என்ற நூல் இத்துறையில் தமிழில் நல்ல முயற்சியாகும். பல்வேறு இதழ்களும் இம்மருத்துவத்தில் கவனம் செலுத்தி வருகின்றன. 'மூலிகை மணிட்' இது முன்னோடிப் பத்திரிகையாகும். ஏனைய அமுது, நந்தி, முதல் சிந்தன், ராணி போன்ற பத்திரிகைகளும் அவ்வப்போது நாட்டு மருத்துவத்துக்கு நற்றொண்டு செய்து வருகின்றன.

## நாட்டுப்புற மருத்துவம் – விளக்கம்

நாட்டுப்புறத்து மக்கள் தமக்குற்ற நோய்களைத் தீர்க்கக் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் எனலாம்.

வீடுதோறும் உள்ள முதியவர்களும் அனுபவசாலிகளும் சிறந்த நாட்டுப்புற மருத்துவர்களாக விளங்குகின்றனர். 'பட்ட இடம் பருக்கும்' என்று இம்மக்கள் எந்நோயினைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்கின்றனர்.

இம்மருத்துவ முறையைச் செவி வழியாகவே அறிந்துள்ளனர். பழக்கமும் பயிற்சியுமே இவர்களுக்கு இதில் சிறந்த பலனைத் தருகின்றன.

நாட்டுப்புற மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளனர். அவர்கள் குறைந்த செலவு, நிறைந்த பயன், அபாயமற்ற முறை என்பதால் நாட்டுப்புற மருந்தினைக் கையாளுகின்றனர்.

நாட்டுப்புற மருத்துவத்தை வீட்டு வைத்தியம், நாட்டு வைத்தியம், கைமுறை வைத்தியம், கைமருந்து வைத்தியம், பாட்டி வைத்தியம். சிடுகா மருந்து என்று பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். இவற்றை எழுதப்படாத மருந்தியல் முறைகள் எனலாம்.

எடுத்துக்காட்டாக, டாக்டர் க. வெங்கடேசன் ஒரு சான்றைத் தருகிறார். 'தலைவலி அதிகமானால் நாட்டுப்புற மக்கள் தோல் சீவிய 1 துண்டு சுக்கினையும், 1 துண்டு பெருங்காயத்தையும் சேர்த்துச் சிறிது பால்விட்டு அரைத்துத் தலைவலி உள்ள இடங்களில் பற்றுப்போட்டு அதன்மீது சாம்பிராணிப் புகையைக் காட்டுவார்கள். 15 அல்லது 30 நிமிடங்களில் தலைவலி நீங்கி விடுகிறது. இதனால் எவ்வித எதிர்விளைவும் கூட ஏற்படுவதில்லை. இவை நாட்டுப்புற மக்களின் அறிவில் உதித்து அனுபவத்தில் தழைத்து, வாழையடி வாழையென வாய்மொழியாக வாழ்ந்து வளர்ந்து வருபவை.

## நாட்டுப்புற மருத்துவம் – சிறப்புகள்

1. நவீன மருந்துகளால் நோய் தீரும். எனினும், அதன் எதிர் விளைவுகளால் இன்னும் பல நோய்கள் தோன்றக் காரணமாகி விடும். எடுத்துக்காட்டாக, காசநோய்க்கு 'ஸ்டெப்டோ மைசின்' மருந்தாகும். ஆனால், இதன் எதிர் விளைவால் காது மந்தமாகும் நிலையும் ஏற்படுகின்றது. இது போலவே 'ஆஸ்பிரின்' கலந்த மாத்திரைகள் தலைவலியைப் போக்கினாலும் குடல் பகுதிகளைத் தாக்கி விடுகிறது என்பர். நாட்டுப்புற மருத்துவத்தில் இத்தகைய எதிர் விளைவு ஏதுமில்லை. இதனால் எந்தவித ஆபத்துகளும் இல்லை எனலாம்.

2. நவீன மருந்துகள் சாதிக்க முடியாத சில காரியங்களை நாட்டுப்புற மருந்துகள் சாதித்தன. மஞ்சள் காமாலைக்கு இதுவரை சரியான மருந்தினைக் கண்டுபிடிக்கவில்லை நவீன மருத்துவம். ஆனால், நாட்டுப்புறக் கரிசலாங்கண்ணியும், கீழாநெல்லியும் சிறந்த மருந்துகளாகும்.

3. உலக நாடுகளிலும் நாட்டுப்புற மருத்துவமே நவீன மருத்துவத்துக்கு அடிப்படையாக – உந்துதலாக அமைந்துள்ளது. குறிப்பாக அரேபியா, சீனா, மலேசியா, எகிப்து போன்ற நாடுகளில் பரவலாக பாமர மக்களால் பல்வேறு நோய்களுக்கும் பின்பற்றப்பட்டு வந்த நாட்டுப்புற மருத்துவ முறைகளை, உலக மருத்துவ ஆய்வாளர்கள் பலர், அறிவியல் முறையில் சோதனை செய்து வெற்றி கண்டனர் என்பார் டாக்டர் க. வெங்கடேசன்.

குருதி அழுத்த நோய்க்கு 'சர்பாசில்' ஒரு மருந்து. இதனைப் பீகார் மாநிலத்துப் பழங்குடி மக்களின் மருந்தான சர்ப்பகந்திச்செடி மூலம் தயாரித்தனர். ஆஸ்துமாவுக்கு 'எபிடிரின்' என்பது மருந்து. இது சீனநாட்டில் உள்ள நாட்டுப்புற மருந்தான 'மாஹதிஸ்' எனும் செடியினின்றும் எடுக்கப்பட்டது. வெண்குட்ட நோய்க்கு 'அமோடிரின்' என்பது நல்ல மருந்து. இது எகிப்திய நாட்டுப்புற மருந்தான 'அம்மி மஜதிஸ்' என்னும் செடியிலிருந்து எடுக்கப்பட்டது. இவற்றால், நாட்டுப்புற மருத்துவத்தின் சிறப்புகள் விளங்கும்.

4. பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நாட்டுப்புற மருத்துவத்தில் ஆராய்ச்சிகள் பலவற்றை ஒப்பிட்டு செய்தனர்.

## நாட்டுப்புற மருத்துவ மூலங்கள்

நாட்டுப்புற மருத்துவச் செய்திகளை நாட்டுப்புற மக்களிடமிருந்து நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்வது கடினம். ஆனால் அவர்களது பாடல்களும் பழமொழிகளும் நாட்டுப்புற மருத்துவத்தை வெளிப்படுத்தும் மூலங்களாக உள்ளன. அத்துடன் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் நாட்டுப்புற மருத்துவத்தைப் போற்றிப் பாதுகாக்கும் பேழைகளாக விளங்குகின்றன.

## பாடல்களில் மருத்துவக் குறிப்புகள்

நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு பிணைந்து விளங்குவதால் அவற்றில் தங்கள் மருத்துவ முறைகளைச் சேகரித்து வைத்துள்ளனர். இதனை டாக்டர் சரசுவதி வேணுகோபால் கூறும்போது "நாட்டுப்புறக் கலைகள், பாடல்கள் ஆகியன நாட்டுப்புறங்களில் வாழும் பின் தங்கிய இனத்தாரின் கைகளில் வளர்வதுபோல் நாட்டுப்புற மருத்துவமும் வளர்கிறது எனலாம். தனிச் சிறப்புடைய இருவேறு மருத்துவப் பள்ளிகள் (Different schools of medicine with good reputation) செஞ்சியிலும் மதுரையிலும் இருந்திருத்தல் வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

"உடம்பெல்லாம் நோகுதாம்மா? - கண்ணே
உனக்கு ஒத்தடம்தான் கொடுக்கட்டுமா?
ஏலமும் இஞ்சிச்சாறும் – கண்ணே உனக்கு
எட்டுச் சொட்டுக் கொடுக்கட்டுமா?"

என்ற பாடலில் உடம்பு வலிக்கு ஏற்ற மருந்து ஏலமும் இஞ்சிச் சாறும் என்ற குறிப்பு உள்ளது.

## பழமொழிகளில் மருத்துவக் குறிப்புகள்

பழமொழிகள் நமது அனுபவத்தின் பொக்கிஷங்கள். மக்கள் தங்கள் அனுபவங்களைச் சிந்தாமல் சிதறாமல் இவற்றில்தான் சேமித்து வைத்திருக்கிறார்கள்.

மருத்துவக் குறிப்புகள் கொண்ட பழமொழிகளை 5 வகையாகப் பகுப்பார் டாக்டர். க.வேங்கடேசன்.

1. தமிழ் மருத்துவக் கோட்பாடுகளை விளக்கும்.
2. நோயில்லா நெறியைக் கூறும்.
3. மருந்து முறைகளைக் குறிப்பிடும்.
4. நோய்களைப் பற்றிக் கூறும்.
5. மருந்துச் செடி கொடிகளைப் பற்றிக் கூறும்.

சான்றுக்கு ஒரு பழமொழியைப் பாருங்கள்.

"ஆற்றுநீர் வாதம் போக்கும்
அருவிநீர் பித்தம் போக்கும்
சோற்றுநீர் இரண்டும் போக்கும்"

என்பது பழமொழி. ஆற்று நீரிலும் அருவி நீரிலும் உயர்ந்த தாதுப் பொருட்களும் மூலிகைச் சத்துக்களும் நிறைந்து காணப்படும். நரம்புக் கோளாறுகள் வாதநோய் காரணமாக வரக்கூடியவை. இவற்றிற்கு ஆற்று நீரில் குளிப்பது நன்மை தரும். பித்தம் தொடர்பாக வருபவை மூளைக் கோளாறு ஆகியன. இதனை நீக்க அருவி நீரில் குளிப்பது நன்மை தரும்.

இவ்வாறு பழமொழிகள் பிணி தீர்க்கும் பல மருத்துவ முறைகளைத் தாங்கும் Formula Bearer போல் விளங்குகின்றன எனலாம்.

## நம்பிக்கைகளில் மருத்துவக் குறிப்புகள்

மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு நல்லாதரவை வழங்கும் இத்தகைய நம்பிக்கைகள் ஒவ்வொருவரின் வாழ்விலும் இன்றியமையாது தேவைப்படுகின்றன என்பர் James Winchester. பல நாட்டுப்புறத்து நம்பிக்கைகளுக்கு மருத்துவமே அடிப்படையாக உள்ளன. உலகெங்கும் காணப்படுவது போலவே தமிழகத்திலும் நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கைகள் உள்ளன. வெறியாட்டம், ஓரை பார்த்தல் போன்ற இலக்கியச் செய்திகள் இதற்குச் சான்றுகளாகும். ஆசாரக் கோவை இதனை போன்ற பிற்கால இலக்கியங்களும் இவை பற்றி விளக்கிக் கூறும்.

டாக்டர் க. வேங்கடேசன், "மருத்துவ நம்பிக்கைகளை நலம் காப்பவை, நலம் போக்குபவை," என இரண்டாகப் பகுப்பார். சிறுதெய்வ வழிபாடுகள், பிரார்த்தனை, யாத்திரை, நேர்த்திக் கடன் செலுத்துதல் போன்றவை நலம் காப்பவை, ஏவல், பில்லி, சூனியம், இடுமருத்து போன்றவை நலம் போக்கும் நம்பிக்கைகள். அதோடு நலம் காக்கும் நம்பிக்கைகளில் நோயும் மருந்துமாக அமைபவை, சமயச் சடங்குகளாக அமைபவை, மூடத்தனமானவை என மூன்று வகையுள என்பார்.

## பழக்க வழக்கங்களில் மருத்துவக் குறிப்புகள்

நாட்டுப்புறத்துப் பழக்க வழக்கங்களும் சில நல்ல மருத்துவ குணங்களுடன் விளங்குகின்றன. இவற்றை டாக்டர் க. வேங்கடேசன் நலிவு தருவன, நலம் தருவன என இரண்டு வகையாகப் பகுக்கின்றார். புகை, மது, முறையற்ற புணர்ச்சி போன்றவை நலிவு தரும் பழக்கவழக்கங்களாக நாட்டுப்புற மக்கள் கருதுகின்றனர். கதிரவன் வழிபாடு, நல்ல உடல் உழைப்பு, மொட்டையடித்தல், கருவுற்ற மகளிர்க்கு 9-வது மாதத்தில் மருந்து கொடுத்தல், பிறந்த குழந்தைக்குக் கழுதைப்பால் கொடுத்தல், செம்பால் வளையல் போடுதல், வெற்றிலை போடுதல் போன்ற நலம் தரும் பழக்கவழக்கங்களும் உள்ளன.

## நாட்டுப்புற மருத்துவம் – வகைகள்

டான் யோடர் (Don Yoder) நாட்டுப்புற மருத்துவத்தை இரு வகைகளாகப் பகுக்கின்றார். அவற்றில் ஒன்று: இயற்கை மருத்துவம் (Natural folk Medicine), மற்றொன்று மத மாந்திரீக மருத்துவம் (Magico Religious Medicine).

பொதுவாக இயற்கை மருத்துவம், மத-மாந்திரீக மருத்துவம், நம்பிக்கை மருத்துவம், திட்டமிட்ட மருத்துவம், முரட்டு மருத்துவம் என 5 வகைகளாகப் பகுக்கலாம்.

## இயற்கை மருத்துவம்

மக்களுக்குற்ற நோய்களுக்கு மூலிகை, தாது போன்ற பொருட்களே மருந்தாகும் நிலையை இயற்கை மருத்துவம் என்று குறிப்பிடுவர்.

வயிற்றுப் பூச்சிகள் அழிய வேப்பிலைக் கொழுந்துடன் வெல்லம் சேர்த்து உண்பர். சீதபேதிக்கு மாதுளைப் பிஞ்சை இடித்துச் சாறாக்கிக் குடிப்பர். இவை இயற்கை மருத்துவத்திற்குச் சான்றுகளாகும்.

‘‘நாட்டுப்புற மருத்துவம் மிகப்பழமையானது. இயற்கையே முதல் மருந்துக் கடையைத் திறந்தது. ஆதிமனிதனும் விலங்குகளும் நோயைத் தவிர்க்கவும் உடல் நலத்தையும் உற்சாகத்தையும் காக்கவும் மக்கள் செடிகொடிகள் மூலிகைகளையே நாடினர். மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடம் விட்டு இடம் செல்லும் இயல்பிருப்பதால் இயற்கையின் மருந்துக் கடைக்கு எல்லா இடங்களிலும் கிளைகள் உள்ளன. உலகில் எங்கு நீங்கள் நோய்வாய்ப்பட்டாலும் நோயைத் தீர்க்க அங்கு இயற்கை மருந்து இருப்பதைப் பார்ப்பீர்கள்’’ என்பார் D.C. Jarvis.

## மத-மாந்திரீக மருத்துவம்

மக்கள் தாம் பெற்ற நோயினைத் தீர்ப்பதற்கு மதத்தையும் மந்திரவாதத்தையும் தழுவி நிற்பதனை மத-மாந்திரீக மருத்துவம் என்கின்றனர். ஹெக்கர்ட் (Hggard W.), சர் சிட்னி ஸ்மித் (Smith Sir Sydney), ஜாக்கி (jaggi O.P.) போன்றவர்கள் மத-மாந்தரீக மருத்துவம் பற்றிய ஆய்வுகளை விரிவாகச் செய்துள்ளனர். தமிழில் டாக்டர் இ. முத்தையா சிறப்பாகச் செய்துள்ளார். மந்திரிக்கிறது, திருநீறு போடுகிறது, கோளாறு பார்க்கிறது, பார்வை பார்க்கிறது, கோடங்கி கேட்கிறது, குலை அடிக்கிறது, அக்கி எழுதுகிறது, கயிறு மந்திரிக்கிறது, ஓலை மந்திரிக்கிறது, கண் மலர் வைக்கிறது, மாவிளக்கு எடுக்கிறது, நேர்த்திக் கடன் செய்கிறது, ஆவி கட்டுவது, பேயோட்டுவது, செய்வினை செய்வது, தகடு வைக்கிறது, எந்திரம் எழுதறது, பில்லி சூனியம் வைக்கிறது, ஏவல் செய்கிறது போன்ற பல பெயர்களால் அழைக்கின்றனர். இவற்றை நல்லன (White Magic), அல்லன (Black Magic) என்று இரண்டாகப் பகுப்பர்.

நோய்கள் உருவாக நான்கு காரணங்களைக் கூறுவர். (1) தெய்வத்தின் சினம், (2) தீய ஆவ ிகளின் செயல், (3) மந்திரவாதிகளின் செயல், (4) தீய பார்வைகள். இதற்கேற்ப மருத்துவ முறைகளும் அமைகின்றன. தெய்வச்சினத்தால் அம்மை, வயிற்றம்மை, சுரைக்காய் அம்மை, ஒற்றம்மை

போன்ற நோய்கள் வருகின்றன என நம்பி மருத்துவ முறைகளைக் கையாளுகின்றனர்.

பாம்பு, தேள், பூரான், எலி, நாய், வண்டு போன்ற நச்சுக்களுக்கும் ஆவிகளால் உருவாகும் தெக்கத்திகனை, தீட்டு, பயம், இருளடித்தல், பேய் பிடித்தல் போன்ற நோய்களுக்கும் மந்திர மருத்துவ முறைகளில் உள்ளன.

பார்வைகளால் கண் படுதல், தேரை, கூகை, தேவாங்கு, கரடி, கழுதை போன்ற பார்வை நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றுக்கு ஏற்ற வகையில் மருத்துவ முறைகள் உள்ளன. மந்திரித்தல், சீரடித்தல், கண்ணேறு கழித்தல், நோயை மாற்று வித்தல், மாற்றீட்டு சடங்கு போன்றவை மருத்துவ மந்திரச் சடங்குகள் என்பார் தே. ஞானசேகரன்.

## நம்பிக்கை மருத்துவம்

நாட்டுப்புற மக்கள் நம்பிக்கையின் அடிப்படையிலும் நாட்டுப்புற மருத்துவத்தினைக் கையாளுகின்றனர். இம்முறையானது மூடத்தனமானதாக இருப்பினும் கூடப் பலரை நம்பிக்கை கைவிடுவதில்லை.

அம்மைநோய் தெய்வக்குறை என்று நம்பி வழிபாடு செய்வதும், எமனுக்குப் பயந்து காது குத்துவதும், மூட நம்பிக்கையாகும். கை கால் சுளுக்கிக் கொண்டால் இரட்டையர் தடவினால் போய்விடும். இடுப்பு சுளுக்கிக் கொண்டால் ‘காத்துப் பிடிப்புமூலம் குணமாக்குவர்’ இவை நம்பிக்கை மருத்துவமாகும்.

## திட்டமிட்ட மருத்துவம்

நோய்கள் அணுகாமல் இருக்க மக்கள் முன்னேற்பாடாகத் திட்டமிட்ட முறையில் சில பொருட்களை உட்கொண்டு நலமுறுகிறார்கள். இதனைத் திட்டமிட்ட மருத்துவம் எனலாம்.

சூரிய நமஸ்காரம் செய்து கண்ணின் பார்வை சக்தியை மிகுதிப்படுத்துகின்றனர். உணவு உண்டதும் வெற்றிலை போடுவதன் மூலம் உணவினை நன்றாகச் செரிக்கச் செய்கின்றனர். விழாக் காலமான வெயில் காலங்களில் மொட்டையடிப்பதன் மூலம் பொடுகு, பேன், சொறி, படை போன்ற நோய்கள் வராமல் தடை செய்கின்றனர்.

## முரட்டு மருத்துவம்

நாட்டுப்புற மக்கள் சில மருத்துவ முறைகளை மிக முரட்டுத் தனமாகக் கையாண்டு வருவதனை முரட்டு மருத்துவம் எனலாம்.

காளை மாடு, பன்றி போன்ற மிருகங்களுக்கு இனப் பெருக்கத்தைத் தடுக்க 'காயடித்தல்', 'விதையெடுத்தல்' போன்ற வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

'பேயோட்டுதல்' என்ற பெயரில் நோயுற்றவர்களைத் துடைப்பம், உலக்கை போன்றவற்றால் கடுமையாக அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

'விஷ மிறக்குதல்' என்ற பெயரில் கடிவாய்களைக் கத்தியால் கீறிவிடுவதும், நாய் கடித்தால் செருப்பால் அடிப்பதும் முரட்டு மருத்துவங்களாகும்.

## நாட்டுப்புற மருத்துவர்கள்

நாட்டுப்புற மக்களே மருத்துவர்களாக விளங்குகின்றனர். கிழவிகளே பிரசவம் பார்க்கின்றனர். இரட்டைக் குழந்தைகள் சுளுக்குத் தடவும் சிறந்த வைத்தியர்கள். பூசாரிகளும் மந்திரிக்கும் வைத்தியர்கள், தேவதைகள் கைவிட்ட கேஸ்களையும் கவனிக்கும் மருத்துவர்களாக - மிகச்சிறந்த வைத்தியர்களாக விளங்குகின்றனர்.

பொதுவாகச் சிலர் இதனைத் தொழில் முறையாக வைத்துக் கொண்டுள்ளனர். இது பரம்பரை பரம்பரையாக வளர்க்கப்பட்டு வாழ வைக்கப்படுகிறது. சில நரிக்குறவர்கள் காடு மேடுகளில் மூலிகைகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து கிராம மக்களிடம் விற்பனை செய்கின்றனர். அதோடு சிலவகைத் தைலங்களையும், ரத்தங்களையும், மிருக உறுப்புகளையும் விற்கின்றனர்.

## நாட்டுப்புற வழிபாடுகள்

"கடலோடு கலக்கும் ஆறுகள் போல் எல்லாத் தெய்வ வணக்கமும் என்னையே அடைகிறது" என்று கண்ணபிரான் சொன்னது உண்டு. ஆறுகளைக்கூட எண்ணிவிடலாம். ஆனால் தெய்வங்களையும் தேவதைகளையும் வழிபாடுகளையும் எண்ணுவதும் எழுதுவதும் அரிதினும் அரிது. தெய்வ

வணக்கத்திற்குக் காரணம் அச்சமும், அன்பும், கலைக்களஞ்சியம் கூறுவது போன்று, ஆதிகுடிகள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, பூகம்பம் போன்ற அச்சந்தரும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களுக்கும் காரணம் உலகின்கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என்று நம்பியிருந்தனர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிபட்டனர்.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஒரு முதுமை மொழி - முழுமை மொழி. ஆனால், இன்று கோயிலில்லா ஊர்களே இல்லை என்பது மட்டுமல்ல, குடியில்லா ஊர்களில்கூடக் கோவில்கள் இருக்கின்றன. மனித மனம் ஒரு பலமற்ற கொடி. அது தன்னால் நிமிர்ந்து நிற்க முடியாதது. எனவே, கடவுள் தலைவர் போன்ற ஏதாவது ஒரு வழிபாட்டின் முதுகில் ஏறிக்கொள்வது அன்று தொட்டு இன்றுவரை இயல்பாகிவிட்டது.

## நாட்டுப்புறச் சமயம்

டான்யோடர் "நாட்டுப்புறச் சமயம் என்பது அமைப்புக்கு உட்படுத்தப்பட்டு, நிறுவனமாக்கப்பட்டுவிட்ட கட்டுப்பாடுகளைக் கொண்ட சமயங்களுக்கு மாறுபாடானது" என்று கூறுகிறார்.

நாட்டுப்புறச் சமயத்தில் சைவம், வைணவம் என்ற பாகுபாடுகள் இல்லை. அதோடு கிறித்தவம் இசுலாமியம் என்ற வேறுபாடுகளும் இல்லை. சில இசக்கியம்மன் கோவில்களுக்கு கிறித்தவர்களும் வழிபாடு செய்கின்றனர். சில இசுலாமிய கோவில்களுக்கு இந்துக்களும் போவது நாட்டுப்புறங்களில் மட்டுமே காண இயலும்.

நாட்டுப்புறத் தெய்வங்களை,

1. ஊர்த் தெய்வங்கள்
2. இனத் தெய்வங்கள்
3. குலத் தெய்வங்கள்
4. மாலைத் தெய்வங்கள்
5. சமாதித் தெய்வங்கள்
6. துணைத் தெய்வங்கள்

என ஆறு வகையாகப் பகுக்கிறார் டாக்டர் துளசி இராமசாமி.

இரா. அழகர்சாமி பெருந்தெய்வத்திற்கும் சிறுதெய்வத்திற்கும் உரிய வேறுபாடுகளாக 24 குறிப்புகளைத் தருகிறார். தமது சிறு தெய்வம் - விளக்கம் என்ற கட்டுரையில் இதனை நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவையில் காணலாம்.

ரைட் ரெவரெண்ட் கென்ரி (Right Reverend Henry) நாட்டுப்புறத் தேவதைகளைப் பற்றிய ஒரு நீண்ட பட்டியலைத் தருகிறார். அவற்றை ஆண் தேவதைகள், பெண் தேவதைகள், கல்கள் என மூன்றாகப் பகுத்துக் காட்டுகிறார்.

## பெண் தேவதைகள்

1.அட்டங்கம்மா, 2. அம்மாரி, 3. அம்மைவாரி, 4. அங்கலம்மா, 5. அங்கம்மா, 6. அன்னம்மா, 7. அரிக்கம்மா, 8. அஷ்டசக்தி, 9. பாலம்மா, 10. பத்ரகாளி, 11. பிசால் மாரியம்மா, 12. செல்லாரம்மா, 13. செமலம்மா, 14. செம்மந்தம்மா, 15. செந்தேச வரம்மா, 16. சின்னம்மா, 17. சின்னிதம்மா, 18. தாலம்மா, 19. தோட்டம்மா, 20. திரௌபதி, 21. துர்க்கா, 22. எல்லைப்பிடாரி, 23.எல்லம்மா, 24. எல்லாம்மா, 25. எல்லையம்மன், 26. கங்கம்மா, 27. காந்தாலம்மா, 28. கூனல் மாரி, 29. கிரிதேவதி, 30. குலையம்மா, 31. காளியம்மன், 32. கழுமையம்மன், 33. காமாட்சியம்மா, 34.கன்னியம்மா, 35. கன்னிகை, 36. கன்னிகா பரமேஸ்வரி, 37. கீழ்மாரி, 38.கோக் கலம்மா, 39. குழந்தம்மன், 40. குரும்பையம்மன், 41. மத்தராமம்மா, 42. மதுரை காளியம்மன், 43. மகா தேவ அம்மா, 44. மகா காளி, 45. மகாலட்சுமியம்மா, 46. மகேஸ்வரம்மா, 47. மலையாயி, 48. மாமிலம்மா, 49. மணி மஞ்சம்மா, 50. மாரம்மா, 51. மாரம்மா கேத்தனா, 52. மாரியம்மா, 53. மாரிடியம்மா, 54. முனி, 55. முத்தாலம்மா, 59. மாயேஸ்வரம்மா, 60. பல்லாலம்மா, 61. பாண்டிலம்மா, 62. பெட்டம்மா, 63. பிடாரி, 64. பிளாக்கு அம்மா,65. பூலம்மா, 66. பூலாரம்மா, 67. பூசம்மா, 68. பூஜம்மா, 69. புள்ளத்தாளம்மா, 70. ராமம்மா, 71. ராவேலம்மா, 72. சப்த கன்னிகை, 73. சாவ தம்மா, 74. சாவேரம்மா, 75. சீதாலம்மா, 76. சுகலம்மா, 77. சுடி காலம்மா, 78. துர்க்கை, 79. திரௌபதியம்மை, 80. உடலம்மா,81. உக்கிரமாகாளி, 82. உச்சினமாகாளி, 83. ஊரம்மா, 84. உன்னதகாளியம்மா, 85. வாசுகோடி, 86. வீரமாகாளி, 87. விசாலாட்சியம்மன். 88. வானமாலம்மன். 89. யாப்பரம்மா, 90. ஈரங்கிரிமாரி, 91. ஈலம்மா.

## ஆண் தேவதைகள்

1. பசவன்னா, 2. பதலமா, 3. புத்தாகாசிப், 4. எல்லைக்கறுப்பு, 5. ஐயனார் 6. கறுப்பண்ணா, 7. கறுப்பு, 8. கூத்தாண்டவர், 9. மாதேஸ்வரா, 10. மதுரைவீரன், 11. மகாலிங்கா, 12. முனதியன், 13. முனீஸ்வரா, 14. படுகறுப்பண்ணா, 15. பந்தூர் கறுப் பண்ணா, 16. பெரியண்ணாசுவாமி, 17. பொது ராட்சு, 18. ராஜ வாயன், 19. ஊர் அத்தியன்.

## கல்கள்

1.பொட்டுராயி, 2. எல்லைக்கல்,3. நாட்டான்கல்.

நெல்லை, குமரி மாவட்டங்களில் இசக்கி, பிரம்ம ராட்ச்சி, பேச்சி, சந்தனமாரி போன்ற பெண் தேவதைகளும்' வண்டி மறிச்சான், சுடலை, காத்தவராயன், கத்தும் வைரவன், சாத்தான், பாவாடைராயன், போர்த்துராசன் என்று பல ஆண் தேவதைகளும் வணங்கப்படுகின்றனர்.

இரா. சீனிவாசன் தமது ‘சக்தி வழிபாடு’ என்ற நூலில் பெண் தேவதை வழிபாடு பற்றி மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். தமிழகத்தில் பெண் தெய்வங்களுக்கென ஏறத்தாழ 2500 கோயில்கள் உள்ளன என்கிறார். அதோடு மாவட்ட வாரியாகத் தெய்வங்களை வரிசைப்படுத்தவும் செய்கிறார்.

டாக்டர் தே.லூர்து அவர்கள் ஐயனார் வழிபாடு பற்றி விரிவான, ஓர் ஆய்வினை நாட்டார் வழக்காற்றியல் இயல் என்னும் இதழில் செய்துள்ளார். இராமநாதபுரம் மாவட்டம் சார்ந்த ஐயனார் வழிபாடு பற்றிய ஆய்வு இது.

## நாட்டுப்புற வழிபாட்டின் இயல்புகள்

1. பெரும்பாலும் பெண் தேவதைகள் வழிபடப் பெறும்.
2. வேத நெறிக்கும் ஆகமமுறைக்கும் அப்பாற்பட்டவை.
3. அண்டத்தைப் பற்றிய தத்துவார்த்தங்களோடு தொடர்பு கொள்ளாமல் கிராம வாழ்வோடு தொடர்பு கொண்டவை.
4. குடும்பத்தில் அல்லது குலத்தில் இறந்தோர், கொலையுண்டோர், ஆவிகள், மூத்தோர், கன்னிகள் போன்றோரும் கற்கள், ஆயுதங்கள் போன்றவையும் தெய்வங்களாக பார்க்கப்படும்.

5. கோவில்கள், மரத்தடி, குளக்கரை, இடுகாடு, ஏரி, கண்மாய் போன்ற இடங்களில் இடம் பெறும்.

6. குடும்பத்துள் மூத்தவர், பிராமணர் அல்லாத ஓசகன், பண்டாரம், வேளார், அவ்வச்சாதிப் பெரியவர்கள் போன்றோர் பூசாரிகளாக அமைவர்.

7. விழாக்கள் செய்யக் குடும்ப, குல, சாதிய, ஊர் அமைப்புகள் இருக்கும்.

8. ஆண்டுக்கு ஒரு முறை அல்லது சில ஆண்டுகளுக்கு ஒரு முறை பொருளாதாரச் செழிப்பிற்கேற்ப வழிபாடு நடைபெறும்.

9. உயிர்ப்பலிகள் இருக்கும்.

என்று டாக்டர் தே. லூர்து அவர்கள் பகுத்துக் கூறுகிறார்.

## வழிபாட்டு முறைகள்

வேற்று மதத்தவர்களும் விரும்பிச் சில நேரங்களில் இந்து தேவதைகளுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். ஊருக்கு சாதிக்கு – குடும்பத்திற்கு என்று தனித்தனியான தேவதைகள் உண்டு, நாட்டுப்புறத் தேவதைகளை வணங்குவதற்கென்று தனியாக எவருமில்லை. சிவன் திருமால் போன்ற பெருந்தெய்வங்களை வழிபடுகின்றவர்களே அவற்றையும் வணங்குகின்றனர்.

1. பெருந் தெய்வங்களை வழிபடும்போது பலவிதமான நிகழ்ச்சிகளும் சடங்குகளும் நடைபெறும். காணிக்கை செலுத்துதல், அங்கமளித்தல், காவடி எடுத்தல், பால்குடம் எடுத்தல், மொட்டையிடல், காது குத்தல், பிச்சையெடுத்தல், கால்நடையாகப் போகுதல், தர்மம் செய்தல், மிருகங்களை நேர்ந்துவிடல் போன்று பல்வேறு சடங்குகள் உண்டு.

2. கிராமத் தேவதைகளுக்குச் சிலர் காணிக்கை மட்டும் செலுத்துவதுண்டு. காணிக்கையென காசுகளை உண்டியலில் போடுவர். சிலர் துணிகளில் முடிந்து வைத்துக் கோவிலில் சென்று போடுவர். இதை ‘முடிந்து போடுதல்’ என்று சொல்லலாம்.

3. சிலர் தேவதைகளுக்கு எண்ணெயும் மாலையும் வாங்கிக் கொடுப்பார்கள். அதை அக்கோயில் பூசாரி எண்ணெயோடு மஞ்சளையும் சேர்த்து உருவங்களில் பூசி மாலையிடுவார்.

4. சிலர் தேவதைகளுக்குத் தேங்காய்களை மட்டும் உடைப்பதுண்டு.

5. சில தேவதைகளுக்குப் பால்மடை கொடுப்பதுண்டு. மாடு கன்று ஈன்றதும் கறக்கின்ற தொடக்கப் பாலைச் சில பெண் தேவதைகளுக்குக் காணிக்கையாகக் கொடுப்பதுண்டு.

6. சில தேவதைகளுக்குப் பொங்கலிடுவர், அம்மன் தெய்வங்களுக்குச் செவ்வாய்க் கிழமைகளிலும், ஆண் தேவதைகளுக்கு வெள்ளிக்கிழமைகளிலும் பொங்கலிடுவர். அதோடு, இத்தேவதைகளுக்கு நடக்கும் கொடை விழாக்களில் ஒவ்வொரு நாளும் பொங்கலிடுவர். சிலர், பொங்கல் இடுவதோடு பாயாசம் வைத்தலும் உண்டு.

7. சில தேவதைகளின் திருவிழாக்களின்போது, ஊர்வலம் வரும்போது, தேங்காய், பழம், பன்னீர், ஊதுவத்தி, தடம், சாம்பிராணி, வெற்றிலைபாக்கு ஆகியவற்றை அளிப்பர். இதைச் ‘சொர்ணப்பம் சாத்துதல்’ என்பர்.

8. சில தேவதைகளுக்குக் கரகமெடுத்தாடுவர். இவ்வழக்கம் மாரியம்மன் போன்ற பெண் தேவதைகளுக்கே உரியது.

9. சில தேவதைகளுக்கு எருமை, ஆடு, மாடு, கோழி, பன்றி போன்றவைகளைப் பலியிடுவர். இப்பலிகள் திருவிழா நாட்களிலும், வெள்ளி, செவ்வாய் போன்ற நன்னாட்களிலும் நடைபெறும் .

10. சில தேவதைகளுக்குச் சிலர் சிறப்பளித்தல் என்ற நிகழ்ச்சியைக் கொண்டாட நன்னாளில் பலியிடுவர். வசதி இருப்பின் மேளக்குழுவையும் அழைப்பர், சிறு பந்தலிடுவர், படையல் இடுவர்.

11. ஊர் மக்கள் எல்லாரும் சேர்ந்து ‘வரிப்பணம்’ பிரித்து மூன்று நாட்கள் விழாக் கொண்டாடுவர். இதைக் ‘கொடைவிழா’ என்பர். ஆண் தேவதைகளானால் வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களிலும், பெண் தேவதைகளானால் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களிலும் கொடை விழாவெடுப்பர். இவ்விழாவில் காணிக்கை தேங்காய் உடைத்தல், பலியிடல், எண்ணெய்

சாத்துதல், கரகமெடுத்தல் போன்ற எல்லாவிதமான வேண்டுதல்களும் நிறைவேறும். அதோடு கலைஞர்களின் நிகழ்ச்சிகளும் சிறப்பிடம் பெறுவதுண்டு.

12. இராமநாதபுரத்து ஆத்தங்குடி, கல்லூர், ராயவரம் போன்ற ஊர்க் கோவில்களில் மஞ்சு விரட்டு நடைபெறுகிறது.

13. தென்னார்க்காட்டிலுள்ள குறிஞ்சிப்பாடியில் புற்று மாரியம்மன் கோயிலில் ஆடுபவர் செடல் குத்திக் கொண்டு ஆடுவர்.

14. கிளியனூர், தைலாபுரம், கொத்தட்டை, திருப்பாதிரிப் புலியூர் போன்ற ஊர்களில் அரவான் அல்லது கூத்தாண்டவர் வணக்கம் நடக்கும். தாலியறுப்பு நிகழ்ச்சி நடைபெறும். அலிகள் கலந்து கொள்வர்.

15. வேலூரிலுள்ள முனீஸ்வரன் கோயிலில், நோய் தீர்ந்தவர் கள்ளப் பச்சை ஓலைப் பாடையில் ஏற்றிக் கோயிலைச் சுற்றி இழுத்து வந்து செடல் குத்தி வேண்டுதலை நிறைவேற்றுவர்.

16. அவிநாசியின் அருகில் உள்ளது அரசூர். இங்குக் கருப்புராயன் கோயில் உள்ளது. பத்து அல்லது இருபது பேர் கையில் வாளை வைத்துக் கொண்டு ஆடுவர். தங்களைத் தாங்களே வாளினால் வெட்டிக் கொள்வர். ஒருவர் சாட்டையால் ஒருவரை அடிக்க, அடிபட்டவர் எழுந்து செல்வார்.

17. கோவை மாவட்டத்து நரசிம்மபுரம் மாரியம்மன் கோயிலில் ஆண்கள் கலசமும் பெண்கள் தீச்சட்டி, மாவிளக்கு ஆகியவையும் கொண்டு வருவர். அனைவரும் மஞ்சள் நீராடிப் பலவிதக் கேளிக்கை விளையாட்டில் ஈடுபடுவர்.

18. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரகுநாத சமுத்திரத்தில் மாரியம்மன் கோவிலில் பக்தர்கள் தெருவில் உருள்வதை 'அங்கப் பிராணம்' என்று குறிப்பிடுவர்.

19. இராமநாதபுர மாவட்டத்தில் சில அம்மன் கோவில்களில் பால்குடம் எடுப்பர். இதை 'மதுவெடுத்தல்' என்பர்.

20. திருச்சி மாவட்டத்தில் கருமாரியம்மன் விழாவில் தெய்வமேறியோர் தலையிலிருந்து கால்வரை கொக்கிகளை உடலில் கோர்த்து அதில் ஒரு கம்பை இணைத்து வருவர்.

21. நெல்லை, குமரி மாவட்டங்களில் சுடலை மாடன் கோவிலில் சாமியாடும்போது ஆயுதங்களால் தலையில் அடித்துக் கொள்வர், உடம்பில் வெட்டிக் கொள்வர், பொங்கல் பானையில் கைவிடுவர், அதில் குளிப்பர், ஆட்டு ஈரலைப் பிடுங்கி வாழைப் பழத்துடன் சாப்பிடுவர். கபாலக்காரன் விழாவில் கொதிக்கும் எண்ணெயில் கைவிட்டுப் பலகாரங்களை எடுத்துத் தின்பர். சங்கிலி பூதத்தான் சூடான சங்கிலியைத் தோளில் போட்டு ஆடும். வெள்ளைக்காரன் சாமி சாராயத்தைக் குடிக்கும், புகை பிடிக்கும், துப்பாக்கியோடு ஆங்கிலம் பேசி ஆடும்.

22. திருநெல்வேலி மாவட்டத்தில் பரப்பாடி வீரமணி கோவிலில் ஆடுவோர் பிரம்பால் தம்மை அடித்தும் ஓங்கி வீசியும் ஆடுவர்.

## கோவில் அமைப்பு

கோவில்களின் அமைப்பும், அங்குள்ள தெய்வங்களின் உருவ நிலைகளும், பல்வேறு வகையாக அமைந்திருக்கின்றன.

1. எண்ணெயிட்ட சிறு கற்களையும் வழிபடல்

2. சிறு சதுரமான மண் பீடங்களையும் வணங்குவர்.

3. சில பீடங்களில் முகம் மட்டும் செய்யப்பட்டிருக்கும்.

4. சில பீடங்களில் முழு உருவமும் செய்யப்பட்டிருக்கும். இவ்வுருவம் கல்லாலோ அல்லது மண்ணாலோ ஆக்கப்பட்டிருக்கலாம்.

5. சில ஓட்டுச் சிலைகளையும் திருவிழாக் காலங்களில் கொணர்வர். இச்சிலைகள் இசக்கியம்மன், பேச்சியம்மன் போன்ற பெண் தேவதைகளுக்கே உரியது.

6. சில வெண்கலம், பித்தளைச் சிலைகளையும் திருவிழாக் காலங்களில் கொண்டு வருவர். முகச் சிலைகளும், முழுச் சிலைகளும் என இரு வகைகளாக இருக்கும்.

7. வெறும் பீடங்கள் மட்டுமே கோவில்களாகக் கருதப்படும். அப்பீடங்கள் மண்ணால் அமையும். மழையால் கரைந்து போனாலும் மறுவிழாவில் உருப் பெறுவதுண்டு.

8. விழாக் காலங்களில் மட்டும் ஓலைப்பந்தல் இடுவர். அதில் பலவிதமான அலங்காரங்களும் செய்திருப்பர். நிரந்தரமாக இருக்க ஓட்டுப் பந்தல்களும், கூரைகளும் அமைப்பதுண்டு.

9. சில தேவதைகளுக்கு சிறு மண்ணாலாகிய மண்டபங்கள் கட்டுவதுண்டு. சில தேவதைகளுக்குக் கல் மண்டபங்கள் அமைப்பதுண்டு.

10. இவ்வாறு கோவில் அமைப்புகளும் தெய்வ உருவங்களும் பலவிதமாக - பல வண்ணமாக - பலவகையாக அமைந்துள்ளன.

## வழிபாட்டுக் கலைகள்

கலைகளும், வழிபடத் துணைபுரிகின்றன. இக்கலைகள் மூலம் இறைவனின் கதையும் வரலாறும் கூறப்படுவதுண்டு. அதோடு வணங்க வந்தவர்களின் மனம் மகிழ்ச்சியடையவும் செய்கின்றது.

1. நையாண்டி, கொட்டு, கொம்பு, தப்பு போன்ற மேோ வகைகள், 2. கரக ஆட்டம், 3. கணியான் ஆட்டம், 4. வில்லுப்பாட்டு, 5. கோமாளி ஆட்டம், 6. காவடி ஆட்டம், 7. பொய்க்கால் குதிரையாட்டம், 8. சிலம்பாட்டம், 9. சாமியாட்டம், 10. வேட ஆட்டம்.

இவ்வாறு கலைகளின் வாழ்விடமாகவும் – வளர்விடமாகவும் தேவதைகளின் விழாக்கள் விளங்குகின்றன. திரௌபதை அம்மன் கோவில்களில் மகாபாரதக் கூத்து பத்து அல்லது பதினெட்டு நாட்களுக்கு நடைபெறும்.

## கோவில் பிரசாதங்கள்

தெய்வங்களை வணங்குவோருக்குத் தெய்வப் பிரசாதங்களை வழங்குவதுண்டு. அவை: 1. திருநீறு, 2. குங்குமம், 3. பூ, 4. தீர்த்த நீர், 5. பழம், 6. பொங்கல், 7. தேங்காய், 8. மண், 9. வேப்பிலை, 10. துளசி ஆகியவை.

1. தென்னார்க்காட்டிலுள்ள குறிஞ்சிப்பாடியில் சாமியாடி மஞ்சளைப் பிரசாதமாகக் கொடுக்கிறார்.

2. அரசூர் கருப்புராயன் கோவிலில் பள்ளையம் என்ற பொருளைப் பிரசாதமாகக் கொடுப்பர். இது பல தானியங்களின் கூட்டுச்சேர்க்கை .விழா முடியும் போது நீர்க் குண்டத்திலிருந்து புனித நீரையும் கொடுப்பார்கள்.

## தெய்வ நம்பிக்கைகள்

நாட்டுப்புறத் தெய்வங்கள் தொடர்பாகக் கொண்ட நம்பிக்கைகள் பல. அவை, 1. சத்தியம் பலித்திடுதல், 2. தகடு வைத்தல், 3. தொழுதால் துன்பம் நீங்கும், 4. பிள்ளை வரம், 5. தீ மிதித்தல், 6. இரத்தம் குடித்தல், 7. மஞ்சள் நீராடல் 8. மயானம் செல்லல், 9. சாட்டையால் அடித்தல், 10. மழை வருமென்றால் வரும், 11. நோய்கள் நீங்கும், 12. பேய்கள் விலகும், 13. நல்ல பலன் உண்டாகும்.

## நாட்டுப்புற வழிபாடுகள் – ஆய்வுக் குறிப்புகள்

வழிபாடுகளைப் பல வகையாகச் சிந்தித்துப் பார்க்கும்போது பல ஆய்வுக் குறிப்புகள் கிட்டுகின்றன.

1. பழங்கால மனிதனின் தன்மைகள் இதில் அடங்கியுள்ளன.

2. உயிரில்லாப் போலி உருவ வழிபாடுகளும், ஆவி வழிபாடும் இதன் அம்சமாகும்.

3. பல்தெய்வ வணக்கம் இவர்களின் பண்பாகும்.

4. நான்கு திக்குகள் கொண்டு நாட்டுப்புற வழிபாடு திகழ்கின்றது என்பர். அவை Fasts, Feasts, Fairs and Festivals என்பர்.

5. வீர வழிபாடு, ஞான வழிபாடு, இயற்கை வழிபாடு, அன்னை வழிபாடு ஆகிய அத்தனை வழிபாடுகளின் ஒட்டுமொத்தமான உள்ளடக்கத்தை நாட்டுப்புற வழிபாட்டில் காணலாம்.

மக்களிடையே ஓர் ஒற்றுமையையும், உளமார்ந்த அன்பையும், நல்லது செய்யவேண்டும் என்ற நட்புணர்ச்சியையும், அல்லது செய்யின் அவலமே மிஞ்சும் என்ற அச்ச உணர்ச்சியையும், இத்தேவதை வழிபாடுகள் ஏற்படுத்தியிருக்கின்றன. சமுதாயக் கூட்டுறவுக்கும் கலைகளின் வளர்ச்சிக்கும், இத்தேவதை விழாக்கள் வழி சமைக்கின்றன.

அகால மரணமடைந்த கன்னியர்களும், ஆபத்தில் போராடி மாண்ட வீரர்களும், அன்புடைய தலைவர்களும் நாட்டுப்புறத் தேவதைகளாக மாற்றப்பட்டனர் என்ற வரலாற்றை வில்லுப் பாடல்களாலும், கர்ண பரம்பரைக் கதைகள் மூலமும், செவி வழியாகவும் அறிந்து கொள்ளலாம்.

## மக்கட் பெயர் ஆய்வு

மனித இன வரலாற்றில் பெயர் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது பெயராகும். பெயரைக் குறியீடாக மட்டும் கருதுவதில்லை. அது மனிதனின் ஆளுமையையும் இயல்புகளையும் காட்டுவனவாக மட்டுமின்றி சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கை, பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. ஒருவனுக்குப் பெயர் சூட்டிய பின்னர்தான் குடும்பத்தில் ஓர் அங்கமாகவும் சமுதாயத்தில் ஒரு உறுப்பினராகவும் கருதப்படுகிறான். பழங்குடி மக்கள் பெயரை ஆன்மாவாகவே கருதுகின்றனர். பெயர்கள் பழமையின் எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் பிரதிபலித்து நிற்கின்றன..

## பெயராய்வு (Onomatics)

1). இடப் பெயராய்வு(Toponym study)

2). மக்கட்பெயராய்வு(Anthroponym study)

பெயராய்வின் தோற்றம் தொல்காப்பியத்திலே காணப்பட்டாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தான் வளர்ச்சி பெறத் தொடங்கியது. டாக்டர் உ.வே. சாமி நாதய்யர் அவர்கள் சிலப்பதிகார முன்னுரையில் பெயர்களில் மக்கட்பெயர்களை மட்டும் தொகுத்து மக்கட் பெயராய்வுக்குக் கால்கோள் நாட்டினார். இவரைத் தொடர்ந்து பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் ‘சங்க இலக்கியம்’ என்ற நூலின் இறுதியில் புலவர் பெயர்களைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்துக் காட்டினார். டாக்டர் மொ. அ. துரை அரங்கனார் அவர்கள் ‘சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்’ எனும் நூலில் இலக்கியச் சிறப்புப் பெயர்களையும் குடி பற்றிய சிறப்புப் பெயர்களையும் விரிவாக ஆராய்ந்து இத்துறைக்கு அடித்தளமிட்டார். டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் ‘தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்’ எனும் நூலில் புலவர் பெயர்களை அகரவரிசையில் தொகுத்தளித்துள்ளார். டாக்டர் ந. சுப்பிரமணியம் அவர்கள் ‘பண்டைத் தமிழர் பெயரிடும் முறை’ எனும் கட்டுரையில் பண்டைத் தமிழர் பெயரிடும் முறையினை விளக்கியுள்ளார். டாக்டர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் பெயர்களை ஆய்வு செய்து ஆறு பிரிவாக வகைப்படுத்தியுள்ளார். மா. நயினார் அவர்கள் ‘பேரும்

பெருமையும்' எனும் நூலில் தற்கால மக்கட் பெயர்களைப் பதினெட்டு வகையாக வகைப்படுத்தியுள்ளார். ச. சந்திரபோசு அவர்கள் 'தமிழில் பெயராய்வு முறைகளும் மக்கட் பெயராய்வும்' எனும் ஆய்வுக் கட்டுரையில் இலக்கணக்காரர்களும் பெயராய்வும், உரையாசிரியர்களும் பெயராய்வும், வீரமா முனிவரும் பெயராய்வும், மொழியியலும் பெயராய்வும், உ.வே. சாவும் பெயராய்வும் வையாபுரிப் பிள்ளையும் பெயராய்வும், துரை அரங்கனாரும் பெயராய்வும் மற்றும் தற்கால ஆய்வாளர்களும் பெயராய்வும் எனப் பகுத்து ஆராய்ந்துள்ளார். டாக்டர் சு. சக்திவேல் அவர்களின் 'மக்கட் பெயராய்வு' எனும் நூல் ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. 'முன்னுரை' எனும் இயலில் மக்கட் பெயராய்வு விளக்கமும் இரண்டாவது இயலில் 'பெயரிடும் முறைகளும் சடங்குகளும்' பற்றியும் மூன்றாவது இயலில் 'பெயரைத் தேர்ந்தெடுத்தல்' பற்றியும் நான்காவது இயலில் 'பழங்காலப் பெயர்கள்' பற்றியும் ஐந்தாவது இயலில் 'இடைக்காலப் பெயர்கள்' பற்றியும் ஆறாவது இயலில் 'தற்காலப் பெயர்கள்' பற்றியும் ஏழாவது இயலி 'முடிவுரை' பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளார். மக்கட் பெயராய்வு பற்றிய அடிப்படை நூலாகும்.

இத்துறை பற்றித் தமிழில் முழுமையாக ஆராயப்படவில்லை. இன்னும் குழந்தை நிலையிலேயே உள்ளது. இடம் பெயராய்வு வளர்ந்த அளவிற்கு மக்கட் பெயராய்வு வளரவில்லை. இடப் பெயராய்வு பற்றிப் பல ஆய்வேடுகளும் கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன. மக்கட் பெயர்களைச் சேகரிக்கும் பணியும் வகைப்படுத்தலும் பின் ஆய்வு செய்தலும் முறையாக அறிவியல் நெறிப்படி துவங்கப்பட்டவேண்டும்.

மானிடவியல் அறிஞர்கள் மனிதர்களை இனங்கண்டு வகைப்படுத்த இயற்பெயரைப் (Personal names) பயன்படுத்துகின்றனர். பெயர்கள் பெயர்ச் சொற்களாக இருப்பினும் இஃது மற்றவனினின்றும் வேறுபடுகின்றது. ஒரு நாட்டின் வரலாறும் மதமும் நாகரிகப் பண்பாடுகளும் அந்நாட்டு மக்கள் பெயர்களில் தம் முத்திரையைப் பதிக்கின்றன' என சார்லட் யங் (Charlotte younge) கூறியதாக எரிக் பாட்ரிட்ஜ் (Eric Patridge) குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது. 'ஒரு நாட்டினரின் சமுதாய நிலையினையும் உள்ளப்பாங்கினையும் செவ்வன் உணர்வதற்கு அம்மக்களின் பெயரிடும் முறையினை ஆய்ந்து அறிதல் தவிர்க்க முடியாத ஒரு முன்னிடையாகும். ஆதலால் பண்டைத் தமிழரின் சமூக

வரலாற்றினைத் தெள்ளிதின் அறிய விரும்புவோர் அத்தமிழர் மேற்கொண்ட பெயரிடு முறையினை ஆய்தல் நன்று' என டாக்டர் ந. சுப்பிரமணியம் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. ஒரு சமுதாயத்தின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், நாகரிகம், நம்பிக்கை, கடவுட் கொள்கை, சமயச்சிந்தனை, அரசியல் சமுதாய மாற்றங்கள் அனைத்தையும் மக்கட் பெயர் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பழங்காலத்தில் தெய்வத்திற்குப் பூஜை நடத்தித் தாயின் மடியில் குழந்தையைக் கிடத்திக் குடும்பத்திலுள்ள மூத்தோர் பெயர் சூட்டுவர். குடும்பச் சோதிடனும் பெயர் சூட்டுவதுண்டு. மனுஸ்மிருதிப்படி பிராமணர் குழந்தை பிறந்த பத்து அல்லது பன்னிரண்டாவது நாளிலும் வைஸ்யர் இருபதாவது நாளிலும் சூத்திரர் இருபத்திரண்டாவது நாள் அல்லது மாத முடிவிலும் பெயர் சூட்டுவர்.

குழந்தைக்குப் பெயிரிடும் முறை பற்றிய குறிப்புகளே இலக்கியங்களில் அதிகம் இல்லை. சிலம்பில்தான் பெயரிடும் முறை பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. நடனமாடும் ஆயிரம் பெண்கள் மாதவி இல்லத்தில் கூடிக் கோவலனின் குல தெய்வமான 'மணிமேகலையின் பெயரை மாதவியின் குழந்தைக்குச் சூட்டினார்'. பெரியாழ்வார் 'நாரண நாமம் நந்தமர்க்கு இடுநலம்' என ஒரு பதிகம் பாடியுள்ளார்.

பெரும்பாலும் குடும்பத்தின் மூத்தவராலும் கிராமங்களில் கோயில் பூசாரியாலும் பெயர் சூட்டப்படுகின்றது. பழங்குடி சமுதாயத்தில் 'மூப்பன்' (Headman) என்பவனால் பெயர் சூட்டப்படுகிறது. இன்று நம் சமுதாயத்தில் அரசியல் தலைவர்களைக் கொண்டு பெயர் சூட்டுகின்றனர்.

வடபிரேஜில் வாழும் இன்காஸ் (Incas) பழங்குடி மக்களிடையே குழந்தைக்கு மொட்டையடித்துத் தாய் மாமனால் பெயர் சூட்டப்படுகின்றது. வடபிரேஜில் வாழும் சனு மாக்களிடையே மூதாதைப் பெயரைத் தவிர, உண்மைப் பெயர் (Real name) ஒன்றையும் வைத்துக் கொள்கிறார்கள். அஃது பெரும்பாலும் விலங்கினப் பெயராக இருக்கும். வட அமெரிக்க ஒஸாகா பழங்குடிகளும் கால்வழியைச் சார்ந்த விலங்கினப் பெயர்களையே வைப்பதாக லெவிஸ்டிராஸ் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பெயர் வைப்புமுறை அமெரிக்க இந்தியப் பழங்குடிகளிடையே பரவலாக உள்ளது. ஆஸ்திரேலியா பழங்குடிகளிடையே முன்னோரது ஆவியையொட்டிப் பெயர்கள் அமைகின்றன.

இவர்கள் ஆவி உலகக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள். முன்னோரது பெயர் வைப்பது உலகத்திலுள்ள இனங்களில் பெரும்பாலான இனங்களில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் குடிவழிப் பெயர் (Surname) வைக்கும் முறை பெரும் வழக்காயிற்று. கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் இரட்டைக் குடிவழிப் பெயர்கள் வழக்கத்தில் வந்தன. சீனர்களும் லாப்ஸ்களும் குடும்பப் பெயரைப் பேணுவதில் பெரும் சிரத்தை எடுக்கின்றனர். எகிப்தியர்கள் பெயர்கள் ஆன்மாவோடு தொடர்புடையது என நம்புகின்றனர். இயற்பெயர் போன்று சில விலங்குப் பெயர்களைக் கூறுவதிலும் விலக்கு (taboo) இருந்தன. தென் அமெரிக்க இந்தியப் பழங்குடிகளிடையே இறந்தவரது பெயரே விலக்காக உள்ளது. நீல கிரியிலுள்ள தோடா பழங்குடிகளும் இறந்த முன்னோரது பெயரை மீண்டும் வைப்பதில்லை. பழங்குடி சமுதாயத்தில் பெயர் ஒரு விலக்காக (taboo) இருந்துள்ளது. தமிழ் நாட்டில் கிராமத்துப் பெண்கள் இன்றும் தனது கணவன்மார்கள் பெயரைக் கூறுவதில்லை.

இன்றும் கிராமப்புறங்களில் குழந்தைக்கு மொட்டையடித்துக் காதுகுத்தி, பெயர் சூட்டுகின்ற வழக்கத்தைக் காண்கிறோம். காது குத்தும் வழக்கம் ஆசியா, எகிப்து போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. காது வழியாகத் தீய ஆவி புகுவதைத் தடுக்க உலோகத்தாலான காதணி அணிகின்றனர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தோடா பழங்குடி மக்களிடையே ஆண்களது பெயர் கால் வழியையொட்டி அமைந்திருக்கும். பெண்களது பெயருக்கும் கால்வழிக்கும் தொடர்பு இராது. தோடர் பழங்குடி சமுதாயத்தில் ஒரே பெயரை மீண்டும் காண்பது அரிதாகும். நீலகிரியில் வாழும் பெட்ட குறும்பர் பழங்குடி மக்களிடையே மொத்தமே 16 பெயர்கள்தான் காணப்படுகின்றன. ஆண்களிடையே எட்டுப் பெயரும் பெண்களிடையே எட்டுப் பெயரும் காணப்படுகின்றன. மூத்த, இளையவர்களைக் குறிக்க ‘தொட்ட’‘சின்ன’ என்ற முன்னொட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பெயர்களைத் தவிர வேறு பெயர்கள் வைத்தால் குழந்தைகள் இறந்து விடும் என நம்புகின்றனர். ஒரே குடும்பத்தில் ஒரே பெயருடைய பலரைக் காணலாம்.

ஆண்கள் பெயர்:

பும்மன், கேதன், காளன், மாதன், மாண்பன் மாறன், சடையன், சோமன்.

பெண்கள் பெயர்:

பும்மி, கேத்தி, காளி, மாதி, மாண்பி, மாறி, சடைச்சி, சீரத்தி.

தமிழகத்தில் வாழும் நாடோடிப் பழங்குடி மக்களான நரிக்குறவர்களிடையே பிறந்த ஊரை வைத்துப் பெயரிடுவதும் உண்டு. காடாம்பூரில் பிறந்தவனைக் ‘காடாம்பூரான்’ என்பர். ‘நயா பைசா’ வழக்கில் வந்த ஆண்டில் பிறந்தவனை ‘நயா பைசா’ என்றழைக்கின்றனர். திறத்தையொட்டியும் உடலமைப்பையொட்டியும் பெயர் வைக்கின்றனர்.

பெயர்களை வைத்துக் கொண்டு எவ்வட்டாரத்தைச் சார்ந்தவர்கள் என்றும் ஓரளவு ஊகிக்கமுடியும்.

சுடலை முத்து, இசக்கி : திருநெல்வேலி

அகத்தியலிங்கம், சிதம்பரதாணு : குமரிமாவட்டம்

இராமானுஜ நாயுடு

மெய்யப்பன் (நாட்டுக்கோட்டைச் செட்டியார்) புருஷோத்தம ரெட்டி – நாயுடு

குஞ்சிதபாதம் பிள்ளை

ஆண்டித் தேவர்

போஜன் (செட்டியார்)

மாயாண்டித் தேவர்

உலகிலுள்ள பெயர்களையெல்லாம் ஆராய்ந்தபோது கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் தான் பெயர்களைப் பெரும்பாலும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர் என்பது தெரியவருகிறது. தமிழக மக்கட் பெயரும் இவற்றின்கண் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடவுள்

முன்னோர்கள்

இறந்த அரசன் வீரன்

ஞானி

சமயவாதி

மரம்

செடி

கொடி

விலங்கு

பறவை

நதி

மலர்

உடல் உறுப்பு

உடல் உறுப்புக் குறைபாடு

தோற்றம்

பண்பு

மந்திரம்

இயற்கைப் பொருட்கள்

ஆடை அணிகலன்கள்

அரசியல்வாதிகள்

விளையாட்டு வீரர்கள்

நம்பிக்கை முதலியன்.

மேலை நாடுகளில் குடும்பப் பெயர் (Family name) உண்டு

தாமஸ்

முர்ரே

பர்ரோ

எமனோ

பெயருக்குப் பின்னர் குடும்பப் பெயரை இணைத்துக் கொள்வர்.

ரோமர்கள் தான் முதன் முதலில் குடும்பப் பெயர்களைப் பயன்படுத்தினர். பின்னர் மற்ற நாட்டிற்கும் பரவியது. அமெரிக்க நீக்ரோ மக்களிடையேயும் பரவியது.

## குடிவழிப்பெயர் (Surname)

நார்மனியர்கள் மூலமாக இங்கிலாந்துக்குப் பரவியது. குடிவழிப் பெயர்களில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே உள்ளன. 19-ஆம் நூற்றாண்டில் ரெட்கிளிப் - பிரௌன் (Radcliffe-Brown) போன்ற இரட்டை குடிவழிப் பெயர்

வழக்கில் வரத் தொடங்கியது. யூதர்களிடையே இறந்த முன்னோரது பெயர் வைத்தலைக் காண்கிறோம்.

நியூ கினியாவிலும் பெல்ஜியன் காங்கோவிலும் குழந்தையின் நடத்தையையொட்டிப் பெயர் வைக்கின்றனர். அமெரிக்க இந்தியப் பழங்குடி மக்களிடையே ஒருவர் நோய் வாய்ப்பட்டால், முன்னர் இடப்பட்ட பெயரை நீக்கிப் புதுப்பெயர் வைப்பர். கெட்ட ஆவியினின்றும் தடுப்பதற்கும் புதிய பெயர் வைத்துக் கொள்வதுண்டு.

பிரிட்டிஸ் கொலம்பியா குவாகுயில் இந்தியப் பழங்குடிகளிடையே வசந்தகால, கோடை காலப் பெயர்களும் உண்டு. சில இனங்களில் சடங்குப் பெயர்களையும் (Ritual names) காண்கிறோம். சடங்குப் பெயர்கள் வைத்தால் மனிதனின் ஆளுமை மாறும் என நம்புகின்றனர். சிலர் இரகசியப் பெயர் (Secret name) வைத்துக் கொள்வதும் உண்டு.

சீனாவில் மழலைக்குப் ‘பால் பெயர்’ (Milk name) வைக்கின்றனர். பள்ளிக்குச் செல்லும் போது பள்ளி ஆசிரியரால் பெயர் வைப்பதுண்டு.

சனுமாக்கள் முதல் குழந்தைக்குப் ‘பூமாபி’ என வைப்பர். குழந்தை நோயுற்றால் பூமாபி பெயரை மாற்றுவர்.

கிழக்கு ஆப்ரிக்க நூவர் பழங்குடிகள் பல பெயர்களை வைத்துக் கொள்கின்றனர். குழந்தை பிறந்தவுடன் ஒரு பெயர் வைக்கப்படும். பின்னர் எருது பெயர் (Ox name) வைப்பர். நண்பர்கள் எருது பெயர் கூறிதான் அழைப்பர். சம வயதினரிடையே பெரும்பாலும் எருது பெயர்தான் பயன்படுத்தப்படுகிறது. திருமணமான பெண்கள் பசு பெயர் (Cow name) வைத்துக் கொள்வர்.

அமெரிக்க நாட்டில் ஜான் (John) என்ற பெயர் உடையோர் 6 மில்லியன் பேர் இருப்பர். ‘வில்லியம்ஸ்’ ‘மேரி’ என்ற பெயருடையோர் 4 மில்லியன் பேர் இருப்பர் (Smith 1970) எட்வர்ட் என்ற பெயரையும் ஒரு காலத்தில் பெரும்பாலோர் வைத்துக் கொண்டனர்.

தமிழக வரலாற்றை நோக்கின் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம், விடுதலை இயக்கம், திராவிட கழகங்களின் வளர்ச்சி, எங்கும் எதிலும் புதுமை காணல் விளைவாக நல்ல தமிழ்ப் பெயர்களைக் காண்கிறோம். புதுமையாக்கம்

காரணமாக மகேஷ், சுரேஷ், அசோக், வெங்கட், ஸ்ரீபிரியா போன்ற பெயர்களை நகர்ப்புறங்களில் உயர்சாதியினரிடையே காண்கிறோம்.

தமிழ்நாட்டு மக்கள் பெயர் வரலாற்றினைக் கூர்ந்து நோக்கின், பண்டைக்கால மக்கட் பெயர்கள் மிகச் சுருக்கமாக உள்ளன. இயற்பெயர்கள் கொஞ்சமாக இருந்தமையால் அடைகள் இட்டு வேறுபடுத்தினர். பண்டைக்காலத்தில் ஒருவர் மகனுக்குத் தந்தையானவுடன் தன் பெயரை மறந்து இன்னாரின் தந்தை என வழங்கப்படுவதையும் காண்கிறோம். பண்டைக் காலத்தில் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தியதால் மரம், செடி, கொடி, விலங்கு, பறவை பெயர்கள் மக்களுக்கு இடப்பட்டதைக் காண்கிறோம். சங்க மருவிய காலத்தில் மொழிப் பெயர்கள் தமிழாக்கம் செய்யப்பட்டதையும் காண்கிறோம்.

இடைக்காலத்தில் சைவமும் வைணவமும் தழைந்தோங்கியதால் சைவப் புலவர்களை நாயனார் என்றும் வைணவப் புலவர்களை ஆழ்வார்கள் என்றும் அழைத்தனர். பல்லவ, சோழர் காலத்தில் மன்னர்களே வடமொழிப் புலமை பெற்றிருந்ததால் வடமொழிச் செல்வாக்கை அவர்களது பெயரிலும் காண்கிறோம். தாயக்கர் காலத்தில் மன்னர் பெயருக்குப் பின் சாதிப் பெயரும் இணைத்து வழங்கலாயிற்று. திருமலை நாயக்கர், பின் மேலை நாட்டாரின் ஆட்சித் தாக்கத்தைப் பெயரிலும் காண்கிறோம். சமூக-வரலாற்று மாற்றங்கள் பெயர்களிலும் பிரதிபலிக்கின்றன.

தற்காலப் பெயர்களைப் பற்றி ஆராய்வோம். விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியையும் புதிய பாரதத்தின் எழுச்சியையும் குடியாட்சி மலர்ந்ததையும் கண்டோம். தமிழகத்தில் வடமொழிப் புறக்கணிப்பும் தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் திராவிட இயக்கங்களின் வளர்ச்சியும் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற இனவுணர்வும் மேலோங்கியதை மக்கட்பெயர்கள் பிரதிபலிக்கின்றன. தனித்தமிழ் இயக்கம், திராவிட இயக்கங்களின் விளைவாகப்பட்டி தொட்டிகளில் எல்லாம் நல்ல தமிழ்ப் பெயர்கள் வைக்கப்பட்டிருப்பதை வாக்காளர் பட்டியல் நமக்குக் காட்டுகின்றது. ஆனால், அதே நேரத்தில் நகர்ப்புறத்தில் புதுமையாக்கம் காரணமாக வெங்கட், அசோக், ஸ்ரீபிரியா போன்ற பெயர்களையும் காண்கிறோம். தற்காலப் பெயர் மாற்றங்களுக்குச் சமூக - பண்பாட்டு - அரசியல் மாற்றங்கள் காரணமாகும். தற்கால மக்கட் பெயர்களைப் பொருள் அடிப்படையில் இருநூறு வகையாக வகைப்படுத்தலாம். அவற்றில் மிகமிக முக்கியமானவற்றைப் பற்றி இங்கு காண்போம்.

பெரும்பான்மை மேல் சாதியினரும் சிறுபான்மை கீழ்ச் சாதியினரும் பெருந்தெய்வங்களான சுப்பிரமணியம், முருகன், பார்வதி, சரஸ்வதி போன்ற பெயர்களை வைத்துக் கொள்கின்றனர்.

சிறு தெய்வப் பெயர்களான அய்யனார் சுடலை கருப்பசாமி, முனிசாமி, மாரியம்மாள். காளியம்மாள், இசக்கி போன்ற பெயர்களைக் கிராமப்புற மக்களிடையே காண்கிறோம். குலதெய்வப் பெயர்களையும் மக்களிடையே காண்கிறோம்.

இராமன், இலட்சுமணன், சீதை, தருமர், அர்ச்சுனர் போன்ற பெயர்களை நகர்ப்புறத்திலும் நாட்டுப்புறத்திலும் காண்கிறோம்.

சைவத்தைப் பின்பற்றுபவர்கள் சைவப் பெயர்களையும், வைணவத்தைப் பின்பற்றுபவர்கள் வைணவப் பெயர்களையும் வைத்துக் கொள்கின்றனர். இடைக் காலமான பக்தி காலத்தில் இஃது பெரு வழக்காயிற்று.

ஞானிகள் பெயர்களையும் (இராமகிருஷ்ணர், விவேகாநந்தர்) அடியவர் பெயர்களையும் (திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர்) மக்களுக்கு வைக்கின்றனர். அரசர் பெயர்களும், (நெடுஞ்செழியன், செங்குட்டுவன், நெடுமாறன்) மக்களுக்கு இடப்படுகின்றன. புலவர் பெயர்களும் (வள்ளுவன், கபிலன், இளங்கோ, சேக்கிழார், தாயுமானவர், ஔவையார்) மக்களுக்கு இடப்படுகின்றன.

வரலாற்று வீரர் பெயர்களும் (சிவாஜி, கட்டபொம்மு ஜான்சிராணி, மங்கம்மாள்) விளையாட்டு வீரர் பெயர்களும் (கபில்தேவ், கவாஸ்கர்) மக்களுக்குச் சூட்டப்படுகின்றன.

அரசியல் இயக்கத்தில் ஈடுபாடுடையவர்கள் தங்கள் குழந்தைக்கு அரசியல் தலைவர்களின் பெயர்களைச் சூட்டுகின்றனர். காந்தி, நேரு, சுபாஷ் சந்திரபோஸ், திலகர், காமராஜ், அண்ணாதுரை, கருணாநிதி, எம்.ஜி. ராமச்சந்திரன்.

திரைப்பட நடிகர், நடிகை பெயர்களையும் மக்களுக்குச் சூட்டுகின்றனர். ரஜினி, கமல், சரோஜாதேவி, பத்மினி போன்ற பெயர்களையும் மக்களிடையே காண்கிறோம்.

காப்பியங்களின் பெயர்களும் கவிஞர்களின் பெயர்களும் மக்களுக்குச் சூட்டப்படுகின்றன.

நாவல்களில் வரும் கதாபத்திரங்களின் பெயர்களும் மக்களுக்குச் சூட்டப்படுகின்றன.

லெனின், ஸ்டாலின், சாக்ரடீஸ், கென்னடி போன்ற பெயர்களையும் மக்களிடையே காண்கிறோம்.

மாதப் பெயர்களையும் (கார்த்திகை, தைப்பாவை, சித்திரைக்கனி, சித்திரை வேல்) நாட்பெயர்களையும் (திங்களப்பன், திங்களனி) திசைப் பெயர்களையும் (வட மலை, தென் பாண்டி) மக்களிடையே காண்கிறோம்.

நிலப்பெயர்களையும் (பூமிநாதன், செங்கழனி, தோட்டத்தாயி) நீர்ப் பெயர்களையும் (தண்ணீர் மலை, ஜலகண்டேசுவரன், நீர் பாஞ்சாள்) காற்றுப் பெயர்களையும் (தென்றல், தென்றல் வாணன், தென்றல் மணி, தென்றல் அரசி) வான் பெயர்களையும் (வானமலர்) மேகத்துப் பெயர்களையும் (கார்மேகம், நீலமேகம், மேகவர்ணம்) நெருப்புப் பெயர்களையும் (தீவண்ணன், தீப்பாஞ்சாள்) மக்களிடையே காண்கிறோம்.

இடி (இடிமன்னன்) மின்னல் (மின்னல், மின்னல் கொடி) மழை (மழையம்மாள், மலை அரசி) பற்றிய பெயர்களையும் மக்களிடையே காண்கிறோம்.

சூரியன் (உதய சூரியன், கதிரவன்) சந்திரன் (சந்திரன், வெண்ணிலா, வளர்மதி, பிறைவடிவு, நிலவொளி, நிலவழகி, இளம்பிறை) பற்றிய பெயர்களையும் அமாவாசை (அமாவாசை) பௌர்ணமி (பூர்ண பௌர்ணமி) பற்றிய பெயர்களையும் காண்கிறோம்.

நட்சத்திரங்களின் பெயர்களையும் (அஸ்வதி, ரேவதி, ரோகிணி, பரணி, தாரணி, உத்திரட்டாதி, கார்த்திக்) கிரகங்களின் பெயர்களும் (குரு, சுக்கிரன்) மக்களுக்கு இடப்படுகின்றன.

நிறங்களின் பெயர்களும் (பச்சையம்மாள், வெள்ளைச்சாமி, கருப்பசாமி, கறுப்பாயி) இடப்படுகின்றன.

விளக்கு (மணிவிளக்கு, குத்துவிளக்கு, தீபம்) ஒளியின் பெயர்களும் (ஜோதி, ஜோதிலிங்கம், பிரகாசம், ஞானப் பிரகாசம்) இடப்படுகின்றன.

மலைகளின் பெயர்களும் (ஏழு மலை, அண்ணாமலை, வெள்ளிமலை) இடப்படுகின்றன.

மரப் பெயர்களும் (அசோகன், பனை மரத்தான், சந்தனம் ) செடிப் பெயர்களும் (துளசி, எருக்கம்மாள், முல்லை, ரோஜா) கொடிப் பெயர்களும் (மலர்க்கொடி, பவளக்கொடி, பூங்கொடி) போன்ற பெயர்களும் மக்களுக்கு இடப்படுகின்றன.

ஆறுகளின் பெயர்கள் (காவேரி, கங்கா, கோதாவரி, யமுனா, பொன்னி, நர்மதா) பூக்களின் பெயர்கள் (அல்லி, மல்லிகா, அரும்பு, கனகாம்பரம், சூரியகாந்தி, செந்தாமரை, முல்லை, மனோரஞ்சிதம்) குறிப்பாகப் பெண்களுக்கு இடப்படுகின்றன.

விலங்கினப் பெயர்கள் (சிங்கராயன், கஜேந்திரன், வேழவேந்தன், பூவராகன், சின்னக்காளை) பறவையினப் பெயர்கள் (அன்னம், மைனா, அன்னக்கிளி, மயில், கிளியம்மாள், குயிலம்மாள்) மக்களுக்கு இடப்படுகின்றன. பறவையினப் பெயர்கள் பெரும்பாலும் பெண்களுக்கு இடப்படுகின்றன.

அச்சம் காரணமாகப் பாம்பை வழிபடுவதால் பாம்பின் பெயர்கள் (நாகராஜன், நாகலிங்கம், நாகஜோதி, நாகேஸ்வரி) ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடப்படுகின்றன.

தங்கத்தின் பெயர்களும் (தங்கம், சொர்ணம், பவுனு, பவுனம்மாள், பொன்னம்மாள்) வெள்ளியின் பெயர்களும் (வெள்ளிக்கண்ணு) நவ இரத்தினங்களின் பெயர்களும் (வைரம், வைரமுத்து, ரத்தினம், மாணிக்கம், மரகதம்) மக்களுக்கு இடப்படுகின்றன.

ஊரின் பெயர்களும் ((அ) சிதம்பரம், தனுஷ் கோடி, காசி, திருப்பதி, பழனி, குற்றாலம், (ஆ) ஆருரான், வேங்கடத்தான் நாகூரான்) மக்களுக்கு இடப்படுகின்றன.

உடலமைப்புப் பெயர்களும் (Physical feature) (குள்ளன், மண்டையன், மொட்டையன்) உடல் ஊனப் பெயர்களும் (Physically handicapped) (செவிடன், சப்பாணி, ஊமையன் தொண்டியன்) உடல் உறுப்புப் பெயர்களும் (Body Parts) (நல்ல கண்ணு, மூக்கையா, கொங்கையம்மாள், கயல்விழி, மலர்விழி, அய்யாக்கண்ணு, மூக்கம்மாள், ஆறுமுகம்) மக்களுக்கு இடப்படுகின்றன.

உறவுப் பெயர்கள் (வீரப்பன், வீரண்ணன், அண்ணாதுரை, நல்லதம்பி, வேலுத்தாய், தம்பிதுரை, தாயம்மாள்) மக்களுக்கு இடப்படுகின்றன.

இராகங்களின் பெயர்களும் (நீலாம்பரி, கல்யாணி, ஹம்சத்வனி, பைரவி, சண்முகப்பிரியா) மக்களுக்கு இடப்படுகின்றன.

கலைத் தொடர்பான பெயர்களும் (கலைச்செல்வி, கலை அரசி, கலைமதி, கலைப்பாவை) இடப்படுகின்றன.

தமிழ் தொடர்பான பெயர்கள் (தமிழன், மிழண்ணல், தமிழ்வாணன், தமிழன்பன், தமிழரசி, தமிழ்மங்கை) மக்களுக்கு இடப்படுகின்றன. அறிவுத் தொடர்பான பெயர்களும் (அறிவழகன், அறிவொளி, அறிவுக்கண்ணு, அறிவுநம்பி) அறம் தொடர்பான பெயர்களும் (அறம், அறம்வளர்த்தான். அறப்பாவை) மக்களுக்கு இடப்படுகின்றன.

வெற்றி தொடர்புடைய பெயர்களும் (வெற்றிவேல், வெற்றி கொண்டான், வெற்றிச் செல்வன், வெற்றிச் செல்வி) கல்வித் தொடர்புடைய பெயர்களும் (சரசுவதி, கல்விக்கரசன்) மக்களுக்கு இடப்படுகின்றன.

அதிர்ஷ்டம் தொடர்பான பெயர்களும் (அதிர்ஷ்ட லட்சுமி, அதிர்ஷ்ட வேணி, யோக லட்சுமி) பண்பு, நடத்தைத் தொடர்பான பெயர்களும் (குணம், சற்குணம், உத்தமன், புது நடத்தரசு, பத்தினி, நல்லவன், நாக பத்தினி) மக்களுக்கு இடப்படுகின்றன.

நம்பிக்கை அடிப்படையிலான பெயர்களும் (குப்பை, பிச்சை, பரதேசி, சன்னியாசி, மண்ணாங்கட்டி) மக்களுக்கு இடப்படுகின்றன.

சில விசித்திரமான பெயர்களும் (கும்பிடுகிறேன் சாமி, சேவிக்கிறேன் சாமி) மக்களுக்கு இடப்படுகின்றன.

## வடமொழிப் பெயர்கள் தமிழாக்கம் பெறல்

ஞானப்பிரகாசம் - அறிவொளி

இராசராசன் - மன்னர்மன்னன்

பாலகிருஷ்ணன் - இளங்கண்ணன்

பங்கஜம் - தாமரை

கனகாம்புஜம் - பொற்றாமரை.

## புனைபெயர்கள்

பெற்றோர் இட்ட பெயரைத் தவிர புனைபெயரைச் சிலர் வைத்துக் கொள்வதுண்டு.

கல்கி (ரா.கிருஷ்ணமூர்த்தி)

சாவி (சா.விசுவநாதன்)

தமிழ்வாணன் (இராமநாதன்)

பாரதிதாசன் (கனகசுப்புரத்னம்)

கண்ணதாசன் (முத்தையா)

பாரதிராஜா (சின்னச்சாமி)

## இடப்பெயர் - இயற்பெயர்

இடப்பெயருடன் இயற்பெயர் இணைக்கும் மரபு சங்க காலத்தே காணப்படுகிறது. இன்று இவ்வழக்கம் கலைஞர்களிடையே பெரும்பான்மையாக உள்ளது.

**(அ) மதுரை சோமு**

சிதம்பரம் ஜெயராமன்

சீர்காழி கோவிந்தராசன்

பாலக்காடு மணிஅய்யர்

காருகுறிச்சி அருணாசலம்

லால்குடி ஜெயராமன்

**(ஆ) மதுரை முத்து**

நாஞ்சில் மனோகரன்

அன்பில் தர்மலிங்கம்

பண்ருட்டி இராமச்சந்திரன்

**(இ) குன்றக்குடி அடிகளார்**

ஈரோடு பெரியார்

**(ஈ) நாமக்கல் இராமலிங்கம்**

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## பத்திரிகை பெயர் - பெயர்

முரசொலி மாறன்,

துக்ளக் சோ,

தீபம் பார்த்தசாரதி

## சிறப்புப்பட்டப் பெயர் இயற்பெயர் போன்றே வழங்கல்

மகாத்மா (காந்தி)

பெரியார் (ஈ.வெ.ரா)

முத்தமிழ்க் காவலர் (கி.ஆ.பெ. விசுவநாதன்)

பண்டிதமணி (கதிரேசச் செட்டியார்)

சொல்லின் செல்வர் (ரா.பி. சேதுப்பிள்ளை)

சிலம்புச் செல்வர் (ம.பொ.சி)

திருக்குறளார் (முனுசாமி)

கலைஞர் (கருணாநிதி)

புரட்சித் தலைவர் (எம்.ஜி.ஆர்)

புரட்சித் தலைவி (ஜெயலலிதா)

அடிகளார் (குன்றக்குடி அடிகளார், பங்காரு அடிகளார்)

மக்கட் பெயர்களை முன்னொட்டு (Prefix) பின்னொட்டு (Suffix) என்ற அடிப்படையிலும் ஆராயலாம்.

இராம – என்ற முன்னொட்டை (prefix) அடிப்படையாகக் கொண்டு பல பெயர்கள் உருவாகியிருப்பதைக் காணலாம்.

**(அ) இராம –**

இராம சந்திரன்

இராம தாஸ்

இராம பத்திரன்

இராம சாமி

இராம துரை

இராம அய்யன்

இராம ஜெயம்

இராம கிருஷ்ணன்

இராம குமார்

இராம லிங்கம்

இராம மணி

இராம மூர்த்தி

இராம நாதன்

இராம னுஜம்

இராம சேவின்

இராம சுப்பிரமணியம்

இராம தயாளன்

இராம கோபால்

இராம ரத்தினம்

**ஆ) சாமி**

இராம சாமி

அருள் சாமி

அய்யா சாமி

முத்து சாமி

சின்ன சாமி

கோவிந்த சாமி

குரு சாமி

கந்த சாமி

கண்ணு சாமி

நாராயண சாமி

பெரிய சாமி

ரெங்க சாமி

வீராச் சாமி

வேலுச் சாமி

பக்கிரி சாமி

துரை சாமி

கருப்ப சாமி

வெள்ளைச் சாமி

குமார சாமி

குப்பு சாமி

மாட சாமி

லெட்சுமண சாமி

நாக சாமி

பழனிச் சாமி

தங்க சாமி

ரத்தின சாமி

முனு சாமி

பாலு சாமி

ஒருவரை மற்றவரினின்றும் வேறுபடுத்திக்காட்டக் குறியீடாகப் பயன்பட்ட பெயர், காலப்போக்கில் சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, சடங்கு அடிப்படையில் வளரலாயிற்று. பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் பிரதிபலித்து நிற்கின்றன. பொதுவாகத் தமிழக வரலாறு, தமிழ் மொழி வரலாறு, பண்பாட்டு வரலாறு முதலியவற்றில் தொல்காப்பியத்திலிருந்து இன்றுவரை ஒரு தொடர்ச்சியைக் காண்கிறோம். ஆனால், மக்கட் பெயரில் இத்தொடர்ச்சியைக் காணமுடியவில்லை. அன்று நிலவிய பெயர்கள் இன்று வழக்கில் இல்லை. இதற்குச் சமூகப் பண்பாட்டு அரசியல் மாற்றங்களேக் காரணமாகும். ஒரு தாட்டின் பண்பாட்டு அரசியல் மாற்றங்களே காரணமாகும். ஒரு நாட்டின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, கடவுட் கொள்கை, சமயச் சிந்தனை, அரசியல் மாற்றம், சமுதாய மாற்றம் முதலியவற்றை மக்கட் பெயராய்வு மூலம் அறியலாம். ஊர்ப் பெயராய்வு போன்று மக்கட் பெயராய்வும் வளர வேண்டும். அறிஞர் பெருமக்கள் இத்துறையில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். இத்துறை தமிழகப் பண்பாட்டு வரலாற்றை அறியப் பெரிதும் துணை புரியும்.

## ஊர்ப்பெயர் ஆய்வு

ஊர்ப்பெயர் ஆய்வு மேலை நாட்டில் வளர்ந்த அளவிற்கு இந்திய நாட்டில் வளரவில்லை. மேலைநாட்டில் தனித்துறையாகவே வளர்ந்துள்ளது. இந்திய நாட்டில் இவ்வாய்வு இன்னும் குழந்தை நிலையிலேயே உள்ளது. தொல்காப்பியத்தில் ஊர்ப் பெயராய்வுக்கு வித்தும் வேரும் இருப்பினும், அண்மைக் காலத்தில்தான் அறிவியல் அடிப்படையில் ஊர்ப்பெயராய்வு தொடங்கப்பட்டுள்ளது எனலாம். மனித இன வரலாற்றை நோக்கின் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் சென்று வாழத்தலைப்பட்ட காலத்தே ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஒரு ஊரினின்றும் மற்றொரு ஊரை வேறுபடுத்தப் பெயர் இன்றியமையாததாகிறது. மனித இனம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னரே இடப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட் பெயரையும் நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக்காட்ட இடம்பெயர்களையும் அமைத்துக்கொண்டனர். ஆதிகால மக்கள் இடப்பெயர்களை இடவரலாற்றின் காலப் பெட்டகம் (time capsule of local history) எனலாம். ஊர்ப் பெயர்கள் பழமை எச்சங்களாக (fossil remains of the past) மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்றன. ஒரு நாட்டின் பழங்கால வாழ்வையும் வரலாற்றையும் அறிவதற்கு இலக்கியம், கல்வெட்டு, நாணயம் போன்று பெயராய்வும் துணை செய்யும். மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பலபெயர் இருப்பினும் ‘ஊர்’ என்ற பெயர் அனைத்தையும் சுட்டும் நிலையில் உள்ளது.

“மனித இனம் ஒரு குழுவாக சமூகமாக ஆங்காங்கே. ஏதேனும் ஒரு பகுதியில் சிறிதுகாலம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னர்தான் இடப் பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட்பெயரையும் ஒரு இனத்தை மற்றொரு இனத்திடமிருந்து வேறுபடுத்த இனப் பெயரை வழங்கியது போன்று நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக் காட்ட இடப்பெயர்களை அமைத்துக் கொண்டனர் ஆதிகால மக்கள்.”

பெயர் மொழியியலில் ஒரு கூறாக இருப்பினும் சில சிறப்பியல்புகளால் பெயராய்வு (Onomastics) என்ற தனித் துறையாக வளர்ந்துள்ளது. பெயராய்வை

மக்கட் பெயராய்வு (Anthroponymy) இடப்பெயராய்வு (Thoponymy) என இரண்டாகப் பிரிப்பர்.

## பெயராய்வு (Onomastics)

1). மக்கட் பெயர் ஆய்வு (Anthroponym)

2). இடப்பெயர் ஆய்வு அல்லது ஊர்ப்பெயர் ஆய்வு (Toponym Study)

ஊர்ப்பெயராய்வு வர வரலாறு, தொல்பொருளாய்வு, பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழியியல் முதலிய துறைகளோடு பின்னிப் பிணைந்திருக்கின்றது. மேலை நாட்டாரே இத்துறையிலும் முன்னோடியாக உள்ளனர். ஊர்ப்பெயராய்வின் முக்கியத்துவத்தை முதலில் உணர்த்தியவர் கோல் பிரைடு வில்ஹெல்ம் லெய்ப்னிஷ் (1768) ஆவர். பின்னர் மொழியியல் வளர்ச்சி இடப்பெயராய்வுக்கு உந்து சக்தியாக இருந்தது. எக்லி (Egli) இடப் பெயராய்வில் முன்னோடி யாவார்? அடால்பர்க், ஸ்மித், ஸ்டீவர்ட் (Stewart) தார்டினர் (Gardiner) உட்லி (utley), டிரையே (Draye) போன்றோர்கள் இத்துறை ஆய்வில் முன்னோடியாவர். அமெரிக்கப் பெயராய்வுக் கழகம் ‘Names’ (1952) என்ற இதழை நடத்தி வருகிறது. 1949 இல் International committee of onomastic Science அமைக்கப்பட்டது.

இந்தியாவில் ஸ்தல புராணங்கள் இடப்பெயர் ஆய்வுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. காசிநாத் இலட்சுமணன் மாத்தூர், மிதிலா சரண் பாண்டோ, சங்காலியா (Sankalia), சேஷாத்திரி, வாசுதேவ், அகர்வாலா, விஸ்வநாத ரெட்டி, எஸ்.கே சட்டர்ஜி, ஹயவதன ராவ், அச்சுதமேனன், கே. எம். ஜார்ஜ், ஹிரேமட், ஜவரே கௌடா தியாகராசு நாராயணராவ் போன்றோர்கள் இடப்பெயரில் ஆய்வைத் துவக்கிய முன்னோடிகளாவர். 1979-இல் இந்திய இடப்பெயர் ஆய்வுக்கழகம் தொடங்கப் பெற்று (Studies in Indian Place names) என்ற ஆய்விதழையும் நடத்தி வருகின்றது.

தமிழ் இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், ஸ்தல புராண ஆசிரியர்கள் இடப் பெயராய்வுக்குத் தோற்றுவாய் செய்துள்ளனர். இராமலிங்க வள்ளலார் (1874) இவ்வாய்வினைத் தொடக்கம் செய்தார் எனலாம். டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளையைத் ‘தமிழ் ஊர்ப்பெயரின் தந்தை’ எனக் கூறலாம்.

அவருடைய ‘தமிழகம் ஊரும் பேரும்’ ஊர்ப்பெயர் ஆய்வு பற்றிய அடிப்படை நூலாகும். இத்துறையில் இந்நூல் குறிப் பிடத்தக்கதொன்றாகும். 1300 ஊர்ப்பெயர்களை 100 பகுதிகளாகப் பகுத்து ஆராய்ந்துள்ளார். நாடும் நகரமும் குலமும் கோவும் தேவும் தலமும் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் ஸ்தல புராணங்களும் ஊர்ப்பெயர் பற்றி அறிய உதவுகின்றன. ஞானமுத்துவின் கன்னியாகுமரி மாவட்ட ஊர்ப்பெயராய்வும் நாச்சிமுத்துவின் கோயம்புத்தூர் மாவட்ட ஊர்ப்பெயராய்வும் மா. நயினார் சுந்தரத்தின் சுசீந்திரம் கல்வெட்டுக்களில் ஊர்ப்பெயராய்வும் த.கோ. பரமசிவத்தின் தஞ்சை மாவட்ட இடப்பெயராய்வும் மணிமாறனின் மதுரை மாவட்ட ஊர்ப்பெயராய்வும் இத்துறை பற்றிய ஆய்வேடுகளாகும். பகவதி ஆளவந்தார், மெய். சந்திரசேகரன், பழ. அண்ணாமலை போன்றோரின் நூல்களும் இங்கு குறிப்பிடத்தக்கன.

மனிதப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் வரலாற்றிற்கும் தொல் பொருளாய்வுக்கும் என்ன பங்கு உண்டோ அப்பங்கு இடப்பெயராய்வுக்கும் உண்டு என இன்றைய இடப்பெயராய்வாளர்கள் உணர்ந்துள்ளனர். ‘தொல் பொருளாய்வில் காணப்படாததும் வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து அல்லது புறக்கணிக்கப்பட்டுக் காணப்படுவதுமான மொழியியல் செய்திகளை இடப்பெயர்கள் முழுமையாகத் தருகின்றன எனக்கூறும் வானிரைட் (waniwright) கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.’ பழங்காலத்தில் மக்கள் வாழ்ந்த பகுதியை இடப்பெயராய்வு மூலம் அறியலாம். எல்.வி. ராமசாமி அய்யர் பாரசீகப் பகுதியில் திராவிடர் வாழ்ந்தனர் என்பதற்கு ஊர்ப்பெயர்களைச் சுட்டிக் காட்டுவர். ஊர்ப் பெயர்கள் அரசியல் வரலாற்றையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறியவும் இயற்கை நில அமைப்புக்களை அறியவும் பூகோள அமைப்பு அறியவும் சமூகநிலை அறியவும் இடப்பெயராய்வுகள் துணைபுரிகின்றன.

**ஊர்ப்பெயராய்வை,**

1) முழுநிலை ஆய்வு (Comprehensive Survey)

2) சிறிய நிலையிலான ஆய்வு (Small Scale Survey) எனப் பாகுபடுத்தலாம். மேலும் ஊர்ப்பெயராய்வை ஐந்து நிலைகளாக வகுத்துக் கொள்ளலாம்.

3) இடப்பெயர்களைத் திரட்டல் (Collection of Places)

4) சான்றுச் செய்திகளைத் திரட்டல் (Documentation)

5) அடையாளம் காணல் (Identification)

6) விளக்கம் செய்தல் (Interpretation)

7) வெளியிடல் (Publication)

இந்திய இடப்பெயரியலார் இந்தியச் சூழலுக்கேற்பக் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் உருவாக்க வேண்டும்.

வரலாற்றுப் பெயர் வடிவங்களைக் காண்கிறோம்.

செங்கழுநீர்பட்டு > செங்கல்பட்டு

இராஜராஜபுரம்

இராதாபுரம் > தாராபுரம்

இளங்கோக்குடி > அம்பா சமுத்திரம்

திருமறைக்காடு > வேதாரண்யம்

ஊரில் பேசப்படும் மொழி, சாதி, தொழில் முதலிய விபரங்களும் ஊர்ப்பெயராய்வுக்குத் துணை செய்யும். ஊர்ப்பெயருக்கு மக்கள் தரும் விளக்கத்தையும் (Flok etymology) சேகரிக்க வேண்டும். சமய வரலாற்றை அறியவும் பள்ளி, பாழி, திரு பெயர்ச்சிகளை (migration) அறியவும் பொருளியல் மாற்றங்களை அறியவும் அரசியல் வரலாற்றை அறியவும், இயற்கை அமைப்பை அறியவும் சமூகவியல் நிலையை ஆராயவும் ஊர்ப் பெயராய் பெருந்துணையாக உள்ளது. ஊர்ப் பெயராய்வு வரலாறு சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், மொழியியல் போன்ற துறைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. பகர்ப்பு பெயர்கள் பற்றியும் பல்வேறு இனங்களின் பண்பாடு, வாழ்க்கை நோக்கு முதலியவற்றையும் இடப் பெயராய்வு மூலம் அறியலாம். தமிழ்நாட்டில் தலைவர்கள் பெயர்களாலே மாவட்டங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது (பெரியார், அண்ணா காமராசர், காயிதே மில்லத், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் எம்.ஜி. இராமச்சந்திரன்) பெருங்கற்காலப் பண்பாட்டை (Magalithic culture) ஊர்ப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. புரம் பட்டி, ஊர், ஏரி, காடு என முடியும் ஊர்ப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. புரம், பட்டி, ஊர், ஏரி, காடு என முடியும் ஊர்ப் பெயர்களைத் தமிழகம் முழுவதும் காணலாம்.

## ஊர்ப்பெயர்களின் அமைப்புமுறை

ஊர்ப்பெயர்களின் அமைப்புமுறையை நோக்கினால், இரு வேறு கூறுகளைக் கொண்டவையாக அமைந்திருப்பதைக் காணலாம். அவற்றைச் சிறப்புக்கூறு (Specifics) பொதுக்கூறு (generics) என இரண்டாகப் பிரிக்கலாம். ஊர்ப்பெயரின் ஈற்றிலே ஊர்ப்பெயரின் விகுதியாக அல்லது பின்னொட்டாக (Suffix) அமைந்திருக்கும் கூறு பொதுக் கூறாகும். இக்கூறுகள்தான் முதலில் ஊர்ப்பெயராக அமைந்திருக்க வேண்டும் காலப்போக்கில் ஒரே பெயரில் பலஊர்கள் தோன்றும்போது அவற்றை வேறுபடுத்தச் சிறப்புக்கூறுகள் தோன்றலாயின. சிறப்புக் கூறினை முன்னொட்டு (Prefix) என்று கூறலாம். ஊரின் முன்னொட்டாக அமைந்து ஒரு குறிப்பிட்ட ஊரை இனங்கண்டு கொள்ள உதவுகின்றது. பொதுக்கூறு, சிறப்புக் கூறு என்ற இரண்டு கூறுகளைக் கொண்டு ஊர்ப்பெயர்கள் அமைகின்றன. சில ஊர்கள் ஒரே சொல்லாக அமைவதும் உண்டு. இத்தகைய ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே ‘முதலில் தோற்றம் பெற்றிருக்கவேண்டுமென (Toponyr ists) கருதுகின்றனர். சிறப்புக் கூறுகளை விளக்கப் பெயராய்வாளர்கள் பெயரடை, ஆட் பெயரடை, பிறவகைப் பெயரடை என மூவகையாகப் பகுக்கின்றனர்.

## பொதுக்கூறு (Genercis)

### புரம்

அழகப்ப - புரம்

சுப்பிரமணிய - புரம்

சங்கரலிங்க - புரம்

அழகியபாண்டிய - புரம்

திருமல - புரம்

ராதா - புரம்

வரதராஜ - புரம்

வெள்ளையம்மாள் - புரம்

லட்சுமி - புரம்

கைலாச - புரம்

**குளம்**

செட்டி - குளம்

நயினார் - குளம்

புளியங் - குளம்

மேலக் - குளம்

வீரநாராயணன் -குளம்

அல்லிக் - குளம்

அய்யனார் - குளம்

முள்ளிக் - குளம்

புதுக் - குளம்

**பட்டி**

ஆண்டி - பட்டி

பிச்சம் - பட்டி

முல்லையம் - பட்டி

கன்னியப்ப பிள்ளை - பட்டி

கொத்த - பட்டி

போடிதாசன் - பட்டி

கொண்டமநாயக்கன் - பட்டி

தெப்பம் - பட்டி

சக்கமநாயக்கன் - பட்டி

ஜக்கம் - பட்டி

மடத்துப் - பட்டி

ரெட்டியார் - பட்டி

புதுப் - பட்டி

**ஊர்**

துறை - யூர்

பழ - வூர்

வள்ளி - யூர்

குன்னத் - தூர்

கட்டளை - யூர்

கட - லூர்

கூட - லூர்

**பச்சேரி**

இடைக்கால் - பச்சேரி

வாகைக்குளம் - பச்சேரி

மேலப்பத்து - பச்சேரி

நம்பியன் - பச்சேரி

புதுப் - பச்சேரி

தெற்குப் - பச்சேரி

**குடி**

சூரங் - குடி

புதுக் - குடி

மாங் - குடி

தூத்துக் - குடி

புளியங் - குடி

நரிக் - குடி

**குறிச்சி**

ஆழ்வார் - குறிச்சி

கள்ளக் - குறிச்சி

காரு - குறிச்சி

மறுகால் - குறிச்சி

பரமன் - குறிச்சி

திருமங்கலக் - குறிச்சி

**நல்லூர்**

ஆதிச்ச - நல்லூர்

வாசுதேவ - நல்லூர்

தச்ச - நல்லூர்

குலசேகர - நல்லூர்

**ஏரி**

அழக - னேரி

சடைய - னேரி

தத்த - னேரி

நாங்கு - னேரி

அய்ய - னேரி

**பேரி**

கண்டியப் - பேரி

அலங்காரப் - பேரி

கனகசபாபதி - பேரி

குலசேகரப் - பேரி

**குடியிருப்பு**

சத்திரம் - குடியிருப்பு

சித்தன் - குடியிருப்பு

பிச்சாண்டி - குடியிருப்பு

சுடலைமாடன் - குடியிருப்பு

தோணித்துறை - குடியிருப்பு

**கோட்டை**

தலைவன் - கோட்டை

பாளையங் - கோட்டை

புதுக் - கோட்டை

வல்லான் - கோட்டை

**மங்கலம்**

குலசேகர - மங்கலம்

சேந்த - மங்கலம்

பாண்டவர் - மங்கலம்

ஆறுமுக - மங்கலம்

பத்மனாப - மங்கலம்

**மடம்**

ஈசான - மடம்

வெள்ள மடம்

ஆச்சி - மடம்

மறவன் - மடம்

இனாம்ஜீயர் - மடம்

**புதூர்**

அச்சம் - புதூர்

சத்திரம் - புதூர்

மலையடிப் - புதூர்

**கோவில்**

சங்கரன் - கோவில்

காட்டுமன்னார் - கோவில்

வைத்தீசுவரன் - கோவில்

**பத்து**

செட்டியா - பத்து

பள்ளி - பத்து

கோயில் - பத்து

**மடை**

பத்த - மடை

பள்ள - மடை

அடைய - மடை

**சமுத்திரம்**

கோபால - சமுத்திரம்

அம்பா - சமுத்திரம்

வால - சமுத்திரம்

**சேரி**

மாவடிச் - சேரி

பிராஞ் - சேரி

வில்லி - சேரி

**பாறை**

மத்தளம் - பாறை

சிங்கம் - பாறை

பன்னம் - பாறை

**விளை**

திசையன் - விளை

மணல் - விளை

அடப்பு - விளை

**ஏந்தல்**

இளையரச - னேந்தல்

முடித்தர் - னேந்தல்

முடிவைத்தா - னேந்தல்

**காடு**

மணக் - காடு

களக் - காடு

ஆவரங் - காடு

**காயல்**

புன்னைக் - காயல்

பழைய - காயல்

மஞ்சனீர்க் - காயல்

**கிணறு**

கொல்லன் - கிணறு

நாரைக் - கிணறு

காவல் - கிணறு

**பட்டணம்**

காயல் - பட்டணம்

குலசேகரப் - பட்டணம்

வீரபாண்டியன் - பட்டணம்

**தோப்பு**

காக்கா - தோப்பு

பள்ளிவாசல் - தோப்பு

சொக்கட்டான் - தோப்பு

**நகர்**

சங்கர் - நகர்

காந்தி - நகர்

சாந்தி - நகர்

**பேட்டை**

சந்தைப் - பேட்டை

வண்ணாரப் - பேட்டை

பழைய - பேட்டை

**மலை**

கழுகு - மலை

தென் - மலை

ஊத்து - மலை

**பள்ளம்**

முந்நீர்ப் - பள்ளம்

கோரம் - பள்ளம்

கரிச்சுதம் - பள்ளம்

**ஆர்(ஆறு)**

கயத் - தார்

வேம் - பார்

வைப் - பார்

**கிராமம்**

புதுக் - கிராமம்

பழைய - கிராமம்

**பாளையம்**

மேலப் - பாளையம்,

உத்தம - பாளையம்

இராஜ - பாளையம்

**உவரி**

கரைச்சுத்து - உவரி

கரைச்சுத்துபரதவ - உவரி

**சிறப்புக் கூறுகள் (Specifics)**

பொதுக் கூறுக்கு முன் அமைவன சிறப்புக் கூறுகளாகும். பொதுக் கூறுகளை வேறுபடுத்த அமையும் சிறப்புக் கூறுகள் பல அடைகளைக் கொண்டது.

முறப்ப - நாடு

கோவில் - பத்து

சிறப்புக் கூறுகளை விளக்கப்பெயர், ஆட்பெயர் என வகைப்படுத்துவர். விளக்கப் பெயர்களை நிகழ்ச்சிப் பெயர்கள், உடமைப் பெயர்கள், நினைவுப் பெயர்கள், உருவாக்கப் பெயர்கள் எனப் பலவகையாக வகைப்படுத்துவர். சிலர் விளக்கப் பெயர் ஆட்பெயர், பிற என மூவகையாக வகைப்படுத்துவதும் உண்டு. விளக்கப்பெயரில் இயற்கையமைப்பு, செயற்கையமைப்பு என இருவகை உண்டு. ஆட்பெயரில் தனி ஆட்பெயர், சாதி, சாதி அல்லது குழுப் பெயர்கள் சிறப்புக் கூறுகளாக அமைவதுண்டு.

**இயற்கை அமைப்புக்கள்**

**தாவரங்கள்**

அத்தி

அரசு

ஆவரை

குவளை

தாமரை

தென்னை

பனை

பருத்தி

வாகை

வேம்பு

**விலங்குகள்**

ஆனை

கரடி

கழுகு

சிங்கம்

மந்தி

மயில்

**நீர்நிலைகள்**

முன்னீர்

வெள்ளம்

ஆறு

ஊத்து

கயம்

**நில அமைப்புக்கள்**

கரிசல்

காடு

நத்தம்

பாறை

பொட்டல்

மலை

மருதம்

**வயல், தோட்டம்**

காடு

சோலை

தோட்டம்

**ஆட்பெயர்கள்**

அண்ணாமலை

அருணாசலம்

அய்யனார்

ஆறுமுகம்

உதயமார்த்தாண்டன்

உமையம்மாள்

காசிநாதன்

ஏகாம்பரம்

குலசேகரன்

சக்கம்மாள்

சாஸ்தா

சுந்தரபாண்டியன்

தங்கம்மாள்

திருமலையப்பன்

முத்துராமலிங்கம்

முத்தம்மாள்

வீரநாராயணன்

வெள்ளையம்மாள்

வெங்கடாசலம்

லஷ்மி

ராஜகோபால்

வள்ளிநாயகி

வாசுதேவன்

மகராசன்

பெருமாள்

திருவேங்கடநாதன்

நாராயணன்

பாலகணபதி

மீனாட்சி

ராதா

ராமலிங்கம்

**தனி ஆட் பெயர் - சாதி**

மாட - நாடான்

பெத்த - நாடான்

சேது - ராயர்

மழவ - ராயர்

சென்னம - ரெட்டி

திருமலை - நாயக்கன்

ஏரகாம - நாயக்கன்

சின்னம - நாயக்கன்

**சாதி அல்லது தொழில் பெயர்**

சேர்வைக்காரன்

உடையார்

வெள்ளாளன்

வடுகச்சி

கவுண்டன்

கம்மாளன்

சக்கிலியர்

துலுக்கர்

ரெட்டியார்

தேவர்

பூசாரி

மணியகாரன்

பார்ப்பான்

பரதவர்

செட்டி

ஊர்ப் பெயராய்வை நுணுகி ஆராயின் 'புரம்' பொதுக்கூறு உள்ள ஊர்ப்பெயர்கள் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் காண்கிறோம். 'குளம்''மங்கலம்' பொதுக் கூறு உள்ள ஊர்ப்பெயர்கள் நீலகிரி மாவட்டம் தவிர எல்லா மாவட்டத்திலும் காண்கிறோம். 'பட்டி' விகுதியுடைய ஊர்ப் பெயர்கள் மதுரை, இராமநாதபுரத்தில் அதிகமாக உள்ளன. 'விளை' என்ற விகுதியுடைய ஊர்ப்பெயர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் அதிகம் உள்ளன. ஒவ்வொரு ஊரின் பெயரையும் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அணுகவேண்டும். தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய இத்துறை பெரிதும் பயன்படும்.

**தொகுப்புரை**

- நாட்டுப்புறவியல் தொழில் நுட்பமும் அவற்றின் பயன்பாடும் பற்றி அறிய முடிகின்றது.
- நாட்டுப்புற விளையாட்டுக்களின் தன்மை மற்றும் அவறிறின் வகைகள் பற்றி உணர முடிகின்றது.
- நாட்டுப்புற மருத்துவம் பல சிறப்புகளைப் பெற்று மக்களிடையே நிலவி வருகின்றது.
- நாட்டுப்புற மருத்துவம் பல்வேறு வகைகளைக் கொண்டு விளங்குகிறது.
- நாட்டுப்புற மக்கள் பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
- மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நாட்டுப்புற கலைகளும் நிகழ்த்துக்கலைகளும் பயன்பட்டு வருகின்றன.
- ஊர்பெயர் மற்றும் மக்கட் பெயர் ஆய்வின் வழி பலவேறு இட மாறுபாட்டு சூழலில் வாழும் மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ள முடிகின்றது.

**அருஞ்சொற்பொருள்**

1. சிடுகா மருந்து - நாட்டுப்புற மருந்து
2. இடு மருந்து - கொடுக்கப்படும் மருந்து
3. சீரடித்தல் - புதுப்பித்தல்
4. யுகம் - காலம்
5. ரவிச்சுடர் - சூரியன்

**தன்மதிப்பீட்டு வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. வாழ்வின் ஒத்திகை நாடகம் என அழைக்கப்படும் விளையாட்டு எது?
   அ)பொம்மை விளையாட்டு ஆ) கிட்டிப்புள்
   இ)கபடி ஈ)சிலம்பு
2. ஏலமும் இஞ்சி சாறும் எதற்கு மருந்தாகப் பயன்படுகின்றது?
   அ)காதுவலி ஆ)உடல் வலி
   இ)தலைவலி ஈ)காற்றுப்பிடிப்பு
3. நாட்டுப்புறப் பண்பாட்டை உணர்வுப்பூர்வமாக சமூக எழுச்சிக்குப் பயன்படுத்தியவர்?
   அ)பாரதி ஆ)பாரதிதாசன்
   இ)நாமக்கல்கவிஞர் ஈ) உடுமலை நாராயணகவி
4. இடப்பெயராய்வின் முன்னோடி
   அ)ரா.பி சேதுப்பிள்ளை ஆ)கார்ல் மார்க்ஸ்
   இ)எக்லி ஈ)கால்டுவெல்
5. செங்கழுநீர்ப்பட்டு என்ற இடப்பெயரின் திரிபு
   அ)சென்னை ஆ)செங்கல்பட்டு
   இ)சேலம் ஈ)மதுரை

**விடைகள்**

1. அ)பொம்மை விளையாட்டு
2. ஆ)உடல் வலி
3. அ)பாரதி
4. இ)எக்லி
5. ஆ)செங்கல் பட்டு

**பயிற்சிகள்**

உங்கள் இருப்பிடப் பகுதியில் காணப்படும் ஊர்ப்பெயர்களை தொகுத்து வகைப்படுத்துக

**சிறுவினாக்கள்**

1. நாட்டுப்புற விளையாட்டுக்களின் தன்மைகளைக் கூறுக
2. நாட்டுப்புற மருத்துவத்தின் வகைகளை விளக்குக
3. கல்வித்திட்டங்களுக்கு நாட்டுப்புறவியலை எவ்வாறு பயன்படுத்தலாம்?

**நெடுவினாக்கள்**

1. ஊர்ப்பெயராய்வு குறித்து கட்டுரை வரைக
2. மக்கட்பெயராய்வின் இன்றியமையாமையை விளக்குக
3. நாட்டுப்புற மருத்துவத்தின் முக்கியத்துவம் பற்றி கட்டுரை வரைக

**பாடம் தொடர்பான நூல்கள்**

1. நாட்டுப்புற இயல் ஆய்வுகள் - ஆறு இராமநாதன்
2. நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம் - கோ.கேசவன்
3. நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள் - தே. லூர்து

**பாடம் தொடர்பான இணைய இணைப்புகள்**

1. www.projectmadurai.org
2. www.chennailibrary.com
3. http://www.tamilheritage.org

**பாடக்குறிப்பிற்கு உதவிய புத்தகங்கள்**

1. நாட்டுப்புற இயல் ஆய்வு, 2002. சு.சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
2. நாட்டுப்புறஇயல், 1975 முதற்பதிப்பு, சு.சண்முக சுந்தரம், காவ்யா, சென்னை.

# அலகு - 5

## புராணக் கதைகள்

### நோக்கம்

- புராணங்களின் வழி ஆய்வு முறைகளைக் கற்பித்தல்
- புராணங்கள் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை அறிதல்
- புராணங்கள் உருவாகிய காலப்பகுப்பினை அறிதல்
- புராணங்களின் வழியான வரலாற்றுச் செய்திகளை அறிதல்
- புராணங்களின் அமைப்பு முறை மற்றும் வகைகளை அறிதல்

### இயலில் இடம் பெறுபவை

தொன்மம் - பொருள் வரையறை - தொன்மம் - பழமரபுக்கதை - நாட்டுப்புறக்கதை வேறுபாடுகள் - புராணம் பொருள் வரையறை - வரலாறு.

மாக்ஸ்முல்லர் - மொழியும் மக்களின் எண்ணவளர்ச்சியும் - 1. அடிக்கருத்தியல் காலம் - 2. கிளைமொழிக்காலம் - 3. புராணக்காலம் - 4. சனரஞ்சகக் காலம். புராணவியல் கோட்பாடு, புராணசடங்குக் கோட்பாடு - வெவிஸ்ராஸின் அமைப்பியல்கோட்பாடு - வாய்ப்பாட்டு ஆய்வுமுறை 1. புராணக்கதைப்புதைபொருள் தனித்தனிக் கூறுகள் இணைந்த முழுமையில் உள்ளது. 2. புராணக்கதை மொழி தனிப்பட்ட தன்மையது, 3. புராணக் கதைப்பொருள் சாதாரண மொழிப்பொருளிலிருந்து வேறுபட்டு அமைவது.

### புராணக்கதைகள்

புராணக் கதையை ஆங்கிலத்தில் ‘Myth’ என்றும் புராணவியலை ‘Mythology’ என்றும் வழங்குவர். Myth என்பது Mythis என்ற கிரேக்கச் சொல்லினின்றும் உருவானதாகும். Myth என்ற சொல்லுக்கு இணையாகப் புராணம், புராணக்கதை, தொன்மம், புனைகதை, புராண மரபுக்கதை, தொல்கதை எனத் தமிழில் வழங்குகின்றனர். Myth என்ற சொல்லுக்கு இணையாகத் ‘தொன்மம்’ என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. ‘தொன்மை தானே உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே’ என்ற தொல்காப்பியச் சூத்திர அடிப்படையில் தொன்மம் என்ற சொல் உருவாக்கப்பட்டது. தொன்மம் என்பது பழமை என்ற பொருளை உடையதாகும். நாட்டுப்புற வழக்கில் புராணம் என்ற

சொல் பயன்படுத்தப்படுகின்றது. மித் (Myth) எனும் சொல் மூன்று வகைப் பொருளைத் தருகிறது.

(i) மிகப் பழங்காலத்திய பாரம்பரியமான கதைத் தொடர்களைக் குறிக்கிறது.

(ii) உலகத்திலுள்ள உயிர்களுக்கேற்ப உலகம் ஏன் இவ்வாறு இயங்குகிறது என்ற விளக்கத்தை அளிக்கிறது.

(iii) மனித வாழ்வினை அமைப்பதற்குத் தேவையான நியதிகளின் ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்குகிறது.

நம் நாடு தொன்மங்கள் நிறைந்த நாடாக இருப்பினும் தொன்மங்களைப் பற்றி மேலை நாட்டில் நடந்துள்ள ஆய்வுகள் போன்று நம் நாட்டில் ஆய்வுகள் பெருகவில்லை. தமிழ் நாட்டில் தொன்மக் களங்கள் விரிந்து கிடக்கின்றன. தொன்மச் சுரங்கத்தைத் தோண்டி எடுத்து ஆராயும் முயற்சி தொடர வேண்டும்.

மித் (Myth) எனும் சொல்லுக்கு மேனாட்டறிஞர்கள் பல்வேறு வரையறைகளையும் விளக்கங்களையும் அளித்துள்ளனர். அவற்றைத் தொகுத்துக் காண்பது தொன்மத்தைப் பற்றி அறிவதற்கு இன்றியமையாததாகும்.

‘தொன்மங்கள் இலக்கியங்களின் ஆன்மா’ என அரிஸ்டாட்டில் (Aristotle) குறிப்பிடுகிறார். இ.பி. டெய்லர் (E Taylor) அவர்கள் ‘புராணக் கதைகள் தங்களை உருவாக்கிய மக்களைப் பற்றியும் பயன்படுத்துவோரைப் பற்றியும் கூறுகிறது என்கிறார்.

மானிடவியல் பேரறிஞர் மாலினோவஸ்கி (Malinowski) அவர்கள் ‘புராணக் கதைகளைச் சமுதாயத்தில் தனியுரிமைப் பத்திரம்’ என்கிறார்.

மர்சியா எலியட் (Marcea Eliade) அவர்கள் ‘மனிதனின் தொடக்க நிலைகளைப் பற்றியும் தோற்றங்களைப் பற்றியும் கூறுவன. புராணக் கதைகளில் காணப்படும் நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் உலகத்தில் நிகழ்கின்றன’ என்கிறார்.

லெவிஸ்டிராஸ் (Levistranss) அவர்கள் ‘புராணக் கதைகளின் அமைப்பு மனித மனத்தின் ஆழத்திலிருந்து வந்தது’ என்பர்.

ஃபிரெட் குளோத்தி (Fred Clothe) என்பவர் ‘புராணக் கதைகளை வாய்பாட்டு முறையில் அமைந்த உண்மை நிகழ்ச்சிகள்’ என்கிறார்.

போவாஸ் (Boas) அவர்கள் ‘புராண உலகம் கலைக்கப்படுவதற்காகவே படைக்கப்படுவதுபோல் தோன்றுகிறது, கலைக்கப்பட்டபின் மீண்டும் படைக்கப்படும் என்பர்.

மாக்ஸ்முல்லர் (Max Muller) அவர்கள் ‘ஒவ்வொரு புராணமும் ஏதோ ஒரு உண்மையைக் கூற விழைகிறது. அது அடுக்கடுக்காக அமைந்த பல்வேறு செய்திகளால் மறைக்கப்பட்டு கிடக்கிறது. வேண்டாத செய்திகளையெல்லாம் அகற்றிக் கொண்டே வந்தால் வேண்டிய செய்தியாகிய உண்மை இறுதியில் கிடைத்துவிடும்’ என்கிறார்.

ஆலன் டண்டிஸ் (Alan Dundes) அவர்கள் ‘உலகமும் மனிதனும் தற்போதைய வடிவில் எப்படி வந்து சேர்ந்தனர் என்பதை விளக்குவதற்காகப் புனிதமாக எடுத்துரைக்கப்படும் ஒன்று புராணம்’ என்கிறார்.

விளாடிமிர் பிராப் (Vladimir Propp) அவர்கள் ‘தெய்வத்தன்மை வாய்ந்தோரையும் தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்களாகும்; அவர்களையும் அவர்களைப் பற்றிய இக்கதைகளையும் உண்மையென்று மக்கள் நம்புகின்றனர்’ எனக் குறிப்பிடுகிறார்.

தியோடா கஸ்டர் (Theoder Guster) அவர்கள் ‘புராணம் என்று ஒரு கதை ஒத்துக் கொள்ளப்படுவதற்கு முன் ஒரு சடங்கில் பயன்படுத்தப்பட்டது என்ற நேரடி சான்று தேவைப்படுகிறது’ எனக் குறிப்பிடுகிறார்.

லாரி ஹங்கோ (Laury Honko) அவர்கள் ‘புராணம் கடவுளரைப் பற்றிய ஒரு கதை’ உலகத் தொடக்கம், படைப்பு, அடிப்படைச் சம்பவங்கள் போன்றவை பற்றிய சமய வரலாறு’ கடவுளரின் முன் மாதிரியான செயல்களின் விளைவாக உலகம், இயற்கை, பண்பாடு போன்றவை அவற்றின் பகுதிகளுடன் சேர்த்துப் படைக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு நிலை பெற்றிருப்பதாகும்’ என்கிறார்.

எட்மண்ட் லீச் (Edmund Leach) அவர்கள் 'புராணங்கள் கதை வடிவில் உலகத்தைப் பற்றிய வரலாற்றை அளிக்கின்றன, புராணவியல் குறிப்பிடும் பழமை சில வரையறைக்குட்பட்டது; மூதாதையர், தெய்வம் போன்ற கதா பாத்திரங்கள் காலத்தாலும் இடத்தாலும் மிக நெருக்கமானவை; புராணக் கதைகள் மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சித் தன்மை பற்றியன, வாழ்க்கை பிரபஞ்சம் போன்ற இயல்புகளையும் விளக்குகின்றன' என விளக்கம் தருகிறார்.

கேம்ப்பெல் அவர்கள் 'தொன்மங்கள் உண்மைகளின் புகலிடம்' கருத்துக்களின் வாழ்விடம்; எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம்; நினைவுகளின் கழிமுனை' என்கிறார்.

ஜி.எஸ். கிர்க் எனும் அறிஞர் பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களின் 'மித்' பற்றிய விளக்கங்களைத் தொகுத்தளிக்கிறார்.

ஆன்ட்ரூ லாங்க் அவர்கள் தோற்றம் பற்றிய காரணகாரிய விளக்கக் கதை என்கிறார்.

ஜேன் ஹாரிசன் அவர்கள் 'சடங்குகளைத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாக உருவாக்கப்பட்டது மித்' என்கிறார்.

குளுக்ஹோகன் அவர்கள் மனதின் பதட்டத்தைத் தணிப்பதற்காகச் செய்யப்படுகின்ற சடங்கிற்கு இணையாகத் தோன்றியது மித்' என்கிறார்.

உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு அவர்கள் 'நனவிலி மனத்தின் அச்சங்கள், ஆசைகள் ஆகியவற்றின் வெளிப்பாடு தொன்மங்கள்' என்கிறார்.

மற்றொரு உளவியல் பேரறிஞர் யுங் அவர்கள் 'கூட்டு நனவிலி மனத்தின் வெளிப்பாடு புராணங்கள்' என்கிறார்.

'சமூக ஒழுங்கமைப்புச் சாதனமாக விளங்குவது தொன்மங்கள்' என ரெட்கிளிப் பிரௌன் (Redcliffe Brown) குறிப்பிடுகிறார்.

வில்லியம் பாஸ்கம் (William Bascor) அவர்கள் Myth, Legend, Folktale ஆகியவற்றைப் பல பண்புகளின் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

Myth என்பது தொன்மம் அல்லது புராணக் கதைகள் என்றும் Legend என்பது பழ மரபுக் கதைகள் என்றும் Folktale என்பது நாட்டுப்புறக் கதைகள் என்றும் மொழிபெயர்க்கப் படுகின்றன. இம்மூன்றிற்குமுள்ள நுண்ணிய வேறுபாடு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒரு மாதிரியான கதை ஒரு சமூகத்தில் நாட்டுப்புறக் கதையாகவும் மற்றொரு சமூகத்தில் பழமரபுக் கதையாகவும் வேறொரு சமூகத்தில் புராணக் கதையாகவும் அமைவது உண்டு. புராணங்களுக்கும் நாட்டுப்புறக் கதைக்குமுள்ள வேறுபாட்டை மெலிட்டின்ஸ்கி குறிப்பிடுகிறார்.

புராணம் என்பதற்குப் பழமை என்று பொருளாகும். ஒரு சமுதாயத்தின் கூட்டு முயற்சியால் உருவாகி அச்சமுதாய மக்களின் அண்டத் தோற்றம் பற்றிய கருத்துக்களையும் மீவியல்பு இயல்புகளையும் விளக்குவது புராணம் எனலாம். இயற்கை கடந்த கதைகளையும் புராணம் என்பர். கடவுள், படைப்பு பற்றிய நிகழ்ச்சிகளுக்குக் காரணம், காரியம் கற்பித்தலே முதல் நோக்கமாக இருந்திருக்கிறது. அரும்பெருஞ் செயல்கள் செய்தவர்களைக் கடவுளாக்கிக் காட்டினார்கள் என்ற கருத்து தொன்மையானதாகும். எல்லாப் புராணக் கதைகளும் வானத்துக் கொள்கைகளை விளக்குகின்றன. உள்ளுணர்வால் காணும் நடப்பு நிலையை மிக நெருக்கமாகச் சொல் வழியில் வடித்து அணுகி அறிவதற்குப் புராணக்கதை ஒரு நல்ல கருவியாகும். கடவுளர்கள், தேவர்கள், விலங்குகள் ஆகிய பல்வகை உயிரினங்களையும் பிணைத்து இயக்குகின்ற பழமையான கதைகளையே புராணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. புராணக் கதைகள் மனித மனத்தின் அடித்தளத்திலுள்ள எண்ணங்களை மையமாகக் கொண்டவை. அத்தகைய புராணக்கதை அன்று முதல் இன்றுவரை வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அறிவியல் வளர்ச்சியில்லாத காலத்தில் மனித வாழ்வில் அனுபவித்த முரண்பாடுகள். விந்தைகள், சிக்கல்கள் ஆகியவற்றுக்குத் தீர்வு காணப் பயன்படுத்திய கருவி புராணக் கதைகளாகும். புராணக் கதைகள் தோன்றிய காலத்திலிருந்து பல்வகை உருமாற்றம் பெற்றிருப்பதையும் காண்கிறோம். பெரும்பாலான புராணங்களில் அண்டத் தோற்றம் பற்றிய செய்திகளே மையமாக உள்ளது. அண்ட வளர்ச்சியில் பல ஊழிக்காலம் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. இயற்கை நிகழ்வுகளுக்குத் தெய்வீகப் பண்பு சுட்டுதலையும் புராணங்களில் காணலாம். புராணக் கதைகளின் தோற்றத்திற்குக் காரணம் மொழிகளின் நோய் என மாக்ஸ்முல்லர் குறிப்பிடுகிறார். சொற்களின் மூலப் பொருண்மை மறைந்து இயற்கையின்

நிகழ்வுகளுக்கு விந்தையான கருத்தாக்கங்கள் உருவாகிப் புராணங்களாகிவிட்டன என்கிறார் மாக்ஸ்முல்லர். மொழியியல் நிகழ்வுகளிலிருந்து புராணத்தை விளக்குகிறார். புராணங்கள் புதிதாய் கண்டு பிடிக்கப்பட்டவை அல்ல. மக்களின் அகத்தூண்டுதலால் உருவாகியவை. கூட்டுக் கற்பனையாலும் கூட்டு அனுபவத்தாலும் தோன்றியவை. காலத்தின் கோலத்தினால் கருவாகி வளருகின்றன. சடங்குகள் புராணங்கள் தோன்றுவதற்குத் தோற்றுவாயாக அமைந்தன. தனிப்பட்டவரின் அனுபவம் கனவு என்றால் சமுதாயக் கனவு புராணங்களாகும். கனவுகளின் மறுமலர்ச்சியாகத் தொன்மங்கள் உருவாகின்றன. ஆன்மீக உலகில் குறிப்பிடத்தக்க உண்மைகளையும் நுண்மைகளையும் புராணங்கள் தன்னுள் தேக்கி வைத்துள்ளன எனலாம். சமயத்தின் ஆழ்ந்த நோக்கு, அடிப்படைக் கருத்துக்கள் புராணங்களில் தோய்ந்து கிடக்கின்றன. சமயங்களின் படிமங்கள் தொன்மம் எனும் மொழி வாயிலாகக் கருத்துக்களைப் புலப்படுத்துகின்றன. எது தொன்று தொட்டு இன்றுவரை பரவியிருக்கிறதோ அதுவே புராணம் என வாயுபுராணம் கூறுகின்றது.

புராணங்கள் தொன்மை வாய்ந்தவையாக இருப்பினும் அவை பற்றிய ஆய்வு பிற்காலத்தில்தான் தொடங்கப்பட்டது. எனக் கூறலாம். பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பெர்சியாவில் புராணக்கதை ஒழுக்க உண்மைகளையும் இயற்கை பற்றிய உண்மைகளையும் வெளிப்படுத்தும் உருவகக் கதைகள் என்று கூறினர். பதினேழாம் நூற்றாண்டில் தத்துவவியல் கோட்பாடுகளால் பொருள் விளக்கம் செய்ய முற்பட்டனர். புராணங்கள் பல நூற்றாண்டுகட்கு முன்பே தோன்றி வளர்ந்து வந்திருப்பினும், பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தான் புராணங்கள் பற்றிய ஆய்வு முகிழ்க்கத் தொடங்கியது. வட மொழியிலிருந்து தமிழில் புராணங்கள் மொழி பெயர்ப்பு தொடங்கியது. இந்தியப் புராணங்களை மேலை நாட்டுப் புராணங்களுடன் ஒப்பிட்டு ஆராயும் ஆய்வு தொடக்கம் பெற்றது. ஜேக்கப் கிரீம் (Jacob Grimm) புராணங்களை மொழியியல் அடிப்படையில் ஆராயத் தொடங்கினார். புராணவியல் பள்ளியே (Mythological School) உருவானது குறிப்பிடத் தக்கது. புராணவியல் பள்ளியை ஒப்பியல் பள்ளி (Comparative School) என்றும் இண்டிக் பள்ளி (Indic School) என்றும் கூறுவர். ஜேக்கப் கிரீமின் கருத்துக் கோட்பாடுகளை மாக்ஸ்முல்லர் ஒரு பள்ளியாகவே உருவாக்கி விட்டார். ஜேக்கப் கிரீம் மொழியியலில் பயன்படுத்திய ஒப்பியல் ஆய்வை நாட்டுப்புற இயலுக்கும்

பயன்படுத்தினார். தொல் வடிவங்களை (Proto form) ஆராய்ந்ததோடு புராணவியல் படைப்புக்களையும் ஆராய்ந்தார். மாக்ஸ்முல்லர் (Maxmuller) மொழியையும் மக்களின் எண்ண வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு நான்கு கட்டமாகப் பகுக்கின்றார்.

i. அடிக்கருத்தியல் காலம் (Thematic period)
ii. கிளை மொழிக் காலம் (Dialectic period)
iii. புராணக்காலம் (Mythological period)
iv. பொதுஜன ரஞ்சகக் காலம் (Popular period)

பழங்கால மனிதன் பயன்படுத்திய சொற்களுக்குக் காலப்போக்கில் பொருள் மாற்றம் ஏற்பட்டுப் புராணங்கள் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டது. இப்பள்ளி உருவானதன் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் புராணவியல் கோட்பாடு ஒன்று உருவாகியது குறிப்பிடத்தக்கது.

புராணங்களைப் பண்பாட்டின் உயர்நிலையைக் குறிக்கும் ஒன்றாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் புராணவியல் ஆய்வாளர்கள் கருதினர். மதத் தத்துவத்தில் புராணம் மிக இன்றியமையாத கூறு என்ற நிலையை அடைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோலாரோஹிம், ரெய்க், ஃபிராவ் ராபர்ட்சன் ஆகியோர் புராணங்களுக்கும் சடங்குக்குமுள்ள உறவை ஆராய்ந்து நிறுவினர். இதன் விளைவாகப் புராணச் சடங்குக் கோட்பாடு (Myth-Ritual Theory) உருவானது. புராணக் கதைகள் சடங்கிலிருந்து தோன்றியவை என்று நிறுவினர். புராணக் கதைகளின் தோற்றத்திற்குக் காரணமாகச் சடங்குகளை மீட்டுருவாக்கம் செய்யும் ஆய்வில் புராணவியல் ஆய்வாளர்கள் ஈடுபட்டனர். இக்கோட்பாடு உருவாக பிரேசரின் ‘கோல்டன் போ’ என்ற நூல் காரணமாக அமைந்தது எனின் மிகையல்ல.

பென்பே (Benfey) இடமாற்றக் கொள்கையொன்றை (nigration theory) உருவாக்கினார். இக்கொள்கையின் அடிப்படையில் கதைகளின் தோற்றம், வரலாறு பரவிய நாடுகள் முதலியவற்றை ஆராய்ந்தனர். இடப் பெயர்ச்சி குறித்த புராணக் கதைகளை ஆராயும் ஆய்வு வளர்ச்சி பெற்று வருகிறது. புராணக் கதைகள் மூலம் இடப்பெயர்ச்சி பற்றி அறிகிறோம். தமிழகத்தில் வழங்கும் இத்தகைய புராணக் கதைகள் மூலம் இடப் பெயர்ச்சிக்கான காரணங்கள்

பற்றியும் இடம் பெயர்ந்து செல்லும்போது தெய்வங்களையும் தங்களுடன் எடுத்துச் செல்வதையும் காண்கிறோம். தெய்வத்தின் உதவியால் வாழுமிடங்களைப் பெருக்கிக் கொண்டதையும் இப்புராணக் கதைகள் மூலம் அறிகிறோம்.

இடப்பெயர்வு கோட்பாட்டினால் பின்னிஸ் பள்ளியும் (Finnishh School) வரலாற்று புவியியல் (Historical geographical theory) கோட்பாடும் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டது.

இருபதாம் நூற்றாண்டில் புராணங்களைப் பல்துறை நொக்கில் ஆராயத்தலைப்பட்டனர். புராணங்களை மானிடவியல் நோக்கில் ஆராயத்தொடங்கினார். அவ்வாறு ஆராய்ந்த ஆண்ட்ரூஸ்லாங்க் (Andrews Lang) மாக்ஸ்முல்லரின் கோட்பாட்டை மறுக்கின்றார். தொன்மைப் புராணங்கள் இயற்கைக் கூறுகளையும் பிற்காலப் புராணங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளையும் பண்பாட்டு மரபுகளையும் பிரதிபலிக்கின்றன என்கிறார். சிக்மண்ட் பிராய்டு (Sigmund Frand) அடிமனத்தைப் பற்றிய ஆய்வுக்குப் புராணக்கதைகள், தேவதைக் கதைகள், விலக்குகள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டார். ஒடிபஸ் மனப்பாங்கினை (Oedipus complex) ஆராய, புராணக் கதைகளை எடுத்தாண்டார். நாட்டுப்புற வழக்காறுகளையும் புராணக் கதைகளையும் கனவுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்தார். இருபதாம் நூற்றாண்டில் புராணவியல் பற்றிப் பல கோட்பாடுகள் உருவாகி, அதனடிப்படையில் ஆராயப்பெற்று வருகின்றன. இருபதாம் நூற்றாண்டில் நாட்டுப்புறவியலில் திருப்பு முனையாகக் கருதப்படும் கோட்பாடு அமைப்பியல் கோட்பாடு (structural theory) ஆகும். புராணக் கதைகளைப் பொறுத்தமட்டில் லெவிஸ்ட்ராஸின் (Levi strauss) அமைப்பியல் ஆய்வு ஒரு திருப்பு முனையாக அமைந்துவிட்டது எனலாம். புராண ஆய்வில் லெவிஸ்டிராஸின் அமைப்பியல் ஆய்வு பல சிக்கல்களைத் தீர்த்தவுடன் புராணங்களைப் பற்றிய கோட்பாடு உருவாக்கவும் துணையாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டில் புராணங்களைப் பற்றிய பல்துறை ஆய்வும் (interdisciplinary study) கோட்பாட்டு ஆய்வும் (theory oriented) வளரத் தலைப்பட்டு விட்டன எனக் கூறலாம்.

தமிழிலுள்ள புராணங்களை மக்களிடையேயுள்ள வாய்மொழிப் புராணங்கள் (Oral Puranas), எழுத்திலக்கியப் புராணங்கள் (ஸ்தல புராணங்கள்) எனப் பகுத்து ஆராயலாம்.

நாட்டுப்புற மக்கள் சூரிய கிரகணம், சந்திர கிரகணம், அமாவாசை, பௌர்ணமி ஆகிய நிகழ்வுகளுக்கான காரணம் குறித்துத் தங்கள் வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் சிந்தித்துள்ளனர். வானத்தை ஆணாகவும் பூமியைப் பெண்ணாகவும் கருதுகின்றனர். பௌர்ணமியை வாழ்வின் குறியீடாகவும் அமாவாசையைச் சாவின் குறியீடாகவும் கருதுகின்றனர். சந்திரன் இறப்பு அமாவாசையாகவும் சந்திரனின் மறுபிறப்பு பௌர்ணமியாகவும் வாய்மொழிப் புராணங்கள் விளக்குகின்றன. பிறப்பு, இறப்பு என்ற மனித நிகழ்வுடன் பொருத்திக் காண்கின்றனர்.

சூரியனையும் சந்திரனையும் பாம்பு ஒன்று தீண்டிச் சாகடிப்பதால் கிரகணம் நிகழ்வதாகத் தொன்மக் கதை கூறுகின்றது. நல்ல பாம்பு தீண்டுவதாலும் விழுங்குவதாலும் கிரகணம் உண்டாவதாக நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். கிரகண நேரத்தில் உணவு உண்ணக்கூடாது, கருதரித்த பெண்கள் கிரகணத்தைப் பார்க்கக் கூடாது என்ற தடையும் உள்ளது. கிரகணம் பற்றி அறிவியல் அறிஞர்கள் வேறு காரணம் கற்பித்துக் கூறுவர்.

மின்னல் மின்னுவதும் இடி இடிப்பதும் காற்று வீசுவதும் மழை பொழிவதும் இயற்கையின் நிகழ்வுகளாகும். இடியைக் கணவனாகவும் மின்னலை மனைவியாகவும் காற்றும் மேகமும் பெண்ணின் பெற்றோர்களாகத் தொன்மத்தில் உருவகிக்கப்படுகின்றன. காற்று தந்தையாகவும் மேகம் தாயாகவும் உருவகிக்கப்படுகின்றன. மழைக்காற்று மேகத்தின் கணவனாகவும் மின்னல் தந்தையாகவும் தொன்மங்களில் உருவகிக்கப்படுகின்றன.

நாட்டுப்புற மக்கள் வானவில்லைக் கடவுளின் மந்திர வில்லாக நம்புகின்றனர். மழை அதிகமாகப் பெய்யும்போது இந்த மந்திரவில் தோன்றினால் மழை நின்றுவிடும் எனக் கடவுள் சொன்னதாகப் புராணக்கதை கூறுகின்றது. வானத்தில் கோட்டை கட்டினாலும் சூரியன், சந்திரனைச் சுற்றிக் கோட்டை கட்டினாலும் மழைவரும் என நம்புகின்றனர். மழைத் துளிகளில் சூரிய ஒளி பட்டுப் பிரதிபலிப்பதால் ஏழு வண்ண வானவில் தோன்றுவதாக அறிவியலார் விளக்குவர்.

மண்புழு நீருக்கடியிலிருந்து மண்ணை எடுத்து வந்ததாகவும் அதிலிருந்து கடவுள் பூமியைப் படைத்ததாகவும் புராணக்கதை ஒன்று கூறுகிறது.

தமிழ்ப் புராணக்கதையொன்று பாம்பு, யானை, பசு போன்ற விலங்குகள் மலைகளாக மாற்றம் பெற்றன எனக் கூறுகிறது. அரக்கர்கள் பாம்பு, யானை, பசு உருவத்தில் மீனாட்சியை அழிக்க வந்ததாகவும் மீனாட்சியும் சொக்கரும் அவற்றை மலைகளாக மாற்றி விட்டார் என்றும் புராணக் கதையொன்று கூறுகிறது.

உலகில் காணப்படும் பெரும்பாலான தொன்மைக் கதைகள் பறவையின் முட்டையிலிருந்து உலகம் தோன்றியதாகக் கூறுகின்றன. ஆண் (பிரமன்) உலகத்தைப் படைத்தான் என்று புராணக்கதைகள் நிலவுகின்றன. பிரம்மா என்ற தெய்வம் மனிதனையும் மற்ற உயிரினங்களையும் படைத்ததாகப் புராணக் கதைகள் உள்ளன. ஒரு பறவையின் முட்டையிலிருந்து வானமும் பூமியும் தோன்றியதாகவும் புராணக் கதைகள் உள்ளன.

அனைத்து உயிர்களும் வெள்ளத்தால் அழிக்கப்பட்டுக் கடவுளால் மறுபடியும் படைக்கப்பட்டன எனக் கருத்துருவாக்கம் உள்ள புராணக்கதைகள் (Flood Myths) உலகமெங்கும் காணப்படுகின்றன.

செய்வினை, ஏவல், பில்லிசூன்யம், தீய மந்திரச் சடங்குகள், பேய் பற்றிய கருத்துருவாக்கம் உள்ள புராணக் கதைகள் வழங்குகின்றன.

நாட்டுப்புறத் தெய்வங்கள் மனிதர்களை விட ஆற்றல் வாய்ந்தவை; மனிதப் பண்புகள் உடையவை; இப்பூவுலகில் வாழ்பவை; மனிதரோடு உறவுடையவை; மனித வாழ்வில் சிக்கல் தோன்றும்போது உதவிக்கரம் நீட்டுபவை என்ற கருத்துருவாக்கம் உள்ள புராணக் கதைகள் தமிழில் நிறைய உள்ளன.

**லெவிஸ்ட்டிராஸின் அமைப்பியல் ஆய்வு**

அமைப்பியல் ஆய்வு நாட்டுப்புறவியலில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. இரஷ்ய நாட்டுப்புறவியல் அறிஞர் விளாடிமிர் பிராப்பின் அமைப்பியல் முறையைத் ‘தொடர்பாட்டு ஆய்வுமுறை’ (Syntagmatic) என்பர். லெவிஸ்டிராஸின் முறையை ‘வாய்பாட்டு ஆய்வு முறை’ (Paradigmatic) என்பர். கிரேக்கப் புராணக் கதைகளை இவ்வாய்பாட்டு ஆய்வு முறையைப் பயன்படுத்தி ஆராய்ந்தார். புராணக் கதைகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து அவற்றை ஒரு

தொடர்ப்பாட்டு முறையில் இணைக்கிறார். டாக்டர் சரசுவதி வேணுகோபால் அவர்கள் கம்ப இராமாயண பாலகாண்டம் கார்முகப் படலத்தில் காணப்படும் புராணக் கதையொன்றை அமைப்பியல் ஆய்வு செய்தார். அது இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

இப்புராணக் கதையிலுள்ள செய்திகளை வரிசையாகக் காண்போம்.

1. சதி சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தல் I
2. சிவன் அவளை அடைதல் II
3. தக்கன் தாரை வார்த்துத் தருதல் I
4. சிவன் சதியை மணம்புரிதல் III
5. சிவன் மறைதல் V
6. தக்கன் அறியாமல் சதியை மயக்கி அழைத்துச் செல்லல் II
7. தக்கன் கயிலைக்கு வருதல் I
8. சிவன் அவனை அவமானப்படுத்தல் II
9. அவன் மகளும் அவனை மதியாதிருத்தல் II
10. தக்கன் சிவனை அவமதிக்கும் வகையில் தானே ஒரு யாகம் செய்யத் தொடங்குதல் II
11. செய்தியறிந்து சதி சிவனிடம் அனுமதி பெறல் I
12. தக்கனிடம் செருக்கோடு வருதல் II
13. தக்கன் அவளை அவமதித்தல் II
14. சதியின் சினமும் சாபமும் II
15. சிவனிடம் வந்து தன் கருத்தைத் தெரிவித்தல் I
16. சிவன் வீரபத்திரனைத் தானே உண்டாக்குதல் IV
17. யாகத்தை அழித்தல் II
18. தேவர்களை ஓடச் செய்தல் II
19. யாகாக்கினிகளை அழித்தல் II
20. சிவன் சினந்தணிதல் II
21. வீரபத்திரன் அனைவரையும் அழித்தல் V

22. சதியின் வேண்டுகோள் I

23. சிவன் இடபாரூடராய்த் தோன்றுதல் VI

24. தேவர்களைப் பிழைப்பித்தல் VI

25. அவர்களுக்கு அருள் செய்தல் I

**இப்புராணக் கதையில் உள்ள செய்திகள்**

மென்மை : வன்மை : ஆண்பெண் உறவு : ஆண் மட்டும் உயிரை உண்டாக்கல் : அழிவு : தோற்றம்

இதனைப் பின்வருமாறு உணர்த்தலாம்.

I: II: III: IV: V: VI

I>III>V – ஒத்த தன்மையன.

II> IV>V – தம்முள் ஒத்தவை

இப்புராணக்கதை மூலம் உணர்ந்து கொள்ளக்கூடிய செய்திகள்.

1. வலிமைக்கும் வீரத்துக்கும் மக்கள் மிகுந்த மதிப்பு அளித்தனர்.

2. ஆண் பெண் உறவினால் உயிர் தோன்றினாலும் ஆணே உயிரை உருவாக்க முடியும் என்றும் மக்கள் எண்ணியுள்ளனர்.

3. மறையும் உயிர் தோன்றுதலும் தோன்றும் உயிர் மறைதலுமான தத்துவத்தை மக்கள் புரிந்து கொண்டிருந்தனர்.

4. பெண்ணிடம் ஆண்மையும் ஆணிடம் பெண்மையும் உண்டென்று உணர்ந்திருந்தனர்.

5. இறைவனை அருள்வடிவம் என எண்ணாமல் சினமும் அருளும் ஒருங்கே உள்ளவன் என்று எண்ணுதலால் வல்லமை படைத்த அரசனின் ஆட்சியில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆண் ஆதிக்கமிக்க முடியரசின் கீழ் வாழ்ந்த ஒரு சமுதாயச் சூழலில் இக்கதை தோன்றியது எனலாம்.

தமிழ் எழுத்துவடிவப் புராணங்களைப் பற்றி இவண் காண்போம். ‘புராணம்’ என்பது புராதனம் எனும் வட சொல்லின் அடியாகப் பிறந்ததாகும். புராணம் என்பதைப் பழங்கதைகள் என்பதைக் காட்டிலும் வழிவழி வந்த மரபு

வரலாறு என்றே கூறுவது பொருத்தமாகும். வடமொழியில் வேதங்களுக்கு அடுத்தபடியாக புராணங்கள் கருதப்படுகின்றன. புராணங்களுக்கு ஐந்து இலக்கணத்தைக் குறிப்பிடுவர். அவை சர்க்கம் (சிருட்டி) பிரதிசர்க்கம் (அழிந்து மறுபடி உண்டாக்குவது) வம்சம் (தெய்வ பரம்பரை) மன்வந்தரம் (மனுவின் காலம்) வம்சியானு சரிதம் (அரசவம்சங்களின் வரலாறு) முதலியன. வடமொழிப் புராணங்களை மகாபுராணங்கள் (18), உப புராணங்கள் (18), அதி புராணங்கள் (18) என மூன்று வகையாகப் பிரிப்பர். தமிழ் இலக்கிய வரலாற்றில் புராணம் எனும் இலக்கிய வகை பெருகியுள்ளது. தமிழ் இலக்கிய நூல்களில் ஆங்காங்குப் புராணம் பற்றிய குறிப்புக்கள் காணப்படினும் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே முறையாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. டாக்டர் மாதவன் அவர்கள் எழுத்துவடிவத் தமிழ்ப் புராணங்களை ஆறு வகையாகப் பகுக்கின்றார்.

அ) மகா புராணங்கள்

ஆ) இதிகாச அமைப்பிலானவை

இ) சிவபுண்ணியம், சிவ தருமம் கூறுவன

ஈ) ஆண்டவன், அடியார் வரலாறுகள்

உ) சாதிப் பெருமை விளக்குவன

ஊ) ஊர்ச்சிறப்பை எடுத்துரைப்பவை (தல புராணம்)

**மகா புராணங்கள்**

வட மொழியிலுள்ள மகாபுராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

**இதிகாச அமைப்பிலானவை.**

கந்தபுராணம், விநாயக புராணம், பாகவதம் போன்றவை இதிகாச அமைப்பிலான புராணங்களாகும்.

**சிவ புண்ணியம் சிவதருமம்**

மகாபுராணங்களின் ஒரு பகுதியாகவே இவை விளங்குகின்றன. மொழி பெயர்ப்பு நூல்களாகும்.

**ஆண்டவன், அடியார் வரலாறு**

சைவ வைணவ அடியார்களைப் பற்றிய புராணங்கள் இவ்வகையைச் சார்ந்தவை. பெரியபுராணம், திருவாதவூர் அடிகள் புராணம், அரிசமய தீபம், திவ்விய சூரி சரிதம் போன்றவைகள் முறையே சைவ, வைணவ அடியார்களைப் பற்றிய வரலாறுகள் ஆகும். இத்தகைய வரலாற்றுப் புராண நூல்கள் பெரிய புராணத்தைத் தொடர்ந்து பல்கிப் பெருகியுள்ளன.

**சாதிப் பெருமை**

சாதிப் பெருமையைப் புகழ்ந்து பாடும் புராணங்கள் பதினேழாம் நூற்றாண்டிலே தோன்றிவிட்டன. செங்குந்தர் புராணம், விசுவகர்மர் புராணம், குலாலர் புராணம் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

**ஊர்ச்சிறப்பை எடுத்துரைக்கும் தல புராணங்கள்**

ஒரு தலத்திலுள்ள இறைவன் புகழையும் தலத்தின் பெருமையையும் தீர்த்தத்தின் பெருமையையும் கூறி, ஸ்தல இறைவனைப் பூசித்து நற்பேறு பெற்றவர்களின் வரலாற்றை விளக்குவது. புராணங்கள் வடமொழியைப் பின்பற்றி எழுந்தவை எனினும், தல புராணங்கள் தமிழுக்கே உரியவையாகும். தமிழில் புராணங்கள் என்றாலே ஸ்தல புராணங்களைத்தான் குறிப்பதாகக் கூறுவர். தல புராணங்கள் குறிப்பிட்ட தலத்தின் சிறப்பையும் மக்களின் நம்பிக்கைகளையும் பண்பாட்டையும் பரிந்துரைப்பன. தல புராணங்களில் காவியத்தன்மை மிக்கிருத்தலையும் காணலாம். திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் தலபுராண இலக்கணங்களமைந்த முதல் நூலாகும். ஞானப்பிரகாசர், எல்லப்ப நாவலர், பரஞ்சோதியார் படைத்த தல புராணங்கள் இலக்கிய வளம் நிறைந்தவை. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய தலபுராணங்கள் குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

தெய்வங்களுக்குப் புராணங்கள் தோன்றிய பின்னரே மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றின் சிறப்பை உணர்த்தத் தலபுராணங்கள் தோன்றின. இறை வழிபாடு, புண்ணிய தலங்களுக்குச் செல்லல், தல வரலாறு கேட்டறிதல் மக்களின் கடமைகளாகக் கொண்டு ஒழுகினர். கோயில்களை மையமாகக் கொண்டு தல புராணங்கள் உருவாயின. திருத்தலங்களின் பழமையான வரலாற்றுச் சிறப்புக்களைத் தல புராணங்கள் விளக்குகின்றன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய தலச்சிறப்புப் பதிகத்தின் வளர்ச்சியே தல

புராணங்களாகும். தல புராணங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் இந்நான்கும் சிறப்பாக வலியுறுத்தப் பெறுவனவாகும். பன்னிரு திருமுறைகள் தல புராணங்களின் வித்தாகவும் வேராகவும் அமைந்துள்ளன. தல புராணங்களைப் பற்றிய ஆய்வு தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணம் சிறந்த நூலாகும். சமய தத்துவம் கூறும் சைவப் புராணங்களில் இதுவே முதலாவதாகும். கந்தபுராணம் ஆறு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. உற்பத்திக் காண்டம்,
2. அசுர காண்டம்,
3. மகேந்திர காண்டம்,
4. யுத்த காண்டம்,
5. தேவ காண்டம்,
6. தட்ச காண்டம்.

காண்டங்கள் படலங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. கந்தனின் பிறப்பு, வளர்ப்பு பற்றியவை புராணமாகக் கூறப்பட்டுள்ளன. அண்டத்தின் தோற்றம் விளக்கப்பட்டுள்ளது. அசுர காண்டத்தில் அசுரரின் தோற்றம் கூறப்பட்டுள்ளது. தட்சகாண்டத்தில் முனிவர்களின் தோற்ற வரலாறு விளக்கப்பட்டுள்ளது. முருகப் பெருமானின் தோற்றம் உற்பத்தி காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வழிபாட்டு முறைகளும் நோன்புகளும் கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ளன. புராண இலக்கியக் கொள்கைகளைக் கந்தபுராணத்தில் காணலாம். சைவ சமயத் தொன்மங்கள் அருளை அடிப்படையாகவும் சமண பௌத்தத் தொன்மங்கள் ஊழை அடிப்படையாகவும் கொண்டு விளங்குகின்றன.

புராணங்கள் நாட்டுப்புற இலக்கியமாகவும் வாழ்கின்றன; செவ்வியல் இலக்கியமாகவும் இடம் பெற்றுள்ளன. இவ்விரண்டு வகை புராணங்களையும் தொகுத்து, வகைப்படுத்தி ஆராய வேண்டும். தமிழ்ப் புராணங்களைப் பல்துறை நோக்கில் ஆராய்ந்தால் மக்களது பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலானவை புலனாகும். தல புராணங்கள் அனைத்தையும் தொகுத்து ஆராய்ந்தால் சமய சடங்குகளைப் பற்றி அறிவதோடு வரலாற்றுக் குறிப்புக்களையும் அறிந்து கொள்ளலாம். நாட்டுப்புற மக்களின் உலக நோக்கு பற்றி அறிய புராணங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அறிவியல் காலத்துக்கு முற்பட்ட அறிவியலை அறியவும் புராணங்கள் துணையாக உள்ளன. புராணக் கதைகள் சமூகப்

பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் பயன்படும். புராணங்கள் எனும் சுரங்கத்தைத் தோண்டி எடுத்து ஆய்வு செய்வது நம் கடனாகும்.

**தொகுப்புரை**

- புராணங்கள் தொன்மம் என அழைக்கப்படுகின்றது. புராணம் என்பதற்கு பழமை என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.
- மேனாட்டறிஞர்கள் பலர் புராணம் பற்றிய தங்களது வரையறையைக் கூறியுள்ளனர்.
- லெவிஸ்ட்ராஸ் புராணக்கதைகளைத் தொன்மவியல் அடிப்படையில் ஆய்ந்துள்ளார்.
- டாக்டர் மாதவன் அவர்கள் எழுத்து வடிவிலான புராணக்கதைகளை ஆறு வகையாகப் பகுக்கின்றார்.
- தொன்மையான புராணங்களை வரலாற்றையும் உலகம் எவ்வாறு தோன்றியது என்ற செய்தியையும் தெரிவிக்கும் விதமாக அமைந்துள்ளது.
- தலபுராணங்கள் தமிழுக்கேயுரியவையாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**அருஞ்சொற்பொருள்**

1. மித் - புராணம்
2. ஆன்மா - உயிர்
3. ஜனரஞ்சகம் - அதிகமான மக்களால் விரும்பப்படுதல்
4. சிருஷ்டி - உருவாக்கம், தோற்றுவித்தல்
5. வம்சம் - பரம்பரை
6. வம்சியானு சரிதம் - அரச வம்சம் பற்றிய புராணக் கதைகள்
7. தல புராணங்கள் - கோவில் புராணங்கள்

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. மித் என்பது எம்மொழிச் சொல்

அ) கிரேக்கம் ஆ) இலத்தின் இ) தமிழ் ஈ) ஆங்கிலம்

2. "புராணக் கதைகளின் தோற்றத்திற்குக் காரணம் மொழிகளின் நோய்" என்று கூறியவர்

அ) லெவிஸ்ட்ராஸ் ஆ) மாக்ஸ்முல்லர் இ) பென்பே ஈ) ஜேக்கப் கிரீம்

3. டாக்டர். மாதவன் எழுத்துவடிவத் தமிழ்ப் புராணங்களை எத்தனை வகையாக கூறுகிறார்?

அ) 5 ஆ) 6 இ) 8 ஈ) 4

4. கச்சியப்பர் இயற்றிய சிறந்த புராண நூல்.

அ) தலபுராணம் ஆ) வாயுபுராணம் இ) கருடபுராணம் ஈ) கந்தபுராணம்

5. மித் என்ற சொல் எத்தனை வகைப் பொருளைத் தருகிறது

அ) 5 ஆ) 8 இ) 3 ஈ) 6

**விடைகள்**

1. அ) கிரேக்கம்
2. ஆ) மாக்ஸ்முல்லர்
3. ஆ) 6
4. ஈ) கந்தபுராணம்
5. இ) 3

**பயிற்சிகள்**

உங்கள் வட்டாரப் பகுதியில் கூறப்படும் புராணக்கதைகளைத் தொகுத்தெழுதுக

**சிறுவினாக்கள்**

1. தொன்மம் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை எழுதுக
2. மாக்ஸ்முல்லரின் நான்கு வகையான புராணக் காலத்தை எடுத்துரைக்க

**நெடுவினாக்கள்**

1. புராணக்கதைகளின் தன்மை பற்றிய கட்டுரை வரைக

**பாடம் தொடர்பான நூல்கள்**

1. நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள் - என்.பக்தவச்சல ரெட்டி
2. புராணவியல் கோட்பாடு - தே.லூர்து
3. நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள் - ஆறு.இராமநாதன்

**பாடம் தொடர்பான இணைய இணைப்புகள்**

1. www.projectmadurai.org
2. www.chennailibrary.com
3. http://www.tamilheritage.org

**பாடக்குறிப்பிற்கு உதவிய புத்தகங்கள்**

1. நாட்டுப்புற இயல் ஆய்வு, 2002. சு.சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
2. நாட்டுப்புறஇயல், 1975 முதற்பதிப்பு, சு.சண்முக சுந்தரம், காவ்யா, சென்னை.